BRIGHT
வெளியீடு

வர்த்தகமும் கணக்கியலும்

1988 முதல் 1998 வரையான 12 வருட வினாவிடை



G.C.E. (O/L) QUESTION & ANSWER

விலை 175/=

BRIGHT BOOK CENTRE
BRIGHT FUTURE IN YOUR HAND

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11. TELE: 434770 , 074 - 718592

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 1998 டிசெம்பர்.
Genaral Certificate of Education (Ord. Level) Examination, December 1998.

வர்த்தகமும் கணக்கியலும் I

ஒரு மணி

1. விநியோகத்தர் பொருட்களைக் கொள்வனவாளருக்கு அனுப்பும் நாளில், கொள்வனவாளருக்குத் தகவல் தெரிவிப்பதற்காக விநியோகத்தரால். அனுப்பப்படும் பத்திரம்.
   (1) ஒப்படைக்குமுத்தரவு
   (2) அறிவித்தற் குறிப்பு
   (3) பெறுவோன் குறிப்பு
   (4) பற்றுச்சீட்டு

2. "இறக்கியேற்றுமிடவியாபாரம்" என்பதனை அடையாளம் கண்டு கொள்வதற்காக கீழேதரப்பட்டுள்ள தெரிவுகளில் மிகப் பொருத்தமானது எது என்பதனைத் தெரிவுசெய்க.
   (1) பொருளை இறக்குமதி செய்து ஒரு சிறியளவு மாற்றத்தைச் செய்ததன் பின்னர் அதனை இன்னொரு நாட்டுக்கு விற்பனை செய்தல்.
   (2) பொருட்கள் சுங்கக் களஞ்சியத்திலிருக்கும் போதே அதனை ஒரு உள்நாட்டு மொத்தவியாபாரிக்கு விற்றுவிடல்.
   (3) பொருட்கள் துறைமுகத்திலிருக்கும் போதே அவற்றை ஒரு சில்லறை வியாபாரிக்கு விற்றுவிடல்.
   (4) பொருட்கள் இறக்குமதி செய்ததன் பின்னர் எவ்வித மாற்றமும் இல்லாமல் ஒரு வெளிநாட்டுக்கு விற்றுவிடல்.

3. நாடுமுழுவதும் கிளைகளைக் கொண்டதும், தனது விற்பனையை ஒன்று அல்லது இரண்டு பொருள்வகைக்குட்பட்டதாக வரையறுத்துக் கொள்வதுமான ஒரு நிறுவனம்.
   (1) மடங்குகடைகள்.
   (2) கூட்டுறவுச் சங்கங்கள்.
   (3) பகுதிக்கடைகள்.
   (4) சுப்பர் மார்க்கட்டுக்கள்.

4. வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என எண்ணும் ஒருவன் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சமானது,
   (1) கட்டிடம் எவ்வளவு பெரியதாக அமைய வேண்டும்.
   (2) முகாமையாளராக யார் நியமிக்கப்பட வேண்டும்.
   (3) வங்கிக்கடன் ஒன்றை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம்.
   (4) ஆரம்பிக்கப்பட வேண்டிய வியாபாரத்தின் வகை.

5. ஒரு கம்பனியை உருவாக்கும் ஒரு சட்டபூர்வ அடையாளமான 'உருவாக்கற் பத்திர' மானது வழங்கப்படுவது.
   (1) ஒரு மாகாண சபையின் செயலாளரால்
   (2) வர்த்தக அமைச்சரது நிரந்தரச் செயலாளரால்
   (3) கம்பனிகள் பதிவாளரால்
   (4) உள்நாட்டு வர்த்தக ஆணையாளரால்.

6. 'காவியின் காசோலை' ஒன்றை எழுதும் போது பணம் கொடுபட வேண்டியவருடைய பெயருக்கு முன்பாக எழுதப்பட வேண்டிய சொல்லானது.
   (1) கொண்டுவருபவர் அல்லது காவி
   (2) கட்டளைக்கு
   (3) கணக்குக்கு மட்டும்
   (4) இலங்கை வங்கி

7. வாங்குபவரிடம் போலவே விற்பவரிடமும் (இரு பகுதியினரிடமிருந்தும்) தரகினைப் பெற்றுக் கொள்ளும் முகவர்.
   (1) ஏலம் கூறுபவர்
   (2) தரகு முகவர்
   (3) தரகர்
   (4) அனுப்பிவைக்கும் முகவர் (Forwarding agent)

8. மொத்தவியாபாரம் தொடர்பாக கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எது?
(1) பொறுப்பு வரையறுக்கப்படாதது.
(2) பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
(3) சொந்தக்காரரே மூலதனத்துக்கு தனித்து பங்களிப்பைச் செலுத்துவார்.
(4) இலாபம் அல்லது நட்டத்தை சொந்தக்காரர் தானே தாங்கிக்கொள்வார்.

9. நவீன பல்வழித் தொடர்பாடல் ஊடகமாகக் குறிப்பிடப்படக்கூடியது.
(1) ரூபவாஹினி உலக ஒளிபரப்பு
(2) தூர்தர்ஷன் ஒளிபரப்பு
(3) வலைப்பின்னல் (Inter net) அமைப்பு
(4) ரூபவாஹினி 'டிஸ்கவரி' அலைவரிசை

10. 'எயர் லங்கா' வின் தற்போதைய உரிமையாளர்கள்.
(1) அரசும் எமிரேட் கம்பனியும்
(2) அரசும் சிங்கப்பூர் எயார் லைனும்
(3) அரசும் துபாய் எயார் லைனும்
(4) அரசும் அமெரிக்கன் எயார் லைனும்.

11. அரசகூட்டுத்தாபனங்களினதும், நியதிச்சட்டசபைகளினதும் இயக்குனர் சபையை நியமனம் செய்பவர்.
(1) ஜனாதிபதி
(2) தொடர்பான அமைச்சர்
(3) பாராளுமன்றம்
(4) மாவட்டச் செயலாளர்.

12. கீழ்வரும் வசனங்களில் ஏலம் விடுபவரது சேவையை விளக்கி நிற்பது.
(1) தனது சொந்தப் பெயரில் பொருட்களை பகிரங்கமாக விற்றல் எனும் தத்துவத்தினடிப்படையில் விற்பது.
(2) தனது தத்துவத்தின் சார்பாக பொருட்களைக் கொள்ளவனவு செய்தலும் விற்பனை செய்தலும்.
(3) வியாபாரிகள் சார்பாக பொருட்களை ஒன்று திரட்டி அவற்றைச் சரியான இடத்துக்கு அனுப்பிவைத்தல்.
(4) உரிமையாளர் சார்பாக பொருட்களையும் சொத்துக்களையும் பகிரங்கத்தில் விற்பனை செய்து அதற்கு ஒரு தரகினைப் பெற்றுக் கொள்ளல்.

13. ஒரு இறக்குமதியாளனுக்கு, துறைமுகத்திலிருந்து பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு உறுதுணையாக உள்ள பட்டியல்.
(1) மாதிரிப் பட்டியல்
(2) பிரதிநிதி சாட்சிப் பத்திரம்
(3) பிறநாட்டுப் பட்டியல்
(4) மூலமான சாட்சிப்பத்திரம்

14. வியாபாரத்தினை ஒரு சமூகத்தின் அமைப்பாக நடாத்துவதற்கு அவசியமானது.
(1) கம்பனிப்பதிவாளரின் கீழ் அது கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(2) கூட்டுறவு ஆணையாளரின் கீழ் அது கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(3) மாகாணத்தலைமைச் செயலாளரின் கீழ் அது கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.
(4) தொழில் ஆணையாளரின் கீழ் அது கட்டாயமாகப் பதிவு செய்யப்படல் வேண்டும்.

15. "வங்கி ஆணை" எனும் பதத்தைச் சரியாக விளக்கக் கூடியதாக அமைந்த வசனம்,
(1) ஒரு வங்கியாளரால் அதில் கணக்கு வைத்திருப்பவருக்கு எழுதப்படும் கட்டளையாகும்.
(2) ஒரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒருவரால் இன்னொரு கணக்கு வைத்திருப்பவருக்கு எழுதப்படும் ஒரு கட்டளையாகும்.
(3) தொலை தூரத்திலுள்ள ஒருவருக்கு வங்கி ஒன்று, குறிப்பிட்ட தொகைப்பணத்தை செலுத்துவதற்கான ஒரு முறையாகும்.
(4) இது ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு பணத்தை மாற்றுகின்ற பொழுது பயன்படுத்தப்படும் ஒரு ஆவணமாகும்.

16. வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு திணைக்களமானது சட்டத்தின் முன்பாக
(1) அதனது உத்தியோக பூர்வ பெயரைக் கொண்டதாகவே தோற்றமளிக்கும்.

(2) அதனது தலைமையகத்தினது உத்தியோகபூர்வ பெயரைக் கொண்டதாகவே தோற்றமளிக்கும்.
(3) அத்திணைக்களத்துக்குரியதான அமைச்சினது உத்தியோகபூர்வ பெயரைக் கொண்டதாகவே தோற்றமளிக்கும்.
(4) அதனது பகுதித்தலமையகத்தினது உத்தியோகபூர்வ பெயரைக்கொண்டதாகவே தோற்றமளிக்கும்.

17. ஒரு மூன்றாம் நிலைமட்டக் கூட்டுறவு அமைப்பு என்பது,
(1) ஆரம்பநிலையிலிருந்தே அங்கத்துவத்தைக் கொண்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு அமைப்பாகும்.
(2) மாகாணச் சங்கங்களின் அங்கத்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.
(3) ஆரம்பநிலையையும், மாகாண மட்டத்தையும் கொண்ட சங்கங்களின் அங்கத்தவர்களைக் கொண்டு அமைப்பாகும்.
(4) மாவட்டத்தின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

18. கொடுப்பனவை உறுதிசெய்யத்தக்கதான ஒரு கடிததத்தை (ஆவணத்தை) சமர்ப்பிக்கும்படி ஒரு கொள்வனவாளனை விநியோகத்தன் ஒருவன் வலியுறுத்தும் படசத்தில் அவன்.
(1) காசோலை ஒன்றை அனுப்பலாம்.
(2) சொத்துக்களின் பிரகடனத்தை அனுப்பலாம்.
(3) நாணயக் கடிதம் ஒன்றை அனுப்பலாம்.
(4) மாற்றுண்டியல் ஒன்றை அனுப்பலாம்.

19. பங்குடமை ஒன்றின் மூலதனமானது ரூ. 1000க்கு மேலாக அதிகரிக்குமாயின், அப்பங்குடைமை பதிவு செய்யப்படவேண்டியது.
(1) 1982 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டத்தின் கீழாகும்.
(2) நிதித் தடைச்சட்ட மூலத்தின் கீழாகும்.
(3) வியாபாரப் பெயர்கள் பதிவுச் சட்டத்தின் கீழாகும்.
(4) பங்குடைமைச் சட்டத்தின் கீழாகும்.

20. ஏனைய போக்குவரத்து முறைமைகளைவிட புகையிரதப் போக்குவரத்து கொண்டுள்ள விஷேட நன்மையாதெனில்.
(1) ஏனைய போக்குவரத்து முறைமைகளுடன் ஒப்பிட்டால் இது குறைந்த செலவுடையதாகும்.
(2) நாட்டின் எந்தப் பகுதியையும் இதன் மூலம் சென்றடையமுடியும்.
(3) எந்த இடத்திலிருந்தும் ஏற்றவோ, இறக்கவோ முடியும்.
(4) பொருட்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொள்ளும் போத இது ஒரு நம்பிக்கையான முறையாகும்.

21. ஒரு நிறுவனத்தின் கணக்கீட்டுப் பதிவுகளில் அக்கறையுள்ள பிரிவினர் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கடன்பட்டோர். முகவர்கள். நுகர்வோர், அரசு
(2) தரகர்கள், தொழிங்சங்கங்கள், நுகர்வோர், கடன்கொடுத்தோர்.
(3) சட்டத்தரணிகள், வங்கியாளர்கள், உரிமையாளர்கள், வேலைசெய்வோர்
(4) முகாமையாளர்கள், உரிமையாளர்கள், வேலைசெய்வோர், கடன்கொடுத்தோர்.

22. சரியான கணக்கீட்டுச் சமன்பாடானது.
(1) மூலதனம் + சொத்துக்கள் + செலவீடுகள் = பொறுப்புக்கள் + வருமானம்
(2) மூலதனம் + வருமானம் + பெறுப்புக்கள் = சொத்துக்கள் + செலவீடுகள்
(3) மூலதனம் + செலவீடுகள் + பொறுப்புக்கள் = வருமானம் + சொத்துக்கள
(4) மூலதனம் + செலவீடுகள் + வருமானம் = பொறுப்புகள் + சொத்துக்கள்

23. எப்பொழுதும் வரவு மீதியையே காட்டிக் கொண்டிருக்கும் கணக்கு
(1) மூலதனக் கணக்கு
(2) வங்கி நடைமுறைக் கணக்கு
(3) வட்டிக் கணக்கு
(4) காசுக் கணக்கு

24. இரட்டைப்பதிவு முறைமையின் அடிப்படையில் கீழே சில கூற்றுக்கள் காணப்படுகின்றன.
(அ) ஒவ்வொரு வரவுப் பதிவும் ஒரு செலவுப்பதிவைக் கொண்டிருக்கும்.
(ஆ) வரவுப்பதிவுகளும் செலவுப்பதிவுகளும் சமமானவை.
(இ) வரவுப்பதிவுகளும் செலவுப்பதிவுகளும் சமமானவையல்ல.
மேற்படி கூற்றுக்களில் சரியானது.
(1) 'அ' வும் 'இ' யும் (2) 'அ' வும் 'ஆ' வும்
(3) 'அ' வும் 'இ' யும் (4) 'அ', 'ஆ', 'இ' ஆகிய மூன்றும்.

25. சில்லறைக் காசாளனுக்கு கட்டுநிதியாக ரூ.1000 வழங்கப்பட்டதுடன், இந்த மாதத்துக்கான மொத்தச் செலவாக ரூ. 560 செலவிடப்படுகிறது. அவனுக்குத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டியது
(1) ரூ. 1000 ஆகும். (2) ரூ. 440 ஆகும்.
(3) ரூ. 560 ஆகும் (4) ரூ. 1560 ஆகும்.

26. பேரேடானது
(1) இரட்டைப்பதிவுகளைப் பதிந்துவைக்கும் பிரதான புத்தகமாகும்.
(2) எல்லா நாளாந்த கொடுக்கல் வாங்கல்களும் பதியப்படும் புத்தகமாகும்.
(3) துணையேடுகளில் ஒன்று
(4) ஏனைய மூலப்பதிவேடுகளில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பதியப்படும் ஒரு புத்தகமாகும்.

27. ஒரு மொத்த வியாபாரியுடைய இலாபநட்டக்கணக்கில் காணப்படும் செலவு மீதியானது மாற்றப் படுவது.
(1) இலாப நட்டக்கணக்கில் வரவிலும், வருமான வரிக்கணக்கில் செவிலுமாகும்.
(2) இலாப நட்டக்கணக்கில் வரவிலும், இலாபநட்டப்பகிர் கணக்கில் செவிலுமாகும்.
(3) இலாப நட்டக்கணக்கில் வரவிலும், மூலதனக் கணக்கில் செலவிலுமாகும்.
(4) இலாப நட்டக்கணக்கில் வரவிலும், எடுப்பனவுக்கணக்கில் செலவிலுமாகும்.

28. கீழ்வரும் கணக்கீட்டு வழுக்களில் பரீட்சைமீதி வெளிப்படுத்தாத வழுவானது,
(1) செலுத்தப்பட காப்புறுதிக்கட்டணமானது இரு தடவைகள் காப்புறுதிக் கட்டணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையாகும்.
(2) கடன் கொள்வனவானது, கொள்வனவுக்கணக்கில் மட்டும் வரவுவைக்கப்பட்டமையாகும்.
(3) பெற்றுக்கொண்ட வட்டி, வட்டிக்கணக்கில் வரவுவைக்கப்பட்டமையாகும்.
(4) காகிதாதிகள் செலவு வாடகைக் கணக்கில் மட்டும் வரவுவைக்கப்பட்டமையாகும்.

29. வருமான செலவுக் கணக்குக்கு செலவு வைக்கப்பட்ட தொகுதியானது,
(1) சந்தாக்கள், கொடிகள் விற்பனையால் கிடைத்த வருமானம், பழைய பத்திரிகைகள் விற்றுப்பெற்ற வருமானம்.
(2) விஷேட நன்கொடைகள், கையிலுள்ள காசு, சந்தாக்கள்.
(3) வாடகை, இறைகள், காப்புறுதி.
(4) நுழைவுக்கட்டணம், திரண்ட நிதி, வங்கிக்கடன்.

30. நேர்கோட்டு முறையின் கீழ் நிலையான சொத்து ஒன்றுக்கான பெறுமானத் தேய்வைக் கணிக்கும் முறையானது.
(1) $\frac{\text{கிரயம் - பயன்படுத்தப்பட்ட பெறுமதி}}{\text{சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்காலம்}} \times 100$
(2) $\frac{\text{கிரயம் - பயன்படுத்தப்பட்ட பெறுமதி}}{\text{சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்காலம்}} \times \text{நூற்றுவீதம்}$
(3) $\frac{\text{கிரயம் - பயன்படுத்தப்பட்ட பெறுமதி}}{\text{சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்காலம்}}$
(4) $\frac{\text{கிரயம் + பயன்படுத்தப்பட்ட பெறுமதி}}{\text{சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்காலம்.}}$

31. ஆரம்பச் செலவைக் குறிக்கும் செலவுத் தொகுதியானது.
(1) நேரடி மூலப்பொருட் செலவு + நேரடி தொழிலாளர் செலவு + மேந்தலைகள்
(2) நேரடி மூலப்பொருட் செலவு + நேரடி தொழிலாளர் செலவு + நேர் செலவினச் செலவு
(3) மேந்தலைச் செலவுகள் + உற்பத்திச் செலவுகள் + மூலப்பொருட் செலவுகள்
(4) தொழிற்சாலைச் செலவுகள் + மேந்தலைச் செலவுகள் + உற்பத்திச் செலவுகள்

32. முன்னரே செலுத்தப்பட்ட வாடகையைச் செம்மையாக்குவதற்கு அவசியமான நாட்குறிப்புப் பதிவானது:
(1) வாடகைக் கணக்கு வரவு, முன்செலுத்தப்பட்ட வாடகைக் கணக்கு செலவு
(2) முன்செலுத்தப்பட்ட வாடகைக் கணக்கு வரவு, வாடகைக் கணக்குச் செலவு
(3) முன்செலுத்தப்பட்ட வாடகைக் கணக்கு வரவு, கொடுபடாத வாடகைக் கணக்கு செலவு
(4) வாடகைக் கணக்கு வரவு, கொடுபடாத வாடகைக் கணக்கு செலவு.

33. விற்பனை நோக்குடனான பொருட்கொள்வனவுக்குக் கொடுக்கப்பட்ட பெறுமதி
(1) மூலதனச் செலவினம் (2) வருமானச் செலவினம்
(3) பிற்போடப்பட்ட வருமானச் செலவினம் (4) உற்பத்திச் செலவு

34. மாத ஆரம்பத்திலேயே மேலதிகப் பற்றினைக் கொண்டுள்ள ஒரு நிலையில், வங்கியால் அறிவிக்கப்பட்ட வங்கிக் கட்டணமான ரூ. 100 காசுப்புத்தகத்தில் இரு தடவைகள் பதியப் பட்டிருப்பின்:
(1) வங்கிமேலதிகப் பற்றானது ரூ. 200 ஆல் அதிகரிக்கலாம்.
(2) வங்கிமேலதிகப் பற்றில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.
(3) வங்கிமேலதிகப் பற்றானது ரூ. 100 ஆல் அதிகரிக்கிறது.
(4) வங்கிமேலதிகப் பற்றானது ரூ. 100 ஆல் குறைகிறது.

35. ஒரு குறித்த பொருள் கிரயத்தில் 25% இலாபத்தில் விற்கப்படுமாயின்
(1) விற்பனை விலையில் 33 % இலாபம் உண்டு
(2) விற்பனை விலையில் 25 % இலாபம் உண்டு
(3) விற்பனை விலையில் 20 % இலாபம் உண்டு
(4) இலாப வீதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

36. ஒரு வியாபாரத்தின் நிலையான சொத்து ஒன்றினைக் கடனுக்கு விற்கும் பொழுது அது பதியப்பட வேண்டிய முதற்பதி வேடானது:
(1) விற்பனையேடாகும் (2) காசேடாகும்
(3) பேரேடாகும் (4) பொது நாட்குறிப்பாகும்

37. கணக்கொன்றைச் சமப்படுத்துவதென்பது
(1) கணக்கின் இரு பக்கங்களும் சமனாகும் வரைக்கும் நடவடிக்கைகளைப் பதிந்து கொண்டிருப்பதாகும்.
(2) கணக்கின் வரவு - செலவு ஆகிய இருபக்கங்களினதும் பெறுமதிகளைச் சமப்படுத்துவதாகும்.
(3) ஒரு கணக்கின் வரவுப் பக்கம் அதிகரிக்கும்போது செலவுப் பக்கத்தில் மேலும் பதிவுகளைப் பதிதல்.
(4) ஒரு கணக்கின் செலவுப் பக்கம் அதிகரிக்கும் போது வரவுப் பக்கத்தில் மேலும் பதிவுகளைப் பதிதல்.

38. உட்திரும்பியவை கணக்கை மூடுவதற்கான இரட்டைப்பதிவானது.
(1) உட்திரும்பியவை கணக்கு வரவு - வியாபாரக் கணக்கு செலவு.
(2) உட்திரும்பியவை கணக்கு வரவு - தொக்குகள் கணக்கு செலவு.
(3) தொக்குகள் கணக்கு வரவு - உட்திரும்பியவை கணக்கு செலவு.
(4) வியாபாரக் கணக்கு வரவு - உட்திரும்பியவை கணக்கு செலவு.

39. முடிவுக் கணக்குகளைத் தயாரித்தபின்னர், பேரேடுகளில் எஞ்சியிருக்கக் கூடிய கணக்குத் தொகுதிகளாவன:

(1) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகள்.

(2) வருமானம் மற்றும் செலவினக் கணக்குகள்.

(3) சொத்துக்கள் மற்றும் வருமானக் கணக்குகள்.

(4) செலவினங்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்குகள்.

40. தரகுக்கட்டணம் அறவிட்டதன்பின் மேற்கொள்ளப்படும் காவுக் கொடுப்பனவிற்கான இரட்டைப் பதிவானது:

(1) தரகுக்கணக்கிலும் காசுக்கணக்கிலும் வரவுவைத்து, காசோலைக்குப் பணம் கொடுப்பவர் கணக்கில் செலவுவைத்தல்.

(2) காசோலைக்குப் பணம் கொடுப்பவர்கணக்கிலும் தரகுக்கணக்கிலும் வரவு வைத்து, காசுக்கணக்கில் செவுவைத்தல்.

(3) தரகுக்கணக்கில் வரவும், காசுக்கணக்கில் செலவும் வைத்தல்.

(4) காசோலைக்குப் பணம் கொடுப்பவர் கணக்கில் வரவும் தரகுக்கணக்கு காசுக்கணக்கு என்பவற்றில் செலவும் வைத்தல்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 1998 டிசெம்பர்.

வர்த்தகமும் கணக்கியலும் I

விடைகள்

1.	2	11.	2	21.	4	31.	2
2.	4	12	4	22.	2	32.	2
3.	1	13.	2	23.	4	33.	2
4.	4	14.	(1-4)	24.	2	34.	1
5.	3	15.	3	25.	3	35.	3
6.	1	16.	2	26.	1	36.	4
7.	3	17.	4	27.	3	37.	2
8.	2	18.	3	28.	4	38.	4
9.	3	19.	2 or 3	29.	1	39.	1
10.	1	20.	1	30.	(1-4)	40.	(1-4)

* வினா இலக்கங்கள் 14, 30, 40 ஆகியவற்றில் தவறுகள் காணப்படுகின்றன.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 1998 டிசெம்பர்.
Genaral Certificate of Education (Ord. Level) Examination, December 1998.

வர்த்தகமும் கணக்கியலும் II

மூன்று மணி

பகுதி I

1. கீழ்வரும் பரீட்சை மீதியானது 'சரஸ்வதி' வியாபாரிகளது புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 1998 மார்ச் 31 இலான மீதிகளைக் காட்டுகின்றது.

	வரவு	செலவு
	ரூ.	ரூ.
மூலதனம்		70 000
விற்பனைகள்		75 100
கொள்வனவுகள்	35 400	
தொக்குகள் 01. 04. 97	8 200	
சம்பளங்களும் கூலிகளும்	12 400	
மோட்டார் வான்	51 000	
வாடகை	4 400	
இறைகளும் காப்புறுதியும்	3 100	
வெளித்திரும்பியவை		1 300
பொதிசெய் உபகரணங்கள்	750	
பெற்ற கழிவு		550
மின்சாரமும் சக்தியும்	2 100	
நானாவித செலவுகள்	1 670	
மோட்டார் வான் செலவுகள்	4 300	
அனுமதித்த கழிவு	710	
தளபாடம்	18 000	
கடன்பட்டோர்	22 000	
கடன் கொடுத்தோர்		23 240
வங்கியிலுள்ள காசு	7 450	
கையிலுள்ள காசு	3 300	
எடுப்பனவுகள்	5 000	
வங்கிக்கடன்		35 000
உள்வந்த வண்டிக் கூலி	1 800	
இயந்திரம்	72 000	
பெறுமானத்தேய்வுக்கான ஒதுக்கங்கள் 01. 04. 97		
தளபாடம்		5 100
மோட்டார் வான்		14 000
இயந்திரம்		30 000
வங்கிக் கட்டணங்கள்	710	
	254 290	254 290

கீழ்வரும் தகவல்களையும் கவனத்திற் கொண்டு 1998 மார்ச், 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஒரு வியாபாரக்கணக்கையும், ஒரு இலாப நட்டக்கணக்கையும் அதே திகதியிலனா ஒரு ஐந்தொகையையும் தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப்படுகின்றீர்கள்.

1. அறவிடமுடியாக் கடனுக்கான ஒதுக்கம் கடன்பட்டோரில் 5% ஆகும்.
2. வங்கிக் கடனானது ஒரு 10% வட்டியினடிப்படையிலானதாகும். புத்தகங்களில் வங்கி வட்டி காட்டப்படவுமில்லை, செலுத்தப்படவுமில்லை,
3. செலுத்தப்படவேண்டிய வாடகை ரூ. 400 ஆகும்.
4. நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வானது நேர்கோட்டு முறை அடிப்படையில் கீழ்வருமாறு அமைதல் வேண்டும்.

இயந்திரம் வருடாந்தம்	10 %
தளபாடம் வருடாந்தம்	5 %
மோட்டார் வான் வருடாந்தம்	20 %

5. 1998 மார்ச்சு 31 இல் தொக்குகள் ரூ. 11 200

2. (i) ஒரு ஆக்கக், கணக்கைத் தயாரிப்பதற்கான ஆக்கத்தொழிற்தாபனம் ஒன்றின் நோக்கம் யாது?

(ii) ஒரு ஆக்கக்கணக்குக்கும், ஒரு வியாபாரக் கணக்குக்கும் இடையேயான இரண்டு வேறுபாடுகளைக் கூறுக.

(iii) சேகரின் வியாபாரத்தாபனத்தினது கீழ்வரும் தகவல்களிலிருந்து 1997 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஒரு ஆக்கக்கணக்கைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்கப் படுகின்றீர்கள்.

தொக்குகள் 01.01.1997	ரூ.
மூலப்பொருட்கள்	21 000
முடிவுற்ற பொருட்கள்	38 900
நேர் கூலிகள்	13 500
தொழிற்சாலைத் தொழிலாளர் கூலிகள்	14 000
உள்வந்த வண்டிக் கூலிகள்	3 500
இயந்திரம்	280 000
தொழிற்சாலைப் பொதுச் செலவுகள்	31 000
தொழிற்சாலை மின்சாரமும் சக்தியும்	7 500
தொழிற்சாலைக் இறைகளும்	12 000
தொழிற்சாலைக் காப்புறுதி	4 200
மூலப்பொருட்கள் கொள்வனவு	370 000

கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

1. இயந்திரத்துக்கு - அதன் கிரயத்தில் 10 % பெறுமானத்தேய்விடுக.
2. 31. 12. 97 இல் தொக்குகள்:

	ரூ
மூலப்பொருட்கள்	24 000
முடிவுற்ற பொருட்கள்	40 000
குறைவேலைப் பொருட்கள்	15 000

3. (i) வியாபாரக் கழிவுக்கும், காசுக் கழிவுக்குமிடையேயான வேறுபாடுகள் இரண்டினைத் தருக.

(ii) ஒரு வியாபாரியினால் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதன் மூலம் நிறைவேற்றப்படும் நோக்கங்கள் இரண்டு கூறுக.

(iiii) மதுரா வியாபாரிகளின் 1998 ஜனவரி மாத காலத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்படுகின்றன.

உங்களுக்குத் தரப்படும் தகவல்களைக் கொண்டு ஒரு மூன்று நிரல் காசேட்டினைத் தயாரித்து அதனைச் சமப்படுத்தி மீதிகளை 1998 பெப்ரவரி 1 ம் திகதிக்காகக் கீழ்க் கொண்டு செல்லுமாறு நீங்கள் கேட்கப்படுகின்றீர்கள்.

1998 ஜனவரி:

1. ரூ. 50 000 முதலிட்டு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.
2. ரூ. 30 000 வங்கியில் வைப்பிலிடுவதன் மூலம் ஒரு நடைமுறைக்கணக்கு திறக்கப்படுகிறது.
3. ரூ. 3 450 க்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படுகிறது.
4. லஷ்மணனிடமிருந்து ரூ. 10 000 கடனாகப் பெறப்படுகிறது.
5. காசு விற்பனை ரூ. 2 350
6. மிலின்டா செலுத்தவேண்டிய ரூ. 500, ரூ. 470 க்கான காசோலை ஒன்றைக் கொடுத்தன் மூலம் தீர்க்கப்படுகின்றது.
7. லஷ்மணனிடமிருந்தும், மிலின்டாவிடமிருந்தும் பெறப்பட்ட காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்படுகின்றன.
8. ரவிக்கு எம்மால் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூ. 1600 ரூ. 1 560 காசாகக் கொடுத்ததன் மூலம் முற்றாகத் தீர்க்கப்பட்டது.
10. ரூ. 4 000க்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டது. பெற்றுக்கொண்ட வியாபாரக் கழிவு ரூ. 400 ஆகும்.
12. காசு விற்பனை ரூ. 3 600
15. வங்கியிலிட்ட காசு ரூ. 5 000
18. சன்னா தனது கடனைத் தீர்ப்பதற்காக ரூ. 750 கொடுத்தார். அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 50 ஆகும்.
22. வங்கியால் திருப்பியனுப்பப்பட்ட, மறுக்கப்பட்ட காசோலை ரூ. 470.
24. ஹசனிடமிருந்து ரூ. 1 200 க்கான காசோலை பெறப்பட்டது. அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 60 வங்கியிலிருந்து ரூ. 1 500 காசு எடுக்கப்பட்டது.
28. காரியாலயப் பயன்பாட்டுக்காக வங்கியிலிருந்து ரூ. 6 900 எடுக்கப்பட்டது.
29. செலுத்தப்பட்ட வாடகை ரூ. 400
30. ரூ. 5 000 வங்கியிலிடப்பட்டது.
30. சொந்தத்தேவைக்காக வங்கியிலிருந்து எடுத்தபணம் ரூ. 1000.
31. காசுக் கொள்வனவு ரூ. 3 200.

(i) ஒரு பரீட்சை மீதியான இரு நிரல்களினதும் இணக்கப்பாட்டினைப் பாதிக்கக்கூடிய நான்கு வகை வழுக்களை எழுதுக.

(ii) ஒரு பரீட்சைமீதியின் இரு நிரல்களினதும் கூட்டுத்தொகையிலும் எவ்வித வேறுபாடும் காணப்பாடாதவிடத்தும் கணக்குவைத்தற் செயற்பாட்டில் இன்னும் வழுக்கள் காணப்படலாம் அத்தகைய மூன்று வழுக்களைப் பெயரிடுக.

(iii) கீழ்வரும் வழுக்களைத் திருத்தி பொது நாட்குறிப்பு மாதிரியொன்றில் அவற்றின் இரட்டைப் பதிவுகளையும் பதிக.

1. ரூ. 500க்கு கொள்வனவு செய்யப்பட்டதற்கான கொள்வனவுச் சிட்டை, விற்பனை நாளேட்டில் பதியப்பட்டது.
2. ரூ. 1 000 க்கான ஒரு வங்கிச் செலவுமீதி, பரீட்சை மீதியின் வரவுப்பக்கத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.
3. ரூ. 6 000 க்கான கட்டிடத்திருத்தம், கட்டிடக்கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.
4. பியதாசவிடமிருந்து பெறப்பட்ட ஒரு காசோலை ரூ. 2 000. அவரது கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது.
5. ரூ. 1500 க்கான காசு விற்பனை கணக்கேடுகளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.

பகுதி II

5 (i) ஒரு தனிவியாபார ஸ்தாபனத்தில் மேலதிக மூலதனத்தைச் சேகரிப்பதற்கான இருமுறைகளை எழுதுக.

(ii) அரச ஆதரவான கூட்டுறவுச் சங்கங்களை இயக்குவதற்கு உருவாக்கப்பட்தினைக்களம் எது?

(iii) பொது நிதிக் கூட்டுத்தாபனங்களில் இரண்டின் பெயர்களைத் தருக.

(iv) வியாபாரிகள் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக பிரதிநிதிகளை நியமிப்பதி ஆர்வம் காட்டுவது ஏன்?

(v) "ஒரு காசோலைப் புறக்குறிப்பிடல்" எனும் பதத்தினை விளக்கத்தக்கதான ஒரு வசனம் எழுதுக.

(vi) இன்று, தமது பொருட்களை வாங்குவதற்கு நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளப்படக்கூடிய உபாயங்கள் இரண்டு கூறுக.

(vii) ஏன் வர்த்தகத்தில் "களஞ்சியப்படுத்தல்" ஒரு முக்கியமான அம்சம், என்பதற்கு இரண்டு காரணங்கள் கூறுக.

(viii) "நட்டவீட்டுப் பொறுப்பாளி" எனும் பதத்தை அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக இரண்டு வசனங்கள் எழுதுக.

(ix) "அந்நியச் செலாவணி அனுமதி" பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனத்தினது பெயரைக் குறிப்பிடுக.

(x) "வியாபாரத்துக்கான உதவிகள்" (aids to trade) எனும் பதத்தை விளக்கத்தக்கதாக ஒரு வசனம் எழுதுக.

(xi) "சுப்பர் மார்க்கட்" இல் காணக்கூடிய இரண்டு அம்சங்களை எழுதுக.

(xii) ஒரு மொத்த வியாபாரத்தை ஆரம்பிக்கும் போது கணிப்பில் எடுத்துக் கொள்ளப் படவேண்டிய முக்கியமான இரண்டு அம்சங்களைக் கூறுக.

(xiii) வியாபார நோக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இரண்டு அரச திணைக்களங்களைக் குறிப்பிடுக.

(xiv) ஒரு வர்த்தக வங்கி மூலம் மேற்கொள்ளப்படும் வெளி நாட்டு வர்த்தகத்துடன் சம்பந்தப் பட்டதான இரண்டு சேவைகளைக் குறிப்பிடுக.

(xv) இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனத்தினது இரண்டு பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.

6. நீங்கள் பெரிய அளவு எண்ணிக்கையிலான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவராக உங்களைக் கருதிக் கொள்க.

(i) ஒரு உற்பத்தியாளன் தனது உற்பத்திகளை நுகர்வோருக்கு விநியோகிக்கக்கூடிய மூன்று வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(ii) நீங்கள் உங்கள் பொருட்களை ஒப்படை விற்பனை அடிப்படையில் அனுப்புவதற்கும், ஒப்படை கொள்வோருக்கு ஒரு பொறுப்புத்தரகினை வழங்குவதற்கும் எண்ணுகிறீர்கள். பொறுப்புத்தரகு வழங்குவதில் காணப்படும் உள்ளார்ந்த உந்து சக்தி யாது?

(iii) வாங்குவோர் தமது கொடுப்பனவைத் தீர்க்கும் இயல்பின் அடிப்படையில் விற்பனையை மேற்கொள்ளக் கூடியதான மூன்று வேறுபட்ட முறைகளைக் கூறுக.

(iv) கொள்வனவு நடைமுறையில் உங்களுக்கும், வாங்குவோருக்குமிடையே கைமாறப்படும் மூன்று ஆவணங்களைக் குறிப்பிடுக.

(v) உங்களது உற்பத்திச் செயற்பாட்டில் நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய, நுகர்வோரது தேவைகள் தொடர்பான பயனுள்ள தகவல் மூலகங்களுடனான மூன்று வேறுபட்ட வியாபாரப் பகுதிகளைக் குறிப்பிடுக.

7 (i) ஒரு நாட்டில் இன்று புழக்கத்திலுள்ள நான்கு வகையான பணத்தை குறிப்பிடுக.

(ii) பணமானது ஒரு பொருளாதாரம் சுமுகமாக செல்வதற்கு பிரதானமாக நான்கு தொழிற்பாடு களைச் செய்கின்றது. கீழ் காட்டப்பட்டுள்ள உதாரணங்கள் ஒவ்வொன்றும் எந்தவகைத் தொழிற்பாட்டினைக் குறித்து நிற்கின்றன என்பதனைக் கூறுக.

(அ) பணம் கொடுத்துப் பொருட்களையும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளல்.

(ஆ) கடந்த வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கடனைத் தீர்ப்பதற்காக கொடுக்கப் படும் ரூ. 5 000.

(இ) ஒரு தொழிலாளிக்கு கூலியாகக் கொடுக்கப்படும் ரூ. 500.

(ஈ) ஒரு வங்கிச் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்படும் பணம்.

(iii) இலங்கையில் அபிவிருத்தி வங்கியாக உருவாக்கப்பட்ட மூன்று நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iv) நாட்டிலுள்ள வர்த்தக வங்கிகளின் வங்கியாகத் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும். மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் மூன்று கடன்கட்டுப்பாட்டு முறைகளின் பெயர்களைத் தருக.

8. (i) இலங்கையிலுள்ள வியாபார ஸ்தாபனங்களை பல்வேறு வகையினதாகப் பிரிக்க முடியும். அவ்வாறு வேறுபட்ட ஆறு வகையான ஸ்தாபனங்களின் பெயர்களைத் தருக.

(ii) மேற்படி நிறுவனங்களில் இரண்டு வியாபார நிறுவனங்களைத் தெரிந்து பெயரிட்டு, கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறான ஒரு மாதிரி அட்டவணையைத் தயாரித்து தயாரித்து அதில் பதிந்து கொள்க. பின்னர் உங்கள் மாதிரியில் அவை ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை எடுத்துக்காட்டுக.

வியாபாரஸ்தாபனத்தின் பெயர்	உரிமையாளர்	பொறுப்புக்கள்	சட்ட அந்தஸ்து	கணக்கீட்டு பதிவுகள்

(iii) 1982 ம் ஆண்டு வரையறுத்த பொதுக்கம்பனிகளினதும் வரையறுக்கப்பட்ட, தனியார் கம்பனிகளினதும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஐந்து வகையான கம்பனிகளின் பெயர்களைத் தருக.

(iv) கீழ்காட்டப்பட்டுள்ளவாறு ஒரு மாதிரியைத் தயாரித்து கம்பனியுடைய பங்கு மூலதனத்துடன் தொடர்பான கீழ்வரும் பதங்களுக்கான விளக்கக் குறிப்பொன்றினைத் தருக.

பதங்கள்	விளக்கக் குறிப்பு
1. பெயரளவு மூலதனம் 2. வழங்கிய பங்கு மூலதனம் 3. வழங்கப்படாத பங்கு மூலதனம் 4. அழைத்த மூலதனம் 5. இறுத்த (பணம் செலத்திய) மூலதனம்	....

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 1998 டிசெம்பர்.

வர்த்தகமும் கணக்கியலும் II

விடைகள்

சரஸ்வதி வியாபாரிகளினது

1. 1998 ஆயச 31 ல் முடிவமைந்த ஆண்டிற்கான வியாபார லாப நட்ட கணக்கு

ஆரம்ப இருப்பு		8200	விற்பனை	75100
கொள்வனவு	35400			
(-) வெளித்திருப்பம்	1300			
	34100			
(+) உள்வந்த வண்டி கூலி	1800	35900		
விற்பனைக்கு தயாரான சரக்கு		44100		
(-) இறுதி இருப்பு		11200		
விற்பனை கிரயம்		32900		
மொத்த லாபம் கீ/கொ/செ/		42200		
		75100		75100

நிலைய நிர்வாக செலவு			மொத்தலாபம் கீ/கொ/வ		42,200
வாடகை	4,800		பெற்ற கழிவு		550
மின்சாரமும் சக்தியும்	2,100		தேறிய நட்டம்		10,690
இறை காப்புறுதி	3,100				
சம்பளமும், கூலியும்	12,400				
நானாவித செலவு	1,670				
இயந்திர தேய்வு	7,200				
தளபாட தேய்வு	900	32,170			
விற்பனை விநியோகசெலவு					
பொதிசெய் உபகரணம்	750				
அனுமதித்த கழிவு	710				
அறவிடமுடியாகடன் ஏ/டு	1,100				
மோட்டார் தேய்வு	10,200				
மோட். வா. செலவு	4,300	17,060			
நிதிச் செலவு					
வங்கிக்கட்டணம்	710				
வங்கிக்கடன்வட்டி	3,500	4,210	முலதன க/கு மாற்றப்பட்டது		
		53,440			53,440

சரஸ்வதி வியாபாரத்தினது 31 March 98ல் உள்ளவாறான ஐந்தொகை

பொறுப்புகள்			சொத்துகள்	கிரயம்	கிரண்ட தேய்வு	தேறிபாது
உரிமையாண்மை மூலதனம்	70,000		*நிலையான சொத்து*			
(+) தேறிய நட்டம்	10,690		இயந்திரம்	72,000	37,200	34,800
	59,310		தளபாடம்	18,000	6,000	12,000
(-) பற்று	5,000	54,310	மோட்டார்வாகனம்	51,000	24,200	26,800
				141,000	67,400	73,600
நீண்டகாலப் பரிப்பு						
வங்கிக்கடன்		35,000	*நடைமுறைச் சொத்து*			
			இருப்பு		11,200	
நடைமுறைபரிட்பு			கடன்பட்டோர்			
கடன்கொடுத்தோர்	23,240		(-) அ.மு.கடன் ஏற்பாடு	22,000	20,900	
வங்கிக்கடன்வட்டி	3,500		வங்கியிலுள்ள காசு	1,100	7,450	
அட்டுறு வாடகை	400	27,140	கையிலுள்ள காசு		3,300	42,850
		116,450				116,450

2. i) உற்பத்தி கிரயத்தை மதிப்பிடுவதற்கும், உற்பத்தி செயற்பாடு தொடர்பான தகவல்களை முகாமையினருக்கு வழங்குவதற்கும், சிறந்த விலையிடல் கொள்கையினை வகுப்பதற்கும், உற்பத்தி கிரயத்தினை திருத்தமாக மதிப்பிடுவதன் மூலம் சரியான இலாப நட்டங்களை மதிப்பிடுவதற்கும்.

ii)

வேறுபாடுகள்	
ஆக்கக் கணக்கு	வியாபார கணக்கு

a)	ஆக்கக் கணக்கை தயாரிப்பதன் மூலம் உற்பத்தி கிரயத்தை அறியலாம்	வியாபார கணக்கை தயாரிப்பதன் மூலம் மொத்த லாபத்தை அறியலாம்.
b)	ஆக்கக் கணக்கில் செலவுகள் மாத்திரமே காட்டப்படும். அதாவது செலவினங்களின் மொத்த கூட்டுத் தொகை காணப்படும்.	விற்பனைக்கும் விற்பனைக் கிரயத்திற்கும் இடையிலான வேறுபாட்டை கண்டறிவதற்காக தயாரிக்கப்படும்.
c)	உற்பத்தி தொடர்பான செலவினங்கள் மட்டுமே காணப்படும்.	கொள்வனவு, விற்பனை தொடர்பான கணக்குகளை உள்ளடக்கி ஒரு வருடத்துக்கென தயாரிக்கப்படும்.

iii) சேகரின் 31. 12. 97ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி க/கு

ஆரம்ப மூ. பொருள் இருப்பு		21,000	உற்பத்தி கிரயம்	
மூ. பொருள் கொள்வனவு	370,000		வி/ர கணக்கிற்கு	
(+) உள்வந்த வண்டிகூலி	3,500	373,500	மாற்றப்பட்டது	483,700
		394,500		
(-) இறுதி மூ. பொருள் இருப்பு		24,000		
பயன்படுத்திய மூலப்பொருள்		370,500		
நேர்கூலி		18,000		
முதற்கிரயம்		388,500		
தொழிற்சாலை மேந்தலை				
பொதுச் செலவு	31,000			
மின்சாரம் சக்தியும்	7,500			
வாடகை	12,000			
காப்புறுதி	4,200			
இயந்திர தேய்வு	28,000			
தொழிலாளர் கூலி	14,000	96,700		
		485,200		
(+) ஆரம்ப குறை வேலை	13,500			
(-) அறுதி குறை வேலை	15,000	(-1,500)		
		483,700		483,700

3. i)

வியாபார கழிவு	காசுக்கழிவு
a) ஒரு பெருளை விற்பனை செய்யும் போது விற்பனை விலையில் கொடுக்கப் படும் கழிவு	வியாபார கடன்பட்டோர் குறித்த காலத்திற்குள் கடனை தீர்க்கும் போது கடனில் கொடுக்கப் படும் கழிவு
b) விற்பனையை அதிகரிப்பது இதன் நோக்கம் ஆகும்	கொடுத்த கடன்களை விரைவாக திரும்பப் பெற்றுச் கொள்வது நோக்கம்
c) கணக்குகளில் காட்டப்படுவது இல்லை	கணக்குகளில் காட்டப்படும்.

ii) a) வேறு ஒரு நிறுவனம் வைத்துள்ள அறிக்கைகளில் உள்ள மெய்ம்மைத் தன்மையை அளவிட முடியும்.

b) வாடிக்கையாளனின் நடவடிக்கைகள் பிழையின்றி செய்யப்பட்டுள்ளவையென அறியக் கூடியதாக இருத்தல்.

மூன்று நிரல் காசேடு.

திகதி	விபரம்	கைச் இல	கொடுத்த கழிவு	காசு	வங்கி	திகதி		கைச் இல	பெற்ற கழிவு	காசு	வங்கி
1998						1998					
Jan 1.	மூலதனம்			50000		Jan 2.	வங்கி	எ		30000	
2.	காசு	எ			30000	3.	கொள்வனவு				3450
4.	லக்மன் கடன்			10000		7.	வங்கி	எ		10470	
5.	விற்பனை			2350		8.	ரவி		40	1560	
6.	மிலின்டா		30	470		10	கொள்வனவு				4000
7.	காசு	எ			10470	15	வங்கி.	எ		5000	
12	விற்பனை			3600		22	மறு.காசோலை				470
15	காசு	எ			5000	24	காசு	எ			1500
18	சன்னா		50	750		28	காசு	எ			6900
24	ஹசன்		60	1200		29	வாடகை			400	
	வங்கி	எ		1500		30	வங்கி	எ		5000	
28	வங்கி	எ		6900			பற்று				1000
30	காசு	எ			5000	31	கொள்வனவு			3200	
							மீ/கீ/கொ/செ			21140	33150
			140	76770	50470				40	76770	50470
1998											
Feb. 1.	மி/கி/கொ/வ			21140	33150						

4. i. a) கூட்டல் பிழைகள்
   b) பேரேட்டு கணக்கு ஒன்றின் மீதி பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படாமை.
   c) ஒற்றைப் பதிவு நடவடிக்கை.
   d) பக்கம் மாறிப் பதிதல்
   e) ஆரம்ப பதிவுகளை பிரதி செய்யும் போது ஏற்படும் வழுக்கள்.

   ii. a) எழுதாத வழுக்கள்
   b) கொள்கை வழுக்கள்.
   c) சரிகட்டும் வழுக்கள்
   d) முதற்பதிவு வழுக்கள்
   e) இரட்டிப்பு பதிவு வழுக்கள்.

iii. முறையான நாட்குறிப்பு

திகதி	விபரம்	பே. ப	வரவு	செலவு
1.	விற்பனை கணக்கு		500	
	கடன்பட்டோர் க/கு			500
	(விற்பனையென பதிவு செய்யப்பட்ட பிழையை நீக்குதல்)			
	கொள்வனவு க/கு		500	
	கடன் கொடுத்தோர் க/கு			500
	(நாளேட்டில் பதியப்படாத கடன்			
	கொள்வனவை பதிவு செய்தல்)			
2.	தொங்கல் க/கு		2000	
	(வங்கி நிரலின் 1000/= செலவு மீதியை			
	பரீட்சை மீதியில் வரவில் பதிந்ததை நிக்குதல்)			
3.	கட்டிட திருத்தக் க/கு		6000	
	கட்டிடக் க/கு			6000
	(கட்டிட திருத்தம் கடடிட் க/கில் தவறாக பதிந்ததை திருத்துதல்			
4.	தொங்கல் க/கு		4000	

	பியதாசா க/கு (பியதாசாவிட மிருந்து கிடைத்த 2000/= வரவில் பதிந்ததை திருத்துதல்)			4000
5.	விற்பனை க/கு காசு க/கு (விற்பனை 1500/= ஐ இருமுறை பதிவு செய்யப்பட்டது திருத்துதல்)		1500	 1500

5. i) a) வங்கி or வேறு நிறுவனங்கலில் கடன் பெறுதல்
b) நண்பர்கள் உறவினர்களிடம் கடன் பெறுதல்
c) சொத்து ஒன்றை விற்று or ஈடுவைத்துகடன் பெறல்
d) பண்டங்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்.
e) உரிமையாளரின் சேமிப்பிலிருந்து
f) ஏற்கனவே உழைத்த லாபத்திருந்து.

ii) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.

iii) a) மக்கள் வங்கி
b) இலங்கை வங்கி
c) தேசிய சேமிப்பு வங்கி

iv) a) வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக
b) முதல்வரின் பொறுப்புகளை இலகுவாக்கலாம்.
c) முகவர்களை நியமிப்பது விளம்பரமாக அமையும்.
d) இடையாட்களின் எண்ணிக்கையை குறைத்தல்

v) காசோலை ஒன்றை வங்கியில் கொடுத்து பணமாக்குவதற்காகவோ, இன்னொருவருக்கு சாட்டுதல் செய்வதற்கோ, வங்கிக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்வதற்கோ காசோலையின் பின்புறத்தின் பெறுவோன் கையொப்பமிடல் புறக்குறிப்பிடல் எனப்படும்.

vi) a) விற்பனை செய்யும் முன் பண்டங்களின் மாதிரிகளை இலவசமாக கொடுத்தல்.
b) விற்பனையுடன் சேவைகளையும் வழங்குதல்.
c) பரிசுப் போட்டிகளை நடாத்துதல்
d) மேலதிக அன்பளிப்புகளை கொடுத்தல்
e) காட்சி அறைகள் அமைத்தல்

vii) a) உற்பத்தி தடைப்படாமல் மூலப்பொருட்களை சேமித்து வைக்க.
b) உற்பத்தியாக்கப்பட்ட முடிவுப் பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் வரை வைத்திருக்க.
c) பருவகால விளை பொருட்களை ஏனைய காலத்திலும் விற்பதற்காக சேமித்து வைத்திருக்க.
d) இயந்திர சாதனங்களின் சரியான பயன்பாட்டை பெற்றுக் கொள்ள
e) பண்டிகைக் காலங்களில் அதிக பண்டங்களை விற்பனை செய்ய
f) விலைத்தளம்பலை கட்டுப்படுத்த

viii) a) கூட்டாகக் காப்புறுதி பொறுப்பினை ஏற்கும் காப்புறுதி நிறுவனம் நட்ட ஈட்டுப் பொறுப்பாளி எனப்படும்.
b) பாரிய பெறுமதியுடைய ஒரு அபாயத்தை பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியின் பொறுப்பினை ஏற்கும் காப்புறுதியாளர் நட்ட ஈட்டுப் பொறுப்பாளியாவார்.
c) பெரும்பாலும் நட்ட ஈட்டுப் பொறுப்பாளிகள் கடலபாய காப்புறுதியின் போதே எதிர் கொள்வர்.
e) நட்ட ஈட்டுப் பொறுப்பாளிகளை சந்திப்பது தரகர் மூலமே.

ix) இலங்கை மத்திய வங்கி

x) வியாபாரமும். துணைச் சேவைகளும் ஆகும். அதாவது வியாபார நடவடிக்கைகள் திறமையாக நடை பெறுவதற்கு உதவும் போக்குவரத்து களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல், காப்புறுதி, வங்கிச் சேவை போன்ற துணைச் சேவைகளும் கணக்கீடு, சட்ட ஆலோசனை, முகாமைத்துவ ஆலோசனை போன்ற சேவைகளும் வியாபாரத்துக்கான உதவிகள் எனலாம்.

xi) a) எல்லா வகைப் பண்டங்களும் விற்பனைக்கு இருக்கும்.
b) பொருள்கள் யாவும் பல்வேறு அளவுகளில் பொதி செய்யப்பட்டிருக்கும்.
c) எல்லாப் பொருட்களின் மீதும் விலை பொறிக்கப்பட்டிருக்கும்.
d) வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதி காணப்படும்.
e) சுய சேவை அடிப்படையில் நுகர்வோர் விரும்பியவாறு பொருட்களை தெரிவு செய்ய முடியும்.

xii) a) போக்குவரத்து வசதியுள்ள இடமாக இருத்தல்
b) சில்லறை வியாபாரி வந்து போகக் கூடிய இடமாக இருத்தல்
c) விஸ்தரிப்பு வசதியுடையதாக இருத்தல்.
d) உற்பத்தி இடங்களில் or தொழிற்சாலைகளில் இருந்து பொருட்களை இலகுவாக பெறக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
e) களஞ்சிய படுத்தலுக்கான வசதி இருத்தல்.

xiii) 1. தபால் திணைக்களம்
2. கல்வி வெளியீட்டு திணைக்களம்
3. இலங்கை புகையிரத திணைக்களம்
4. உணவுத் திணைக்களம்.

xiv) 1. வங்கியாணை, நாணயக்கடிதம் ஆகியவற்றை வெளியிடல்
2. மாற்றுண்டியல்களை கழிவீடு செய்தல்
3. வெளிநாட்டு கொடுப்பனவு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
4. வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

xv) 1. இலங்கைக்கு சாதகமான நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுமதி, இறக்குமதி பண்டங்களை கொண்டு செல்லல்
2. கப்பல் போக்குவரத்து தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து எண்ணெய் இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடல்.
4. வெளிநாட்டு கப்பல் கம்பனிகளின் முகவராக செயற்படல்.

6. i) a) நேரடி விற்பனை
b) சில்லறை வியாபாரி மூலம்
c) மொத்த வியாபாரி சில்லறை வியாபாரி ஊடாக.
d) பிரதிநிதிகள் மூலம்.

ii) பிரதிநிதி ஒருவன் பண்டங்களை கடனுக்கு விற்பனை செய்வதுடன், விற்பனை தொடர்பின் கடன்களை திரட்டிக் கொள்ளும் பொறுப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

iiii) a) காசு விற்பனை
b) கடன் விற்பனை
c) தவணை முறையில் விற்பனை

iv) a) விலை விசாரணை
b) கட்டளை
c) விலைப்பட்டியல்
d) அறிவித்தல் கடிதம்
e) பொறுப்பளித்தல் பத்திரம்
f) பற்றுச்சிட்டு
g) கைச்சாத்து

v) a) சில்லறை வியாபாரிகள்
b) மொத்த வியாபாரிகள்
c) பிரதிநிதிகள்

7. i) a) சட்டமுறைப்பணம்
b) வங்கிப் பணம்
c) போலிப் பணம்
d) அண்மிய பணம்

ii) அ) மாற்றூடகமாக தொழிற்படல்
ஆ) பிற்போடப்பட்ட கொடுப்பனவு கருவியாக அமைதல்

இ) பெறுமான அளிவீடாக அமைதல்
ஈ) பெறுமான திரட்டாக அமைதல்.

iii) a) அரச ஈட்டு முதலீட்டு வங்கி
b) தேசிய அபிவிருத்தி வங்கி
c) பிரதேச அபிவிருத்தி வங்கி
d) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

iv) a) வங்கி வீதம் :- வங்கிகளுக்கு வழங்கும் வட்டி வீதத்தை திர்மானித்தல்
b) ஒதுக்கு வீதம் :- வணிக வங்கிகளின் திரவத் தன்மையை பாதுகாப்பதற்காக வைப்புகளிள் குறிப்பிட்ட வீதத்தை மத்திய வங்கியில் வைப்பு செய்ய வேண்டும்.
c) பகிரங்க சந்தை நடவடிக்கை :- மத்திய வங்கியினால் உண்டியல்கள், ஏனைய ஆவணங்கள் போன்றவை கொள்வனவு விற்பனவு மேற் கொள்வது ஆகும்.
d) நுகர்வு கடன் கட்டுப்பாடு
e) எல்லை கடன் கட்டுப்பாடு

8. i) * தனிவியாபாரம்
* பங்குடமை
* கம்பனி
* அரச கூட்டுத்தாபனம்
* அரச திணைக்களம்
* கூட்டுறவு நிறுவனங்கள்

ii)

	வியாபார ஸ்தாபனத்தின் பெயர்	உரிமையாளர்	பொறுப்புகள்	சட்ட அந்தஸ்து	கணக்கீட்டு பதிவுகள்
1.	தனியுடமை	உரிமையாளருக்கு மட்டும் (1)	வரையறை இல்லை.	சட்டஆளுமை இல்லை சட்டக் கட்டுப்பாடு குறைவு	கட்டாயம் இல்லை
2	பங்குடமை	பங்காளர்களுக்கு (2 - 20)	வரையறை இல்லை.	சட்ட ஆளுமை இல்லை சட்டக் கட்டுப்பாடுகள் குறைவு	கட்டாயம் இல்லை
3.	ஐம்பனி (பொது) (மக்கள்) (சொந்த)	பங்குதாரர்களுக்கு) (7 க்குமேல்) (50க்குமேல்) (2 - 50வரை)	வரையறுக்கப் பட்டது	சட்ட ஆளுமை உண்டு	அவசியம் தேவை.

iii) * பிணையால் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி
* வரையறுக்கப்படாத கம்பனி
* கரை கடந்த கம்பனி
* அரச கம்பனி
* மக்கள் கம்பனி
* வதிவற்ற கம்பனி.

iv) 1. பகிரங்க கம்பனி ஒன்று பங்குகளை பொது வழங்கீடு செய்வதற்கான அனுமதியினை கம்பனிகள் பதிவாளரிடத்தில் விடுத்திருந்த போது கம்பனிகள் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற பங்கு மூலதன தொகை அனுமதித்த பங்கு முலதனம் எ-ம்.
2. பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட பங்குகள் கம்பனியால் உடனடியாக பொது வழங்கீடு செய்யத் தீர்மானிக் கப்பட்ட பங்கு மூலதன தொகை வழங்கிய பங்கு மூலதனம் ஆகும்.
3. பொது வழங்கீடு செய்யத் தீர்மானிக்கப்படாத தொகை வழங்கப்படாத பங்கு மூலதனம் ஆகும்.
4. ஒவ்வொரு பங்கு தொடர்பாகவும் பங்குதாரர்களால் செலுத்த வேண்டுமென கம்பனியினால் அழைக்கப் பட்டிருகின்ற பங்கிற்குரிய மூலதன தொகை ஆகும்.
5. கம்பனியினால் அழைப்பு விடப்பட்டுள்ள பங்கு மூலதன தொகையின் பங்குதாரர்களால் உடனடியாக செலுத்தப்பட்டிருக்கின்ற மூலதன அளவு இறுத்த மூலதனம் எனப்படும்.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1997 டிசெம்பர்.

General Certificate of Education [Ord. Level] Examination - Dec 1997

ஒருமணி

வர்த்தகமும் கணக்கியலும் I

91
T | I

கவனிக்க: I. எல்லா வினாக்களுக்கும் விடை தருக

II. 1 முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1),(2),(3),(4) என எண்ணிடப்பட்ட விடைகளுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.

III. விடைத்தாளில் உமது தெரிவுக்கு ஒத்த எண்ணின் மீது புள்ளடி (x) இடுக.

1. தனியொரு பிரிவில், தனது செயற்பாடுகளைக் குறித்த ஒரு வகையான பண்டத்திற்கு மட்டுப்படுத்திக் கொள்ளும் வியாபார முயற்சிக்கு வழங்கும் பெயர்:
(1) பகுதிக் கடைகள் (2) மடங்குக் கடைகள்
(3) சங்கிலித் தொடர்க் கடைகள் (4) சுப்பர் மார்க்கட்டுகள்

2. மொத்த வியாபாரத்திற்கும் சில்லறை வியாபாரத்திற்கும் இடையிலான வித்தியாசம் தங்கியிருப்பது:
(1) பண்டங்களின் தொகையில் (2) விற்பனையாளரின் நோக்கத்தில்
(3) கொள்வனவாளரின் நோக்கத்தில் (4) பண்டங்களின் விலையில்

3. வங்கிச் சேமிப்புக்கணக்குகளிலும் நிலையான வைப்புக் கணக்குகளிலும் வைப்புச்செய்யப்படும் பணத்திற்கு வழங்கும் பெயர்:
(1) கிட்டிய பணம் (2) வங்கிப்பணம்
(3) கேள்விவைப்புகள் (4) போலிப்பணம்

4. கனியநெய்யைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் கப்பலுக்கு வழங்கும் பெயர்:
(1) கொள்கலன் கப்பல் (2) தாங்கி (3) லைனர் (4) ட்ராம்ப்

5. பிரதியீட்டுப் பண்டங்களுக்கு மிகப்பொருத்தமான ஓர் உதாரணம்:
(1) தேயிலையும் கோப்பியும் (2) பீங்கான் கோப்பைகளும் தட்டுகளும்
(3) கொழுப்புப் பசையும் எண்ணெயும் (4) தேயிலையும் சீனியும்

6. கைத்தொழில்கள் ஆனவை பேரளவுக் கைத்தொழில்கள், நடுத்தர அளவுக் கைத்தொழில்கள், சிறிய அளவுக் கைத்தொழில்கள் என வகைப்படுத்தப்படுவதற்கான அடிப்படை:
(1) உற்பத்தியினளவு, இடவமைவு, ஊழியர்களின் எண்ணிக்கை
(2) உற்பத்தியினளவு, ஈடுபடுத்திய மூலதனம், ஊழியர்களின் எண்ணிக்கை
(3) ஈடுபடுத்திய மூலதனம், விளம்பரப்படுத்தல் முறை, ஊழியர்களின் எண்ணிக்கை
(4) ஈடுபடுத்திய மூலதனம், ஏற்றியிறக்கல் வசதிகள், சந்தைப்படுத்தல்

7. வர்த்தக வங்கியொன்று ஆற்றும் தொழிற்பாடுகளுள், மாவட்ட அபிவிருத்தி வங்கியொன்றினால் ஆற்றப்பட முடியாத ஒரு தொழிற்பாடு:
(1) வெளிநாட்டு நாணமாற்றுத் தொழிற்பாடு
(2) தங்கத்தை ஓர் ஈடாக ஏற்றுக்கொள்ளுதல்
(3) பொதுமக்களிடமிருந்து நடைமுறை வைப்புகளை ஏற்றுக்கொள்தல்
(4) சிறு வியாபாரிகளுக்குக் குறுங்காலக் கடன்களை அனுமதித்தல்

8. பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கணக்காய்வு செய்யப்படுவதற்கான தமது கணக்குகளைச் சமர்ப்பிப்பது:
(1) செயற்குழுவிடம் (2) பணிப்பாளர்கள் சபையிடம்
(3) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் (4) கணக்காய்வுத் திணைக்களத்திடம்

9. உண்ணாட்டு வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவைகள், ரெலெக்ஸ், ∴பக்ஸ் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நிறுவகம் எது?
(1) தொலைத் தொடர்புகள் திணைக்களம் (2) அஞ்சற் திணைக்களம்
(3) மின்சார சபை (4) வரையறுத்த இலங்கை ரெலிகொம் நிறுவனம்.

10. குறைந்த செலவில் நாடுபூராவும் குறித்த உற்பத்திப் பொருளொன்றை விளம்பரப்படுத்துவதற்குப் பொருத்தமான சாதனம் எது?
(1) வானொலி (2) செய்தித்தாள் (3) தொலைக்காட்சி (4) சஞ்சிகைகள்

11. ஆயுட் காப்புறுதிப் பத்திரமொன்றிற்குப் பொருத்தமற்றது பின்வருவனவற்றுள் எது?
(1) காப்புறுதி செய்யும் உரிமை
(2) இரு தரப்பினர்களுக்குமிடையே உச்ச நம்பிக்கை
(3) காப்புறுதியளிக்கப்பட்ட தொகையைக் காலமுடிவில் பெற்றுக்கொள்தல்
(4) சேதத்தின் அளவிற்கு மட்டும் இழப்பீடு கிடைக்கப்பெறுதல்

● 12 ஆம் 13ஆம் 14ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது கீழே தரப்பட்டுள்ள பொருத்தமான எழுத்துக்குறியீட்டைப் பயன்படுத்துக.

A - வாடகைக்கொள்வனவு முறை
B - பிற்போட்ட கொடுப்பனவு முறை
C - கேள்விப் பத்திர முறை
D - ஏலவிற்பனை

12. இம்முறைக்கமைய பகுதிக்கொடுப்பனவு செய்யப்பட்டதும் வாங்குபவர் பண்டத்தின் உரிமையாளராவார்.
(1) A (2) B (3) C (4) D

13. இது இலங்கையில் தேயிலை, இறப்பர் விற்பனையில் பயன்படுத்தப்படும் முறையாகும்:
(1) A (2) B (3) C (4) D

14. அரசாங்கத் திணைக்களங்கள் தமது கொள்வனவுகளைச் செய்வதற்குக் கடைப்பிடிக்கும் முறை:
(1) A (2) B (3) C (4) D

15. காசோலைகளுக்குக் குறுக்குக்கோடிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பின்வரும் பதங்களுள் சிறப்புக் குறுக்குக்கோடிடலுக்குப் பயன்படுத்தப்படுவது எதுவெனத் தெரிவு செய்க.
(1) அன்ட் கோ
(2) கைமாறத் தகாதது
(3) கணக்கு வைத்திருப்போனுக்கு மட்டும்
(4) இலங்கை வங்கி

16. 'சந்தை' எனும் பதத்தைத் தெளிவாக விளக்கும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) கடைகளை வைத்திருப்போர் வேறுபட்ட வகையான பண்டங்களை விற்குமிடம்.
(2) பண்டங்களை வாங்குவோரும் விற்போரும் கூடும் இடம்.
(3) ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட துறைமுகம் போன்றதோர் இடம்.
(4) வியாபாரிகள் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் இடம்.

17. மாற்றுண்டியல்கள் கைமாறத்தக்க சாதனங்களின் பிறவகைகளிலிருந்து வேறுபடுவது எவ்வாறு?
(1) கொடுப்பனவானது ஒரு வங்கியினூடாக மட்டும் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.
(2) முதன்மையான கொடுக்கல் வாங்கலொன்று இருந்தாலொழிய மாற்றுண்டியல்கள் எழுதப்பட மாட்டா.
(3) மாற்றுண்டியல்கள் வெளிநாட்டு வியாபாரத்தில் மட்டும் கைமாற்றப்படும்.
(4) வரைவினைப் பெற்றவர் அதனை ஒப்புக்கொண்டதன் பின்னரே மாற்றுண்டியல்கள் செல்லுபடியான ஆவணமாகும்.

18. பங்குடமை நிறுவகமொன்றுடன் ஒப்பிடும் பொழுது தனிவியாபாரி நிறுவகமொன்றிற் காணக்கூடிய ஒரு பிரதிகூலம்:
(1) தனி வியாபாரி வணிகத்திலான பொறுப்பு வரையறையற்றது
(2) மூலதனப் பற்றாக்குறை, வணிகம் விரிவெய்துவதைத் தடைசெய்யும்.
(3) உரிமையாளர் தானே தனித்து வருமான வரியைச் செலுத்த வேண்டியிருத்தல்.
(4) வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்தல் சிரமமானது.

19. 'இறக்கியேற்றுமிட வியாபாரம்' (entrepot trade) என்பதை விளக்குவதாக அமையும் எடுத்துக்காட்டைத் தெரிவு செய்க.
(1) இந்தியா இலங்கையிடமிருந்து ஆடைகளைக் கொள்வனவு செய்து மாற்றங்கள் எதனையும் செய்யாது. ஐக்கிய அமெரிக்காவுக்கு விற்கிறது.
(2) சீனா,சீனா -இலங்கை வியாபார ஒப்பந்தத்தை மீறி சிங்கப்பூருக்கு அரிசியை விற்பனை செய்கிறது.
(3) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படவேண்டிய மாவின் இருப்பு யப்பானுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
(4) இங்கிலாந்து இலங்கையின் தேயிலைக் கொள்வனவு செய்து பொதி செய்து அதனை ருஷ்யாவுக்கு விற்கிறது.

20. இனிப்புப் பண்டங்களின் சிறிய அளவு உற்பத்தியாளரொருவருக்கு, அவர் தனது உற்பத்தியை விற்பனை செய்வதற்கு மிகப்பொருத்தமான முறை:
(1) வெளியிடுகை முழுவதையும் மொத்த விற்பனையாளரொருவருக்கு விற்றல்
(2) விநியோக முகவர்களை நியமித்து அவர்களினூடாக விற்றல்
(3) உற்பத்தியாளர் வெளியிடுகை முழுவதையும் சில்லறை விற்பனையாளர்க்குத் தானே விற்றல்
(4) கொள்வனவாளர்களைத் தனது வதிவிடத்திற்கு அழைத்து அவற்றை விற்றல்.

21. 'வரவு அதிகரிக்கின்றது; செலவு குறைகின்றது'. இக்கணக்கீட்டுத் தத்துவம் பின்வருவனவற்றுள் எதற்கு பொருத்தமானதாகும்?
(1) சொத்துக் கணக்குகளும் பொறுப்புக்கணக்குகளும்
(2) பொறுப்புகள் சார் கணக்குகளும் செலவுக் கணக்குகளும்
(3) உரிமையாளர் கணக்குகளும் சொத்துக் கணக்குகளும்
(4) சொத்துக் கணக்குகளும் செலவுக் கணக்குகளும்

22. சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தெரிவு செய்க.
(1) மூலதனம் + செலவுகள் + பொறுப்புகள் = சொத்துக்கள் + வருமானம்
(2) மூலதனம் + பொறுப்புகள் + வருமானம் = சொத்துக்கள் + செலவுகள்
(3) மூலதனம் + சொத்துக்கள் + செலவுகள் = பொறுப்புகள் + வருமானம்
(4) மூலதனம் + சொத்துக்கள் + வருமானம் = பொறுப்புகள் + செலவுகள்

23. காணியொன்றின் கொள்வனவின்போது செலுத்தப்பட்ட உறுதிக் கட்டணங்கள் நானாவித செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல், ஒரு
(1) ஈடுசெய் வழுவாகும். (2) கோட்பாட்டு வழுவாகும்.
(3) விடுபாட்டு வழுவாகும். (4) மிகையாக்கிய வழுவாகும். (error of commission)

24. வணிகமொன்றின் வளங்கள் பின்வருவனவற்றுள் எதுவாகக் கருதப்படும்?
(1) வணிகத் தலத்தில் அலங்காரப் பொருளாகக் காட்சிக்கு வைக்கப்படக்கூடிய ஒரு பொருளாக
(2) பண்டங்களுக்காகப் பரிமாற்றம் செய்யக்கூடிய ஏதேனுமொரு பொருளாக
(3) பணத்தின் மூலம் அளவிடக்கூடிய பெறுமானங்கொண்ட ஒரு பொருளாக
(4) பணத்தைப் போன்று பரிமாற்றம் செய்யத்தக்க ஏதேனுமொரு பொருளாக

25. 'சதுர' என்பவர் சார்பாக எழுதப்பட்ட 'செலவுத் தாள் மூலமாக அமைவது:
(1) கொள்வனவுக் குறிப்பேட்டுக்கு (2) விற்பனைக் குறிப்பேட்டுக்கு
(3) வெளித்திரும்பல் குறிப்பேட்டுக்கு (4) உட்டிரும்பல் குறிப்பேட்டுக்கு

26. காசோலைமூலம் கொடுப்பனவொன்று செய்யப்படும் பொழுது, ஒருவர் அதற்கான சான்றாக வைத்திருக்கும் ஆவணம்:
(1) அடியிதழ் (2) உறுதிச்சீட்டு (3) வரவுத் தாள் (4) பற்றுச்சீட்டு

27. பின்வருவனவற்றிலிருந்து பிழையான இரட்டைப் பதிவினைக் காட்டும் தொகுதியைக் தெரிவுசெய்க.
(1) வெளித்திரும்பல்கள் - கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைத்து வெளித்திரும்பல்கள் கணக்கிற்குச் செலவு வைத்தல்
(2) உட்டிரும்பல்கள் - உட்டிரும்பல்கள் கணக்கிற்கு வரவு வைத்து கடன்பட்டோர் கணக்கிற்குச் செலவு வைத்தல்.
(3) உரிமையாளர் பண்டங்களை அகற்றியமை - கொள்வனவுகள் கணக்கிற்கு வரவு வைத்து எடுப்பனவுகள் கணக்கிற்குச் செலவு வைத்தல்.
(4) மொத்த இலாபம் - வியாபாரக் கணக்கிற்கு வரவு வைத்து இலாபநட்டக் கணக்கிற்குச் செவவு வைத்தல்

28. கடன்பட்டோர் ரூ. 33 860 ஆகவும்அறவிடமுடியாக்கடன்கள் ரூ. 1860 ஆகவும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு கடன்பட்டோரின் 5% ஆகவும் இருக்குமாயின் ஐயக் கடன்களுக்கான கணிப்பு அமைய வேண்டிய விதம்:
(1) $\frac{5}{100}$ x (33860 - 1860) (2) $\frac{5}{100}$ x (33860 + 1860) (3) $\frac{5}{100}$ x 33860 (4) $\left(\frac{5}{100} \times 1860\right)+33860$

29. வருமான செலவீட்டுக் கணக்கிற்கு உறுப்பினர்களின் சந்தாப் பணத்தொகைகள் செம்மையாக்கம் செய்யப்படும் விதம்:
(1) ஆண்டிற்கான பெறுவனவுகள் + முன்னைய ஆண்டிற்கான பெறுவனவுகள் + முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத் தொகைகள்
(2) ஆண்டிற்கான பெறுவனவுகள் + நிலுவையாயிருந்த சந்தாப்பணத் தொகைள் - முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத் தொகைகளும் முன்னை ஆண்டிற்குக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத்தொகைகளும்
(3) ஆண்டிற்கான பெறுவனவுகள் + நிலுவையாயிருந்த சந்தாப்பணத் தொகைள் + முற்பணமாகக் கிடைக்கப்பெற் சந்தாப்பணத் தொகைகளும் முன்னைய ஆண்டிற்குக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத்தொகைகளும்
(4) ஆண்டிற்கான பெறுவனவுகள் + முற்பணமாகக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத் தொகைகள் - முன்னைய ஆண்டிற்குக் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணத் தொகைகள்.

30. உற்பத்திக் கிரயத்தைக் காட்டும் உருப்படிகளின் பொருத்தமான தொகுதியைத் தெரிவு செய்க.
(1) நுகரப்பட்ட திரவியங்களின் கிரயம் + நேர்ச்செலவுகள் + மேந்தலைகள்
(2) நுகரப்பட்ட திரவியங்கள் - நேர்ச்செலவுகள் + மேந்தலைகள்
(3) மேந்தலைகள் + நேர்ச்செலவுகள் - நுகரப்பட்ட திரவியங்களின் கிரயம்
(4) நுகரப்பட்ட திரவியங்களின் கிரயம் + நேர்ச்செலவுகள் - மேந்தலைகள்

31. ஐந்தொகையொன்றிலே காட்டப்படுவது யாது?
(1) ஆண்டிற்குரிய பொருத்தமான தகவல்கள்
(2) அனைத்துப் பேரேட்டுக் கணக்குகளும் பற்றிய தகவல்கள்
(3) குறித்த ஒரு காலப்பகுதிக்குரிய தகவல்கள்
(4) குறித்த ஒரு தேதியில் வணிகமொன்றின் நிலையைக்காட்டும் தகவல்கள்

32. விற்பனை, விநியோகச் செலவுகளைக் கொண்டுள்ள கணக்குகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) வாடகை, இறைகள், காப்புறுதி, எழுதுகருவி வகை
(2) வங்கி வட்டி, வங்கிக் கட்டணங்கள், சட்டமுறைக் கட்டணங்கள், அறவிடமுடியாக்கடன்கள்
(3) வான்வண்டிச் செலவுகள், அறவிடமுடியாக்கடன்கள் விற்பனையாளர் சம்பளங்கள், அனுமதியளிக்கப்பட்ட கழிவீடு
(4) உட்சுமைக் கூலி, வெளிச்சுமைக் கூலி, சுங்கத்தீர்வை, காப்புறுதி

33. விற்பனைகளின் கிரயத்தைக் கொண்டிருக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) விற்பனைகள் + கொள்வனவுகள் + உட்சுமைக்கூலி + முடிவுத்தொக்கு
(2) ஆரம்பத் தொக்கு + கொள்வனவுகள் + முடிவுத்தொக்கு + கொள்வளவுகள் - விற்பனைகள்
(3) ஆரம்பத் தொக்கு + கொள்வனவுகள் + விற்பனைகள் - முடிவுத்தொக்கு
(4) ஆரம்பத் தொக்கு + கொள்வனவுகள் + உட்சுமைக்கூலி - முடிவுத்தொகை

34. சிறு செலவுக் காசினை மீள நிரப்புதல் என்பதனாற் கருதப்படுவது:
(1) மாதாந்த செலவுகளை மீளவளித்தல்
(2) தொடக்க மீதிக்குச் சமனான ஒரு தொகையைச் செலுத்துதல்
(3) முடிவு மீதிக்குச் சமனான ஒரு தொகையைச் செலுத்துதல்.
(4) சிறு செலவுக் காசாளர் கோரும் தொகையைச் செலுத்துதல்

35. இறுதிக் கணக்குகளின் முடிவுத் தேதியிலே முன் கொணரப்படும் மீதிகளைக் கொண்டுள்ள கணக்குகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) எழுதுகருவி வகை, காப்புறுதி, வட்டி
(2) இறைகள், எடுப்பனவுகள், கொள்வனவுகள்
(3) கட்டடங்கள், மூலதனம், வருமதியான வட்டிக் கணக்கு
(4) கடன்கள் கணக்கு, சட்டமுறைக் கட்டணங்கள், விற்பனைக்கணக்கு

36. செலவொன்றிற்குச் செய்த கொடுப்பனவிலிருந்து குறுங்காலப் பயன் கிடைக்குமாயின் அதற்கு வழங்கும் பெயர் யாது?
(1) விநியோகச்செலவு (2) வருமானச்செலவு (3) நிதிச்செலவு (4) மூலதனச்செலவு

37. கணக்குப் பதிவாளர் ஒருவருக்கான வங்கிக் கூற்று என்பதாற் கருதப்படுவது:
(1) சேமிப்புக்கணக்கின் மாதாந்தக் கூற்று
(2) நிலையான வைப்புக் கணக்கின் மாதாந்தக் கூற்று
(3) கடன் கணக்கின் மாதாந்தக் கூற்று
(4) நடைமுறைக் கணக்கின் மாதாந்தக் கூற்று

38. மூன்று நிரற் காசேடொன்றின் வரவு, செலவுப் பக்கங்களிற் காணப்படும் கணக்குகளின் தொகுதி:
(1) உரிமையாளர் கணக்குகளும் பொறுப்புக்கள்சார் கணக்குகளும்
(2) சொத்துக் கணக்குகளும் வருமானக் கணக்குகளும்.
(3) பெயரளவிற் கணக்குகளும் சொத்துக் கணக்குகளும்
(4) ஆளுக்குரிய கணக்குகளும் மெய்க்கணக்குகளும்.

39. வணிகத்தில் உரிமையாளரொருவர் ஒரு கடன்கொடுத்தோர் ஆவது:
(1) வணிகத்திற்கான அவரது பங்களிப்புகளுக்கு வட்டி செலுத்தப்படும்பொழுது
(2) உரிமையாளர் வணிகத்திலிருந்து காசை மீள எடுத்துக்கொள்ள முடியுமான பொழுது
(3) உரிமையாளர் வணிகத்திற்கு வளங்களின் வேறுபட்ட வகைகளை வழங்கும்பொழுது
(4) வணிகம் தனியொரு அலகாகக் கருதப்படும்பொழுது

40. காசுக்கழிவீடு அனுமதிக்கப்படுவது:
(1) காசுக்கொள்வனவுகளுக்கு
(2) கடன் கொள்வனவுகளுக்கு
(3) விற்பனைகளை அதிகரிக்கச் செய்வதற்கு
(4) கடன் கொடுப்பவை வேளைக்கே செய்ய ஊக்கப்படுத்துவதற்கு

BRIGHT BOOK CENTRE (PVT) LTD

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1997 டிசெம்பர்.

General Certificate of Education [Ord. Level] Examination - Dec 1997

மூன்று மணி **வர்த்தகமும் கணக்கியலும் II** 91 T I

பகுதி I

1. 1995 டிசெம்பர் 31 இல் இருந்தபடி யஸஸ் என்பாரின் ஏடுகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பரீடசை மீதி பின்வருமாறு:

	வரவு		செலவு	
	ரூ.		ரூ.	
காணியும் கட்டடங்களும்	90	000		--
கொள்வனவுகள்	55	400		--
தளபாடங்களும் பொருத்திகளும்	8	600		--
சம்பளங்கள்	18	000		--
கடன்பட்டோரும் கடன் கொடுத்தோரும்	20	000	18	700
அறவிடமுடியாக் கடன்கள்		200		--
ஒப்படைப்பு வான் வண்டி	80	000	--	
தேய்மானத்திற்கான ஏற்பாடு 1995.01.01 (ஒப்படைப்பு வான்)		--	34	600
மூலதனம்		--	178	000
வங்கி மீதி	12	000		--
கைவசமுள்ள காசு	2	300		--
காப்புறுதி	2	800		--
உட்டிரும்பல்கள்	1	100		--
அலுவலகச் செலவுகள்		800		--
உட்சுமைக் கூலி	3	400		--
அனுமதித்த கழிவீடு	1	300		--
தொக்குகள் 95.01.01	7	200		--
விற்பனைகள்			102	000
விளம்பரப்படுத்தல்	4	800		
வங்கிக் கட்டணங்கள்		200		--
10% நிலையான வைப்பு	20	000		--
எடுப்பனவுகள்	3	900		--
வாடகை		--	4	800
நானாவிதச் செலவுகள்	5	700		--
ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு 95.01.01		--		600
எழுதுகருவி வகை		750		--
தொலைபேசி		250		--
	338	700	338	700

கீழே தரப்பட்டுள்ள தகவல்களைக் கருத்திற் கொண்டு 1995 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும் அத்தேதியில் இருந்தபடியான ஐந்தொகையொன்றையும் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்:

i) 1995 டிசெம்பர் 31ல் இருந்த முடிவுத் தொக்கு ரூ. 6900
ii) முன்னதாகச் செலுத்திய காப்புறுதி ரூ. 200
iii) அறவிடமுடியாக்கடன்களுக்கான ஏற்பாடு கடன்பட்டோரின் 5% ஆக அதிகரிக்கப்படுதல் வேண்டும்.
iv) ஒப்படைப்பு வான் வண்டிக்குக் கொள்விலையின் மீது 10% படியும் தளபாடங்களுக்கும் பொருத்திகளுக்கும் கொள்விலையின் மீது 5% படியும் தேய்மானம் செய்க.
v) நிலையான வைப்பின் மீதான வட்டி, ஏடுகளிற் பதியப்படவில்லை.
vi) சேர்ந்த (அட்டுற்ற) விளம்பரச் செலவுகள் ரூ. 700 ஆகும்.

2. அ) வருமானச் செலவீட்டிற்கும் மூலதனச் செலவீட்டிற்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டும் இரு வாக்கியங்கள் எழுதுக.

ஆ) பின்வரும் கணக்குகள் சார் இரு வேறுபாடுகளை எழுதுக.
1) கொள்ளல் கொடுத்தற் கணக்கு
2) வருமான, செலவுக் கணக்கு

இ) 1995 டிசெம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கு டில்மினி விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல் கொடுத்தற் கணக்கு பின்வருமாறு:

கொள்ளல் கொடுத்தற் கணக்கு

		ரூ.		ரூ.
ஜனவரி 1 இல் மீதி மு/கொ		12 000	எழுதுகருவி வகை	280
			அஞ்சற் செலவு	1 600
சந்தாப்பணத் தொகைகள்			கொடித் தினச் செலவுகள்	3 200
1994	800		செய்தித் தாள்கள்	450
1995	15 000		உபசரணைச் செலவுகள்	1 600
1996	1 200	17 000	பார்வையாளர் அரங்கினைப் பேணுதல்	5 180
நன்கொடைகள் - கட்டடம்		5 000	விளையாட்டு உபகரணங்கள்	5 000
நன்கொடைகள் - பொது		4 000	தளபாடமும் சாதனங்களும்	1 200
கொடித் தின வருமானம்		6 200	மீதி கீ ∴ கொ டிசெம்பர் 31	28 220
நுழைவுக் கட்டணம்		1 600		
பழைய செய்தித்தாள்களின் விற்பனை		930		
		46 730		46 730

பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு 1995 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான, செலவுக் கணக்கினைத் தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.

i) 1995 ஆம் ஆண்டிற்கான சந்தாப்பண நிலுவை ரூ. 2 400 ஆகும்.
1995 ஆம் ஆண்டிற்கு 1994 இல் கிடைக்கப்பெற்ற சந்தாப்பணம் ரூ. 250

ii) ஆண்டின் தொடக்கத்தில் விளையாட்டு உபகரணங்கள் ரூ. 3 000 ஆகப் பெறுமானமிடப் பட்டன. ஆண்டின் இறுதியில் விளையாட்டு உபகரணங்கள் ரூ. 7 000 ஆகப் பெறுமானமிடப்பட்டன.

iii) கொடித் தினச் செலவுகள் தொடர்பில் ரூ. 250 செலுத்தப்பட வேண்டும்.

3. அ) கணக்குகளை வைத்திருக்கும் பொழுது நிகழும் வழுக்கள் அவற்றின் தன்மைக்கு ஏற்ப வேறுபட்ட வகைகளாகப் பிரிக்கப்படலாம் அத்தகைய நான்கு வகையான வழுக்களை எழுதுக.

ஆ) பரீட்சைமீதி இணங்கினாலும் கூட கணக்கீட்டுப் பதிவுகளில் வழுக்கள் இடம்பெறலாம்.

i) அத்தகைய வழுக்களின் இரு வகைகளை எழுதுக.
ii) அவ்வழுக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணந் தருக.

இ) பரீட்சை மீதியொன்றிலிருந்து கண்டுபிடிக்கக் கூடிய இரு வழுக்களை எழுதுக.

ஈ) பின்வரும் வழுக்களைத் திருத்துவதற்கு அவசியமான குறிப்பேட்டுப் பதிவுகளை எழுதுக.

i) சம்பா என்பவருக்குக் கடனுக்கு ரூ. 500 இற்குச் செய்த பண்டங்களின் விற்பனை சம்பாவின் கணக்கிற் பதியப்படவில்லை.

ii) காசேட்டில், அனுமதித்த கழிவீடுகள் நிரலின் மொத்தத் தொகை ரூ. 75 எனும் தொகையினால் குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.

iii) ஜெயனாத்திடமிருந்து ரூ. 650 எனும் பெறுமானத்திற்குச் செய்யப்பட்ட பண்டங்களின் கொள்வனவு அவரது கணக்கிற்கு ரூ. 560 ஆகப் பதியப்பட்டிருந்தது.

iv) பொதுச் செலவுகள் கணக்கிலான மீதி ரூ. 750, பரீட்சை மீதிக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

4. அ) கீழே I வகுதி இல் தரப்பட்டுள்ள வகுதி II இல் தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுடன் ஏதோ ஒருவகையான பொருத்தப்பாட்டினைக் கொண்டுள்ளன. வகுதி 1 இல் காட்டப்பட்டுள்ள வாறு 1 தொடக்கம் 5வரையான எண்களை உமது விடைத்தாளில் எழுதி ஒவ்வொரு எண்ணிற்கும் எதிரே வகுதி 2இல் பொருத்தமானதைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எழுதுக.

வகுதி I	வகுதி II
1. சொத்தொன்று குறைதலும் பொறுப்பொன்று குறைதலும்	1. வங்கியிடமிருந்து ரூ. 2000 கடனொன்று பெற்றுக்கொள்ளப்பட்டமை
2. சொத்தொன்று அதிகரித்தலும் இன்னுமொரு சொத்து குறைதலும்	2. கடன்கொடுத்தோர்க்குப் பணம் செலுத்தப்பட்டமை
3. சொத்தொன்று அதிகரித்தலும் பொறுப்-பொன்று அதிகரித்தலும்	3. உரிமையாளர் தனது சொந்த உபயோகத் திற்கு ரூ. 200ஐ மீள எடுத்துக்கொண்டமை.
4. பொறுப்பொன்று அதிகரித்தலும் சொத் தொன்று குறைதலும்	4. மேலதிக மூலதனத்தை முதலீட்டு, கடன் கொடுத்தோருக்குச் செலுத்தி முடித்தல்.
5. சொத்தொன்று குறைதலும் மூலதனமும் குறைதலும்	5. ரூ. 1000 ஆன காசுக்குத்தளபாடம் கொள்வனவு செய்யப்பட்டமை.

ஆ) மூலதனம் + வருமானம் + பொறுப்புகள் = சொத்துகள் + செலவுகள் எனும் சமன்பாட்டிற்கு அமைய பின்வரும் கொடுக்கல் வாங்கல்களின் இரட்டை விளைவுகளை எடுத்துரைக்க.

i) ரூ. 50 000 மூலதனமாக முதலீடு செய்யப்பட்டமை
ii) வங்கியில் திறக்கப்பட்ட ஒரு சேமிப்புக் கணக்கு ரூ. 2000
iii) தளபாடக் கொள்வனவு ரூ. 5000
iv) வணிக நிதியங்களிலிருந்து செலுத்தப்பட்ட, உரிமையாளர் வருமான வரி ரூ. 1800
v) கிடைக்கப்பெற்ற வங்கி வட்டி ரூ. 200
vi) செலுத்திய வாடகை ரூ. 800
vii) காசுக் கொள்வனவுகள் ரூ. 6000
viii) ஜெயசிங்கமிடவிருந்து கடனுக்குச் செய்த பண்டங்களின் கொள்வனவு ரூ. 12 000
ix) காசு விற்பனைகள் ரூ. 6400
x) தயாரட்ணவுக்கு கடனுக்கு விற்பனை செய்த பண்டங்கள் ரூ. 10 000

பகுதி II

5. i) துணைச் சேவைகளுக்கு நான்கு உதாரணங்கள் தருக.
ii) விற்பனையொன்றை நிகழ்த்துவதன் மூலம் வியாபரியொருவர் அடைய எதிர்பார்க்கும் இரு குறிக்கோள்களை எழுதுக.
iii) சிறந்த பணமொன்றின் இரு சிறப்பியல்புகளை எழுதுக.
iv) அஞ்சல் அலுவலகமொன்று ஆற்றிவரும் இரு தொடர்பாடற் சேவைகளை எழுதுக.
v) போதிய தொக்கினைப் பேணாமை காரணமாக உற்பத்தியாளர் ஒருவர் எதிர்நோக்க வேண்டியிருக்கும் இரு பிரதிகூலங்களை எழுதுக.
vi) தனது உற்பத்தி பொருள்களின் தரத்தைச் சான்றுருதிப்படுத்துவதற்கு குறித்த குறியீ டொன்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை உற்பத்தியாளர்கள் பெற்றுக்கொள்வர். அக்குறியீட்டின் பெயரைக் குறிப்பிடுக. அத்தகைய சான்றுப்பத்திரங்களை வழங்கும் நிறுவகம் எது?
vii) விலையின் ஏற்றவிறக்கங்களைக் (விலைத் தளம்பல்களைக்) கட்டுப்படுத்துவதற்காக மொத்த விற்பனையாளரொருவர் பயன்படுத்தும் இரு முறைகளைக் கூறுக.
viii) கூட்டுறவு இயக்கம் கட்டியெழுப்பப்படுவதற்கு அடிப்படையாயமையும் நான்கு பிரதான தத்துவங்களைக் கூறுக.
ix) இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் இரு தொழிற்பாடுகளைக் கூறுக.
x) இலங்கை மத்திய வங்கி இறக்குமதி செய்யப்படும் பண்டங்களை பல இனங்களாக வகைப்படுத்தியுள்ளது. அவை எவை?
xi) வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றின் ஆளுமையை விளக்கும் இரு வாக்கியங்கள் எழுதுக.
xii) சுமைச்சீட்டொன்றின் (வார்நாமம்) இரு தொழிற்பாடுகளை எழுதுக.
xii) இலங்கை வணிகக் கழகத்தின் இரு தொழிற்பாடுகளைக் கூறுக.
xiv) இலங்கையில் நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதுடன் சம்பந்தப்பட்ட இரு நிறுவகங்களின் பெயர்களை எழுதுக.

xv) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கக் கூடிய இரு வகையினரைக் குறிப்பிடுக.

6. சஞ்ஞய, சஞ்ஜீவ எனும் இரு சகோதாரர்கள் "இலங்கை இறப்பர் உற்பத்திப் பொருள்கள்" எனும் பெயர் தாங்கிய வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளனர்

i) உருவாக்குவதற்கு அவர்கள் எவ்வகையான வரையறுத்த பொறுப்புக் கம்பனியை தெரிவு செய்யமுடியும்?

ii) மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்தல் அவர்களுக்குச் சிரமமானதாக இருப்பின் கூடுதலான அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமா? அவ்வாறாயின் உச்ச எண்ணிக்கை யாது?

iii) அவர்கள் தமது நிறுவகத்தைத் தென்மாகாணத்தில் தாபிக்கக் கருதுகின்றனர். அவர்கள் கம்பனியை எவ்வலுவகத்திற் பதிவு செய்தல் வேண்டும்?

iv) பதிவு செய்தலுக்கு விண்ணப்பத்துடன் எத்தனை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்? அத்தகைய ஆவணங்களுள் மூன்றின் பெயர் தருக.

v) வணிகத் தாபனத்திற்கு வெளியே பெயரைக் காட்சிப்படுத்தும் பொழுது சிறப்பாகப் பயன்படுத்தவேண்டிய பதங்கள் எவையேனும் உண்டா? அவ்வாறாயின் அவை யாவை?

7. வெளிநாட்டு வேலை வாய்ப்பிலிருந்து பெருந்தொகையான பணத்தைச் சம்பாதித்த பிரதீப் என்பவர் வாகனங்கள் இறக்குமதி செய்யும் வியாபாரமொன்றை ஆரம்பிக்கக் கருதுகிறார். கீழே தரப்பட்ட அவருடைய கருத்துக்களுடன் நீர் இணங்குவீரா? இணங்க முடியாதாயின் ஏன் என்பதற்கு நியாயமொவ்வொன்று தருக.

i) அவர் மத்திய வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றைத் திறக்க விரும்புகிறார்.

ii) வர்த்தக வங்கியொன்றிலிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

iii) தனது கொடுப்பனவுகள் அனைத்தையும் காசோலைகள் மூலம் செய்ய அவர் எதிர்பார்க்கிறார். ஆனால் காசோலைகளுக்குக் குறுக்குக் கோடிடல் அவசியமென அவர் கருதவில்லை.

iv) காசோலைகளைச் சாதாரண தபாலில் அனுப்புவதில் தீங்கு எதையேனும் அவர் உணரவில்லை.

v) காசோலையொன்றை வங்கியிடம் சமர்ப்பிக்கும் பொழுது குறிப்பிட்ட தொகையைக் கரும பீடத்தின் வழி செலுத்தும்படி வங்கியாளரிடம் கோரிக்கை விடுக்கலாம் என அவர் எண்ணுகிறார்.

8. i) இலங்கையில் பொதுவான காப்புறுதித் தொழிலில் ஈடுபடும் மூன்று நிறுவகங்களின் பெயர்களைத் தருக.

ii) காப்புறுதி ஒப்பந்தமொன்றிலே எத்தனை தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர்? சம்பந்தப்பட்ட அந்தரப்பினரும் தனிப்பட்டோரும் யாரெனக் குறித்துரைக்க.

iii) நட்ட ஈட்டுத் தத்துவம் காப்புறுதியின் பிரதான பிரிவுகளை எழுதுக.

iv) மோட்டார் வாகனக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய மூன்று காப்புறுதிப் பத்திர வகைகளைக் குறிப்பிடுக.

v) மேலே iv) இல் குறிப்பிடப்பட்ட மூன்று வகையான காப்பறுதிப் பத்திரங்களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து அது தொடர்பில் எவ்வாறு நட்ட ஈடு செலுத்தப்படுமெனக் கூறுக.

வர்த்தகமும் கணக்கியலும் I
விடைகள் பகுதி I

1.	1	11.	4	21.	4	31.	4
2.	3	12.	3	22.	2	32.	3
3.	4	13.	4	23.	2	33.	4
4.	2	14.	3	24.	3	34.	1
5.	1	15.	4	25.	4	35.	3
6.	2	16.	2	26.	1	36.	2
7.	1	17.	4	27.	3	37.	4
8.	3	18.	2	28.	1	38.	3
9.	4	19.	1	29.	2	39.	4
10.	2	20.	3	30.	1	40.	4

யஸல் பகுதி நிறுவத்தினது

31.12.95 முடிவடைந்த வருடத்திற்கான வியாபார இலாப நட்ட க/கு

தொக்குகள் 1.1.95			7200	விற்பனைகள்	102, 000	
கொள்வனவு		55,400		கழி: உட்திரும்பல்	1,100	100,900
கூட்டு : உட்சுமைக்கூலி		3400	58,800			
விற்கவிருந்த தொக்கின் கிரயம்			66,000			
கழி: முடிவுத்தொக்கு			6,900			
விற்பனைக்கிரயம்			59,100			
மொத்த இலாபம் கீ.கொ.செ.			41,800			
			100,900			100,900
நிலைய நிர்வாகச் செலவு				மொத்த இலாபம் கீ.கொ.வ.		41,800
தொலைபேசி		250		பெற்ற வாடகை		4,800
எழுதுகருவி		750		நிலையான வைப்பு வட்டி		2000
காப்புறுதி	2800					
கழிமுற்பணம்	200	2600				
சம்பளங்கள்	18000					
அலுவலக செலவுகள்		800				
தளபாட பெறுமானத்தேய்வு		430				
		5700	28,530			
விற்பனை விநியோக செலவு						
அறவிடமுடியாக்கடன்		200				
அனுமதிக்கழிவீடு		1300				
அ.மு.க. ஒதுக்கீடு		400				
விளம்பரம்	4800					
அட்டுறு விளம்பரம்	700	5,500				
ஒப்.வான்பெறு. தேய்வு		8,000	15,400			
நிதிச்செலவுகள்						
வங்கிக்கட்டணங்கள்		200	200			
தேறிய இலாபம் மூலதனக்			4,470			
க/கு மாற்றியது.			48,600			48,600

யஸல் பகுதி நிறுவத்தினது

31.12.95 ல் உள்ளபடி ஐந்தொகை

உரிமையான்மையும், பரிப்புகளும்			சொத்துக்கள்	கொள் விலை	திரண்ட பெறு.தேய்வு	இற்றை பெறுமானம்
மூலதனம்	178,000		நிலையானசொத்துக்கள்			
கூட்டு: தேறிய இலாபம்	4,470		காணி கட்டிடங்கள்	90,000	-	90,000
	182,470		ஒப்படைவான்	80,000	42,600	37,400
கழி : எடுப்பனவுகள்	3900	178570	தளபாடம்	8600	430	8,170
				178,600	43,030	135,570
நடைமுறை பரிப்புகள			முதலீடுகள்			
கடன்கொடுத்தோர்	18,700					
அட்டுறு விளம்பரம்	700	19,400	10% நிலையான வைப்பு			20,000
			நடைமுறைச்சொத்துகள்			
			தொக்கு		6900	
			கடன்பட்டோர்	20,000		
			ஐயக்கடன் ஏற்பாடு	1,000	19,000	
			காப்புறுதி முற்பணம்		200	
			பெற. வேண். வட்டி		2000	
			வங்கிமீதி		12,000	
			கைவசமுள்ளகாசு		2,300	42,400
		197,970				197,970

2. அ) i) வருமான செலவீடு எனப்படுவது செலவீட்டினால் பெறப்படும் பயன் குறுகிய காலத்திற்கு அதாவது கணக்கீட்டு காலத்திற்கு மட்டும் உரியதாக இருப்பதேயாகும். மூலதன செலவீடு எனப்படுவது செலவீட்டினால் பெறப்படும் பயன் நீண்ட காலத்திற்கு (பலவருடங்களுக்கு) உரியதாக இருப்பதேயாகும்.

ii) வருமான செலவீடானது இலாபநட்டக் கணக்கில் காட்டப்படும் செலவீடு ஆகும். மூலதன செலவீடானது ஐந்தொகையில் சொத்தாக பதியப்படும்.

iii) வருமான செலவீடானது ஒரு செயற்பாட்டு செலவீனம் மூலதனச் செலவீடானது சொத்தை அதிகரிக்கும்.

ஆ i) கொள்ளல் கொடுத்தல் கணக்கானது இலாப நோக்கமற்ற நிறுவனத்தினது காசேடு ஆகும். ஆனால் வருமான செலவு கணக்கானது இலாப நோக்கமற்ற நிறுவத்தினது இலாபநட்ட கணக்காகும்.

ii) கொள்ளல் கொடுத்தல் கணக்கில் குறிப்பிட்ட வருடத்தின் சகல பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் பதியப்படும். வருமான செலவு கணக்கில் குறிக்கப்பட்ட வருட வருமானம் செலவீனம் ஆகியன பதியப்படும்.

iii) கொள்ளல் கொடுத்தல் கணக்கில் வருட இறுதியில் இருக்கும் காசு மீதி காட்டப்படும். வருமான செலவீனக் கணக்கில் செலவிலும் கூடிய வருமானம், வரவிலும் கூடிய செலவீனம் காட்டப்படும்.

டில்மினி விளையாட்டு கழகத்தின்
31.12.1995 *முடிவுற்ற வருடத்திற்குரிய*
வருமானசெலவுக/கு

அஞ்சற் செலவு	1,600	சந்தா	17,650
எழுது கருவி வகை	280	பொது நன்கொடைகள்	4,000
கொடிதினச் செலவுகள்	3,450	கொடிதின வருமானம்	6,200
செய்திதாள்கள்	450	பழைய செய்திதாள் விற்பனை	930
உபசரணைச் செலவுகள்	1,600		
பார்வையாளர் அரங்கு பேணுதல்	5,180		
விளை.உப.பெ. தேய்வு	1,000		
செலவிலும் கூடிய வருமானம்	15,220		
	28,780		28,780

3. 1) ஈடுசெய்யும் வழு 2) கோட்பாட்டு வழு
3) இரட்டிப்பு வழு 4) விடுபடு வழு

ஆ) ஈடுசெய்யும்வழு

உ+ம் தளபாடக் கொள்வனவு 5000/= ரூபா 6000/= கூட்டிப் பதியும் அதேவேளை விற்பனைத் தொகை 12,000/= ரூபா 13,000/= ஆக பதியப்பட்டால் இருபக்கங்களும் 1000/= வால் கூட்டிப்பதியப்பட்டுள்ளது இது ஒரு ஈடுசெய்யும் வழுவாகும்.

கோட்பாட்டுவழு:

கணக்கியல் கோட்பாடுகளை அலட்சியப்படுத்துவதால் ஏற்படும் வழுக்கள் கோட்பாட்டு வழுவாகும். உதாரணமாக கட்டிடம் மெருகுபடுத்துவதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 50,000/= கட்டிட செலவு க/கில் பதியப்பட்டால் அது கோட்பாட்டு வழுவாகும். அதாவது மூலதன செலவான கட்டிடம் மெருகுபடுத்தல் கட்டிடக் கணக்கில் சொத்தாக காட்டப்பட வேண்டும்.

இ. i) ஒரு நடவடிக்கை ஒற்றைப்பதிவு மாத்திரம் பதியப்பட்டிருந்தால் பரீட்சை மீதி சமப்படமாட்டாது எனவே பரீட்சை மீதியில் தோன்றும்.

ii) ஒரு நடவடிக்கையை முதலில் வரவுப் பதிவு பதிந்தும், அடுத்த கணக்கிலும் தவறுதலாக வரவுப் பதிவு திரும்பவும் பதியப்படுமாயின் அதனை பரீட்சை மீதி வெளிக்காட்டும்.

iii) பெற்ற கழிவு மீதியை மூன்று நிரல் காசேட்டிலிருந்து பரீட்சை மீதிக்கு எடுக்கும் போது பரீட்சை மீதியில் பெற்ற கழிவை வரவுப் பதிவாக தவறுதலாக பதியப்பட்டாலும் பரீட்சை மீதி வெளிகாட்டும்.

iv) கணக்குகளை சரியாக கூட்ட மீதி காணப்படாவிடின் அதுவும் பரீட்சை மீதியை சமப்படுத்தமாட்டாது.

சம்பா கணக்கு தொங்கல் கணக்கு (சம்பா கடன் விற்பனை சம்பா கணக்கில் பதியவில்லை)	500.00	 500.00
கொடுத்த கழிவு கணக்கு தொங்கல் கணக்கு (கொடுத்த கழிவு குறைவாக பதியப்பட்டுள்ளது)	75.00	 75.00
தொங்கல் கணக்கு ஜெயவர்த்தினா கணக்கு (ஜெயவர்த்தினா கணக்கு குறைவாக பதியப்பட்டுள்ளது)		98.00 90.00
பொதுச் செலவுக் கணக்கு தொங்கல் கணக்கு (பொதுச் செலவு பரீட்சை மீதியில் பதியப்படவில்லை)	750.00	 750.00

4.

	வகுதி I	வகுதி II
1.	1	2
	2	5
	3	1
	4	4 + வினா தவறானது
	5	3

ஆ.

	மூலதனம்	வருமானம்	பொறுப்புகள்	சொத்துகள்	செலவுகள்
1)	50,000			50,000	
2)				வங்கி - 2000	
				சேமிப்பு +2000	
3)				தளபாடம் +5000	
				காசு - 5000	
4)				காசு - 18000	
5)	- 1800			+ 200	
6)		+ 200		-800	+ 800
7)				-6000	+ 6000
8)			+ 12,000		12,000
9)		+ 6400		+ 6400	
10)		+ 10,000		+ 10,000	

பகுதி II

i) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல், காப்புறுதி, வங்கிபணம், விளம்பரப்படுத்தல்

ii) விற்பனையை அதிகரித்தல், இருப்பைக் குறைத்தல்

iii) இலகுவில் இனம் காணும்தன்மை, பொதுவாக எவரும் ஏற்றுக் கொள்ளும் தன்மை, நெடுவாழ்வுத்தன்மை, இலகுவில் சுமக்ககூடிய தன்மை, பிரிபடும் தன்மை கொண்டிருத்தல் வேண்டும்.

iv) தபால், தொலைபேசி, தந்தி, பக்ஸ் ஆகியன

v) போதியளவு வழங்கல் செய்ய முடியாமை, போட்டிப்பொருட்கள் சந்தையில் இலகுவாக நுழைய காரணமாக அமைதல், மூலப்பொருட்கள் அவசர தேவை காரணமாக அமைதல், மூலப்பொருட்கள் அவசர தேவை காரணமாக கூடிய விலை செலுத்தி பெறவேண்டிய நிலை

vi) SLS குறியீடு, இலங்கை கட்டளைகள் பணியகம்

vii) விலை மலிவாக இருக்கும் காலங்களில் பொருட்களை கூடுதலாக வேண்டி களஞ்சியப்படுத்தலும், பொருட்களை தேவைக்கேற்ப சமமாக சந்தைக்கு வழங்குதலுமாகும்.

viii) சமூக உறவு, சமத்துவம், ஜனநாயகம், நியாயவிலை

ix) 1) கப்பல்களுக்கு சரக்கு ஏற்றி இறக்குதல்.
2) கப்பலுக்கு தேவையான நன்னீர், எரிபொருள் ஆகியன வழங்கல்.
துறைமுறைப் பகுதியை பாதுகாத்தல், பராமரித்தல்.

x) நுகர்வுப்பண்டம், இடைநிலைப்பண்டம், மூலதனப்பண்டம், வகைப்படுத்தப்படாத பண்டம்.

xi) சட்டத்தின் கண் தனி மனிதனகாக கருதப்படல். நிறுவனத்தின் பெயரில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

xii) பண்டங்களின் உரிமையை வெளிப்படுத்தும் ஓர் ஆவனமாக உபயோகித்தல். கப்பலில் பொருட்கள் ஏற்றியமைக்கும், அப்பொருட்கள் உரிய துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்படும் என்பதற்கான உறுதிப்பாடு உடையதுமான ஆவணமாகும்.

xiii) ஏற்றுமதி இறக்குமதியாளர் பற்றிய தகவல் வழங்கல் தோற்றுவாய் சான்றிதழ் வழங்குதல் ஏற்றுமதிப் பொருட்களின் ஏலவிற்பனைகளை ஒழுங்குபடுத்தல் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.

xvi) விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களகம்
சுகாதார திணைக்களகம்
கட்டளைப் பணியகம்
நியாய வியாபார ஆணைக்குழு
உள்நாட்டு வர்த்தகர் ஆணையாளர், திணைக்களம்
நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்

xv) வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றிருக்கும் இலங்கையர்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள்
இலங்கை முதலீட்டுச்சபையின் எல்லைக்குள் தொழிற்படும் முதலீட்டாளர்கள்
இலங்கை மத்திய வங்கி அதிகாரம் பெற்றுள்ள முதலீட்டாளர்கள்
வெளிநாட்டு தூதங்களில் கடமையாற்றும் வெளிநாட்டு ஊழியர்கள்.

6. 1) வரையறுத்த தனியார் / சொந்தக் கம்பனியோ உருவாக்கலாம்.
2) முடியும் / 50 பேர் வரை
3) கம்பனி பதிவாளர் செயலகம் - கொழும்பு
4) அமைப்பு புறவிதி
அமைப்பு அகவிதி
5) "LIMITED" "வரையறுக்கப்பட்டது" எனும் பதம்.
- சட்ட முறை உறுதி அறிக்கை
- கம்பனி நிறுவ எண்ணியுள்ள மாவட்டம்
- இக்குனரின் சம்மத உரை
- இயக்குனர் பெயர்ப்பட்டியல்

7. 1. இணங்க முடியாது - தனி நபர்கள் மத்திய வங்கியில் நடைமுறைக் கணக்கு திறக்க முடியாது.
2. இணங்க முடியாது - வர்த்தகர்கள் வங்கியில் கடன் பெறமுடியும்.
3. இணங்க முடியாது - செலவுகள காசோலை மூலம் செய்யலாம்.
4. இணங்க முடியாது - காசோலையை பதிவுத்தபால் மூலம் அனுப்பட வேண்டும் அது உரியவரை சென்றடையும்.
5. இணங்க முடியாது - காசோலையானது வங்கிக்கு இடப்படும் கட்டளையாகும். எனவே வேறோர் கோரிக்கை அவசியமில்லை.

8. i) வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட யூனியன் அசூரன்ஸ் கம்பனி
வரையறுக்கப்பட்ட சிலிங்கோ காப்புறுதி நிறுவனம்
CTC ஈகிள் காப்புறுதி நிறுவனம்
ii) மூன்று தரப்பினர் காப்புறுதி கொள்வோர்
காப்புறுத்துவோர்
இழப்பீட்டை பெறுவதற்கு தகுதிபெறும் வெளிநபர்
iii) அபாயக்காப்புறுதியில்
கடல் அபாயம், விபத்து அபாயம், தீ அபாயம்.
iv) முழுமைக் காப்புறுதி
வாகனம் செலுத்துனர், வாகனத்தில் செல்லும் பயணிகள், பொருட்கள் விபத்து ஏற்படும் வெளிநபர் சொத்துக்கள்

2) மூன்றாம் நபர் முழுமைக் காப்புறுதி
வாகனமும் செலுத்துவரும் தவிர்ந்த கொண்டு செல்லப்படும் பயணிகள், பொருட்கள், விபத்துக்குட்படும் வெளிநபர்களின் சொத்துக்கள்

3) மூன்றாம் நபர் இழிவுக் காப்புறுதியானது அவர்களது விபத்துக்குட்படும் வெளிநபர்களும், சொத்துகளும்.

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1996 டிசம்பர்

வர்த்தகமும் கணக்கீடும் – I ஒரு மணி

01. மனித தேவைகள் சிக்கல் வாய்ந்தவையாக இருப்பதற்குக் காரணம்.
(1) பொருளாதார வளங்களிலான அதிகரிப்பு.
(2) நாகரிகப் பாங்கு வாய்ந்த வேறுபட்ட பண்டங்கள் சந்தையிற் கிடைக்கக்கூடியதாக இருத்தல்.
(3) மனப்பான்மை விருத்தியும் ஆக்கத்திறன் வளர்ச்சியும்.
(4) சந்தை துரிதமாக விரிவடைதல்.

02. வர்த்தகம் விரிவடைவதுடன் அதன் வெற்றிக்கு வேறுபட்ட பிற சேவைகளும் தேவைப்படுகின்றன. அவற்றுக்கு வழங்கும் பெயர்.
(1) வர்த்தகம் (2) துணைச் சேவைகள்
(3) வெளிநாட்டு வியாபாரம் (4) விநியோக வழிகள்

03. கப்பலில் ஏற்றப்பட்ட சரக்கானது குறித்த துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைக் கப்பற் கம்பனி உறுதி செய்து கைச்சாத்திடும் ஆவணம்.
(1) கப்பலேற்று முறி (சுமைச்சீட்டு) (2) தரவாணை
(3) தோற்றுவாய்ச் சான்றிதழ் (4) இறக்குமதி அனுமதிப்பத்திரம்

04. தூரத்திலுள்ள ஒரு நண்பருக்கு மிகக் குறுகிய நேரத்தில் பணத்தை அனுப்ப நீர் தெரிவு செய்யக்கூடிய ஆவணம்.
(1) காசோலை (2) வங்கி வரைவு
(3) மாற்று உண்டியல் (4) தந்திக் காசுக் கட்டளை

05. வீடுகளைக் கட்டுவதற்கும் வீடுகளைப் பெருப்பித்தலுக்கும் காணிகளைக் கொள்வனவு செய்வதற்குமான நீண்ட காலக் கடன்களை வழங்குவதைத் தனது பிரதான தொழிற்பாடாகக் கருதுகின்ற வங்கி.
(1) பிரதேச அபிவிருத்தி வங்கி (2) அரச ஈட்டு முதலீட்டு வங்கி
(3) இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி (4) மக்கள் வங்கி

06. பின்வருவனவற்றுள் எது பணத்தின் ஒரு தொழிற்பாடு அன்று?
(1) பரிமாற்றூடகமாகச் செயற்படுதல்
(2) பிற்போட்ட கொடுப்பனவு முறையாக இருத்தல்
(3) இலகுவாக இனங்காணத் தக்கதாயிருத்தல்
(4) பெறுமானத்தின் ஓர் அளவு கோலாக இருத்தல்

07. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் மாதிரி விற்பனைப் பொருட் பட்டியலை அனுப்புவதன் பிரதான நோக்கம்.
(1) நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலையில் பண்டங்கள் விற்கப்பட வேண்டுமென்பதை அறிவித்தல்
(2) கொள்வனவாளரின் விசாரணைக்குப் பதிலிறுக்குமுகமாக பண்டங்களின் விலைகள் குறித்து அவருக்கு அறிவித்தல் வழங்குதல்.
(3) அனுப்பப்படவுள்ள பண்டங்களுக்குப் பணம் செலுத்துமாறு கொள்வனவாளருக்கு வேண்டுகோள் விடுத்தல்.
(4) பண்டங்களைக் கொள்வனவு செய்யுமுன் அவற்றைப் பரிசீலிக்க முடியும் என்பதை அறிவித்தல்.

08. நிர்ணயித்த ஒரு கால அட்டவணைக்கமைய குறிக்கப்பட்ட பாதையொன்றில் பயணஞ்செய்யும் கப்பலுக்கு வழங்கும் பெயர்.
(1) ட்ராம்ப் (2) நீராவிக்கப்பல் (3) கொள்கலன் (4) லைனர்

09. மொத்த விற்பனையாளர் ஒருவரினால் வர்த்தக உலகிற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு சேவை.
(1) உற்பத்தியாளரின் பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல்
(2) சில்லறை வியாபாரிக்கு சிறு அளவுகளில் பண்டங்களை வழங்குதல்
(3) பண்டங்களின் விலையில் தளம்பல் ஏற்படாது தடுத்தல்
(4) பண்டங்களின் தரத்தைப் பேணி வருதல்

10. சரக்கிருப்பு (தொக்கு) ஏடு ஒன்றிற் காணப்படும் பிரதான நிரல்களாவன.
(1) திகதி, அலகொன்றின் விலை, பெறுமானம், வழங்கல்கள்
(2) திகதி, பெறுவனவுகள், வழங்கல்கள், மீதி இருப்பு
(3) திகதி, கணியம் (அளவு), பெறுமானம் மீதி இருப்பு
(4) திகதி, பெறுவனவுகள், கணியம் (அளவு), விலை

11. ஒரு நிறுவனத்தின் உள்ளகத் தொடர்பாடல் முறையில் அடங்குவன.
(1) சுற்றறிக்கைகள், அஞ்சல்அட்டைகள், அறிக்கைகள், பிரசுரங்கள்
(2) தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், வானொலி
(3) கூட்டங்கள், கடிதங்கள், சுற்றரிக்கைகள், அறிவித்தல்கள்
(4) அறிவித்தல்கள், சஞ்சிகைகள், வானொலி, பிரசுரங்கள்

12. விளம்பரத்தின் மூலம், நுகர்வோர் பெற்றுக் கொள்ளும் பிரதான அனுகூலமொன்றைத் தெளிவுபடுத்தும் மிகச் சரியான தொடரைத் தெரிவு செய்க.
(1) உற்பத்திப் பொருளின் உற்பத்தியாளரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு
(2) உற்பத்திப் பொருள்களை ஒப்பிட்டு நோக்கிப் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பு
(3) அதிக அளவில் தேவைப்படும் உற்பத்திப்பொருளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு
(4) வழக்கிழந்த பொருள்களை இனம் காணும் வாய்ப்பு

13. தனது ஆயுட் காப்புறுதி கட்டணத்தின் கொடுப்பனவைத் தொடர்ந்து நிறைவேற்றுவதிற் சிரமம் காணும் ஒருவர் செய்யக்கூடியது.
(1) இதுவரை கொடுப்பனவு செய்த கட்டணத்தைத் திருப்பியளிக்கும்படி வேண்டிக்கொள்ளும் ஒரு கடிதத்தைக் காப்புறுதிக் கம்பனிக்கு அனுப்பிவைத்தல்.
(2) காப்புறுதி முகவருடன் கலந்து ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல்.
(3) அதைப் பணஞ் செலுத்தப்பட்ட ஒரு பூட்கையாக மாற்றச் செய்தல் அல்லது அதன் சரணீட்டுப் பெறுமானத்தைப் பெற்றுக்கொள்ளல்.
(4) இதுவரை செலுத்தப்பட்ட கட்டணத்துடன் பூட்கையை இன்னுமொருவருக்கு மாற்றுதல்.

14. நுகர்வோரைப் பாதுகாப்பதில் மிகப் பாரிய பங்கு வகிக்கும் நிறுவனம் எது?
(1) இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் (2) சுகாதாரத் திணைக்களம்
(3) நியாய வியாபார ஆணைக்குழு (4) உண்ணாட்டு வியாபாரத் திணைக்களம்

15. இலங்கையிற் காணப்படும் பங்குடமை வகை எது?
(1) வரையறுக்கப்படாத பங்குடமைகளும், வரையறுக்கப்பட்ட பங்குடமைகளும்
(2) வரையறுக்கப்படாத பங்குடமைகள் அல்லது சாதாரண பங்குடமைகள்
(3) வரையறுக்கப்பட்ட பங்குடமைகள் அல்லது சாதாரண பங்குடமைகள்
(4) வரையறுக்கப்படாத பங்குடமைகளும் பதிவு செய்யப்பட்ட பங்குடமைகளும்

16. கம்பனியொன்று பதிவு செய்யப்பட வேண்டிய இடம்.
(1) பிரதேசச் செயலகம் (2) கொழும்பில் கம்பனிகளின் பதிவாளர் அலுவலகம்
(3) வியாபார அமைச்சு (4) நகர சபை

17. எப்பங்குகளுக்கு ஆண்டுக்காண இலாபத்தைக் கருத்திற் கொண்டு, பங்குலாப வீதம் பணிப்பாளர்களினால் தீர்மானிக்கப்படும்.
(1) முன்னுரிமைப் பங்குகள் (2) பிற்போட்ட (தவணையிட்ட) பங்குகள்
(3) சாதாரண பங்குகள் (4) மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள்

18. "அரச நிறுவனங்களை மக்கள் மயமாக்குதல் என்பதாற் கருதப்படுவது.
(1) பங்குகளின் வழங்கலில் குறித்த ஒரு சதவீதம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்பது
(2) பங்குகள் யாவும் அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப்படும் என்பது
(3) பங்குகள் அனைத்தும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்பது
(4) பங்குகள் அனைத்தும் ஒரு கம்பனிக்கு விற்கப்படும் என்பது

19. ஒரு பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தின் நிறைவேற்று குழுவில் அடங்குவோர்:
(1) மாணவர்களும், ஆசிரியர்களும்
(2) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்
(3) மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர்
(4) பெற்றோரும், மாணவர்களும்

20. கூட்டுறவுத் துறையில் ஊழியர்களின் நியமனமும் இடமாற்றமும், அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை என்பவற்றுக்குப் பொறுப்பான நிறுவனம்.
(1) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (2) கூட்டுறவுச் சேவைகள் ஆணைக்குழு
(3) தேசிய கூட்டுறவுச் சபை (4) மாவட்ட கூட்டுறவுச் சங்கம்

21. பின்வருவனவற்றுள் எது ஒருவர் தனது எதிர்கால பொருளாதார நடவடிக்கைகளைத் திட்டமிட உதவும்?
(1) வருமானம் முழுவதையும் வங்கியிலிடுதல்
(2) நடப்புப் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பற்றிய பதிவுகளைப் பேணுதல்
(3) வருமானம் முழுவதையும் மூலதனமாக முதலீடு செய்தல்
(4) குடும்ப அங்கத்தவர்களின் முழுமையான ஆதரவைப் பெற்றுக் கொள்தல்

22. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுள் எதன் விளைவு, "சொத்து அதிகரிக்கும், அத்துடன் வருமானமும் அதிகரிக்கும்" எனும் விடையுடன் இணங்கியமையும்?
(1) கடனுக்குப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல்
(2) உடன் காசுக்குப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல்
(3) நண்பரொருவருக்குக் கொடுத்த கடன் மீதான வட்டி கிடைக்கப் பெறுதல்
(4) காப்புறுதிக் கட்டணங்களின் கொடுப்பனவு

23. பின்வருவனவற்றுள் எது வணிகமொன்றின் "கொள்வனவுகளும் விற்பனைகளும்" என்பதன் கருத்தைத் தருவதாகும்?
(1) விற்பனைக்காக வாங்கப்படும் பண்டங்கள் கொள்வனவுகளாகும். விற்கப்படும் பொழுது அவை விற்பனைகளாகும்.
(2) சொந்தப் பயன்பாட்டுக்கு வாங்கப்படும் பண்டங்கள் கொள்வனவுகளாகும். விற்கப்படும் பொழுது அவை விற்பனைகளாகும்
(3) கடனுக்கு வாங்கப்படும் பண்டங்கள் மட்டும் கொள்வனவுகளாகும். விற்கப்படும் பொழுது அவை விற்பனைகளாகும்.
(4) காசுக்கு வாங்கப்படும் பண்டங்கள் மட்டும் கொள்வனவுகளாகும். விற்கப்படும் பொழுது அவை விற்பனைகளாகும்.

24. கடன் பட்டொருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு காசோலை வங்கியிலே வைப்புச் செய்யப்பட்ட பொழுது மதிப்பிழந்ததாகத் திருப்பியனுப்பப்பட்டது. கடன்பட்டோரிடம் அதைத்திருப்பி அனுப்புவதற்குச் செய்யப்படவேண்டிய பதிவு எது?
(1) கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைத்து சேமிப்பு வங்கிக் கணக்கிற்குச் செலவு வைத்தல்.

(2) கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைத்து காசுக் கணக்கிற்குச் செலவு வைத்தல்
(3) கடன்பட்டோர் கணக்கிற்கு வரவு வைத்து மதிப்பிழந்த காசோலைக் கணக்கிற்கு செலவு வைத்தல்.
(4) மதிப்பிழந்த காசோலைக் கணக்கிற்கு வரவு வைத்து கடன்பட்டோர் கணக்கிற்கு செலவு வைத்தல்.

25. வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதற்கு அவசியமானவற்றைக் கொண்டுள்ள விடைகளைத் தெரிவு செய்க:
(1) காசேட்டின் காசு நிரல்களும் வங்கி நிரல்களும்
(2) காசேட்டின் வங்கி நிரல்களும் வங்கிக் கூற்றும்
(3) காசேட்டின் வங்கி, காசு, கழிவீட்டு நிரல்கள்
(4) காசேட்டின் காசு நிரலும் வங்கிக் கூற்றும்

26. சிறு செலவுக் காசுக்கட்டு நிதி எனப்படுவது:
(1) சிறுசெலவுக் காசேட்டிலிருந்து பேரேட்டிற்குப் பதியப்படும் கணக்குகளின் மொத்தத்தொகை
(2) சிறுசெலவுக் காசேட்டின் பெறுவனவு நிரலிற் காட்டப்படும் தொகை.
(3) செலவுகளின் மீள நிரப்பலுக்கு பிரதம காசாளரால் சிறுசெலவுக் காசாளருக்கு அளிக்கப்படும் தொகை.
(4) மாதாந்தச் செலவுகளுக்குப் பிரதம காசாளரிடமிருந்து சிறுசெலவுக் காசாளரினால் பெற்றுக் கொள்ளப்படும் தொகை

27. பின்வருவனவற்றுள் எதிலான பதிவுகளைச் செய்வதற்கு வணிகமொன்றின் செலவுத்தாள் ஒரு மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும்.
(1) வெளித் திரும்பல்கள் ஏடு (2) உட்டிரும்பல் ஏடு
(3) கொள்வனவுகள் நாளேடு (4) விற்பனைகள் நாளேடு

28. பின்வருவனவற்றில் குறிப்பேட்டிற் பதிவு செய்யப்படவேண்டிய கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க.
(1) சிறிபால என்பவரால் திருப்பியனுப்பப்பட்ட பண்டங்கள் ரூபா 1000
(2) விற்பனைக்காகக் கடனுக்கு வாங்கிய பண்டங்கள் ரூபா 3000
(3) அலுவலக உபயோகத்திகென கடனுக்கு வாங்கிய தளபாடம் ரூபா 2000
(4) செலுத்திய அட்டுற்ற (சேர்ந்த) கூலிகள் ரூபா 500

29. நாராயணன் என்னும் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 2500 எனும் தொகையை அவரது கணக்கில் வரவுக்குப் பதிந்த வழுவினைத் திருத்துவதற்காகத் தேவையான பதிவு எது?
(1) நாராயணன் வரவு ரூபா 2500. காசு செலவு ரூபா 2500
(2) காசு வரவு ரூபா 2500, நாராயணன் செலவு ரூபா 2500
(3) நாராயணன் வரவு ரூபா 5000, தொங்கற் கணக்குச் செலவு ரூபா 5000
(4) தொங்கற் கணக்கு வரவு ரூபா 5000, நாராயணன் செலவு ரூபா 5000

30. இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் வேளையில் ஐயக் கடன்களுக்கான ரூபா 850 ஏற்பாடொன்றைச் செய்வதற்குத் தேவைப்படும் குறிப்பேட்டுப் பதிவு எது?
(1) இலாபநட்டக்கணக்கு வரவு ரூபா 850, ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு செலவு ரூபா 850.
(2) அறவிடமுடியாக் கடன்கள் கணக்கு வரவு ரூபா 850, இலாப நட்டக் கணக்கு செலவு ரூபா 850.
(3) ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு வரவு ரூபா 850, அறவிடமுடியாக் கடன்கள் கணக்கு செலவு ரூபா 850.
(4) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு வரவு ரூபா 850, இலாபநட்டக் கணக்கு செலவு ரூபா 850

31. பொதுப் பேரேட்டில் அடங்கியிருப்பவை:
(1) செலவின வருவாய்க் கணக்குகள் (2) சொத்துக்கள் பொறுப்புக்கள் சார் கணக்குகள்
(3) ஆட்குறிக்கும் கணக்குகள் தவிர்ந்தவை (4) ஆட்குறிக்கும் கனக்குகள் மாத்திரம்

32. ஏடுகளில் முடிவுக் கையிருப்பினைப் பதிவதற்குத் தேவைப்படும் இரட்டைப் பதிவு எது?
(1) வியாபாரக் கணக்கு வரவு, கையிருப்புக் கணக்கு செலவு
(2) கையிருப்புக் கணக்கு வரவு, கொள்வனவுகள் கணக்கு செலவு
(3) கொள்வனவுகள் கணக்கு வரவு, கையிருப்புக் கணக்கு செலவு
(4) கையிருப்புக் கணக்கு வரவு, வியாபாரக் கணக்கு செலவு

33. எப்பதிவிற்கமைய வியாபாரக் கணக்கின் மொத்த இலாபம் மாற்றப்படும்?
(1) இலாப நட்டக் கணக்கு வரவு, வியாபாரக் கணக்கு செலவு
(2) வியாபாரக் கணக்கு வரவு, இலாப நட்டக் கணக்கு செலவு
(3) வியாபாரக் கணக்கு வரவு, மூலதனக் கணக்கு செலவு
(4) இலாப நட்டக் கணக்கு வரவு, மூலதனக் கணக்கு செலவு

34. வணிகத்தின் உரிமையாளர் சார்பில் வணிகத்தினால் செலுத்தப்படும் வருமான வரி பின்வருவனவற்றுள் எதற்கமையப் பதிவு செய்யப்படும்.
(1) மூலதனக் கணக்கிற்கு வரவு வைத்தலும், நடைமுறைக் கணக்கிற்குச் செலவு வைத்தல்
(2) மூலதனக் கணக்கிற்கு வரவு வைத்தலும், காசுக் கணக்கிற்குச் செலவு வைத்தலும்
(3) இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைத்தலும், மூலதனக் கணக்கிற்குச் செலவு வைத்தலும்
(4) இலாப நட்டக் கணக்கிற்கு வரவு வைத்தலும், காசுக் கணக்கிற்குச் செலவு வைத்தலும்

35. தாபன, நிர்வாகச் செலவுகளில் கீழ்வரும் தொகுதியைத் தெரிவுசெய்க:
(1) அறவிடமுடியாக் கடன்கள், தளபாடங்களின் தேய்மானம், லொறி வாடகை, சுங்கத்தீர்வை
(2) வங்கிவட்டி, காப்புறுதிக் கட்டணங்கள், தளபாடங்களின் தேய்மானம், எழுதுகருவி வகை
(3) வாடகை, தளபாடங்களின் தேய்மானம், காப்புறுதிக் கட்டணங்கள், சம்பளங்கள்
(4) வங்கிக் கட்டணங்கள், ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு, அறவிடமுடியாக் கடன்கள், எழுதுகருவி வகைகள்

36. உற்பத்தித் தொழில் முயற்சியொன்றிலே பின்வருவனவற்றிலே எது நுகரப்பட்ட மூலப் பொருட்களின் கிரயத்தைக் குறித்து நிற்கும்?
(1) மூலப் பொருட்களின் தொடக்க இருப்பு + மூலப் பொருட் கொள்வனவுகள் + உற்பத்திக்கிரயம்
(2) மூலப் பொருள்களின் தொடக்க இருப்பு + பூர்த்திசெய்யாத பண்டங்களின் தொமாடக்க இருப்பு + மூலப் பொருள்களின் தேறிய கொள்வனவுகள்.
(3) மூலப் பொருள்களின் தொடக்க இருப்பு + மூலப் பொருள்களின் தேறிய கொள்வனவுகள் - மூலப் பொருள்களின் முடிவு இருப்பு
(4) மூலப் பொருள்களின் தொடக்க இருப்பு + முதன்மைக்கிரயம் - மூலப் பொருள்களின் முடிவு இருப்பு

37. இலாப நோக்கற்ற ஒரு தொழில் நிறுவனம் எவ்வாறு தனது கட்டட நிதியத்திற்கான ஓர் உதவு தொகையைப் பதிந்து கொள்ளும்?
(1) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கிற்கு வரவு வைத்தலும் கட்டட நிதியக் கணக்கிற்குச் செலவு வைத்தலும்
(2) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கிற்கு வரவு வைத்தலும் திரண்ட நிதியக் கணக்கிற்குச் செலவு வைத்தலும்
(3) கட்டடக் கணக்கிற்கு வரவு வைத்தலும் வருமான செலவினக் கணக்கிற்கு செலவு வைத்தலும்.
(4) கட்டட நிதியக் கணக்கிற்கு வரவு வைத்தலும் வருமான செலவினக் கணக்கிற்கு செலவு வைத்தலும்.

38. மூலதனச் செலவினத்துக்கும் வருமானச் செலவினத்துக்குமிடையிலான வித்தியாசத்தைத் தரும் கூற்றினைத் தெரிவு செய்க:
(1) செலவினத்தின் நன்மைகள் குறுகிய காலத்துக்குரியவையாயின் அது மூலதனச் செலவினமாகும். நெடுங்காலத்துக்குரியவையாயின் அது வருமானச் செலவினமாகும்.
(2) செலவினத்தின் நன்மைகள் குறுகிய காலத்துக்குரியவையாயின் அது வருமானச் செலவினமாகும். நெடுங்காலத்துக்குரியவையாயின் அது மூலதனச் செலவினமாகும்.
(3) செலவினம் சிறிதளவாக இருந்தால் அது வருமானமாகும். பாரிய அளவில் இருந்தால் அது மூலதனமாகும்.
(4) செலவினம் பெரிதாக இருந்தால் அது வருமானமாகும். சிறிதாக இருந்தால் அது மூலதனமாகும்.

39. முதலீடுகள் மீதான சேர்ந்த வட்டிக்கு தேவையான இரட்டைப் பதிவு:
(1) முதலீடுகள் மீதான வட்டிக் கணக்கு வரவு, முதலீடுகள் மீதான சேர்ந்த வட்டிக் கணக்கு செலவு.
(2) முதலீடுகள் மீதான சேர்ந்த வட்டிக் கணக்கு வரவு, முதலீடுகள் கணக்கு செலவு.
(3) முதலீடுகள் மீதான சேர்ந்த வட்டிக் கணக்கு வரவு, முதலீடுகள் மீதான வட்டிக் கணக்கு செலவு
(4) காசுக் கணக்கு வரவு, முதலீடுகள் மீதான சேர்ந்த வட்டிக் கணக்கு செலவு

40. வியாபார இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்கும் வேளையில் பேரேட்டில் மூடப்படுகின்ற கணக்குகளின் வகைகளை தெரிவு செய்க:
(1) வருமானக் கணக்கும் செலவுக் கணக்கும்
(2) சொத்துக்கள் கணக்கும் பொறுப்புக்கள் கணக்கும்
(3) மூலதனக் கணக்கும் பொறுப்புக்கள் கணக்கும்
(4) செலவுக் கணக்கும் மூலதனக் கணக்கும்

01.			X		02.		X			03.	X				04.				X
05.		X			06.			X		07.		X			08.				X
09.			X		10.		X			11.			X		12.		X		
13.			X		14.				X	15.		X			16.		X		
17.			X		18.	X				19.			X		20.		X		
21.		X			22.			X		23.	X				24.			X	

25.		X			26.				X
27.		X			28.			X	
29.				X	30	X			
31.			X		32.				X
33.		X			34.		X		
35.			X		36.			X	
37.	X				38.		X		
39.			X		40.	X			

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1996 டிசம்பர்

வர்த்தகமும் கணக்கீடும் – II ஒரு மணி

1.

ஒரு தனி வியாபாரியான சிறிநாத எனபவரின ஏடுகளிலிருந்து 1995 டிசமபர் 31 இல இருந்தபடி பினவரும பாடசை மத பெயர்த்தெடுக்கப்பட்டது.

	ரூபா	ரூபா
மூலதனம்	-	100 000
கொள்வனவுகள்	56 500	-
விற்பனைகள்	-	103 900
கொள்வனவுத் திரும்பல்கள்	-	1 000
1995 யூலை 01 இல் 10% வட்டிக்கு எடுத்த வங்கிக் கடன்	-	60 000
உட்சுமைக்கூலி	1 000	
வெளிச்சுமைக்கூலி	1 500	
வான் வண்டி	44 840	
வான் வண்டிச் செலவுகள்	3 950	
காணியும் கட்டடங்களும்	100 000	
வங்கி நடைமுறைக் கணக்கு	5 400	
தளபாடமும் பொருத்திகளும்	11 460	
சம்பளங்களும் கூலிகளும்	18 600	
அனுமதித்த கழிவீடுகள்	2 060	
கிடைத்த கழிவீடுகள்	-	4 700
எடுப்பனவுகள்	24 000	
இறைகளும் காப்புறுதியும்	3 100	
அறவிடமுடியாக் கடன்கள்	360	
அறவிடமுடியா ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு-1995 ஜனவரி 1	-	1 140
வியாபாரக் கடன் பட்டோர்	15 200	
வியாபாரக் கடன் கொடுத்தோர்	-	25 030
பொதுச் செலவுகள்	1 500	
இருப்பு ஜனவரி	6 300	
	295 770	295 770

பினவரும தகவலகளையும கருததிற கொணடு 1995 டிசமபர் 31 இல முடிவுறற ஆணடிறகான ஒரு வியாபார இலாப நடடக கணக்கையும் அத்தேதியில் இருந்தபடியான ஓர் ஐந்தொகையையும் தயாரிக்க:

(i) 1995 டிசம்பர் 31 இல் இருந்தபடி இருப்பு ரூபா 8 800

(ii) அட்டுற்று நின்ற சம்பளங்களும் கூலிகளும் ரூபா 360

(iii) முன்னதாகச் செலுத்தப்பட்ட இறைகளும் காப்புறுதியும் ரூபா 450

(iv) அறவிடமுடியா ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு, ரூபா 140 எனும் தொகையால் குறைக்கப்பட வேண்டும்.

(v) சிறீநாத் தனது சொந்தப் பயன்பாட்டுக்காக ரூபா 600 எனும் பெறுமானமுடைய பண்டங்களை எடுத்துள்ளார். ஆனால் அது பற்றிய பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

(vi) வான் வண்டி 10% இனால் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(vii) வான் வண்டிச் செலவுகளில் ரூபா 950 எனும் தொகையானது சிறீநாத்தின் சொந்த வாகனத்திற்காகச் செலவிடப்பட்டது.

2.

(i) நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருக்கும் ஒருவருக்கு மாதமொன்றின் இறுதியிலே கிடைக்கப்பெறும் வங்கிக்கூற்றில் காட்டப்படும் மீதியானது, பொதுவாக அவரது காசேட்டிலுள்ள வங்கிமீதியுடன் இணங்குவ தில்லை என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

(அ) அத்தகைய வித்தியாசத்திற்கான இரு காரணங்களைத் தருக.

(ஆ) வங்கிக்கூற்று ஒன்றிலே காட்டப்படும் நான்கு உருப்படிகளை (இனங்களை) எழுதுக.

(இ) வங்கி நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுவதன் இரு அனுகூலங்களைக் கூறுக.

(ii) பிரதீப் என்பவரின், 1996 ஜனவரி மாதத்திற்கான சில்லறைச் செலவுகள் பின்வருமாறு:

		ரூபா
1996 ஜனவரி 01	சிறு செலவுக்காசு மீதி - முன்கொண்டு சென்றது	800
01	பிரதம காசாளரிடமிருந்து கிடைத்தது	1200
ஜனவரி	மாதத்தில் நிகழ்ந்த செலவுகள்	
ஜனவரி 01	செலுத்திய சுத்தப்படுத்தற் கட்டணங்கள்	100
04	கொள்வனவு செய்த அஞ்சல் முத்திரைகள்	30
07	தந்திகள்	8
07	பிரயாணச் செலவுகள்	25
09	சுத்தப்படுத்தற் கட்டணங்கள்	100
11	கொள்வனவு செய்த கடித உறைகள் கட்டு	100
13	அலுவலகத்திற்குக் கொள்வனவு செய்த இறாக்கை	400
19	செலுத்திய உட்சுமைக்கூலி	50
23	கொள்வனவு செய்த அஞ்சல் முத்திரைகள்	30
25	வாங்கிய மெழுகுதிரிக் கட்டு	50
27	செலுத்திய சம்பள முற்பணம்	500
28	தந்திகளுக்குச் செலுத்தியது	40
30	பிரயாணச் செலவுகள்	60

அஞ்சற்செலவு, பிரயாணச்செலவுகள், நானாவிதச்செலவுகள் என்பவற்றுக்கான பகுப்பாய்வு நிரல்களுடன், கட்டுநிதி முறைமையின் கீழ்ப் பேணப்பட்டு வரும் சிறு செலவுக் காசேடு ஒன்றிலே பெப்ரவரி மாதத்திற்கான பெறுவனவுகள் நிரலைக்காட்டி மேற்போந்த தகவல்களைப் பதிக.

3.

(i) நிரல் "A" யின் கீழ் தரப்பட்டுள்ள பதங்கள் நிரல் "B" யின் கீழ் தரப்பட்டுள்ள தொடர்களுடன் ஏதோ ஒருவகையான பொருத்தப்பாட்டினைக் கொண்டுள்ளன. நிரல் "A" யின் கீழ் தரப்பட்டுள்ள 1 தொடக்கம் 10 வரையான எண்களை உமது விடைத்தாளில் எழுதி அந்த ஒவ்வொரு எண்ணுக்கும் எதிரே குறித்த பதத்துடன் பொருத்தப்பாட்டினைக் கொண்ட விடையை "B" யிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தினை எழுதுக.

"A"		"B"	
(1)	பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு	(i)	தேய்வு வழக்கிழந்து போதல் என்பவற்றின் பெறுபேறு
(2)	சிறுசெலவுக் காசேடு	(ii)	இலாப நோக்கற்ற நிறுவனங்களில் செலவிற்கு மிகையான வருமானத்தைக் காண்பதற்குத் தயாரிக்கப்படுவது.
(3)	தொங்கற் கணக்கு	(iii)	இவ்வேட்டிற் முடித்தற் பதிவுகள் பதிவு செய்யப்படும்.
(4)	வங்கிக் கணக்கிணக்கக் கூற்று	(iv)	கொடுக்கல் வாங்கலொன்றின் இரட்டைத் தன்மையைப் பதிவு செய்யும் முறையாகும்.
(5)	அறவிடமுடியாக் கடன்கள்	(v)	கட்டுநிதி முறைமையைப் பேணுவதற்குக் கூடிய பொருத்தமானது.
(6)	வருமான செலவினக் கணக்கு	(vi)	கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் தருவது.
(7)	பெறுமானத் தேய்வு	(vii)	வழமையாக இது வியாபாரத் தாபனமொன்றின் காசேட்டை ஒத்தது.
(8)	குறிப்பேடு	(viii)	கடன்பட்டோர் காரணமாக நிகழும் ஓர் இயல்பாகும்.
(9)	துணையேடுகள்	(ix)	காசேட்டின் பக்கம் ஒன்றிலே தயாரிக்கப்படுவது.
(10)	இரட்டைப்பதிவு முறைமை	(x)	பரீட்சை மீதியிலுள்ள வித்தியாசத்திற்கான காரணங்களைக் கண்டறியும் வரை இக்கணக்கிற் பதியப்படும்.

(ii) பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 1995 டிசம்பர் 31 இல் முடிவுறும் ஆண்டிற்கான உற்பத்தி (ஆக்கக்) கணக்கொன்றைத் தயாரிக்க:

		ரூபா
1995.01.01 இல் இருப்புக்கள் -	மூலப்பொருள்கள்	79 100
-	பூர்த்தியெய்தாத பண்டங்கள்	159 850
மூலப்பொருட் கொள்வனவு		1 313 400
கொள்வனவுத் திரும்பல்கள்		11 350
நேர் உழைப்புக் கிரயம்		155 350
தொழிற்சாலைச் செலவுகள்		63 950
தொழிற்சாலை - தொழிலாளர் கட்டணங்கள்		36 000
பெறுமானத்தேய்வு - பொறித்தொகுதி		112 500
1995.12.31 இல் இருப்புக்கள்-	மூலப்பொருள்கள்	63 850
-	பூர்த்தியெய்தாத பண்டங்கள்	166 150

4.

(அ) டில்மினி என்பவரது தொழில் முயற்சி சார் ஏடுகளிற் காணப்படும் தகவல்கள் பின்வருமாறு:

	ரூபா
வங்கியிலுள்ள காசு	15 000
அலுவலகச் சாதனங்கள்	5 000
விற்பனைகள்	8 000
கொள்வனவுகளும் பிற செலவுகளும்	4 000
வங்கியிலிருந்து கடன்	2 000

அவரது மொத்தச் சொத்துக்கள், மூலதனம், பொறுப்புக்கள் என்பவற்றைச் சமன்பாடு ஒன்றின் வடிவத்திற் காட்டுக:

(ஆ) (i) ஒரு பேரேட்டிலான கணக்குகளை எத்தனை வகைகளாக வகைப்படுத்த முடியும்? அவற்றின் பெயர்களை குறிப்பிடுக:

(ii) கீழே தரப்பட்டுள்ள கணக்குகளுக்கு எதிரே கணக்கு வகையின் பெயரை எழுதுக:
மூலதனக்கணக்கு
விற்பனைக்கணக்கு
கடன் கொள்வனவுகள் கணக்கு
காசுக் கணக்கு
சுனிலுக்குச் செலுத்த வேண்டிய கடன் கணக்கு
காப்புறுதிக் கட்டணங்கள் கணக்கு

(iii) "T" வடிவக் கணக்கு ஒன்றினைத் தயாரித்து மேலே (ii) இற் தரப்பட்டுள்ள கணக்குகளின் ஒவ்வொரு வகையிலுமான குறைவு, அதிகரிப்பு என்பவற்றை முறையே சய (-), சக (+) எனும் அடையாளங்களைப் பயன்படுத்திக் காட்டுக.

பகுதி II

5.

(i) இலங்கையின் பிரதேச அடிப்படையிலான சிறப்புத்தேர்ச்சியைத் தெளிவுபடுத்தும் இரு உதாரணங்கள் தருக.

(ii) பாரிய அளவு உற்பத்தி சார் இரு பிரதான சிறப்பியல்புகளை எழுதுக.

(iii) வியாபரத்துடன் தொடர்புபட்ட துணைச் சேவைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iv) உடமை, முகாமை எனும் தலைப்புக்களின் கீழ் கூட்டுறவுக் கடையொன்றுக்கும் தனி வியாபாரி ஒருவருக்குமிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக.

(v) மொத்த விற்பனை வணிகமொன்றைத் தாபிப்பதில் கருத்திற் கொள்ள வேண்டிய இரு விடயங்களைத் தருக.

(vi) ஒரு பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள கட்டடச் சுவர்கள், மதில்கள் என்பவற்றின் மீது வேறுபட்ட உற்பத்திப் பொருள்களுக்கான விளம்பரங்கள் தீட்டப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இவ்வகையான விளம்பரங்கள் மூலம் ஒரு வியாபாரி பெற்றுக் கொள்ளும் இரு அனுகூலங்களை எழுதுக.

(vii) "தோற்றுவாய்ச் சான்றிதழ்" எனப்படுவது யாது? அது யாரால் வழங்கப்படுவதாகும்?

(viii) சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ix) கடன் மீதான கொள்வனவுகளுக்கும் தவணைக் கட்டண முறைப்படியான கொள்வனவுகளுக்குமிடையிலான பிரதான வேறுபாட்டை எழுதுக.

(x) (அ) இலங்கை மோட்டார் வாகனச் சங்கம் யாரால் தாபிக்கப்பட்டது?
(ஆ) அதன் தொழிற்பாடுகளிற் ஒன்றைத் தருக.

(xi) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நான்கு வகையான வங்கிகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

(xii) தொடர்பாடலுக்கும், விளம்பரப்படுத்தலுக்குமிடையிலான வேறுபாடுகளை வாக்கியங்களில் எடுத்துரைக்க.

(xiii) கடல் அபாயக் காப்புறுதியினால் காப்பு அளிக்கப்படும் இரு இடர் நேர்வுகளைக் குறிப்பிடுக.

(xiv) பின்வருவன ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக:
(1) அரச வியாபாரக் கூட்டுத்தாபனம்
(2) அரச நிதிக் கூட்டுத்தாபனம்

(xv) உறுப்பினர் எண்ணிக்கை, மூலதன வழங்கல் என்பவை தொடர்பில் ஒரு பங்குடமைக்கும் ஒரு வரையறுத்த பொதுக்கம்பனிக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

6.

உமது நண்பர்களுள் ஐவர் ஒன்று சேர்ந்து வரையறுத்த தனியார் கம்பனி ஒன்றின் உருவாக்கம் பற்றிக் கலந்துரையாடினர். அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் சில பின்வருமாறு:

(i) கலந்துரையாடலில் பங்கு பற்றிய உறுப்பினர்களுடன் வரையறுத்த தனியார் கம்பனி ஒன்று உருவாக்கப்பட முடியுமா? கம்பனியை உருவாக்குவதற்கு இழிந்த அளவில் எத்தனை பேர் தேவைப்படுவர்? அனுமதிக்கப் படும் உச்ச எண்ணிக்கை யாது?

(ii) இந்நண்பர்கள் ஏற்கனவே பங்குடமை வணிகமொன்றை நடத்திவருகின்றனர். இவ்வணிகத்தை விரிவுபடுத்துவது இவர்களது நோக்கமாகும். ஆனால் மூலதனம் போதாது என்று அவர்கள் எண்ணுகின்றனர். வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு மூலதனத்தை ஆக்கும் இரு வழிகளை அவர்களுக்கு ஆலோசனையாகத் தருக?

(iii) நண்பர்களுள் ஒருவர் "பொறுப்பு" தொடர்பாக வினா ஒன்றை எழுப்புகிறார். உறுப்பினர்களின் பொறுப்பு தொடர்பாக உள்ள நிலை யாது?

(iv) இக்கம்பனி எவ்வாறு முகாமை செய்யப்படுதல் வேண்டும்?

(v) கம்பனியைப் பதிவு செய்வதற்கு அவசியமான ஆவணங்கள் யாவை?

வர்த்தகத்துடன் பரிச்சயமான ஒரு நண்பர் என்ற முறையில் அவர்களது பிரச்சினைகளுக்கு நீர் வழங்கக்கூடிய தீர்வுகள் யாவை?

7.

கடனபடடோரொருவா தனது இருபதாைநது ரூபாக கடனொனறைத தாபபதறகாகக கடன கொடுததவரிடம ஐமபது சத நாணயங்களுடன் சென்றார். எனினும் கடன் கொடுத்தவர் ஐம்பது சத நாணயங்களை ஏற்க மறுத்தார்.

(i) கடனாளியின் இருபத்தைந்து ரூபாக் கடன் தீர்ப்பனவில், செல்லுபடியான நாணய வடிவமான ஐம்பது சத நாணயங்களை ஏற்பதற்கு, கடன் கொடுத்தவர் மறுக்க முடியுமா? உமது விடையை ஆம், அல்லது இல்லை என்னும் வடிவில் தருக.

(ii) செல்லுபடியான பணமாகத் தற்பொழுது வழக்கிலுள்ள தாள்கள், நாணயங்கள் என்பவற்றின் வாயிலாகக் கடன்கள் எந்த அடிப்படையில் தீர்க்கப்படலாம் என எழுதுக.

(iii) குறுக்குக் கோடிட்ட காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல் கடன்களைத் தீர்க்கும் ஒரு பாதுகாப்பான முறையாக அமையும் என பொதுவாகக் கூறப்படுகின்றது. இதற்கு இரு காரணங்கள் தருக.

(iv) நீர் ஒரு மொத்த விற்பனையாளர் ஆவீர். காலியிலுள்ள உமது வழக்குனர் வங்கி வரைவு ஒன்றின் மூலம் தனக்கு வருமதியான தொகையை அனுப்பிவைக்குமாறு உம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(அ) வங்கி வரைவு எனப்படுவது யாது?

(ஆ) வங்கி வரைவு ஒன்றைப் பெற்றுக் கொள்வதில் அடங்கும் படிகளைக் கூறுக?

8.

(i) காப்புறுதி உடன்படிக்கை ஒன்றிலே எத்தனை தரப்பினர் சம்பந்நதப்படுத்தப்பட்டுள்ளனர்? அவர்கள் யார் யாரெனக் குறிப்பிடுக.

(ii) காப்புறுதியின் கோட்பாடுகள் (தத்துவங்கள்) யாவை? அவற்றுள் ஏதேனும் ஒன்றை விளக்குக.

(iii) வியாபாரியொருவர் ரூபா 500 000 பெறுமானத்தைக் கொண்ட தனது கட்டங்கள் தொடர்பில் ரூபா 50000 இற்கான காப்புறுதிப பூட்கையொன்றைப் பெற்றுள்ளார். அவரது கட்டத்தின் ஒரு பகுதி தீயினால் அழிந்து போயிற்று. அப்பகுதியின் பெறுமானம் ரூபா 80 000 எனின் அவருக்குக் கிடைக்கத்தக்க நட்டஈட்டைக் கணிக்க.

(iv) (அ) ஆயுட் காப்புறுதியின் பூட்கையொன்றைப் பெற்றிருந்த ஒருவர் திடீரென இறந்து போனார். அவர் பெற்ற பூட்கையின் பெறுமானம் ரூபா 200 000 ஆக இருந்ததெனின் அவரிற் தங்கி வாழ்வோருக்கு எவ்வளவு தொகை நட்ட ஈடாகக் கிடைக்கும்?

(ஆ) காப்புறுதிப் பூட்கையொன்றிற்குரிய கட்டணத்தைத் தீர்மானிப்பதில் கருத்திற் கொள்ளப்படும் காரணிகள் யாவை?

****

வர்த்தகமும் கணக்கீயலும் – II விடைகள்

திரு. சிறீநாத்தின் வியாபார இலாப நட்டக் கணக்கு 31.12.95 இல் முடிவடைந்த வருடத்திற்குரியது:

இருப்பு			6300	விற்பனை		103,900
கொள்வனவு		56500				
கழி வெளிதிரு	1000					
பற்று 600	600	1600				
		54 900				
கூட்டு உட்சுமைக் கூலி		1000	55900			
			62,000			
கழி இருப்பு 31.12.95			8,800			
விற்ற சரக்கின் கொள்விலை			53,400			
மொத்த இலா கீ.கொ.செ			50,500			
			103,900			103,900
நிலைய நிர்வாக செலவு						
இறையும் காப்புறுதி		3100		மொத்த இலாபம்		
கழி முற்பண காப்புறுதி		450	2650	கீ/இது		50,500
சம்பளமும் கூலியும்		18600		கிடைத்த கழிவு		4,700
அட்டுறு சம் கூலி		360	18,960			
பொதுச்செலவு			1500	அற்.கட். ஒதுக்கம்	1140	
விற்பனை விநியோகச் செலவு				கடன் ஒதுக்கம்	1000	140
வெளிச்சுமை கூலி			1500			
வான் வண்டி செலவு		3950	3000			
அனு. கழிவீடு		950	2060			
அறவிடமுடியாக் கடன்			360			
மோட்.பெறு.தேய்வு						
நிதிச்செலவு						
கடன் வட்டி			3000			
தேறிய.இல. மூலக்/கு/கொ.செ.து			17,826			
			55,340			55,340

தரு.சிறீநாத்தின் 31.12.95 இல் உள்ளபடியான ஐந்தொகை:

				கொ.வி	நி.பெ.தே	தே.பெ
மூலதனம்	100,000		**நிலையான சொத்து**			
கூட்டு தேறிய இலாபம்	17,826		காணிகட்டிடம்	100,000	-	100,000
எடுப்பனவு 24000	117,826		மோட்டார்	44,840	4484	40,356
பொருள்பற்று 600			தளபாடம்	11,460	-	11,460
வண்டி. செ 950	25,550	92,276		156,300	4484	151,816
நீண்டகாலக் கடன			**நடைமுறைச்சொத்து**			
வங்கிக்கடன்		60,000	இருப்பு		8800	
நடைமுறைபொறுப்பு			கடன்பட்டோர்	15,200		
கடன்வட்டி		3000	கழி ஒதுக்கம்	1000	14,200	
கொ.வே.சம்பளம்		360	முற்பண காப்பு		450	
கடன் கொடுத்தோர்		25,030	வங்கிமீதி		5400	28,850
		180,666				180,666

2.

(அ) 1) வாடிக்கையாளரால் கொடுபட்ட காசோலை வங்கியில் மாற்றப்படவில்லை.
2) வங்கியில் வைப்பிலிட்டு காசோலை வசூலிக்கப்படாமை.

(ஆ) 1) வங்கிகூலி
வங்கியில் மாற்றப்பட்ட காசோலை
வங்கியால் வசூலிக்கப்படாத காசோலை
காசோலைக்கான கட்டணம்

(இ) 1) எமது கணக்கு வழக்குகளை வங்கிபேணும்
2) எமது கொடுப்பனவு உறுதி செய்யக்கூடியதாக இருக்கும்

பிரதீப் என்பவரின் கட்டுநிதி முறைமையின் கீழக் காணப்படும சிறுசெலவு காசேடு

பகுத்தாய்வு

வரவு	திகதி	விபரம்	மொத்தப்	தபால் செலவு	பி. செலவு	நானா வித செலவு	பேரேடு
800	ஜனவரி	காசு கொண்டு வந்தது					
1200	1	காசாளரிடம் பெற்ற					
	1	சுத்தப்படுத்தற் கட்டணம்	100			100	
	1	அஞ்சல் முத்திரை	30	30			
	4	தந்திகள்	8	8			
	7	பிரயாணச் செலவு	25		25		
	7	சுத்தப்படுத்தற் செலவு	100			100	
	9	கடித உறைகள்	100	100			
	11	தளபாட கொள்வனவு	400				400
	13	உட்சுமைகூலி	50				50
	19	அஞ்சல் முத்திரை	30	30			
	23	மெழுகுதிரி	50			50	
	25	சம்பளம்	500				500
	27	தந்தி	40	40			
	28	பிரயாண செலவு	60		60		
	30		1493	208	85	250	950
		மீ.கீ.கொ.செ	507				
2000			2000				
507		மீ.கீ.கொ.வ					

3.

1)	vii		6)	ii	
2)	v		7)	i	
3)	x		8)	iii	
4)	ix		9)	vi	
5)	viii		10)	iv	

1995 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான உற்பத்திக் கணக்கு:

ஆ. இருப்பு 1.1.95		79,100	உற்பத்தி செலவு	1,678,800
மூலப்பொருள் கொள்வனவு	1,313,400		வியாபார க/குமாற்றப்பட்டது	
கழி. கொள்.திரு	11,350	1,302,050		
		1,381,150		
கழி. மூலப்பொருள் இருப்பு		63,850		
பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்		1,317,300		
கூட்டு நேர் உழைப்பு		155,350		
முதற் கிரயம்		1,472,650		
தொழிற்சாலை மேந்தலை				
தொழிற்சாலை செலவு	63,950			
தொழிலாளர் கட்டணம்	36,000			
பொறித்தேய்வு	112,500	212,450		
		1,685,100		
கூட்டு: பூர்த்திசெய்யாத பண்டம் (01.01.95)		159,850		
		1,844,950		
கழி: பூர்த்தி செய்யாத பண்டம் (31.12.95)		166,150		
		1,678,800		1678,800

4.

(அ) (i) மூலதனம் + வருமானம் + பொறுப்பு = மொத்தச்சொத்துக்கள் + செலவு
14,000 + 8000 + 2000 = 20,000 + 4000

(ஆ) 1. உரிமைக்கணக்கு 2. வருமானக் கணக்கு
3. பொறுப்புக் கணக்கு 4. செலவுக் கணக்கு
அல்லது
ஆட்குறிப்புக்கணக்கு, பெயரளவு கணக்கு, உண்மைக்கணக்கு

(ii)

மூலதனக்கணக்கு	-	உரிமைக்கணக்கு
விற்பனை	-	வருமாக்கணக்கு
கடன் கொள்வனவு	-	செலவுக்கணக்கு
காசுக்கணக்கு	-	சொத்துக்கணக்கு
சுனிலுக்குச் செலுத்த வேண்டியது	-	பொறுப்புக்கணக்கு
காப்புறுதிக் கட்டணம்	-	செலவுக்கணக்கு

(iii)

மூலதனக் கணக்கு		வருமானக் கணக்கு		செலவுக் கணக்கு	
-	+	-	+	-	+

சொத்துக் கணக்கு		பொறுப்புக் கணக்கு	
+	-	-	+

5. (i) மொறட்டுவ - தளபாடம்
இரத்தினபுரி - இரத்தினக்கல்

(ii) அதிகமான ஊழியர்கள்
முதலீடு அதிகம்

(iii) வங்கிசேவை விளம்பரம்
காப்புறுதி போக்குவரத்து

(iv)

	கூட்டுறவுக்கடை	தனிவியாபாரம்
உரிமை	அங்கத்தவர்களுடையது	உரிமையாளரிடம்
மூலதனம்	அங்கத்தவரிடம்	தளியாளரிடம்
	நிர்வாகக்கமிட்டி	உரிமையாளர்

(v) பண்டகசாலைவசதி
போக்குவரத்துவசதி

(vi) இல்குவாக விளம்பரம் மக்களை அடையும் விளம்பரச் செலவு குறைவு.

(vii) (i) தோற்றுவாய்ச் சான்றிதழ் என்பது ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நிறுவனம் பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதை கூறுவதாகும்.
(ii) பொருள் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டின் வர்த்தக மன்றத்தின் மூலமாகும்.

(viii) மாற்றுண்டியல், தபால்தந்தி மாற்றீடு, வங்கிஆணை, விமானத்தபால் மாற்றீடு.

(ix) (i) பொருளை கடனுக்கு வாங்கும் போது அதன் பெறுமதியை உடன் செலுத்தாமல் பொருளை பெற்றுக் கொள்ள முடியும்.
தவணை அடிப்படையில் ஒரு தொகை பணத்தைச் செலுத்தி, மீதியை தவணை அடிப்படையில் செலுத்த முடியும்.
(ii) கடனுக்குப் பெறும் பொழுது வட்டி அறவிடப்படுவதில்லை. தவணை அடிப்படையில் வட்டி அறவிடப்படும்.

(x) அ. இலங்கைத் தனியார் மோட்டார் வாகன உரிமையாளர் சங்க மூலம்.
ஆ. மோட்டார் வாகன உரிமையாளர்களின் நலன் பொருட்டு செயற்படல்.
(i) பொதுப்பாதை நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்கு ஆலோசனைகள் முன் வைத்தல்.
(ii) பொதுப் போக்குவரத்துப் பொலிசாருக்கு தகவல்கள் அளித்தல்.
(iii) பொதுப் போக்குவரத்தை பாதிக்க கூடிய இடையூறுகளை அறிவித்தல்.

(xi)

வர்த்தக வங்கி	மத்திய வங்கி	சேமிப்பு வங்கி
அபிவிருத்தி வங்கி	வியாபார வங்கி	கிராமிய வங்கி

(xii) தொடர்பாடல் என்பது செய்திகளை பரிமாற்றம் செய்வதாகும்.
விளம்பரம் என்பது பண்டங்களையும், சேவைகளையும் பற்றிக் கவனம் செலுத்துவோருக்கு, பல்வேறு ஊடகங்கள் மூலம் தகவல் வழங்குவதாகும்.

(xiii) (i) கப்பலுக்கு ஏற்படும் இழப்பு.
(ii) கப்பற் சரக்குகளுக்கு ஏற்படும் சேதங்கள்.
(iii) பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கு ஏற்படும் இழப்பு.

(xiv) (i) அரசவர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் (சதோச)
(ii) இலங்கைவங்கி, மக்கள்வங்கி. தேசிய சேமிப்பு வங்கி

(xv) (i) அங்கத்தினர் எண்ணிக்கை.
பங்குடமை
2-20
வரையறுத்த பொதுக் கம்பனி
7 முதல் வரையறை இல்லை.
(ii) மூலதனம்
பங்காளருடையது. இது பங்கு வெளியீடு செய்வதன் மூலம் கிடைக்கும்.

6. (i) முடியும். குறைந்த பட்சம் - 2.
கூடியது - 50

(ii) (i) பங்காளர் தங்களது மூலதன தொகையை அதிகரித்தல்.
(ii) நண்பர்கள், உறவினர்கள் மூலம் பணம் ஈடுபடுத்த முடியும்.
(iii) பங்காளர் ஒருவரைச் சேர்த்தல்

(iv) சொத்துக்களை ஈடாக வைத்து வங்கி கடன் பெறுதல். (வங்கி மேலதிகப்பற்று)

(iii) கம்பனியின் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

(iv) இக் கம்பனியின் முகாமை இயக்குனர் சபையினால் செய்யப்படல் வேண்டும்.

(v) 1. கூட்டுப்பத்திரம்
2. கூட்டுச் சட்டக் கோவை
3. சட்டபூர்வமான வெளியீடு (உறுதியுரை)
4. கம்பனி அமைக்க உள்ள மாவட்டம்.
5. இயக்குனராக பணியாற்றச் சம்மதம் தெரிவிப்போர் தமது விருப்பத்தை உறுதிப்படுத்-திய உறுதியுரை.
6. இயக்குனர் பெயர்ப்பட்டியல்.

7.

(i) மறுக்கமுடியும்.

(ii) சட்டமுறைப்பணம் வரையறுக்கப்பட்டது, வரையறுக்கப்படாதது என இருவகை உண்டு.
1,2,5 சத நாணயங்களால் 1 ரூபா வரை மட்டும் செலுத்த முடியும்.
10, 25, 50 சத நாணயங்களால் 5ரூபா வரை செலுத்த முடியும். மீதியுள்ள சட்டமுறைதான் நாணயங்களால் எந்தளவு அளவான பணத் தெகையையும் செலுத்த முடியும்.

(iii) (i) குறுக்குக் கோடிட்ட காசோலையை வங்கிக் கணக்கினூடாகவே மாற்ற முடியும்.
(ii) சாதாரண காசோலை போலல்லாது காசோலையின் சட்டபூர்வமான உரிமையை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) அ. வங்கி ஆணை என்பது தனது பிரதேசத்தின் வங்கிக்கு உரிய படிவத்தை நிரப்பி பணத்தையும் தரகையும் கொடுத்தால் வங்கி ஆணையொன்றைப் பெற முடியும்.

8.

(i) காப்புறுதி, ஒப்பந்தம் ஒன்றில் பற்று பெறுவர் மூன்று பிரிவினர்.
(1) காப்புறுதி செய்வோர் (உடமையாளர்)
(2) காப்புறுதி அளிப்போர் (காப்புறுதி கம்பனி)
(3) வெளியார்

(ii) காப்புறுதிக் கோட்பாடுகள், காப்புறுதி செய்யும் உரிமை, நன் நம்பிக்கை

நட்டத்தை ஈடுசெய்யும் கோட்பாடு
காப்புறுதி செய்யப்படும் ஆயுள் அல்லது சொத்துக்கள் தொடர்பாக சட்டபூர்வமான உரிமை காப்புறுதி செய்பவருக்கு இருத்தல் வேண்டும்.

நன் நம்பிக்கை (உயர் நம்பிக்கை)
காப்புறுதியொன்றைப் பெற்றுக் கொள்ளும்போது காப்புறுதி செய்வோர் காப்புறுதி அளிப்போர் என்போருக்கிடையில் காப்புறுதி தொடர்பான முக்கியமான அம்சங்கள் எல்லாவற்றையும் மறைக்காமல் இருத்தல்.

நட்டத்தை ஈடு செய்யும் கோட்பாடு
ஏற்பட்ட நட்டத்தை பூரணமாக்கிக் கொள்வதற்காக அதனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு போதுமான தொகையை நட்ட ஈடாகக் கொடுப்பது.

(iii) 8000/= ($\frac{50000}{500000}$ x 80000)

(iv) அ. தங்கி வாழ்வோருக்கு 200,000 ரூபா
ஆ. 1. வயது
2. ஆயுளுறுதியின் பெறுமதி
3. உறுதியின் காலம்
4. சேதத்தின் தன்மை

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1995 டிசம்பர் (விசேஷ)

வர்த்தகமும் கணக்கியலும் – I ஒரு மணி

01. ஏற்றுமதி விவசாயம் எனும் தலைப்பின் கீழ்வரும் பண்டங்களைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கோப்பி, கறுவா, சித்திரனல்லாப் புல்.
(2) தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள்
(3) அரிசி, சோளம், மிளகாய்
(4) பெரியவெங்காயம், சிவந்தவெங்காயம், சோயாஅவரை.

02. ஒரே கூரையின் கீழ் வேறுபட்ட பண்டங்களுக்கு வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டுள்ள வியாபார நிலையத்தைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் பெயர் யாது?
(1) கூட்டுறவுக்கடை (2) பாரிய அளவிலான கடை
(3) பகுதிக் கடை (4) நானாவித பண்டக் கடை

03. ஒரு வியாபாரத்தின் வெற்றி பின்வருவனவற்றுள் எதில் தங்கியிருக்கும்?
(1) பண்டங்களைத் திறமையாக வாங்குதலும் விற்றலும்
(2) இலாபங்களை ஈட்டும் உபாயங்கள்
(3) வியாபாரத்தில் போட்டிக்குரியவர்களை ஒழித்தல் விரகுகள்
(4) வியாபாரத்தை இயன்ற அளவுக்கு விரிவுபடுத்தல்

04. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பின்வரும் பொருட்களுள் ஆண்டுதோறும் மிகப்பெரும் செலவை ஏற்படுத்துபவை.
(1) நுகர்வுப் பண்டங்கள் (2) இடைநிலைப் பண்டங்கள்
(3) முதலீட்டுப் பண்டங்கள் (4) வகுதிப்படுத்தப்படாத பண்டங்கள்

05. பண்டங்களை வாங்குவதிலும் விற்பதிலும் அரசாங்க திணைக்களங்களினாலும் அரச கூட்டுத்தாபனங்களினாலும் பின்பற்றப்படும் முறைமை.
(1) வாடகை கொள்வனவு வாங்கல், விற்றல் முறைமை
(2) கடன் கொள்வனவு, விற்றல் முறைமை
(3) கேள்விப்பத்திர வாங்கல், விற்றல் முறைமை
(4) பிற்போட்ட வாங்கல், விற்றல் முறைமை

06. பின்வருவனவற்றுள் உற்பத்திப் பொருள்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?
(1) தளபாடம், வளமாக்கிகள், உணவு உற்பத்திப் பொருட்கள் (2) காற்று, சூரியஒளி, நீர்
(3) உணவு, புடவைகள், புத்தகங்கள் (4) பொறித்தொகுதி, கட்டடங்கள், கலப்பைகள்

07. முகவரினூடாக விற்கப்படவேண்டிய பண்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட விலையை முகவருக்கு அறிவிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஆவணம்:-
(1) பற்றுச்சீட்டு (2) அறிவித்தல் அட்டை
(3) விற்பனைப்பட்டியல் (4) பெயரளவுக் கிரயப்பட்டியல்

08. குறிப்பான செல்லுபடிக் காலம் எதுவும் குறிப்பிடப்படாத காசோலையொன்றின் செல்லுபடிக்காலம் எவ்வளவு?
(1) வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலம்
(2) வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலம்
(3) வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலம்
(4) வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரு மாத காலம்

09. மத்திய வங்கியினால் நிறைவேற்றப்படும் ஒரு பணி
(1) நாட்டிலுள்ள கிராமிய வங்கிகளைக் கட்டுப்படுத்தல்
(2) அனைத்து நிறுவனங்களிலிருந்தும் சேமிப்புப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுதல்
(3) தனது வாடிக்கையாளருக்குக் கடன்களை வழங்குதல்
(4) நாட்டில் கடன்கள் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்துதல்

10. களஞ்சியக் காப்பில் பயன்படுத்தப்படும், இரு முக்கியமான ஆவணங்களைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) தொக்கு அட்டை, கட்டளை (2) கட்டளை, விலை அட்டை
(3) தொக்கு அட்டை, கெள்கல அட்டை (4) கெள்கல அட்டை, விலை அட்டை

11. தேவைப்படும் சேரிடமொன்றிற்குப் பண்டங்களின் பாரிய இருப்பு ஒன்றினைக் கொண்டு செல்வதற்கு மிகப் பொருத்தமான முறை:
(1) புகையிரதம் (2) லொறி (3) ஆகாயவிமானம் (4) படகு

12. ஆக்கத் கைத்தொழில்களுடன் தொடர்புபட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க:
(1) உப்பின் உற்பத்திக்கு அம்பாந்தோட்டை பிரசித்தி பெற்ற ஓர் இடமாகும்.
(2) முகமூடிக் கைத்தொழிலுக்கு அம்பலாங்கொடை பிரசித்தி வாய்ந்த ஓர் இடமாகும்.
(3) நன்னீர் மீன்பிடித்தொழில், அபிவிருத்தி செய்யப்படக்கூடிய ஓர் வணிகமாகும்.
(4) இரத்தினக்கல் அகழ்வு இரத்தினபுரியில் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13. வியாபார உலகிலிருந்து மொத்த விற்பனை வியாபாரியை அகற்ற முடியாது. ஏனெனில்:
(1) உற்பத்தியாளர் பண்டங்களை விநியோகிக்க முடியாதவராக இருப்பர்.
(2) மக்கய் பலர் தமது தொழில்களை இழக்க நேரிடும்.
(3) உலக வியாபாரத்திலிருந்து அவரதுஇடையீட்டுச் சேவையை அகற்றமுடியாது.
(4) மொத்த விற்பனையாளரால் தனக்கு அளிக்கப்பட்டு வரும் வசதிகளைச் சில்லறை விற்பனையாளர் இழக்க நேரிடும்.

14. வினைத்திறம் வாய்ந்த ஒருவருக்குப் பொருந்தும் வாக்கியத்தை தெரிவு செய்க:
(1) அவர் இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்துடன் மட்டும் சம்மந்தப்பட்டவராவார்.

(2) அவர் தனது முதல்வரிடமிருந்து நம்பிக்கை உறுதித் தரகுக்கூலியை பெற்றுக்கொள்வார்.
(3) தனது முதல்வருக்காக தான் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு அவர் எவ்வித பொறுப்பையும் வகிப்பதில்லை.
(4) அவர் தனது முதல்வரின் பண்டங்களைத் தனது சொந்தப் பெயரில் விற்பதற்கு உரித்துடையவராவார்.

15. பந்தித்த (சுங்கப்) பண்டகசாலையின் அதியுச்ச அளவான பயனைப் பெற்றுக் கொள்ளும் தரப்பினர் யார்?
(1) உற்பத்தியாளர்கள் (2) இறக்குமதியாளர்கள்
(3) மொத்தவிற்பனையாளர்கள் (4) பாரிய அளவுக் கம்பனிகள்

16. பெறுமானத்தின் களஞ்சியமாகத் தொழிற்படும் பணத்தின் பணியுடன் சம்மந்தப்பட்ட வாக்கியம் பின்வருவனவற்றுள் எது?
(1) சில்லறை விற்பனையாளர் ஒருவர் கடனுக்குப் பண்டங்களை வாங்குகின்றார்.
(2) ஒப்பந்தக்காரொருவர் தனது வங்கிக் கடன்களை தீர்ப்பதற்காகப் பணத்தை வைப்புச் செய்கிறார்.
(3) ஒரு விவசாயி தனது அறுவடையை விற்றதன் மூலம் தான் பெற்றுக்கொண்ட பணத்தை வங்கியில் வைப்புச் செய்கிறார்.
(4) ஒரு மனையாள் தனது வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குகிறார்.

17. நுகர்வோர் தமக்கு இன்றியமையாத பண்டங்களை வாங்குவதில் அவர்களின் நன்மதிப்பை மிகுந்த அளவில் பெற்றிருக்கும் நிலையம் எது?
(1) மார்க்.·.பெட்
(2) சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களத்தின் கடைகள்
(3) இலங்கை அரச வியாபார (பொது)க் கூட்டுத்தாபனம்
(4) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

18. ஒரு வியாபாரி போதிய அளவு பண்டங்களை இருப்பில் வைத்திருப்பது ஏன்?
(1) பண்டங்களை களஞ்சியப்படுத்தல் அவரது பொறுப்பாகும் என்பதால்
(2) வாடிக்கையாளருக்கு தேவையான அளவு பண்டங்களை அவர் வழங்க வேண்டும் என்பதால்
(3) தொடர்ச்சியாக அவர் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதால்
(4) பண்டங்களை தக்க காலத்தில் சேமித்து வைப்பதால் அவர் இலாபமீட்ட முடியுமென்பதால்

19. வெகுசனத் தொடர்பு சாதனங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
(1) சுற்றறிக்கைகள், இன்டர்கொம், அஞ்சலட்டைகள், அறிவித்தல்கள்
(2) தொலைபன்னி, சுவரொட்டிகள், தந்திகள், தெலக்ஸ்
(3) தெலக்ஸ், செய்தித்தாள்கள், கடிதங்கள், ·.பக்ஸ் இயந்திரம்
(4) வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள், பருவ சஞ்சிகைகள்

20. முயற்சியாளனுக்கு ஆலோசக சேவையை மட்டும் வழங்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டுள்ள நிலையம் பின்வருவனவற்றுள் எது?
(1) பிரதேச அபிவிருத்தி வங்கி (2) வணிகவங்கி
(3) தேசிய அபிவிருத்தி வங்கி (4) மத்தியவங்கி

21. வளங்களைக் கூடிய ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு:
(1) பெறுவனவுகள், கொடுப்பனவுகள், அனைத்தும் பற்றிய பதிவுகளைப் பேணுதல் இன்றியமையாததாகும்.
(2) பெறுவனவுகள், அட்டுற்று, நின்ற பெறுவனவுகள் அனைத்தினதும் பதிவுகளைப் பேணுதல் இன்றியமையாததாகும்.
(3) அனைத்துக் கொடுப்பனவுகளினதும் அட்டுற்று நின்ற கொடுப்பனவுகளினதும் பதிவுகளைப் பேணுதல் இன்றியமையாததாகும்.
(4) கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தினதும் பதிவுகளைப் பேணுதல் இன்றியமையாததாகும்.

22. கொள்வனவு அல்லது விற்பனை குறிப்பேடுகளில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்களைத் தெரிவு செய்க:
(1) விற்பனைக்காகக் கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் ரூ 4000.
(2) கடனடிப்படையில் சிறிசேனவுக்கு விற்கப்பட்ட பண்டங்கள் ரூ 3000.
(3) உடமையாளர் தனது சொந்தப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொண்ட பண்டங்கள் ரூ. 800.
(4) முன்வைத்த கட்டளைக்குக் கிடைக்கப்பெற்ற பண்டங்கள் ரூ. 8000

23. பின்வருவனவற்றுள் சரியான சமன்பாடாக உள்ளது எது?
(1) சொத்துக்கள் + வருமானம் = ரூபா மூலதனம்
(2) மூலதனம் + உடைமை = வருமானம்
(3) சொத்துக்கள் + செலவீடுகள் + வருமானம் = மூலதனம் + பொறுப்புக்கள்
(4) மூலதனம் + வருமானம் + பொறுப்புக்கள் = சொத்துக்கள் + செலவீடு

24. காசுக் கழிவீடுகள் அனுமதிக்கப்படுதலின் நோக்கம்:
(1) மேலும் கூடுதலான வாடிக்கையாளர்களைப் பெற்றுக் கொள்ளுதல்
(2) விரைவாகக் கடன்களை அறவிட்டுக் கொள்தல்
(3) கடன் விற்பனைகளை அதிகரிக்கச் செய்தல்
(4) போட்டியினை எதிர் கொள்வதை எளிதாக்கல்

25. ஒரு வணிகம் தயாரிக்கும் இலாபநட்ட கணக்கிற்குப் பதிலாக, இலாபமீட்டாத ஒரு வணிக முயற்சியினால் தயாரிக்கப்படுவது எது?
(1) பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கு
(2) வருமான, செலவீட்டுக் கணக்கு
(3) ஒப்பப்பணக் கணக்கு
(4) சிற்றுண்டிச்சாலை விற்பனைகள் கணக்கு

26. பின்வரும் சந்தர்ப்பங்களுள் எதில் தொங்கல்க் கணக்கு தயாரிக்கப்படும்?
(1) பரீட்சை மீதியில் ஒரு வித்தியாசம் காணப்படுமிடத்து
(2) ஐந்தொகை சமநிலை எய்யாத பொழுது
(3) பதியப்படாத கொடுக்கல் வாங்கல் ஒன்று தவறவிடப்படும் பொழுது
(4) கணக்கீட்டில் வழுக்கல் நிகழும் பொழுது

27. தரப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு சரியான இரட்டைப்பதிவை தெரிவு செய்க.
(1) காசோலை மூலம் சிந்தகவுக்குச் செய்த கொடுப்பனவு
- சிந்தகவுக்குச் செலவுவைத்தலும் காசுக்கணக்கில் வரவு வைத்தலும்
(2) சிறிமாவிடமிருந்து கிடைக்கப்பெற்ற காசு
- சிறிமாவுக்கு வரவு வைத்தலும் காசுக் கணக்கிற்கு செலவு வைத்தலும்
(3) சந்துருவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன், காசோலை மூலம் தீர்க்கப்பட்டது
- சந்துருவிற்கு வரவு வைத்தலும் வங்கிக்கு செலவு வைத்தலும்
(4) மலித்திடமிருந்து கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள்
- மலித்திற்கு வரவு வைத்தலும் கடன் கொள்வனவுக் கணக்கிற்கு செலவு வைத்தலும்

28. சுனிமாலுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்றாள் ஒன்று பின்வரும் ஏடுகளுள் எதிற் பதியப்படவேண்டும்?
(1) பொதுக் குறிப்பேடு (2) உட்டிரும்பல் குறிப்பேடு
(3) வெளித்திரும்பற் குறிப்பேடு (4) காசேடு

29. 5% கழிவீட்டை அனுமதித்ததன் பின்னர் ரூபா. 560 ஆன கடன் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்புடும் தொகை யாது?
(1) ரூபா. 325.00 (2) ரூபா. 235.00 (3) ரூபா. 532.00 (4) ரூபா. 352.00

30. தேய்மானத்திற்கான ஏற்பாட்டுக் கணக்கில் சொத்தொன்றின் தேய்மானத்தைப் பதியும் கணக்குப் பதிவாளரொருவரின் இரட்டைப்பதிவு எவ்வாறு அமைதல் வேண்டும்.
(1) வரவு சொத்துக்கள் கணக்கு, செலவு தேய்மானத்திற்கான ஏற்பாட்டுக் கணக்கு
(2) வரவு இலாபநட்டக் கணக்கு, செலவு தேய்மானத்திற்கான கணக்கு
(3) வரவு தேய்மானத்திற்கான ஏற்பாட்டுக்கணக்கு, செலவு இலாபநட்டக் கணக்கு
(4) செலவு சொத்துக்கள் கணக்கு வரவு, செலவு தேய்மானத்திற்கான ஏற்பாட்டுக் கணக்கு

31. செலவு மீதிகளை மட்டும் கொண்டுள்ள கணக்கின் வகையைத் தெரிவு செய்க:
(1) வருமானக்கணக்கு, பொறுப்புக்கள் கணக்கு, உரிமைக் கணக்கு.
(2) சொத்துக்கள் கணக்கு, செலவினக் கணக்கு, வருமானக் கணக்கு.
(3) சொத்துக்கள் கணக்கு, உரிமைக் கணக்கு, பொறுப்புக்கள் கணக்கு.
(4) செலவினக் கணக்கு, வருமானக் கணக்கு, பொறுப்புக்கள் கணக்கு.

32. கட்டுநிதி (முற்பண) முறைமையில் தயாரிக்கப்படும் சிறுசெலவுக் காசேடு ஒன்று மூடப்படும் பொழுது:
(1) கட்டுநிதியாக அளிக்கப்பட்ட மொத்தத்தொகை திரும்பக் கிடைக்கும்.
(2) செலவுசெய்த பணமும் கட்டுநிதியாக அளிக்கப்பட்ட மூலத்தொகையும் திரும்பக் கிடைக்கும்.
(3) செலவு செய்த காசு மட்டும் திரும்பக் கிடைக்கும்.
(4) செலவிடப்பட்ட தொகை, கட்டுநிதி எனும் இரண்டினுள்ளும் பெரிதான தொகை திரும்பக்கிடைக்கும்..

33. உற்பத்திக் கணக்கொன்றிலே முதற்கிரயம் பின்வருவனவற்றுள் எதிலிருந்து தயாரிக்கப்படும்
(1) மூலப்பொருட்கள், உற்பத்திச்செலவு, தொழிற்சாலைச் செலவுகள்
(2) நேர்க்கிரயம், தொழிற்சாலைக்கிரயம், உற்பத்திச் செலவுகள்
(3) நேர்க்கிரயம், நேர் உழைப்புக்கிரயம், நேர் மூலப் பொருட்கள் கிரயம்
(4) நேர் உழைப்புக்கிரயம், நேரில் செலவுகள், மூலப் பொருட்கள் கிரயம்

34. மூன்று நிரல் காசேடு ஒன்றிலே வரவுப்பக்கம், செலவுப்பக்கம் ஆகிய இரண்டிலும் காட்டப்படும் க்ணக்குகளைக் கொண்டுள்ள தொகுதி எது?
(1) ஆட்குறிக்கும் கணக்குகளும், பெயரளவுக் கணக்குகளும்
(2) சொத்து (ஆதனக்) கணக்குகளும், ஆட்குறிக்கும் கணக்குகளும்
(3) சொத்துக் கணக்குகளும், பெயரளவுக் கணக்குகளும்
(4) சொத்துக் கணக்குகள், பெயரளவுக் கணக்குகள், ஆட்குறிக்கும் கணக்குகள் ஆகியன

35. பங்குடமை ஒன்றிலே பொறுப்பு வரையறையற்றது என்பதனாற் கருதப்படுவது யாது?
(1) பங்காளர்களின் எண்ணிக்கை வரையறையற்றது.
(2) சொத்துக்கள் வரையறையின்றி முதலீடு செய்யப்படலாம்.
(3) வணிகத்தின் கடன்களுக்குத் தனிநபரின் பொறுப்பு வேண்டப்படுகிறது.
(4) வணிகத்திலிருந்து வரையறையின்றி எடுப்பனவுகள் செய்யப்படலாம்.

36. இலாபநட்டக் கணக்கு தயாரிக்கப்படும் பொழுது கருத்தில் கொள்ளப்படாத இனம் பின்வருவனவற்றுள் எது?
(1) சொத்துக்களின் தேய்மானம் (2) அட்டுற்ற செலவுகள்
(3) உடமையாளர் செலுத்தும் வருமானவரி
(4) சொத்துக்களை விற்றதினால் சம்பாதிக்கப்படும் இலாபம்

37. திரவத்தன்மையின் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தப்படும், அசையும் சொத்துக்களைக் கொண்டுள்ள தொகுதி எது?
(1) தொக்குகள், கைவசமுள்ளகாசு, வங்கியிலுள்ள காசு, கடன்பட்டோர்
(2) தொக்குகள், கடன்பட்டோர், வங்கியிலுள்ள காசு, கைவசமுள்ள காசு

(3) தொக்குகள், வங்கியிலுள்ள காசு, கைவசமுள்ள காசு, கடன்பட்டோர்
(4) தொக்குகள், கடன்பட்டோர், கைவசமுள்ள காசு, வங்கியிலுள்ள காசு

38ஆம், 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக:
(A) விற்பனைக் குறிப்பேடு (B) கொள்வனவுகள் குறிப்பேடு
(C) பொதுக் குறிப்பேடு (D) பண்டங்களின் திரும்பற் குறிப்பேடு
(E) காசுக் குறிப்பேடு (காசேடு)

38. கொள்வனவாளரால் விற்பனைப்பட்டியல் மூலாதாரமாகப் பயன்படுத்தப்படும் குறிப்பேடு எது?
(1) A (2) B (3) C (4) D

39. பற்றுச்சீட்டினை மூலாதாரமாகப் பயன்படுத்தும் குறிப்பேடு எது?
(1) A (2) B (3) E (4) D

40. தொடக்கக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்தப்படும் துணைக்குறிப்பேடு எது?
(1) A (2) D (3) E (4) C

01.		X			02.		X			03.	X				04.		X		
05.			X		06.				X	07.				X	08.			X	
09.				X	10.			X		11.		X			12.		X		
13.			X		14.				X	15.		X			16.			X	
17.				X	18.			X		19.				X	20.		X		
21.				X	22.			X		23.				X	24.		X		
25.		X			26.	X				27.			X		28.		X		
29.			X		30		X			31.	X				32.			X	
33.			X		34.			X		35.			X		36.			X	
37.		X			38.		X			39.			X		40.				X

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1995 டிசம்பர் (விஷேச)
வர்த்தகமும் கணக்கீயலும் – II பகுதி I

1.

தாமோதரா எனபவர் ஒரு தனி வியாபாரி ஆவார். 1995 டிசமபர் 31ஆம் திகதியனறு அவரது ஏடுகளிலிருந்து பெறாதெடுக்கபபட பரீட்சை மீதி பின்வருமாறு:

	ரூபா	ரூபா
வீட்டு வாடகையும், இறைகளும்	1 800	-
கைவசமுள்ள காசு	1 600	-
தொலைபேசிக்கட்டணங்கள்	840	-
அலுவலகச் சாதனங்கள்	18 000	-
கடன் பட்டோரும் கடன் கொடுத்தோரும்	17 760	16 000
அறவிடமுடியாக் கடன்கள்	240	-
ஒப்படைசெய்வான் வண்டி-கிரயத்தில்	75 000	-
உட்சுமைக்கூலி	1 800	-
எடுப்பனவுகள்	6 800	-
விற்பனைகள்	-	168 000
உட்டிரும்பல்கள்	2 300	-

கொள்வனவுகள்	95	200		-
கிடைத்த கழிவீடுகள்		-	1	560
எழுதுகருவி வகைகள்	1	200		-
அறவிடமுடியா, ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு (1995.01.01)				730
தொக்கு (ஜனவரி 1)	42	200		-
சம்பளங்கள்	36	900		-
வங்கிக் கட்டணங்கள்		360		-
வங்கிக் கணக்கு மீதி	4	290		-
மூலதனம்			120	000
	306	290	306	290

பின்வரும் தகவல்களைக் கருத்திற்கொண்டு 1995 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார, இலாபநட்டக் கணக்கையும் அத் தேதியிலிருந்த படியிலான ஐந்தொகையையும் தயாரிக்க:

(1) அட்டுற்று நின்ற வீட்டு வாடகை ரூபா 360

(2) தொக்குகள் ரூபா 38 630

(3) அறவிடமுடியாக் கடன்களுக்கும், ஐயக் கடன்களுக்குமான ஏற்பாடு, ரூபா. 880 ஆக அதிகரிக்கப் படுதல் வேண்டும்.

(4) தேய்மானம் பின்வருமாறு செய்யப்படுதல் வேண்டும்.
அலுவலகச் சாதனம் **5%,** ஒப்படைசெய் வான்வண்டி **10%**

2.

(அ) சிறீதேவன் 1995 ஜனவரி 1ஆம் திகதியன்று சிறிய அளவிலான சில்லறை வியாபாரமொன்றை ஆரம்பித்தான். குறித்த இம் மாதத்திலான அவனது கொடுக்கல், வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. கொடுக்கல், வாங்கல் ஒவ்வொன்றிற்குமான செலவுப்பதிவும், வரவுப்பதிவும் செய்யப்படும் கணக்கினைப் பெயரிடுக:

(1) ரூபா 50 000 ஆன தொகையை மூலதனமாக முதலீடு செய்தமை.

(2) தனது தந்தையார் ஜெயதேவரிடமிருந்து ரூபா 10 000 கடனொன்றைப் பெற்றுக் கொண்டமை.

(3) ரூபா 6000 ஆன உடன் காசுக்குப் பண்டங்களை வாங்கியமை.

(4) ரூபா 8000 ஆன உடன் காசுக்குப் பண்டங்களை விற்றமை.

(5) ரூபா 15 000 ஆன தொகையுடன் நடப்புக் கணக்கொன்றைத் திறந்தமை.

(ஆ) பின்வரும் கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக ஜெகத் என்பவரின் வணிகத்தினது தொடக்கக் குறிப்பேட்டுப் பதிவினை எழுதி மூலதனத்தைக் காட்டுக:

	ரூபா
காணியும் கட்டடங்களும்	150 000
பொறித் தொகுதியும் சாதனங்களும்	75 000
வியாபாரக் கடன்பட்டோர்	15 000
வியாபாரக் கடன்கொடுத்தோர்	33 500
வங்கியிலுள்ள காசு	12 500
கைவசமுள்ள காசு	3 500
நின்ற வீட்டு வாடகை	250

(1) காசேட்டினை எழுதுவதற்குப் பயன்படும் மூலாதாரங்களை எழுதுக.

(2) நடைமுறைக் கணக்கினை வைத்திருப்பவர் ஒருவரிடமிருந்தான வங்கிக் கட்டணங்களுக்குப் பொருத்தமான இரட்டைப் பதிவினை எழுதுக.

(3) நடைமுறைக் கணக்கொன்றைப் பேணுதலின் மூன்று அனுகூலங்களை எழுதுக.

(4) பின்வரும் தகவல்களுக்கமைய திவாகரின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரித்து 1995 நொவம்பர் 30 ஆம் திகதியன்று இருந்தபடி அவரது நடைமுறைக் கணக்கிலான மீதியைக் காண்க.
1995 நொவம்பர் 30ஆம், திகதியன்று திவாகரினது காசேட்டிலிருந்த மீதி ரூபா 20 800 ஆகும். ஆனால் அது அத்தேதியிலிருந்தவாறான வங்கிக் கூற்று மீதியிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. பின்வரும் தகவல்கள் பின்னர் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) ஜெயசிறியிடமிருந்து ரூபா 2 600 எனும் தொகைக்குக் கிடைக்கப்பெற்ற காசோலை ஒன்று நொவம்பர் 28 ஆம் திகதியன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. ஆனால் இது இதுவரை கணக்கிற் பதியப்படவில்லை.

(ஆ) நொவம்பர் 25ஆம் திகதியன்று தாக்கல் செய்யப்பட்ட காசோலைப் புத்தகத்தின் கிரயமான ரூபா 120 காசேட்டிற் பதியப்படவில்லை.

(இ) நொவம்பர் 22ஆம் திகதியன்று லக்சிரீ என்பவருக்கு ரூபா 8200 எனும் தொகைக்கு வழங்கப்பட்ட ஒரு காசோலை வங்கியிடம் இதுவரை சமர்ப்பிக்கப்படாதிருந்தது.

(ஈ) காப்புறுதிக் கம்பனிக்கு மாதாந்த தவணைக்கட்டணமாக ரூபா 200 ஐச் செலுத்தும்படி வங்கிக்கு, முன்வைத்த கட்டளைப்படி அத்தொகை வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தும் காசேட்டில் பதியப்படவில்லை.

(1) உற்பத்தி நிறுவனமொன்றின் எவ்விடயங்கள், பூர்த்தியாகாத வேலை (work in progress) என அழைக்கப்படும்?

(2) பின்வரும் பதங்களை விளக்குக:
(அ) முதற்கிரயம் (ஆ) மேந்தலைச் செலவுகள்

(3) உற்பத்திக் கணக்குக்கும் வியாபாரக் கணக்குக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டும் வாக்கியமொன்றை எழுதுக:

(4) பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி ஜெயானந்த வியாபார முயற்சியின் 1995 டிசம்பர் 31ஆந் திகதியன்று இருந்தவாறான உற்பத்திக் கணக்கினைத் தயாரிக்க:

	ரூபா
மூலப் பொருட்களின் தொக்கு 95-01-01	6 000
மூலப் பொருட் கொள்வனவுகள்	65 000
மூலப் பொருள் - உட்சுமைக்கூலி	8 000
நேர்க்கூலிகள்	12 000
பொறித்தொகுதி - தேய்மானம்	6 000
தொழிற்சாலைக் கூலிகள்	14 500
சுங்கத் தீர்வைகள்	2 000
எரிபொருட் கட்டணங்கள்	7 500

பகுதி II

(1) வர்த்தக வங்கியொன்றின் இரு தொழிற்பாடுகளை எழுதுக?

(2) தரகுக் கூலி முகவரொருவரின் பிரதான பொறுப்பு யாது?

(3) கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டிய இரு ஆவணங்களைப் பெயரிடுக?

(4) பண்டங்களையும், சேவைகளையும் வழங்கும் நிறுவனங்கள் மூன்று தொகுதிகளாக வகைப்படுத்தப்படும் அவற்றுள் இரண்டை எழுதுக.

(5) விபத்துக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய இரு வகையான காப்புறுதிகளை எழுதுக.

(6) வியாபார முயற்சி ஒன்றிலே கைக்கொள்ளப்படும் உள்ளகத் தொடர்பாடல் முறைகளில் இர வகைகளைப் பெயரிடுக.

(7) சிறப்புத் தேர்ச்சியின் வாயிலாக பெற்றுக்கொள்ளப்படும் பல்வேறு அனுகூலங்களுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிடுக.

(8) பெயரளவு விலைப்பட்டியல் ஒன்றினால் நிறைவேற்றப்படும் ஒரு தொழிற்பாடுகளை எழுதுக.

(9) மாற்றுண்டியல்லொன்றுக்கும் வாக்குறுதிச் சீட்டொன்றிற்கும் இடையிலான இரு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(10) தபாற் கந்தோர்ரொன்றினூடாகக் கொடுப்பனவுகள் செய்யப்படும் இரு வழிகளைக் குறிப்பிடுக.

(11) வங்கியாளரொருவர் காசோலையொன்றை மறுக்கக்கூடிய இரு சந்தர்ப்பங்களை எழுதுக.

(12) தனி வியாபாரி வணிகமொன்றின் இரு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

(13) பணமானது பெற்றிருக்கவேண்டிய இன்றியமையாச் சிறப்பியல்புகள் இரண்டை எழுதுக.

(14) விளம்பரப்படுத்தலுக்கான ஊடகம் (சாதனம்) ஒன்றைத் தெரிவு செய்தலில் கருத வேண்டிய இரு விடயங்களை எழுதுக.

(15) களஞ்சியக் காப்பாளரொருவர் பேணவேண்டிய இரு ஆவணங்களைப் பெறுக.

6.

(அ) விபத்துக்களினால் ஏற்படும் சேதங்களில் கூட்டாக பங்குகொள்ளல் காப்புறுதியின் பணியாகும்.

(1) ஒருவருக்கு ஏற்படும் இழப்பு காப்புறுதியின் மூலம் எவ்வாறு ஒரு தொகுதியினர் மத்தியில் பங்கிடப்படுகிறது?

(2) வியாபாரிகளுக்கு காப்புறுதி ஏன் முக்கியமாக அமைகின்றது என்பதற்கு இரு காரணங்கள் தருக.

(3) காப்புறுதி செய்யப்பட முடியாத இரு வகையான இழப்புக்களைக் குறிப்பிடுக.

(ஆ) (1) விபத்துக் காப்புறுதி எனப்படுவது யாது?

(2) விபத்துக் காப்புறுதியின் பகுதிகள் (வகைகள்) யாவை?

(3) விவசாயக் காப்புறுதிச் சபை தாபிக்கப்பட்டமையின் நோக்கம் யாது?

7.

அ. (1) பங்குடமையொன்றின் முக்கியமான சிறப்பியல்புகள் யாவை?

(2) பங்குடமைகள் உருவாக்கப்படக்கூடிய மூன்று வழிகளைக் குறிப்பிடுக.

(3) தனி வியாபாரிசார் வணிகத்தைக்காட்டிலும் பங்குடமையொன்றின் மூலம் கிடைக்கக்கூடிய இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(4) மூலதனம், பொறுப்பு, முகாமை எனும் பதங்கள் ஒவ்வொன்றுக்கும் பங்குடைமை வணிகமொன்று வரையறுத்த பொறுப்புக் கம்பனி ஒன்றிலிருந்து எவ்வாறு வேறுபடும் என்பதைக் காட்டக்கூடிய ஒவ்வொரு வாக்கியமாக, மூன்று வாக்கியங்கள் தருக.

ஆ. (1) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களைக் அமைத்தலின் நோக்கம் யாது?

(2) கூட்டுறவுச் சங்கம்மொன்றின் மூலம் மாணவர் பெறும் ஒரு நன்மையினையும் ஆசிரியர் பெறும் இரு நன்மையினையும் எழுதுக.

8.

அ. (1) பிறநாட்டு வர்த்தகத்தின் மூலம் ஒரு நாட்டிற்குக் கிடைக்கும் இரு பொருளாதார நன்மைகளை எழுதுக.

(2) ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் ஒரு வியாபாரி தனது பணிகளில் பல்வேறு படிகளைக் கடந்து செல்ல வேண்டும். இப்படிகளைப் பெயரிடுக.

ஆ. (1) கொள்வனவு செய்தலினதும் விற்றலினதும் மூன்று வகைகளைப் பெயரிடுக.

(2) கொள்வனவு செய்தற் செயன்முறையில் கொள்வனவு செய்பவருக்கும் விற்பனையாளருக்குமிடையில் பரிமாற்றம் செய்யப்படும் ஆவணங்களைப் பெயரிடுக.

விடைகள் பகுதி I

தர்மானந்தர் வியாபாரி

1995 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருட வியாபார இலாபநட்டக் கணக்கு:

ஆரம்ப இருப்பு		42 200	விற்பனை	168 000	
கொள்வனவு	95 200		(-) உட்திரும்பல்	2 300	165 700
உட்சுமைக்கூலி	1 800	97 000			
		139 200			
இறுதி இருப்பு		(38 630)			
விற்பனைக்கிரயம்		100 570			
மொத்த இலாபம்		65 130			
		165 700			165 700
நிலைய நிர்வாக செலவு			மொத்த இலாபம்	65 130	
வீட்டுவாடகை இறை	2 160		பெற்ற கழிவு	1 560	66 690
அலுவலக சாதன ஓய்வு	900				
தொலைபேசி கட்டணம்	840				
எழுது கருவிவகை	1 200				
சம்பளங்கள்	36 900	42 000			
விற்பனை விநியோக செலவு					
ஐயக்கடன் ஏற்பாடு	150				
வான் வண்டி தேய்வு	7 500				
அறவிடமுடியாக்கடன்	240	7 890			
நிதியும் ஏனையவையும்					
வங்கிக் கட்டணம்	360	360			
		50 250			
தேறிய இலாபம்		16 440			
		66 690			66 690

தர்மானந்தர் வியாபாரி

1995 டிசம்பர் 31ற்கான ஐந்தொகை

மூலதனம்	120 000		நிலையான சொத்து	கிரயம்	திரண்டதேய்வு	தே.பெ
தேறியலாபம்	16 440		அலுவலக சாதனம்	18 000	900	17 100
	136 440		வான் வண்டி	75 000	7 500	67 500
எடுப்பனவு	(6 800)	129 640		93 000	8 400	84 600
			நடைமுறைச்சொத்து			
நடைமுறைக் கடன்			இறுதி இருப்பு		38 630	
அட்டுறு வாடகை	360		கடன் பட்டோர்	17 760		
கடன் கொடுத்தோர்	16 000	16 360	ஐயக்கடன்	(880)	16 880	
			வங்கிமீதி		4 290	
			காசுமீதி		1 600	61 400
		146 000				146 000

(1) காசுக் கணக்கு வரவு — மூலதனக் கணக்கு செலவு
(2) காசுக் கணக்கு வரவு — ஜெயதேவா கடன் கணக்கு செலவு
(3) கொள்வனவுக் கணக்கு வரவு — காசுக் கணக்கு செலவு
(4) காசுக் கணக்கு வரவு — விற்பனைக் கணக்கு செலவு
(5) வங்கிக் கணக்கு வரவு — காசுக் கணக்கு செலவு

நாட்குறிப்பு

திகதி	விபரம்	வரவு	செலவு
	காணியும் கட்டிடங்களும்	150 000	
	பொறித்தொகுதியும் சாதனங்களும்	75 000	
	வியாபாரக் கடன் பட்டோர்	15 000	
	வியாபாரக் கடன் கொடுத்தோர்		33 500
	வங்கியிலுள்ள காசு	12 500	
	கைவசமுள்ள காசு	3 500	
	நின்ற வீட்டு வாடகை		250
	மூலதனம்		222 250
	(சொத்துக்களும் பொறுப்புக்களும்)	256 000	256 000

3. (1) பற்றுச்சீட்டு (2) கைச்சாத்து

(2) வங்கிக் கட்டணக் கணக்கு வரவு
வங்கிக் கணக்கு செலவு

(3) அ. காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
ஆ. கொடுக்கல் வாங்கல்களுக்கு வங்கி சான்றாக அமையும்.
இ. நிலையான கட்டளைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.
ஈ. மேலதிகப் பற்று வசதிகளைப் பெறலாம்.
உ. உறுதிப்படுத்தல் ஆவணங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(4) 30-09-95 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று:

திகதி	காசேட்டின்படி வங்கி மீதி		20 800
	+ சமர்ப்பிக்கப்படாத காசோலை		8 200
			29 000
	- தீர்வையாகாத காசோலை	2 600	
	காசோலைப் புத்தகக் கட்டணம்	120	
	காப்புறுதிக் கட்டணம்	200	(2 920)
	வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதி		26 080

4.

(1) உற்பத்தி செயல்முறையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் முடிவுறாத பொருட்களின் பூர்த்தியாகாத வேலை எனப்படும்.

(2) அ. உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் மாறும் செலவுகள் அனைத்தும் மூலக்கிரயம் எனப்படும். இதில் மூலப்பொருட்கிரயம் நேர்க்கூலிகள் ஏனைய நேர்ச்செலவுகள் ஆகியன உள்ளடங்கும்.
ஆ. குறிக்கப்பட்ட எண்ணிக்கையான உற்பத்திகள் வரைமாற்றமுறாத செலவுகள் மேந்தலைச் செலவுகள் எனப்படும்.

(3) குறிப்பிட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மொத்த உற்பத்திக் கிரயத்தை கணிப்பிடுவதற்காக தயாரிக்கப்படும் கணக்கு உற்பத்திக் கணக்கு எனப்படும். குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட மொத்தலாபத்தை அறிவதற்கு தயாரிக்கப்படும் கணக்கு வியாபாரக் கணக்குகளாகும்.

(4) ஜெயாநந்த வியாபார முயற்சியின் 95 டிசம்பர் 31 இல் இருந்தவாறான உற்பத்திக் கணக்கு:

ஆரம்ப மூலப்பொருட் தொக்கு		6 000	உற்பத்திக் கிரயம் வியாபாரக் கணக்கிற்கு மாற்றியது		121 000
மூலப்பொருட் கொள்வனவு	65 000				
+ உட்சுமைக்கூலி	8 000				
சுங்கத்தீர்வை	2 000	75 000			
பயன்படுத்திய மூலப்பொருட்கிரயம		81 000			
நேர்க்கூலிகள		12 000			
மூலக்கிரயம்		93 000			
தொழிற்சாலை மேந்தலைகள்					
பொறித்தேய்வு	6 000				
தொ.கூலிகள்	14 500				
எரிபொருள்	7 500	28 000			
உற்பத்திக் கிரயம்		121 000			121 000

5.

(1) 1. சகல வைப்புக்களையும் ஏற்றுப் பாதுகாத்தல்.
2. கடன் வழங்கல்.
3. பொதுச் சேவைகளை வழங்குதல்.
4. வாடிக்கையாளரின் பிரதிநிதியாக செயற்படல்.
5. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்.

(2) 1. பொருட்களை விற்பனை செய்து வரவேண்டிய பணத்தை வசூலித்துக் கொடுத்தல்.

(3) 1. கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் இரண்டு பிரதிகள் .
2. சங்கத்தின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார சமூக நலன்கள் பற்றிய அறிக்கை.
3. சங்கத்தின் அமைப்பு வரைபடம்.
4. சங்கத்தைப் பதிவு செய்வதற்கு சட்டத் தீர்மானத்தின் பிரதி.

4. 1. தனியார்துறை, 2. பொதுத்துறை 3. கூட்டுறவுத்துறை

5. 1. மோட்டார்வாகன காப்புறுதி. 2. தொழிலாளர் நட்டஈடு
3. கள்வர் அபாயக் காப்புறுதி. 4. நம்பிக்கை உத்தரவாதக் காப்புறுதி

6. 1. சுற்றரிக்கைகள் 2. தொலைபேசி
3. அறிவித்தல் 4. இன்ரகொம்
5. கூட்டங்களும்,.கலந்தரையாடல்களும். 6. ஆட்குறிக்கும் கடிதம்.

7. 1. உற்பத்தி அதிகரிக்கும். 2. உற்பத்திச் செலவு குறையும்.
3. புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படலாம் 4. மூலப் பொருட்களின் தரம் அதிகரிக்கும்.

8. 1. விலை விசாரணைக்குப் பதிலாக அமைகின்றது.
2. கொள்வனவாளன் முற்பணமாக பணத்தைச் செலுத்த உதவுதல்.
3. பிரதிநிதிகள் மூலம் பொருட்களை விற்பனை செய்யும்போது உத்தேச விலைகளைத் தெரிவித்தல்.

9.

	மாற்றுண்டியல்	**வாக்குறுதிப்பத்திரம்**
1.	கடன்பட்டவரால் ஒப்புக்கொள்ளப் பட வேண்டும்.	ஒப்புக் கொள்ளப்பட தேவையில்லை.
2.	தய நாட்கள் உண்டு.	தய நாட்கள் இல்லை.
3.	கடன் கொடுத்தோரால் பிறப்பிக்கப்படும்.	கடன்பட்டவரால் பிறப்பிக்கப்படும்.
4.	வங்கியில் கழிவுடன் மாற்றலாம்.	வங்கியில் மாற்ற முடியாது.

10. 1. காசுக் கட்டளை 2. தந்திக் காசுக் கட்டளை

11. 1. காசோலை சிதைவடைந்து இருத்தல்.
2. பிறப்பித்தவரின் கணக்கில் போதிய பணம் இல்லாமை.
3. கையொப்பங்கள் இன்மை, அல்லது வேறுபடல்.
4. காசோலை குறிப்பிட்ட காலம் முடிவடைந்தால்.
5. திருத்தங்கள் சரியாக செய்யப்படாமை.
6. காசோலை வரைந்தவர் கொடுப்பனவை நிறுத்துமாறு வங்கிக்கு அறிவித்தல் கொடுத்தல்.

12. 1. மூலதனப் பற்றாக்குறை.
2. பொறுப்புக்கள் வரையறுக்கப்படாமை.
3. தனி ஒருவரின் தீர்மானம் தவறான அமையலாம்.
4. நட்டப்பொறுப்பை தனி ஒருவரே தாங்கிக் கொள்ள வேண்டும்.
5. தொழில் விரிவடையும் போது நிர்வகிப்பது கடினம்.

13. 1. இலகுவாக எடுத்துச் செல்ல முடியும். 2. சட்ட அங்கீகாரம் பெற்றிருத்தல்.
3. எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியது. 4. நீண்டகாலம் வாழ்வு கொண்டது.
5. பிரிபடும் தன்மை.

14. 1. விளம்பரத்திற்கான செலவு குறைவாக இருக்க வேண்டும்.
2. போட்டியாளர் பயன்படுத்தும் விளம்பர முறை.
3. பொருட்களின் தன்மை.
4. பொருட்களுக்கான சந்தையின் பரம்பல்.
5. நுகர்வோரை கவரக்கூடிய முறையில் இருத்தல் வேண்டும்.

15. 1. தொக்கு அட்டை 2. கொள்கல அட்டை

16.

அ. 1. ஒருவருக்கு ஏற்படும் இழப்புக்கு ஒரு தொகுதியினரால் செலுத்தப்படும் காப்புறுதிக் கட்டணங்கள் மூலம் இழப்பு வழங்கப்படுவதால் இழப்பு பலரிடம் பங்கிடப்படுகிறது.

2. 1. இழப்புக்களுக்கு நட்டஈட்டைப் பெறலாம் என்ற உத்தரவாதத்தால் அச்சமின்றி தொழிலில் ஈடுபடுவதற்கு.
2. இழப்பு ஏற்படும் பொழுது இழப்பீட்டைப் பெற்று மீண்டும் பழைய நிலைக்கு வருவதற்கு வியாபாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு.

3. 1. மனித சக்தியால் தீர்மானிக்க வேண்டிய இழப்புக்கள் .
(உ+ம்) பரீட்சையில் தோல்வியடைதல்.
2. உற்பத்தி தடைப்படல், விற்பனை வீழ்ச்சியடைதல் போன்றவற்றால் ஏற்படும் வழமையான வியாபார இழப்புக்கள்.
3. இயற்கையான பொருட்களுக்கு ஏற்படும் இழப்பு.

ஆ. விபத்தின் காரணமாக ஒரு பொருளுக்கு அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என நினைத்து அதற்கான இழப்பீட்டை பெறுவதற்காக செய்யும் காப்புறுதி.

17.

அ. 1. 1. இலாப நோக்கம் 2. தனி நபர்கள் ஒன்றுகூடல்
3. வியாபார நிறுவனம் ஒன்று

2. 1. செய்கை மூலமான உடன்படிக்கையின் படி.
2. பேச்சு வார்த்தை உடன்படிக்கையின் படி.
3. எழுத்து மூலமான உடன்படிக்கையின் படி.

3. 1. நட்டப்பொறுப்பை தனி ஒருவரே ஏற்காமல் பலரும் பங்கிடலாம்.
2. தீர்மானங்கள் சிறப்பானதாக இருக்கும்.
3. அதிக மூலதனத்தை பெற்றுக்கொள்ளலாம்.
4. பலரது திறமைகளையும் பயன் படத்தலாம்.

4-1: 1. **மூலதனம்:**
பங்குடமையில் பங்காளரினால் செலுத்தப்படும். வரையறுத்த கம்பனி பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குவதன் மூலம் பெறப்படும்.

2. **பொறுப்பு:**
பங்குடமையில் பங்காளரின் பொறுப்பு வரையறுக்கப்படவில்லை. வரையறுத்த பொதுக் கம்பனியில் பங்குதாரரின் பொறுப்பு அவர்கள் பெற்றுக் கொண்ட பங்குகளின் மூலதன அளவிற்கு வரையறுக் கப்பட்டிருக்கும்.

3. **முகாமை:**
பங்குடமையில் முகாமை பங்காளரால் மேற்கொள்ளப்படும். ஆனால் கம்பனியின் முகாமை இயக்குனரால் மேற் கொள்ளப்படும்.

8.

அ. 1. மிகையான உற்பத்திகளை ஏற்றுமதி செய்யலாம்.
2. அன்னிய செலாவனியைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. மிகையான உற்பத்திகளை ஏற்றுமதி செய்யலாம்.
4. ஒரு நாட்டின் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களையும், தொழில் சட்டங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

1. விலை விசாரணையைப் பெற்று விலைக்கூற்றை வெளியிடல்.
2. ஏற்றுமதிக் கட்டளையைப் பெறுதல்.
3. ஏற்றுமதி அனுமதி பெறுதல்.
4. ஏற்றுமதிக்கான பொருட்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தல்.
5. கப்பலில் இட ஒதுக்கீடும், கப்பல் எற்றுதலும்.
6. ஏற்றுமதிப் பொருட்பட்டியல் தயாரித்தல்.
7. பணம் பெறுதல்.

ஆ.

1. 1. விலை மனுக்கோரல் முறை. 2. தவணைக் கொடுப்பனவு முறை.
3. பிரதிநிதிகள் மூலம் விற்பனை செய்தலும், கொள்வனவு செய்தலும்.

2. 1. விலைவிசாரணை. 2. விலைகூறல்.
3. விலைப்பட்டியல். 4. கட்டளை.

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1995 டிசம்பர்
வர்த்தகமும் கணக்கீயலும் – I ஒரு மணி

1. இலங்கையில் தொழிற்சாலைகளினாலான உற்பத்திச் செயற்பாடுகள் குண்டூசி தொடக்கம் இரும்புப் பாதை வண்டிகள் வரை விரிந்துள்ளன. இக்கைத்தொழில்கள் பின்வருவனவற்றுள் எவையாக வகைப்படுத் தப்படலாம்?
(1) குடிசைக் கைத்தொழில்களும் பாரக் கைத்தொழில்களும்
(2) இலகு (பாரமில்) கைத்தொழில்களும் பாரக் கைத்தொழில்களும்
(3) பிரதான உற்பத்திப் பொருள்களும் உப உற்பத்திப் பொருள்களும்
(4) தொழிற்சாலைகளும் குடிசைக் கைத்தொழில்களும்

2. "ஒத்த பண்டங்கள்" எனும் கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) குறித்த ஒரு கருமத்தை நிறைவேற்றுவதற்காகச் சமமாகப் பங்கிடப்படவேண்டிய பண்டங்கள்
(2) வேறுபட்ட கருமங்களுக்குப் பயன்படுத்தப்படும் குறித்த ஒரு வகையான பண்டங்கள்
(3) ஒரே தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் வேறுபட்டவகையான பண்டங்கள்
(4) வேறுபட்ட பணிகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் வேறுபட்ட பண்டங்கள்

3. பாரிய அளவு உற்பத்தியாளர்களால் பாவனையாளர்களுக்கு நேரடியாக விற்கப்படும் பண்டங்களின் வகையைத் தெரிவு செய்க.
(1) நீண்ட காலம் பயன்படுத்தப்படக்கூடிய பாரிய பொறித்தொகுதி
(2) நுகர்வோரின் நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்கள்
(3) மலைநாட்டில் பயிரிடப்படும் காய்கறி வகைகள்
(4) விவசாய உபகரணங்கள் நறுமணப்பொருள்கள் போன்ற பண்டங்கள்

4. சொற்ப மூலதனத்தைக் கொண்ட ஒருவராலும் கூட நடத்தப்படக்கூடிய சில்லறை வியாபாரம் எது?
(1) சிறிய அளவிலான பலசரக்குக் கடை (2) சிறுகடை
(3) நடைபாதையில் கூவி விற்பனை செய்தல் (4) சந்தையில் ஒரு தனிச்சாலை

5. மொத்த விற்பனைக்கும் சில்லறை விற்பனைக்குமிடையிலான வேறுபாடு தங்கியிருப்பது:
(1) பண்டங்களின் அளவில் (2) பண்டங்களின் விலையில்
(3) வாங்குபவரின் கருத்தில் (4) கடையின் பருமனில்

6. இலங்கையின் ஏற்றுமதி வியாபாரம் நடத்தப்படுவது:
(1) ஏற்றுமதி வியாபாரிகளினால் (2) அரச கூட்டுத்தாபனங்களால்
(3) அரசாங்கத் திணைக்களங்களினால்
(4) ஏற்றுமதி வியாபாரிகளாலும் அரசகூட்டுத்தானங்களினாலும்

7. வாங்குபவரொருவர் விற்பனை நிபந்தனைகளை மீற நேரிடின், பண்டங்களை மீளப்பெறும் உரிமையை வாங்கும் விற்பனை முறைமை எது?
(1) பிற்போட்ட கொடுப்பனவு முறைமை (2) வாடகைக் கொள்வனவு முறைமை
(3) கடன் விற்பனை முறைமை (4) கேள்வி முறைமை

8. "அறிவிப்புக் குறிப்பு" என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(1) கிடைக்கப் பெற்ற பண்டங்கள் பற்றிய விவரங்கள் பதியப்படும் ஆவணம்.
(2) பண்டங்களின் தொக்குடன் அனுப்பப்படும் ஆவணம்.
(3) பண்டங்களை அனுப்பும் தினத்தன்று அவற்றை வாங்குபவருக்கு அனுப்பிவைக்கப்படும் ஆவணம்.
(4) பணம் கிடைக்கப்பெற்றதை ஒப்புக்கொள்ளுமுகமாகக் காசாளர் பண்டத்தை வாங்கியவருக்கு அனுப்பிவைக்கும் ஆவணம்.

9. "பெறுவோன் கணக்கு மட்டும்" எனக் குறுக்குக் கோடிடப்பட்ட ஒரு காசோலைக்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு.
(1) பெறுவோன் வங்கியொன்றிலே நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவனாக இருக்க வேண்டும்.
(2) பெறுவோன் வங்கியொன்றிலே நடைமுறைக்கணக்கை வைத்திருக்கவேண்டிய அவசியமன்று.
(3) காசோலையை இன்னுமொருவருக்கு மாற்றிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(4) கருமபீடத்தில் அதைக் காசாக்கிக் கொள்ளலாம்.

10. காசுக் கட்டளையொன்றின் மூலம் அனுப்பிவைக்கப்படக்கூடிய உச்சத் தொகை யாது?
(1) ரூபா 500 (2) ரூபா 1000 (3) ரூபா 2000 (4) ரூபா 3000

11. வெளிநாட்டுக்குப் பயணம் செய்வதற்கு கடற் போக்குவரத்தைக் காட்டிலும் விமானப் போக்குவரத்து மிகப் பிரசித்தி பெற்றதாக இருப்பதற்குக் காரணம்.
(1) ஒரு நாட்டில் எந்த இடத்திற்கும் இலகுவில் பிரயாணம் செய்ய முடியும்.
(2) அது கூடிய பாதுகாப்பு வாய்ந்தது. (3) பிரயாணவழிகள் குறுகியவை பிரயாணம் துரிதமானது
(4) பிரயாணச் செலவுகள் குறைவானவை.

12. பண்டசாலையிடல் மூலம்:
(1) பண்டங்களின் கேள்விக்கும் நிரம்பலுக்கும் (வழங்கல்) இடையிலான இடைத் தொடர்பு நிலைநிறுத்தப் படுகின்றது.
(2) பண்டங்களின் பண்புசார் பெறுமானம் பிரசித்தமாகிறது.
(3) உற்பத்தியாளரின் உற்பத்தித்திறன் உறுதிப்படுத்தப்படுகிறது
(4) சில்லறை வியாபாரியின் வணிகச் செயற்பாடுகள் இலகுவாக அமைகின்றன

13. வெளிநாட்டுத் தொடர்பாடலை மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க:
(1) கடல்வழித்தந்தி, தெலெக்ஸ், ∴பக்ஸ், கூரியர் சேவை
(2) செலூலர், வர்த்தமானி, ∴பக்ஸ், கடல்வழித் தந்தி
(3) ஒலிபெருக்கி, அறிவித்தல்கள், கடல் வழித்தந்தி, தெலெக்ஸ்
(4) தொலைபேசி, கலந்துரையாடல்கள், கூரியர் சேவைகள், செலூலர்

14. சில்லறை வியாபாரமொன்றின் விற்பனைப் புரள்வு வரியைச் சேகரிப்பது:
(1) சுங்கத் திணைக்களம் (2) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
(3) மாகாண சபைகள் (4) உணவுத் திணைக்களம்

15. வாகனங்கள் மீது "முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட்டது" என எழுதுவதனால் கருதப்படுவது யாது?
(1) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் சாரதிக்கும் செலுத்தப்படும் என்பது
(2) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் வாகனத்துக்கும் செலுத்தப்படும் என்பது
(3) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் வாகனத்துக்கும் சாரதிக்கும் பிரயாணிகளுக்கும் செலுத்தப்படும் என்பது
(4) இழப்பீடு வாகனத்தின் பிரயாணிகள் அனைவருக்கும் செலுத்தப்படும் என்பது

16. "பகிரங்கப்படுத்தல்" எனும் சொல்லின் கருத்தைத் தரும் தொடரைத் தெரிவு செய்க.
(1) பணத்தைச் செலவழித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
(2) விளம்பரப்படுத்தலுக்குரிய இன்னுமொரு பெயர் அதுவாகும்
(3) செலவினை வருவிக்காது சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
(4) பணத்தைச் செலவழித்தல் மூலமும் கடின உழைப்பின் மூலமும் ஏதாவது ஒன்றைச் சாதித்தல்

17. கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தைச் சம்பாதிக்கும் பொழுது
(1) அது வழமையாகப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் கையளிக்கப்படும்
(2) அது வழமையாக உறுப்பினர்களிடை பங்கிலாபமாகப் பகிரப்படும்
(3) அது வழமையாக மூலதனத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்
(4) அது வழமையாக உறுப்பினர்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படும்

18 ஆம், 19 ஆம், 20 ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும்போது கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்துக.

A - பங்குடமைகள் **B** - மக்கள் கம்பனிகள்
C - அரச கூட்டுத்தாபனங்கள் **D** - நியதிச் சட்டமுறையான சபைகள்

18. முறிவடையும் பொழுது பொறுப்பானது, அதன் உறுப்பினர்களது சொந்த உடைமைகளையும் உள்ளடக்கும் வியாபார நிறுவகம் எது.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

19. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் சிறப்பான வணிக நிறுவக வகையாகப் பதிவு செய்யப்படவேண்டிய நிறுவகம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

20. பாராளுமன்றத்தின் ஒரு விசேட அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் வணிக நிறுவகம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

21. வர்த்தகர் ஒருவர் தனது மகனின் பிரத்தியேக கல்விக்கான (டியூசன் வகுப்புக்கான) கட்டணத்தை வணிகத்திற்குரிய காசுப் பெட்டியிலிருந்து எடுத்துச் செலுத்தியுள்ளார். பொருத்தமான வரவுப்பதிவு பின்வருவனவற்றுள் எதில் இடம்பெறும்?
(1) இலாப நட்டக் கணக்கு (2) மகனுக்கான செலவுகள் கணக்கு
(3) மூலதனக் கணக்கு (4) நானாவிதச் செலவுகள் கணக்கு

22. பின்வருவனவற்றுள் எது அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பிரதிபலிக்கும்?
(1) வணிக உடமையும் பொறுப்புக்களும்
(2) வணிகத்தினது சொத்துக்களின் பெறுமானமும் மூலதனமும்
(3) வணிகத்தினது பொறுப்புக்களின் பெறுமானமும் சொத்துக்களின் பெறுமானமும்
(4) வணிகத்தினது மூலதனம், பொறுப்புக்கள், சொத்துக்கள் ஆகியவை

23. இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் பொழுது செலவுக் கணக்கொன்றின் வரவு மீதி எதற்கு மாற்றப்படும்?
(1) ஐந்தொகைக்கு (2) இலாப நட்டக் கணக்கிற்கு
(3) மூலதனக் கணக்கு (4) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கிற்கு

24. பின்வருவனவற்றுள் எது கடன்பட்டோர் கொடுக்கல் வாங்கல் மீது செல்வாக்குச் செலுத்தும்?
(1) காணிக்கணக்கு, கட்டடங்கள் கணக்கு, பொறித் தொகுதிகள் கணக்கு
(2) மூலதனக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, எடுப்பனவுகள் கணக்கு
(3) கடன்பட்டோர் கணக்கு. இருப்புக் கணக்கு, காசுக் கணக்கு
(4) ஐயக் கடன்களுக்கான ஏற்பாட்டுக் கணக்கு, அறவிடமுடியா கடன்கள் கணக்கு, கழிவீடுகள் கணக்கு

25. பின்வருவனவற்றுள் மூலதனப் பெறுவனவுகளாகக் கருதப்படக்கூடிய இனம் எது?
(1) கிடைக்கப் பெற்ற கழிவீடுகள்
(2) தட்டச்சுப் பொறியொன்றை வாங்குவதில் ஏற்பட்ட செலவு
(3) விளையாட்டுக் கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டுக்குரிய அங்கத்துவக் கட்டணம்
(4) பழைய தட்டச்சுப் பொறியொன்றின் விற்பனைமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டவரும்படி

26. காசேட்டின் வங்கி நிரலில் செலவு மீதி எச் செய்தியைத் தரும்?
(1) வங்கிக் கணக்கில் மீதி ஒன்று உள்ளது என்பதை
(2) வங்கிக் கணக்கில் மேலதிகப்பற்று ஒன்று உள்ளது என்பதை
(3) வங்கியானது கணக்கிலிருந்து தவறான கழித்தல்களைச் செய்துள்ளது என்பதை
(4) வங்கிமீதியானது கணக்கினை வைத்திருப்பவனுக்கு அனுகூலமானது என்பதை

27. வாடகையாகச் செலுத்தப்பட்ட தொகையான ரூபா. 35 பேரேட்டில் ரூபா 53 ஆக இடப்பட்டிருந்தது. இத் தவறைத் திருத்துவதற்கான பதிவைத் தெரிவு செய்தல்.
(1) ரூபா 18 ஐத் தொங்கற் கணக்கிற்கு வரவு வைத்து ரூபா 18 ஐ வாடகைக் கணக்கிற்குச் செலவு வைத்தல்.
(2) ரூபா 18 வாடகைக் கணக்கிற்கு வரவு வைத்து ரூபா 18 ஐத் தொங்கற் கணக்கிற்கு செலவு வைத்தல்
(3) ரூபா 53 ஐத் தொங்கற் கணக்கிற்கு வரவு வைத்து ரூபா 53 ஐ வாடகைக் கணக்கிற்கு செலவு வைத்தல்
(4) ரூபா 35 ஐ வாடகைக் கணக்கிற்கு வரவு வைத்து ரூபா 35 ஐத் தொங்கற் கணக்கிற்குச் செலவு வைத்தல்

28. ஆண்டின் இறுதியில் தனி வியாபாரியொருவரின் மூலதனக் கணக்கிலான மீதி பின்வருமாறு:
(1) தொடக்க மீதி - தேறிய இலாபம் - எடுப்பனவுகள் + மூலதனத்தின் மீதான வட்டி
(2) தொடக்க மீதி + தேறிய இலாபம் + எடுப்பனவுகள் + வாடகை
(3) தொடக்க மீதி + தேறிய இலாபம் - எடுப்பனவுகள் - மூலதனத்தின் மீதான வட்டி
(4) தொடக்க மீதி + தேறிய இலாபம் - எடுப்பனவுகள் + மேலதிக மூலதனம்

29. உப ஏடுகளை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) பேரேடு, கடன் கொள்வனவுகள் ஏடு, கடன் விற்பனைகள் ஏடு, முறையான நாட் குறிப்பேடு
(2) காசேடு, கடன் கொள்வனவுகள் ஏடு, கடன் விற்பனைகள் ஏடு, முறையான நாட்குறிப்பேடு
(3) இருப்புகள் ஏடு, முறையான நாட்குறிப்பேடு, பேரேடு, உட்டிரும்பல்கள் ஏடு
(4) வெளித்திரும்பல்கள் ஏடு, இருப்புகள் ஏடு, காசேடு, முறையான நாட்குறிப்பேடு

30. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்படுவது:
(1) காசேட்டிற்கும் சிறுசெலவுக் காசுக் கணக்கிற்கும் இடையிலான வித்தியாசத்தை இணங்கச்செய்வதற்காகும்.
(2) காசேட்டிற்கும் காசோலைப் புத்தகத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை இணங்கச் செய்வதற்காகும்.

(3) காசேட்டிற்கும் வங்கிக் கூற்றுக்கும் இடையிலான வித்தியாசத்தை இணங்கச் செய்வதற்காகும்.
(4) சிறுசெலவுக் காசேட்டிற்கும் வங்கிக் கூற்றிற்கும் இடையிலான வித்தியாசத்தை இணங்கச்செய்வ தற்காகும்.

31. காசேட்டின் அனுமதிக்கப்பட்ட கழிவீட்டு நிரலின் மொத்தத் தொகையான ரூபா 50 கழிவீட்டுக் கணக்கின் செலவுப் பக்கத்திற்கு இடப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஏற்படக்கூடியது:
(1) பரீட்சை மீதியின் செலவுப் பக்கத்தில் ரூபா. 100 எனும் தொகையாலான ஓர் அதிகரிப்பு
(2) பரீட்சை மீதியின் செலவுப் பக்கத்தில் ரூபா. 50 எனும் தொகையாலான ஓர் அதிகரிப்பு
(3) பரீட்சை மீதியின் செலவுப் பக்கத்தில் ரூபா. 150 எனும் தொகையாலான ஓர் அதிகரிப்பு
(4) பரீட்சை மீதியின் வரவு, செலவு பக்கங்கள் இரண்டிலும் மாற்றம் எதுவும் இல்லாமை

32. முன்னதாகச் செலுத்தப்பட்ட சம்பளங்களுக்குப் பொருத்தமாக அமையும் செம்மையாக்கப் பதிவுகளைத் தெரிவு செய்தல்:
(1) சம்பளங்கள் கணக்கிற்கு வரவு வைத்து முன்னதாகச் செலுத்திய சம்பளங்கள் கணக்கிற்கு செலவு வைத்தல்
(2) முன்னதாகச் செலுத்திய சம்பளங்கள் கணக்கிற்கு வரவு வைத்து சம்பளங்கள் கணக்கிற்கு செலவு வைத்தல்
(3) முன்னதாகச் செலுத்திய சம்பளங்கள் கணக்கிற்கு வரவு வைத்து காசுக் கணக்கிற்கு செலவு வைத்தல்
(4) காசுக் கணக்கிற்கு வரவு வைத்து முன்னதாகச் செலுத்திய சம்பளங்கள் கணக்கிற்குச் செலவு வைத்தல்

33. பண்டங்களை விற்கும் பொழுது கொள்விலையின் மீது 25% இலாபமொன்று உளதாயின். இந்த இலாபம் விற்பனை விலையின் மீதான ஒரு சதவீதமாகக் கூறப்படுமிடத்து எவ்வாறு அமையும்?
(1) 25% (2) 20% (3) 331/3 (2) 125%

34. ஆக்கக் கணக்கொன்றிலே உற்பத்திக் கிரயமாகக் குறிப்பிடப்படுவது எது?
(1) மூலப் பொருள்கள் மீதான மொத்தச் செலவுகளும் நேர்ச் செலவுகளும்
(2) தொழிற்சாலையின் அனைத்துச் செலவுகளினதும் மொத்தம்
(3) முதன்மைக் கிரயம் மேந்தலைக் கிரயம் என்பவற்றின் மொத்தம்
(4) மூலப்பொருள்களின் தொடக்க இருப்பு, குறித்த காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருள்கள் என்பவற்றின் மொத்தப் பெறுமானம்.

35. பொறுப்பு ஒன்றுடன் சொத்தினையும் அதிகரிக்கச் செய்யும் ஒரு கொடுக்கல் வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) பண்டங்களின் தொக்கு ஒன்று காசிற்குக் கொள்வனவு செய்யப்படுதல்
(2) ரூபா 5000 ஆன கடனொன்று பெற்றுக் கொள்ளப்படுதல்
(3) சொந்த வங்கிக் கணக்கிலிருந்து வணிகத்தின் கடனொன்று தீர்க்கப்படுதல்
(4) கம்பனியின் இலாச்சியிலிருந்து காசு களவுபோதல்

36. பொறித் தொகுதியொன்றைப் பழுது பார்ப்பதற்குச் செலவிட்ட தொகையான ரூபா 1500 ஐப் பொறித் தொகுதிக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் ஏற்படும் வழு எவ்வகையான வழுவாகும்?
(1) கோட்பாட்டு வழு (2) ஈடுசெய்யும் வழு (3) தவறல் வழு (4) இழைத்தல் வழு

37. வணிகமொன்று பேணிவரும் கணக்கீட்டு அறிக்கைகளிலே அதிக அக்கறை செலுத்திவரும் நிலையம் எது?
(1) பட்டயக் கணக்காளர் நிலையம் (2) உண்ணாட்டு இறைவரித் திணைக்களம்
(3) கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிலையம் (4) நீதி அமைச்சு

38 ஆம், 39 ஆம், 40 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் குறியீடுகளைப் பயன்படுத்துக:
A - துணையேடுகள் **B** - காசேடு **C** - பேரேடு **D** - முறையான நாட்குறிப்பேடு

38. ஒரு வியாபாரத் தாபனம் தனது கொடுக்கல் வாங்கல்களைக் பொழிப்பாக்கி, வகைப்படுத்தி, அவற்றின் கணக்குகளை வைத்திருப்பதற்குப் பயன்படுத்தும் ஏடு:
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

39. கடனுக்கு கொள்வனவு செய்யப்படும் நிலையான சொத்துக்கள் தொடர்பான மூலப் பதிவுகள் காணப்படும் ஏடு:
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

40. பற்றுச்சீட்டுகள், விலைப்பட்டியல்கள், உறுதிச்சீட்டுகள் என்பவற்றைப் பயன்படுத்தி ஒரு வியாபாரத் தாபனம் தனது கொடுக்கல் வாங்கல்களை முதலாவதாகப் பதியும் ஏடு:
(1) **A** (2) **B** (3) **B** (4) **D**

01.		X			02.			X		03.	X				04.			X	
05.			X		06.				X	07.		X			08.			X	
09.	X				10.		X			11.			X		12.	X			
13.	X				14.		X			15.			X		16.			X	
17.				X	18.	X				19.		X			20.				X
21.			X		22.				X	23.		X			24.				X
25.				X	26.		X			27.	X				28.				X
29.		X			30			X		31.	X				32.		X		
33.		X			34.			X		35.		X			36.	X			
37.		X			38.			X		39.				X	40.	X			

வர்த்தகமும் கணக்கியலும் II டிசெம்பர் 1995

பகுதி I மூன்று மணி

1.

பின்வரும் பரடசை மதி 1994 டிசெமபா 31 இல இருந்தபடி தரு. ஜோதாதன ஏடுகளிலிருந்து பிரததெடுகபபடடதாகும.

	ரூபா		ரூபா	
மூலதனம்			86	660
இருப்பு 1994-01-01	46	800		
விற்பனைகள்			389	000
உட்டிரும்பல்கள்	8	000		
கொள்வனவுகள்	321	000		
வெளித்திரும்பல்கள்			5	200
சுங்கத் தீர்வையும் உட்சுமைக் கூலியும்	18	600		
வாடகையும் இறைகளும்	5	700		
சம்பளங்களும் கூலிகளும்	9	300		
சில்லறைக் கடன்பட்டோர்	24	000		
சில்லறைக் கடன் கொடுத்தோர்			14	800
வங்கியிலிருந்து கடன் ஆண்டுக்கு 6% படி			20	000
வங்கி வட்டி		900		
அச்சிடலும் விளம்பரப்படுத்தலும்	14	000		
நானாவித வருமானம்				150
வங்கியிலுள்ள காசு	8	600		
கிடைக்கப்பெற்ற கழிவீடுகள்			4	190
தளபாடங்களும், கழிவீடுகளும்	5	000		
அனுமதிக்கப்பட்ட கழிவீடுகள்	1	800		
எடுப்பனவுகள்	2	450		
பொதுச் செலவுகள்	9	000		
காப்புறுதி	1	300		
அஞ்சற் செலவும் தந்திகளும்	2	300		
கைவசமுள்ள காசு		380		
பிரயாணச் செலவுகள்		870		
கட்டடங்கள்	40	000		
	520	000	520	000

கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கருத்திற் கொண்டு பின்வருவனவற்றைத் தயாரிக்க:

அ. 1994 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு

ஆ. அத் தேதியன்று இருந்தபடி ஐந்தொகை

தகவல்கள்:

i. தனிப்பட்ட முறையில் ஜெயநாத்திற்கு வருமதியாயிருந்த ஒரு தொகையான ரூபா. 3000 வியாபாரத் தாபனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டு கடன்பட்டோர் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டது. இத்தொகையை மூலதனக் கணக்கிற்குச் செலவு வைப்பதற்கு ஜெயநாத் இணங்கினார்.

ii. ஐயக் கடன்களுக்கு கடன்பட்டோர் மீது 5% ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்..

iii. 1994 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தபடி இருப்பு ரூபா 78 600 ஆகும்.

iv. கடன் வட்டி முழு ஆண்டிற்குமாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

v. தளபாடங்கள், பொருத்திகள் என்பவை மீது தேய்மானத்திற்குப் 10% ஏற்பாடொன்று செய்யப்படுதல் வேண்டும்.

vi. செலுத்தப்படவேண்டிய சம்பளங்களும் கூலிகளும் ரூபா 600 ஆகும்.

2.

மூலதனம் + வருமானம் + பொறுப்பு = சொத்துக்கள் + செலவுகள் எனும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்குப் பொருத்தமாகப் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிக.

i. ரூபா 20 000 மூலதனமாக முதலீடு செய்யப்பட்டது.

ii. காசு ரூபா 5000 இற்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

iii. வியாபாரத் தாபனத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 2000 இற்குத் தட்டச்சுப் பொறியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

iv. ரூபா 3000 காசுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

v. ரூபா 4000 கடனுக்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

vi. ரூபா 3500 கடனுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

vii. வாடகையாக ரூபா 500 செலுத்தப்பட்டது.

viii. செலுத்தப்பட்ட கூலிகள் ரூபா 800

ix. தந்தையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் ரூபா 6000

x. வருமதியான வட்டி ரூபா 250

3.

அ. உமது நண்பர்களுள் ஒருவர் பின்வருமாறு குறுக்குக் கோடிடப்பட்ட ஒரு காசோலையைப் பெற்றுள்ளார்.



உமது நண்பர் காசோலையுடன் உம்மிடம் வந்து பின்வருவன தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகிறார்.

i. இக் குறுக்குக் கோடிடலின் நோக்கம் யாது?

ii. கருமபீடத்தில் அதனை நான் எவ்வாறு காசாக்க முடியும்?

உமது ஆலோசனையைச் சுருக்கமாகத் தருக.

ஆ. காசோலைகள் மூலம் மட்டும் வணிகக் கொடுக்கல் வாங்கல்களை நிகழ்த்தும் ஒரு வியாபாரி தனது கணக்குப் பதிவாளரிடம் தனது வணிகத்திற்குச் சிறு செலவுக் காசேடு ஒன்றைப் பேணவேண்டியது அவசியமா எனக் கேட்டுள்ளார். பின்வரும் வினாக்களுக்குக் கணக்குப் பதிவாளரினால் அளிக்கப்படக்கூடிய விடையைச் சுருக்கமாக எடுத்துக் கூறுக.

i. சிறு செலவுக் காசேட்டைப் பேணவேண்டியது ஏன் அவசியம் என்பதற்கு இரு காரணங்கள் கூறுக.

ii. சிறு செலவுக் காசேடு ஒன்றைப் பேணும் மிகச் சிறந்த முறையைப் பெயரிடுக.

இ. இரட்டைப் பதிவுகளைச் செய்வதில் கணக்குப் பதிவாளர் விட்ட பின்வரும் வழுக்களை நீர் கண்டுபிடித்துள்ளதாகக் கருதுக.

i. ஜோன் என்பவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 180 காசேட்டிற்கு அத்துடன் ஜோனின் கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டிருந்தது.

ii. கிடைக்கப்பெற்ற கழிவீட்டு நிரலின் மொத்தமான ரூபா 40 முற்றுமுழுதாகத் தவறவிடப்பட்டிருந்தது.

iii. வாடகையாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 350 பேரேட்டுக் கணக்கில் ரூபா 530 ஆகப் பதியப்பட்டது.

iv. உட்டிரும்பல்கள் ஏட்டின் மொத்தத் தொகை, ரூபா 10 இனால் குறைவாகக் காணப்பட்டது.

v. ரூபா 12 000 இற்கு வாங்கப்பட்ட ஒரு பொறியின் பெறுமானம் பொறி பழுதுபார்த்தற் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது.

முறையான நாட்குறிப்பேட்டின் மாதிரியொன்றைத் தயாரித்து மேற்போந்த வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைச் செய்க.

4.

அ. தேய்மானம், தேய்மானத்திற்கான ஏற்பாடு எனும் இரு பதங்களுக்குமிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக:

ஆ. ஐயக்கடனின் தொகைத் துணிவதில் இரு காரணிகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை யாவை?

இ. மின்னேரி விவசாயிகள் நல்ன்பேண் சங்கத்தின் அங்கத்துவக் கட்டணம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

i. சங்கத்தின் மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 550 ஆகும்.

ii. ஆண்டுக்குரிய அங்கத்துவக் கட்டணம் ரூபா 60 ஆகும்.

iii. 400 அங்கத்தவர்கள் 1994 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளனர்.

iv. 10 அங்கத்தவர்கள் 1995 ஆம் ஆண்டிற்கான தமது கட்டணத்தையும் செலுத்தியுள்ளனர்.

v. 1993 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியிருந்த 50 அங்கத்தவர்கள் நிலுவையாக இருந்த தொகையை 1994 ஆம் ஆண்டிற் செலுத்தினர்.
நலன்பேண் சங்கத்தின் 1994 டிசெம்பர் 31 இல் இருந்தபடியான அங்கத்துவக் கட்டணக் கணக்கைத் தயாரித்து அத்தினத்தில் வருமானச் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்ட மீதியைக் காட்டுக:

பகுதி II

5.

i. ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியானது:
அ. எக்கால எல்லைக்கு ஆ. எக்காரணிகளின் அடிப்படையில் கணிக்கப்படும்?

ii. பண்டங்களின் பரிமாற்றத்தைக் கூடிய வசதியாக்குவதன் மூலம் ஏற்படும் இரு விளைவுகளைக் குறிப்பிடுக.

iii. சில்லறை விற்பனை வியாபாரியின் மூலம் நுகர்வோன் எய்தும் இரு அனுகூலங்களை எழுதுக.

iv. வணிகர் ஒருவர் வியாபாரம் ஒன்றை தான் ஆரம்பிக்கு முன் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைக் கூறுக.

v. மொத்த வியாபாரியை வர்த்தக உலகிலிருந்து அகற்ற முடியாது. இக்கூற்றினை நிறுவுவதற்கான இரு காரணங்கள் தருக.

vi. இலங்கையிலுள்ள ஏற்றுமதியமைப்பின் கீழ் அதியுயர் ஏற்றுமதி உழைப்புக்களைப் பெற்றுத்தரும் இரு ஏற்றுமதி துறைகளை அவற்றின் ஒழுங்கிற் குறிப்பிடுக.

vii. சர்வதேச வர்த்தகத்தில் கொடுப்பனவுகளைச் செய்வதில் பயன்படுத்தும் இரு முறைகளைக் குறிப்பிடுக.

viii. வரையறுக்கப்படாத சட்டமுறையான நாணயத்தின் முக்கியமான தொழிற்பாடு யாது?

ix. இலங்கைக் கப்பல் வசதிகளுக்கான மத்திய பணியத்தினால் நிறைவேற்றப்பட்டுவரும் இரு தொழிற்பாடுகளை கூறுக.

x. வர்த்தகரொருவர் விளம்பரப்படுத்துதல் மூலம் பெற்றுக் கொள்ளும் பிரதான அனுகூலங்கள் இரண்டைக் கூறுக.

xi. காப்புறுதி செய்யப்படமுடியாத ஆபத்துக்கள் பல உள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

xii. வியாபாரம் ஒன்றை நடத்துவதில் தாக்கம் செலுத்தும் சட்டரீதியான நிபந்தனைகள் பல உள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

xiii. சிக்கன, நாணய (கடன்) சங்கங்களின் இரு குறிக்கோள்களை விளக்குக:

xiv. பங்குடமையொன்றின் இன்றியமையாச் சிறப்பியல்புகள் நான்கு உள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

x. ஒரு கம்பனியினது பெயரின் இறுதியில் இடம்பெறும் "வரையறுக்கப்பட்டது" எனும் பதத்தின் கருத்தினைச் சுருக்கமாக விளக்குக:

6.

உமது குடும்பத்தின் உறுப்பினர்கள் வீதிப்போக்குவரத்துச் சேவையொன்றை ஆரம்பிக்க விரும்புகின்றனர். அவர்கள் அனைவரும் அதனைப் பங்குடமையொன்றாகத் தொழிற்படுத்துதலே மிகச் சிறந்தது எனக் கருதினர்.

அதனை ஒரு பங்குடமையாக நடத்துதலின் இரு அனுகூலங்களை எழுதுக.

எழுத்து வடிவிலான பங்குடமை உடன்படிக்கையொன்றை வைத்திருத்தல் ஏன் பொருத்தமானது?

அ. எந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் அது பதிவு செய்யப்படுதல் வேண்டும்?

ஆ. வீதியில் வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதிச்சீட்டானது எந்த அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இத்தொழில் முயற்சியை நடத்துவதில் செல்லுபடியாகும் விதிகளும், பிரமாணங்களும் யாவை?

இலாபத்தைப் பகிர்வதற்கான அடிப்படை யாது?

7.

அ. கொடுக்கல், வாங்கல்களில் கொடுப்பனவுகள் எவ்வாறு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் பண்டங்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான முறைகள் பல உள்ளன. அவற்றுள் மூன்றைக் குறிப்பிடுக.

ஆ. பின்வரும் மூன்று உறுப்புக்களின் (இனங்கள்) விலை தொடர்பில் வாங்குபவர் ஒருவருக்கு அனுப்பப்பட வேண்டிய மாதிரிக் கூறுவிலை குறிப்பொன்றைத் தயாரிக்க:

i. பயிற்சிப் புத்தகங்கள் 40 பக்கம் டசின் ஒன்று ரூபா 90.00

ii. மொனிட்டர் பயிற்சிப் புத்தகங்கள் 120 பக்கம் டசின் ஒன்று ரூபா 240

iii. குமிழ்முனைப் பேனாக்கள்-நீலம்-50 பேனாக்களைக் கொண்ட பெட்டிகள் பெட்டி ஒன்று ரூபா 50

8.

அ. வர்த்தகத்திற்குத் தொடர்பாடல் ஏன் முக்கியமானது. என்பதற்கு மூன்று காரணங்களை எழுதுக.

ஆ. ஒரு பெரிய தாபனத்தினால் நிறுவனத்தினகத்தே பயன்படுத்தப்படக் கூடிய இரு தொடர்பாடல் முறைகளை எழுதி ஒவ்வொரு முறையினதும் இரு அனுகூலங்களைத் தருக.

இ. விளம்பரப்படுத்துதல் ஊடகம் (சாதனம்) ஒன்றைத் தெரிவு செய்வதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய இரு முக்கியமான விடயங்களை எழுதுக.

ஈ. விளம்பரப்படுத்துதலின் போத பிழையான தகவல்களைத் தந்து நுகர்வோரை ஏமாற்ற எத்தனிக்கும் வியாபாரிகளிடமிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்கு அரசு எடுத்துவரும் இரு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

உ. விளம்பரப்படுத்துதல் நுகர்வோர், வர்த்தகர்கள் எனும் இரு தரப்பினரதும் அனுகூலமானது, இர தரப்பினரும் இவ்வாறு பெற்றுக் கொள்ளும் இரு நன்மைகளைத் தனித்தனியே எழுதுக.

வர்த்தகமும் கணக்கியலும் II டிசெம்பர் 1995 விடைகள்

1.

திரு. ஜெயநாத்தின் வியாபாரம் 31.12.94 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கு:

இருப்பு 1.1.94		46 800	விற்பனைகள்	389000	
கொள்வனவுகள்	321000		(-) உட்திரும்பல்	(8000)	381000
(-) வெளித்திரும்பல்கள்	(5200)				
	315800				
(+) சுங்கத்தீர்வையும்,					
உட்சுமைக்கூலியும்	18600	334400			
		381200			
(-) இருப்பு 31.12.94		(78600)			
		302600			
விற்ற சரக்கின் கிரயம்		78400			
மொத்த இலாபம் கீ.கொ.செ		381000			381000
நிலைய நிர்வாகச் செலவு	5700		மொத்த இலாபம். மீ/கீ/வ		78400
வாடகையும், இறையும்	9900		நானாவித வருமானம்		150
சம்பளம் கூலி	9000		கிடைத்த கழிவீடுகள்		4190
பொதுச் செலவுகள்	1300				
காப்புறுதி	2300				
அஞ்சல், தந்தி	870			1140	
பிரயாணச் செலவுகள்	500	29570		1000	
தள. பெறுமானத் தேய்வு					
	1350				
வி/னை விநியோகச் செலவு	14000	15350			
ஐயக் கடன் ஏற்பாடு					
அச்சிடல், விளம்பரம்					
நிதிச் செலவுகள்	1 200				
வங்கி வட்டி	1 800				
அனுமதித்த கழிவீடுகள்		3000			
தேறிய இலாபம்		34820			
மூலக் க/கிற்கு கொ.செ.		82740			82740

திரு. ஜெயநாத்தின் 1994 டிசெம்பர் 31 இல் ஐந்தொகை:

மூலதனம்	86660		**நிலையான சொத்துக்கள்**	**கொ.வி**	**நி.பெ.தே**	**தே.பெ**
+ மேலதிக மூலதனம்	3000		கட்டங்கள்	40000	-	40000
	89660		தளபாட பொருத்தி	5000	500	4500
+ தேறிய இலாபம்	34820			45000	500	44500
	124480		**நடைமுறைச் சொத்து**			
(கழி) எடுப்பனவு	(2450)	122030	தொக்கு		78600	
நீண்டகால கடன்கள்			கடன்பட்டோர்	27000		
6% வங்கிக் கடன்		20000	(-) ஐயக் கடன் ஏற்பாடு	(1350)	25650	
			வங்கி மீதி		8600	
நடப்புப் பரீப்புக்கள்			காசு மீதி		380	113230
கடன் கொடுத்தோர்	14800					
அட்டுறு வங்கி வட்டி	300					
அட்டுறு சம்பளம்	600	15700				
		157730				157730

2.

மூலதனம் + வருமானம் + பொறுப்பு = சொத்துக்கள் + செலவுகள் எனும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கும் பொருத்தமாகப் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிக:

(i) ரூபா 20,000 மூலதனமாக முதலீடு செய்யப்பட்டது.

(ii) காசு ரூபா 5000 இற்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(iii) வியாபாரத் தாபனத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 2000 இற்குத் தட்டச்சுப் பொறியொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

(iv) ரூபா 3000 காசுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

(v) ரூபா 4000 கடனுக்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(vi) ரூபா 3500 கடனுக்குப் பண்டங்கள் விற்கப்பட்டன.

(vii) வாடகையாக ரூபா 500 செலுத்தப்பட்டது.

(viii) செலுத்தப்பட்ட கூலிகள் ரூபா 800

(ix) தந்தையாரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் ரூபா 6000.

(x) வருமதியான வட்டி ரூபா 250

	மூலதனம்	+ வருமானம்	+ பொறுப்பு	= சொத்துக்கள்	+ செலவுகள்
(i)	20000			+20000	
(ii)				-5000	+5000
(iii)				+20000	
				-20000	
(iv)				+3000	
				-3000	
(v)			+4000		+4000
(vi)		+3500		+3500	
(vii)				-500	+500
(viii)				-800	+800
(ix)			+6000	+6000	
(x)		+250		+250	

3.

அ. (i) பெறுவோர் தனது (யோர்க்வீதி, மக்கள் வங்கி) வங்கிக் கணக்கில் மட்டும் இட்டு மாற்றச் செய்வதன் மூலம் காசோலைக்கு அதிக பாதுகாப்பைப் பெறல்.

(ii) பிறப்பித்தோர் மூலம் குறுக்குக் கோடுகளை நீக்குவதன் மூலம் காசாக்கலாம்.

ஆ. (i) புறம்பான பதிவுகளைச் செய்வது அவசியமாக இருப்பதால்

(ii) முதன்மைக் காசாளரின் நேரத்தைச் சிக்கனப்படுத்துவதற்கு

(iii) சிறு செலவுகளைக் காசோலை மூலம் செய்ய முடியாமை

(iv) சில்லறைச் செலவுகள் சம்பந்தமாகச் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு

இ.

திகதி	விபரம்	இருமடி	வரவு	செலவு
	தொங்கல் கணக்கு வரவு		360	
	ஜோன் கணக்கு செலவு			360
	ஜோன் கணக்கில் வரவில்பதியப்பட்ட 180/=செலவு பதிவாக திருத்தப்பட்டது.			
	தொங்கல் கணக்கு வரவு		40	
	பெற்ற கழிவுக் கணக்கு செலவு			40
	பெற்ற கழிவு நிரலில் மொத்தக் கணக்கில் பதியப்படாதது திருத்தப்பட்டது			
	தொங்கல் கணக்கு வரவு		180	
	வாடகைக் கணக்கு செலவு			180
	செலுத்தப்பட்ட 350/= வாடகைக் க/கில் 530/=வாக பதியப்பட்டது திருத்தப்பட்டது			
	உட்டிரும்பல் கணக்கு வரவு		10	
	தொங்கல் கணக்கு செலவு			10
	உட்டிரும்பல் க/கில் 10/= குறைவாக பதியப்பட்டது திருத்தப்பட்டது.			
	பொறிக் க/கு வரவு		12000	
	பொறி பழுதுபார்த்தல் க/கு செலவு			12000
	கொள்வனவு செய்யப்பட்ட பொறியின் பெறுமானம் பொறி பழுதுபார்த்தல் க/கில் பதியப்பட்ட வழு திருத்தப்பட்டது.			

4.

அ. **தேய்மானம்**

இயற்கை அழிவுகள் உபயோகித்தல், பழமையடைதல் போன்ற பல்வேறு காரணங்களினால் பொருளொன்றின் பெறுமதி குறைவடைதல் தேய்மானம் எனப்படும்.

தேய்மானத் தொகையாக மதிப்பிடப்படும் தொகை கையாக்க, இலாப நட்டக் க/குகளில் நட்டமாக காட்டப்படும். சில சந்தர்ப்பங்களில் சொத்தில் இருந்து கழிக்கப்படும் பொதுவாக தேய்மான ஏற்பாடு பேணப்படும்.

தேய்மான ஏற்பாடு

தேய்மானம் தேய்வடையும் எனக் கருதப்படும் தொகைக்குச் சமமான நிதியை எதிர்காலத்தில் புதிய சொத்துக்களைப் பிரதியீடு செய்யப் பேணப்படும். இந்நிதி தேய்மான ஏற்பாடு எனப்படும். தேய்மான ஏற்பாடு தொடர்புடைய சொத்துப் பெறுமதியில் ஐந்தொகையில் கழித்துக் காட்டப்படும்.

ஆ. 1. வருட இறுதியிலுள்ள கடன்பட்டோர் மீதி.

2. வருடத்துள் நடைபெற்ற கடன் விற்பனை.

3. கடந்த கால அறவிடமுடியாக் கடன் தொகை.

இ. (i) சங்கத்தின் மொத்த அங்கத்துவக் கட்டணம் ரூபா. 550/= ஆகும்.
(அங்கத்தவர் எண்ணிக்கை 550)

(ii) ஆண்டுக்குரிய அங்கத்துவக் கட்டணம் ரூபா. 60 ஆகும்.

(iii) 400 அங்கத்தவர்கள் 1994 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளனர்.

(iv) 10 அங்கத்தவர்கள் 1995 ஆம் ஆண்டிற்காக தமது கட்டணத்தையும் செலுத்தியுள்ளனர்.

(v) 1993 ஆம் ஆண்டிற்குத் தமது அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியிருந்த 50அங்கத்தவர்கள் நிலுவையாக இருந்த தொகையை 1994 ஆம் ஆண்டிற் செலுத்தினர்.

அங்கத்துவக் கட்டணக் கணக்கு

1.1.94 நிலுவை அங்கத்துவ கட்டணம்	3000	காசு (கொள்ளல் கொ/தல் க/கு)	27600
வருமானச் செல/கணக் முற்பண அங்கத்தவர் கட்டணம் கீ.கொ.சென்றது	33000	நிலுவை அங்கத்தவர் கட்டணம் கீ.கொ.சென்றது	9000
	600		
	36600		36600

5.

(i) 1. ஒரு வருட காலம்.
2. ஒரு நாட்டின் சகல நிறுவனங்களாலும் தனியார்களினாலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் மொத்தப் பெறுமதி.

(ii) 1. சந்தை விரிவடைதல்
2. உற்பத்தி விரிவடைதல்
3. நுகர்வோர்களின் தேவை அதிகரித்தல்
4. தேவைகளை இலகுவாக நிறைவு செய்தல்

(iii) 1. கடனுக்குப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
2. புதிய உற்பத்திகளைப் பற்றிய தகவல்களைப் பெறுதல்.
3. நுகர்வோர் நாளாந்த தேவைகளை நிறைவு செய்தல்.
4. பொருட்களை நுகர்வோருக்கு அண்மையில் அல்லது இருப்பிடத்தில் இருந்து பெற்றுக் கொள்ளல்.

(iv) 1. தேவைப்படும் மூலதனத்தின் அளவு.
2. வியாபாரத்தின் அமைவிடம்.
3. நுகர்வோரின் தன்மை.
4. வியாபாரத்தின் தன்மை.
5. மூலதனத்தைப் பெறும் வழிகள்
6. பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் வழிகள்
7. வியாபாரத்திற்கான சட்ட திட்டங்களும் விதிகளும்.

(v) 1. உற்பத்தி அதிகரிப்பிற்கும், வர்த்தகத்திற்கும் அவரது சேவை அவசியமாக இருப்பதால் (களஞ்சியப்படுத்தல்) தரம்பிரித்தல், விளம்பரப்படுத்தல், நிதிவசதியளித்தல் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்வதால்.
2. நாட்டில் பொருட்களின் விலைத்தளம்பல் அதிகளவில் ஏற்படாமல் விலைகளை சீரான முறையில் பேணுவதற்கு உதவுவதால்.

(vi) 1. கைத்தொழில் ஏற்றுமதிகள்
2. விவசாய ஏற்றுமதிகள்.

(vii) 1. வங்கி ஆணை
2. விமானத் தபால் மாற்று
3. தந்தி மாற்று
4. மாற்றுண்டியல்

(viii) உள் நாட்டில் எவ்வளவு தொகைக்குமான கொடுப்பனவுகள் செய்ய இயலுமாதல்.

(ix) 1. கப்பல் போக்குவரத்து முறையை ஒழுங்கு செய்தல்.
2. கப்பல் சரக்குப் பற்றிய விபரங்களை வழங்குதல்.
3. கப்பல் இடவசதி ஒதுக்குதல்.
4. வெளிநாட்டுக் கப்பல் சேவைகளுடன் தொடர்பு வைத்தல்
5. கப்பல் சம்மேளனத்துடன் கலந்துரையாடுதல்.
6. கப்பல் முகவர்களைப் பதிவு செய்தல்.

(x) 1. சந்தையில் நிலவும் கேள்விகளை குறைவடையாது பேணுதல்.
2. புதிய உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகம் செய்தல்.
3. போலி உற்பத்திகளிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.
4. பல்வேறு விற்பனை முறைகளை நுகர்வோருக்கு அறிமுகம் செய்தல்.
5. சந்தையில் போட்டியை உறுதிப்படுத்துதல்.
6. கேள்வியை மேலும் அதிகரித்தல்.
7. உற்பத்திப் பொருட்களுக்கு விளம்பரங்களினூடாக தெரியப்படுத்துதல்.

(xi) 1. சில சொத்துக்களுக்குத் தானாகவே ஏற்படும் இழப்பு.
உ+ம்: பெறுமானத் தேய்வு
2. மனித சக்தியால் தீர்மானிக்கப்படும் விடயங்களுக்கான இழப்பு.
உ+ம்: பரீட்சையில் சித்தி பெற தவறுதல்
3. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய கணக்கிட முடியாத நட்டங்கள்.

(xii) 1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகள்
2. விற்பனை சம்பந்தமான சட்ட விதிகள்
3. ஊழியர் சம்பந்தமாக சட்ட விதிகள்
4. நிறுத்தல் அளத்தல் சட்ட விதிகள்
5. விலைக் கட்டுப்பாட்டுச் சட்ட விதிகள்

(xiii) 1. கடன் வசதிகளை அளித்தல்.
2. சேமிப்பை ஊக்குவித்தல்.

(xiv) 1. தனி நபர்கள் ஒன்று சேருதல். 2. இலாப நோக்கு
3. தொழில் ஒன்று நடைபெறுதல். 4. பொதுவில் செயற்படுதல்.

(xv) 1. வெளியாரின் கடன்களுக்கான பொறுப்பு பங்குதாரர் இட்ட மூலதனத்தின் அளவுக்கு வரையறுக் கப்பட்டது என்பதாகும்.

6.

(i) 1. மூலதனத்தை எல்லோரும் இடுவதால் ஏற்படும் வசதி.
2. தனிப்பட்ட பல்வேறு திறன்கள் தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தல்.
3. நட்டப்பொறுப்பை உல்லோரும் பகிர்ந்து கொள்ளுதல்.
4. இலகுவாக ஆரம்பிக்கலாம்.

(ii) பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் பங்குடமை என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படு த்துவதற்கு.

(iii) 1. வியாபார பெயர்ப் பதிவுச் சட்டத்தின்கீழ் 2. மகாணப் போக்குவரத்து அமைச்சு.

(iv) மாகாண அமைச்சினதும் மத்திய அமைச்சினதும் விதிகளும் பிரமாணங்களும்.

(v) பங்குடமை ஒப்பந்தம் ஒன்றிருப்பின் அவ்வொப்பந்தத்திற்கு ஏற்ப ஒப்பந்தம் இல்லை எனில் பங்குடமைச் சட்டத்தின்படி சமமாகப் பங்கிட வேண்டும்.

7.

அ. 1. காசு விற்பனையும், கொள்வனவும். 2. கடன் விற்பனையும், கொள்வனவும்
3. தவணைக் கொள்வனவும், விற்பனையும்.

இல: 430
கொழும்பு புத்தக நிலையம்
பிரதான வீதி
கொழும்பு
21-12-95.

முகாமையாளர்,
கலைமகள் புத்தக நிலையம்,
பஸ் நிலையம்,
மட்டக்களப்பு.

ஐயா,

தங்களின் 30-11-95 ஆம் திகதிய விலை விசாரணை தொடர்பாக பின்வரும் விலை கூறலை சமர்ப்பிக்கின்றோம்.

பொருளின் பெயர்	**வகை**	**அலகுவிலை**
பயிற்சிப் புத்தகம்	40 பக்கம்	டசின் 90.00
மொனிற்றர் பயிற்சிப் புத்தகம்	120 பக்கம்	டசின் 240.00
குமிழ்முனைப் பேனாக்கள் நீலம்	50 கொண்ட பெட்டி	பெட்டி 50.00

குறிப்பு:-

- இவ்விலைகள் இத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.
- இதற்கான கொடுப்பனவுகள் 60 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தினால் 5% கழிவு அனுமதிக்கப்படும்.
- போக்குவரத்துச் செலவு இவ்விலைகளில் உள்ளடங்காது.

தங்கள் உண்மையுள்ள
பௌதீன்,
முகாமையாளர்.

8.

அ. 1. ஊழியர்களை நிர்வகிப்பதற்கு
2. பொருட்கள், சேவைகள் பற்றி விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட (விளம்பரம்).
3. நாளாந்த நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக கட்டளைகளையும், தகவல்களையும் வழங்குதல்.
4. நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளினதும் சம்பந்தமாக உரிய நபர்களிடமிருந்து தகவல்களையும் அறிக்கைகளையும் பெறுதல்.
5. சந்தை நுகர்வோரின் தேவை என்பன பற்றி அறிந்து கொள்வதற்கும் அதன்படி எதிர்கால உற்பத்தியை சந்தைப்படுத்தலையும் கொண்டு நடத்துவதற்கும்.

ஆ. 1. **கூட்டங்களும், கலந்துரையாடல்களும் - நன்மைகள்**
1. எல்லோருடனும் ஒரே நேரத்தில் நேரடியாகத் தகவல்களைப் பரிமாற்ற முடியும்.
2. உடன் தீர்மானத்தை எடுக்க முடியும். 3. கூடிய விளக்கம் ஏற்படும்.

2. **கடிதங்கள் - நன்மைகள்**
1. தனிப்பட்ட முறையில் செய்திகளை அனுப்புவதற்கு சிறந்த முறை
2. செலவுகள் குறைவு.

1. செலவுகள் குறைவு
2. வெளிச் சூழலால் பாதிக்கப்படமாட்டாது

4. **அறிவித்தல்கள் - நன்மைகள்**
1. பொதுவான செய்திகளைப் பலருக்கும் ஒரே நேரத்தில் வழங்கு முடியும்.
2. செலவு குறைவு.

இ. 1. பொருளின் தன்மை 2. பொருளுக்கான சந்தையின் பரம்பல்
3. விளம்பரத்துக்கான செலவு 4. குறிப்பிட்ட பொருளை பயன்படுத்துவோரின் தன்மை
5. போட்டியாளர்களின் விளம்பரம் 6. விளம்பரத்தை விளங்கிக் கொள்ளும் தன்மை

ஈ.

உ. **நுகர்வோருக்கு:-**
1. பொருள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
2. பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்து தெரிவு செய்யலாம்.
3. போலிப் பொருளினால் ஏமாறுவதை தவிர்க்கலாம்.
4. விற்பனையாளரால் வழங்கும் சலுகைகளை அறிந்து கொள்ளலாம்

வர்த்தகர்களுக்கு:-
1. புதிய உற்பத்தி பொருட்களை சந்தைக்கு அறிமுகம் செய்தல்.
2. கேள்வியை மேலும் அதிகரித்தல்.
3. போலி உற்பத்திகளில் இருந்து நுகர்வோரை பாதுகாத்தல்.
4. பல்வேறு உற்பத்தி வகைகளை நுகர்வோருக்கு தெரியப்படுத்தல்.
5. சந்தையில் நிலவும் கேள்வியை குறையாது பாதுகாத்தல்.
6. சந்தையில் போட்டியிடும் வலிமையை உறுதிப்படுத்தல்
7. தொழில் சம்பந்தமாக மக்களிடமும் ஏனைய நிறுவனங்களிடமும் பிரசித்தத்தையும் நன்மதிப்பையும் ஏற்படுத்துதல்.

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1994 டிசம்பர்
வர்த்தகமும் கணக்கீயலும் – I ஒரு மணி

1. நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயற்கை வளங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றப்படுவது:
(1) வியாபாரம் எனப்படும் (2) விநியோகம் எனப்படும்
(3) உற்பத்தி எனப்படும் (4) நுகர்வு எனப்படும்

2. பின்வருவனவற்றுள் "வர்த்தகம்" என்பதற்குச் சரியான கருத்தைத் தருவது எது?
(1) வியாபாரம், விநியோகம் ஆகியன சம்பந்தமான தொழிற்பாடுகள்
(2) துணைச் சேவைகளும் உற்பத்தியும் (3) வியாபாரம் உற்பத்தி விநியோகம் ஆகியன
(4) வியாபாரமும் துணைச் சேவைகளும்

3. செயற்கையான முறையில் பற்றாக்குறையை ஏற்படுத்துவதன் மூலம் பண்டங்களின் விலைகள் உயர்த் தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு பின்வருவோருள் யார் மீது சுமத்தப்படுகிறது?
(1) உற்பத்தியாளர் (2) மொத்த வியாபாரி (3) இறக்குமதியாளர் (4) சில்லறை வியாபாரி

4. தற்காலக் கைத்தொழில் பூட்கையின் பிரதான அமிசம்:
(1) உள்நாட்டு வெளிநாட்டு மூலதன முதலீட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவது.
(2) சிறு கைத்தொழில்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுவது
(3) பாரிய கைத்தொழில்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது
(4) அரசுத் துறைக் கைத்தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது

5. வெளிநாடு ஒன்றிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களை மேலும் பதமாக்கிய பின்னர் மற்றொரு நாட்டுக்கு விற்பது
(1) இறக்கியேற்றுமிட வியாபாரமாகும் (2) மீண்டும் ஏற்றுமதி செய்யும் வியாபாரமாகும்
(3) இறக்குமதி வியாபாரமாகும் (4) சர்வதேச வியாபாரமாகும்

6. காசோலையில் எழுதப்பட்ட விடயமொன்று வெட்டித் திருத்தஞ் செய்யப்பட்டுள்ள போதிலும் வங்கியானது அதனை ஏற்றுக்கொள்வதாயின்.
(1) வங்கிக் கணக்கை வைத்திருப்பவர் திருத்தம் செய்யப்பட்ட இடத்தில் முதலெழுத்து ஒப்பமிடல் வேண்டும்.
(2) வங்கிக். கணக்கை வைத்திருப்பவர் மீண்டும் கையொப்பமிடத் தேவையில்லை
(3) திருத்தஞ் செய்யப்பட்ட இடத்தில் வங்கி எழுதுனர் ஒருவர் முதலெழுத்தொப்பமிடுவது போதுமானது
(4) வங்கிக் கணக்கை வைத்திருப்பவர் திருத்தஞ் செய்யப்பட்ட இடத்தில் தனது முழுக்கையொப்பத்தை இடவேண்டும்

7. வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையிலே தமது வியாபார நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்தும் கம்பனிகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.
(1) வதிவற்ற கம்பனிகள் (2) கடல் கடந்த கம்பனிகள்
(3) துணைக் கம்பனிகள் (4) பொதுக் கம்பனிகள்

8. இலங்கையின் கிராமிய மின் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்க:
(1) உலக வங்கி (2) இலங்கை மத்திய வங்கி
(3) ஆசிய அபிவிருத்தி வங்கி (4) பொதுக் கம்பனிகள்

9. பொதுசனத் தொடர்புச் சாதனங்களை மட்டுமே கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) கடிதங்கள், அஞ்சல் அட்டைகள், அறிவிப்புகள், சுற்று நிருபங்கள்
(2) வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள்
(3) தொலைபேசி, தந்தி, தெலெக்ஸ், .ர்பக்ஸ்
(4) தொலைபேசி, தெலெக்ஸ், பத்திரிகைகள், சஞ்சிகைகள்

10. ஒவ்வோராண்டும் விலைகளைக் குறைத்து "விற்பனைகளை" (சேல்) நடத்தும் வியாபாரிகளின் நோக்கம்:
(1) உற்பத்தி முயற்சிகள் தொடர்பில் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பது
(2) நுகர்வோருக்குக் குறைந்த விலைகளில் பண்டங்களை வழங்குவது
(3) பண்டகசாலைகளில் அவசியமில்லாமல் பண்டங்கள் பதுக்கப்படுவதைத் தவிர்ப்பது
(4) வழக்கிழந்த பண்டங்களை இயன்ற அளவில் துரிதமாக விற்பனை செய்வது

11. இலாபமீட்டப்படுகின்ற ஓராண்டில் முந்திய ஆண்டுகளுக்குரிய பங்கிலாபத்தைப் பெறுவதற்கு எவ்வகையான பங்குகளுக்கு உரித்துண்டு.
(1) மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் (2) திரளாத முன்னுரிமைப் பங்குகள்
(3) திரள் முன்னுரிமைப் பங்குகள் (4) சாதாரணப் பங்குகள்

12. இலங்கையில் ஆகக் கூடின எண்ணிக்கையான சங்கங்களைக் கொண்ட கூட்டுறவு வகை எது?
(1) விவசாயப்பொருள் உற்பத்திச் சங்கம்
(2) கடன் வழங்கும் சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கம்
(3) கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(4) கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம்

13. பின்வருவனவற்றுள் "களஞ்சியப்படுத்தற்கிரயம்" என்பதன் கருத்தைத் தருவது:
(1) பண்டசாலையைப் பழுதுபார்த்தல்
(2) பண்டசாலையின் வேலையாளர்களுக்காக ஏற்படும் செலவு
(3) பண்டங்களைப் பண்டகசாலைக்குக் கொண்டு செல்வதற்காக ஏற்படும் செலவுகள்
(4) தொக்குகளைப் பண்டகசாலைகளில் வைத்திருப்பதற்காக ஏற்படும் செலவு

14. தனியார் பஸ் வண்டிகளுக்கு வீதி அனுமதிச்சீட்டு வழங்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருப்பது
(1) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (2) மத்திய அரசாங்கம்
(3) மாகாண சபை (4) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழு

15. விளம்பரப்படுத்தல் நிறுவாகமொன்றினது கடமைப்பங்கு யாது?
(1) பல்வேறுபட்ட நுகர்வோர்களது கருத்துக்களை மொத்த வியாபாரிகளுக்கு அறிவிப்பது
(2) பண்டங்களைப் பொதி செய்வது பற்றி உற்பத்தியாளருக்கு அறிவுறுத்தல் வழங்குவது
(3) பண்டங்களைக் காட்சிக்கு வைத்திருத்தல் பற்றி சில்லறை வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவது
(4) வியாபாரிகளுக்கான விளம்பரப்படுத்தல் திட்டங்களை வகுப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும்

16. இலங்கையில் உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவைகள் நடத்துவது
(1) தொலைத் தொடர்புத் திணைக்களம் (2) அஞ்சல் (தபால்) திணைக்களம்
(3) இலங்கை ரெலிகொம் நிறுவனம் (4) தபால், தொலைத்தொடர்புத் திணைக்களம்

17. தேயிலையை ஏற்றுமதி செய்வதற்குரிய அனுமதிச் சீட்டினை வழங்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருப்பது:
(1) இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்
(2) தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
(3) சம்பந்தப்பட்ட மாகாண சபை (4) விவசாயத் திணைக்களம்

18. ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணத்தை நிருணயிப்பதில் பின்வருவனவற்றில் எத்தொகுதி கருத்திற் கொள்ளப்படுகின்றது.
(1) ஆபத்தின் தன்மை, வயது, உடல்நலம், காலம்
(2) காப்புறுதியின் பெறுமதி, பால், வயது, காலம்
(3) காப்புறுதியின் பெறுமதி, உடல்நலம், பால், ஆபத்தின் தன்மை
(4) வயது, ஆபத்தின் தன்மை, காப்புறுதியின் பெறுமதி, காலம்

19. பொருளாதாரப் பூட்கைகளைத் திட்டமிடுவதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவது:
(1) மத்திய வங்கி (2) இலங்கை வங்கி
(3) தேசிய அபிவிருத்தி வங்கி (4) வரையறுத்த இலங்கை வணிக வங்கி

20. வியாபாரிகளுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டு தாபிக்கப்பட்ட வங்கி:
(1) பிரதேச அபிவிருத்தி வங்கியாகும் (2) வணிக வங்கியாகும்
(3) வர்த்தக வங்கியாகும் (4) மத்திய வங்கியாகும்

21. பின்வருவனவற்றுள் எச்சந்தர்ப்பத்திலே உடைமையாளரின் மூலதனமும் சொத்துக்களும் அதிகரிக்கும்:
(1) உடமையாளர் தனது சொந்தத் தேவைக்காக500 ரூபாய்க் காசை மூலதனத்திலிருந்து எடுக்கும்போது
(2) உடைமையாளர் 1500 ரூபாய் காசுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்யும்போது
(3) உடைமையாளர் தமது வியாபாரத்தில் 6500 ரூபாய் பணத்தை முதலீடு செய்யும்போது
(4) உடைமையாளர் 500 ரூபாய்க்குக் கொள்வனவு செய்த பண்டங்களுக்கான பணத்தைக் காசோலை மூலம் செலுத்தும்போது

22. 73 000 ரூபாய்க்கான சொத்துக்களையும் 26 300 ரூபாய்க்கான பரிப்புகளையும் 46 700 ரூபாய்க்கான மூலதனத்தையும் கொண்டுள்ள கம்பனியொன்றினது ஐந்தொகையின் ஒரு பக்கத்திலுள்ள மொத்தத் தொகை:
(1) 73 000 ரூபாயாகும் (2) 46 700 ரூபாயாகும் (3) 26 300 ரூபாயாகும் (4) 146 000 ரூபாயாகும்

23. 1992 ஆம் ஆண்டிலே ஒரு கம்பனியின் பொதுச் செலவுகள் 5000 ரூபாயாகவும் விற்பனைச் செலவுகள் 2400 ரூபாயாகவும் இருந்தன. 1993 இலே பொதுச் செலவுகள் 10 சதவீதத்தால் குறைந்தபோது விற்பனைச் செலவுகள் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தால் இலாபத்தில் ஏற்பட்ட வித்தியாசம்:
(1) 212 ரூபாய் (2) 288 ரூபாய் (3) 500 ரூபாய் (4) 240 ரூபாய்

24. பணிசையாகச் (தரகுக்கூலி) செலுத்தப்பட்ட 75 ரூபாயானது பணிசைக் கணக்கில் இரண்டுமுறை பதியப்பட்டுள்ளது. இந்த வழுவைத் திருத்துவதற்கான பதிவு பின்வருவனவற்றுள் எது?
(1) பணிசைக் கணக்கில் 75 ரூபாய் வரவு வைத்து தொங்கற் கணக்கில் 75 ரூபாய் செலவு வைப்பது
(2) தொங்கற் கணக்கில் 75 ரூபாய் வரவு வைத்து பணிசை கணக்கில் 75 ரூபாய் செலவ வைப்பது
(3) பணிசைக் கணக்கில் 75 ரூபாய் வரவு வைத்து முற்பணமாகச் செலுத்திய பணிசைக் கணக்கில் 75 ரூபாய் செலவு வைப்பது
(4) தொங்கற் கணக்கில் 150 ரூபாய் செலவு வைத்து பணிசைக் கணக்கில் 150 ரூபாய் செலவு வைப்பது

25. விற்பனை செய்த பண்டங்களின் கிரயத்தைத் தரும் தொகுதியைத் தெரிவு செய்க:
(1) கொள்வனவுகள் + ஆரம்பத்தொக்கு + முடிவுத் தொக்கு
(2) கொள்வனவுகள் + முடிவுத்தொக்கு - ஆரம்பத் தொக்கு
(3) விற்பனைகள் - ஆரம்பத் தொக்கு - முடிவுத் தொக்கு
(4) ஆரம்பத் தொக்கு + கொள்வனவுகள் - முடிவுத் தொக்கு

26. தனி வியாபாரி ஒருவர் வியாபாரத்தின் காசிலிருந்து செலுத்திய வருமான வரி எங்கே காட்டப்படல் வேண்டும்?
(1) வியாபாரக் கணக்கின் வரவுப் பக்கத்தில் (2) இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கத்தில்
(3) மூலதனக் கணக்கின் வரவுப் பக்கத்தில் (4) வருமானவரிக் கணக்கின் வரவுப் புத்தகத்தில்

27. ஐந்தொகையிலே ஒரு பக்கத்தில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் வழுவைத் தெரிவு செய்க:
(1) தவறல் வழுக்கள் (2) கோட்பாட்டு வழுக்கள்
(3) பதிவுசெய்தல் வழுக்கள் (4) ஈடாக்கும் வழுக்கள்

28. வியாபாரத்தின் உடைமையாளர் ஒருவர் தாம் அவ்வியாபாரத்தில் முதலீடு செய்த மூலதனத்தின் அளவிற்கு அதன் சென்மதியாளர் ஆவார். இதற்குக் காரணம்:
(1) வியாபாரம் வேறான ஓர் அலகாகக் கருதப்படுவதாகும்
(2) சென்மதியாளர்களாலும் வியாபாரத்தில் முதலீடு செய்யமுடியும் என்பதாகும்
(3) உடைமையாளர் முதலீடு செய்த பணத்தை அவரால் மீண்டும் எடுக்கமுடியாது என்பதாகும்
(4) வட்டியைப் பெறுவதற்காகவே உடைமையாளர் முதலீடு செய்கின்றார் என்பதாகும்

29. விற்பனைக்காக வைக்கப்பட்ட பண்டங்களிலிருந்து உடைமையாளர் தனது சொந்த தேவைக்காக எடுத்த பண்டங்களின் பெறுமதி பின்வருவனவற்றில் எதனை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட ப்படுகின்றது?
(1) விற்பனை விலை (2) கொள்வனவு விலை
(3) விற்பனை விலையுடன் குறித்தவொரு சதவீதத்தை சேர்ப்பதன் மூலம் பெறப்படும் பெறுமதி
(4) கொள்வனவு விலையுடன் குறித்தவொரு சதவீதத்தை சேர்ப்பதன்மூலம் பெறப்படும் பெறுமதி

30. இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் ஆண்டின் முடிவுத் தொக்கிற்கான சீராக்கற் பதிவாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
(1) வியாபாரக் கணக்கில் வரவு வைத்தலும் இலாப நட்டக் கணக்கில் செலவு வைத்தலும்
(2) வியாபாரக் கணக்கில் வரவு வைத்தலும் தொக்குக் கணக்கிற் செலவு வைத்தலும்
(3) தொக்குக் கணக்கில் வரவு வைத்தலும் வியாபாரக் கணக்கிற் செலவு வைத்தலும்
(4) தொக்குக் கணக்கில் வரவு வைத்தலும் கொள்வனவுக் கணக்கிற் செலவு வைத்தலும்

31. ஒரு கணக்கின் செலவுப் பக்கமானது வரவுப் பக்கத்திலும் அதிகமாக இருந்தால் நிலுவையானது
(1) வரவு நிலுவை எனப்படும் (2) செலவு நிலுவை எனப்படும்
(3) மிகை எனப்படும் (4) பற்றாக்குறை எனப்படும்

32. அறவிடமுடியாக் கடன்களுக்கான ஏற்பாட்டுக் கணக்கின் நிலுவையானது, ஆண்டுக்கான அறவிடமுடியாக் கடன்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய தொகையிலும் அதிகமாகவிருந்தால் அந்த அதிகளவுத் தொகை.
(1) வருமதியாளர்கள் கணக்கிற் செலவு வைக்கப்படுகிறது
(2) அறவிடமுடியாக் கடன்கள் கணக்கில் செலவு வைக்கப்படுகிறது
(3) இலாப நட்டக் கணக்கிற் செலவு வைக்கப்படுகிறது
(4) வியாபாரக் கணக்கிற் செலவு வைக்கப்படுகிறது

33. வங்கி இணக்கக் கூற்று என்பது
(1) காசு ஏட்டிலே காசு நிரல்களுக்கும் வங்கி நிரல்களுக்குமிடையிலான வித்தியாசத்தைக் காட்டும் ஆவணமாகும்.
(2) வருமதியாளர்கள் சென்மதியாளர்கள் கணக்குகளின் நிலுவைகளுக்கும் வங்கிக் கணக்கின் நிலுவைக்குமிடையிலான வித்தியாசத்தை எடுத்துக்காட்டும் ஆவணமாகும்.
(3) காசுக் கணக்கிலும் வங்கி நடப்புக் கணக்கிலும் உள்ள வித்தியாசங்களுக்குக் காரணங்காட்டும் ஆவணமாகும்.
(4) வங்கிக் கூற்றின் நிலுவையையும் காசு ஏட்டிலுள்ள வங்கிக் கணக்கின் நிலுவையையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆவணமாகும்.

34. நேர்க் கோட்டு முறைக்கமைய ஆண்டுக்குரிய தேய்மானம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது?
(1) கிரயம் - எஞ்சிய பெறுமதி / சொத்தின் வாழ்நாள்
(2) கிரயம் - தேய்மானத்தின் சதவீதம் / சொத்தின் வாழ்நாள்
(3) கிரயம் x 100 / சொத்தின் வாழ்நாள்
(4) கிரயம் + தேய்மானம் / சொத்தின் வாழ்நாள்

35. கொள்வனவுக் குறிப்பேட்டிலுள்ள மொத்தத் தொகைகளை பேரேட்டுக்கு மாற்றுவதற்கான இரட்டைப் பதிவு.
(1) வருமதியாளர் கணக்கில் வரவு வைத்தலும் கொள்வனவு கணக்கிற் செலவு வைத்தலும்
(2) கொள்வனவு கணக்கில் வரவு வைத்தலும் வருமதியாளர் கணக்கிற் செலவு வைத்தலும்
(3) கொள்வனவு கணக்கில் வரவு வைத்தலும் சென்மதியாளர் கணக்கிற் செலவு வைத்தலும்
(4) சென்மதியாளர் கணக்கில் வரவு வைத்தலும் கொள்வனவு கணக்கிற் செலவு வைத்தலும்

36. தாபன, நிருவாகச் செலவுகளை மட்டுமே கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) அறவிடமுடியாக் கடன்கள், வெளிச்சுமைக்கூலி, விளம்பரப்படுத்தல் செலவு
(2) சம்பளங்கள், மின் கட்டணங்கள், இறைகள்
(3) எழுதுகருவி வகை, உட்சுமைக் கூலி, அறவிடமுடியாக் கடன்கள்
(4) சம்பளங்கள், வங்கிக் கட்டணங்கள், தளபாடம், உபகரணங்கள் ஆகியனவற்றின் தேய்மானம்

37. பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கில் வரவுப் பக்கத்தில் உள்ள "விசேட கொடைகள்" என்பது ஐந்தொகையில் காட்டப்படுவது
(1) திரள் நிதியமாக (2) நடப்புச் (நடைமுறைச்) சொத்தாக
(3) நடப்புப் பரிப்பாக (4) விசேட நிதியாக

38. மூலதனத்தைச் சரியாக விபரிக்கும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) பரிப்புகளிலிருந்து சொத்துக்களின் பெறுமதியைக் கழித்த பின்னர் கிடைக்கும் மிகை
(2) சொத்துக்களினதும் பரிப்புகளினதும் மொத்தத்தொகை
(3) பரிப்புகளினதும் ஒதுக்கீடுகளினதும் மொத்தத்தொகை
(4) சொத்துக்களின் பெறுமதியிலிருந்து பரிப்புக்களைக் கழித்த பின்னர் கிடைக்கும் மிகை

39. முற்பணமாகப் பெற்ற பணிசைக் கணக்கு எவ்வகையான கணக்குகளில் இடம்பெறும்?
(1) சொத்துக்கள் (2) பரிப்புகள் (3) வருமானம் (4) செலவுகள்

40. ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கினைத் தயாரித்த பின்னர் பெறப்படும் "உற்பத்திக் கிரயம்"
(1) வியாபாரக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்
(2) இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்
(3) ஐந்தொகைக்கு மாற்றப்படல் வேண்டும் (4) தொக்குக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்

01.			X		02.				X	03.		X			04.	X			
05.		X			06.				X	07.	X				08.			X	
09.		X			10.			X		11.			X		12.		X		
13.				X	14.			X		15.				X	16.			X	
17.		X			18.				X	19.	X				20.		X		
21.			X		22.	X				23.	X				24.		X		
25.				X	26.			X		27.			X		28.	X			
29.		X			30			X		31.		X			32.			X	
33.				X	34.	X				35.			X		36.		X		
37.				X	38.				X	39.		X			40.	X			

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப் பரீட்சை 1994 டிசம்பர்

வர்த்தகமும் கணக்கீடலும் – II

1.

ராஜமி எனபவா தனி வியாபாரி ஒருவா ஆவா. 1993 டிசெமபா 31 இல இருந்தவாறு, பினவரும பாடசை நிலுவையானது அவருடைய ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

	ரூபா	ரூபா
மூலதனக் கணக்கு		71 400
விற்பனைகள்		71 450
உட்சுமைக் கூலி	1 470	
உட்திரும்பல்களும் வெளித்திரும்பல்களும்	3 700	2 850
வாடகை	2 000	
கொள்வனவுகள்	33 450	
தொக்கு - 1993 ஜனவரி 1 இல்	8 150	
கழிவீடுகள் - அனுமதிக்கப்பட்டவையும், பெற்றவையும்	1 350	950
சம்பளங்கள்	12 000	
தபால், தொலைபேசிக் கட்டணங்கள்	475	
எழுதுகருவி வகைகள்	160	
அறவிடமுடியாக் கடன்கள்	420	
ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் - 1993-01-01		600
தளபாடங்களும், பொருத்திகளும் - கிரயத்தில்	8 500	
பிரயாணச் செலவுகள்	760	
காப்புறுதி	400	
வங்கிக் கட்டணங்கள்	170	
வருமதியாளரும், சென்மதியாளரும்	9 600	7 300
எடுப்பனவுகள்	4 000	
விளம்பரப்படுத்தல்	2 800	
வான் வாகனம் - திருத்த வேலை	1 950	
வங்கி நிலுவை	2 470	
வான் வாகனம் - கிரயத்தில்	65 000	
நிலையான வைப்புகள் - தேசிய சேமிப்பு வங்கி	10 000	
தேய்மானத்துக்கான ஏற்பாடு - 1993.01.01		
தளபாடங்களும் பொருத்திகளும்		1 275
வான் வாகனங்கள்		13 000
	168 825	168 825

கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு

(அ) 1993 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும்

(ஆ) அதே திகதிக்குரிய ஐந்தொகையையும் நீர் தயாரித்தல் வேண்டும்

(i) 1993 திசெம்பர் 31 இல் இருந்த தொக்கின் பெறுமதி 7 120 ரூபாய்

(ii) 1993 ஆம் ஆண்டின் கடைசி இரண்டு மாதங்களுக்குரிய வாடகையான 400 ரூபாய் செலுத்தப்பட வில்லை.

(iii) ஐயக் கடன்களுக்கான ஏற்பாட்டினை 360 ரூபாயால் அதிகரிப்பது.

(iv) காப்புறுதியில் சேர்க்கப்பட்டுள்ள 200 ரூபாய்ப் பணம் அடுத்துவரும் ஆண்டுக்குரியது

(v) தேய்மானம் பின்வருமாறு அமைதல் வேண்டும்:-
தளபாடங்களும் பொருத்திகளும் - கிரயத்தில் 5%
மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் 10%

(vi) நிலையான வைப்புகளுக்கான வட்டி வீதம் ஓர் ஆண்டுக்கு 13 சதவீதமாகும் 1993 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வட்டி கிடைக்கப்பெறவில்லை.

2.

(அ) பின்வரும் உருப்படிகளுக்குப் பொருத்தமான இரட்டைப் பதிவு வடிவத்தை (வரவு அல்லது செலவு) எழுதுக.

(i) சொத்துக்கள் அதிகரித்தல்.....? சொத்துக்கள் குறைதல்.....?

(ii) பரிப்புகள் அதிகரித்தல்.....? பரிப்புகள் குறைதல்.....?

(iii) செலவுகளும் நட்டங்களும் அதிகரித்தல்.....? செலவுகளும் நட்டங்களும் குறைதல்.....?

(iv) வருமானமும் ஆதாயமும் அதிகரித்தல்.....? வருமானமும் ஆதாயமும் குறைதல்.....?

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பொருத்தமான துணை ஏடுகளில் பதிவு செய்து பேரேட்டுக்கு மாற்றுக:

1994-05-01 - தயாளனிடமிருந்து 5000 ரூபாய் கடனுக்குப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

1994-05-06 - பண்டங்கள் தயாளனுக்கு திருப்பியனுப்பப்பட்டன :- 500 ரூபாய்

1994-05-12 - ஜயதேவனுக்கு 3200 ரூபாய் கடனுக்கு பண்டங்கள் விற்கப்பட்டன

1994-05-15 - ஜயதேவன திருப்பி அனுப்பியவை :- 800 ரூபாய்

1994-05-20 - கம்பனியின் உபயோகத்துக்காக சில்வா அன்ட் கம்பனியிடமிருந்து 1200 ரூபாய் கடனுக்குத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

3.

(அ) மூலதனச் செலவுக்கும் வருமானச் செலவுக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

(ஆ) கணக்கீட்டு நடைமுறைகள் தொடர்பில் வியாபாரக் கம்பனி ஒன்றிற்கும் பொதுநல சங்கமொன்றிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

(இ) 1993 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு "சிசில் பொதுநல சங்கத்தின்" பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

பெறுவனவுகள்	ரூபா	கொடுப்பனவுகள்	ரூபா
1993.01.01 இல் நிலுவை	16 000	எழுதுகருவி வகைகள்	600
இவ்வாண்டில் பெற்ற		செலவு - திரைப்படக் காட்சி	6 800
உறுப்பினர் கட்டணங்கள்	10 200	கொள்வனவு - தளவாடமும் உபகரணமும்	1 400
நன்கொடைகள் -		பிரயாணச் செலவுகள்	1 000
கட்டடங்களுக்காக	6 000	மின்சாரக் கட்டணங்கள்	1 200
திரைப்படக்காட்சி	14 000	உறுப்பினருக்கான உதவிப்பணம்	14 700
		நிலுவை	20 500
	46 200		46 200

(i) இச்சங்கத்திலுள்ள உறுப்பினரின் மொத்தத் தொகை 120 ஆகும். ஆண்டுக்குரிய உறுப்புரிமைக் கட்டணம் 100 ரூபாயாகும்.

(ii) திரைப்படக் காட்சி சம்பந்தமான விளம்பரம் தொடர்பில் 600 ரூபாய் இதுவரையிலும் செலுத்தப்படவில்லை

(iii) 1993 ஜனவரி 1ஆந் திகதியன்று 12 000 ரூபாய் பெறுமதியான தளபாடம் சங்கத்திடமிருந்தது. 1993 திசெம்பர் 31 இல் சங்கத்திடமிருந்த தளபாடங்கள் அனைத்தினதும் பெறுமானம் 400 ரூபாயாக மதிப் பிடப்பட்டிருந்தது.

1993 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இச் சங்கத்தின் வருமான செலவுக் கணக்கைத் தயாரிக்க.

4.

(அ) சில்லறை வியாபாரியொருவர் நடப்புக் கணக்கு ஒன்றை ஆரம்பித்து காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை நடாத்துவதனால் பெறும் மூன்று அனுகூலங்களைத் தருக.

(ஆ) 1994 பெப்பிரவரி மாதத்தில் ஜெயந்தனின் நடப்புக் கணக்கிலிருந்த செலவு நிலுவை அவனது காசேட்டிலிருந்த நிலுவையிலும் குறைவாக இருந்தது. இந்த முரண்பாட்டுக்கு ஏதுவாக இருக்கக் கூடிய மூன்று காரணங்களைத் தருக.

(இ) கட்டுநிதி முறைமையின் பிரகாரம் சில்லறைக் காசு ஏட்டினைப் பேணும் சில்லறைக் காசாளர் ஒருவரது, 1994 மார்ச் மாதத்திற்கான கொடுக்கல், வாங்கல்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

	ரூபா
மார்ச் 01- காசாளரிடமிருந்து பெற்ற பணம்	1 200
03- முத்திரைகள்	60

06- வில்சனுக்குக் கொடுத்தது	150
10- எழுதுகருவி வகை	18
13- தந்திகள்	16
15- முத்திரைகள்	20
18- பிரயாணச் செலவுகள்	50
22- தட்டச்சுப் பொறி - ரிபன்	100
23- உபகரணச் செலவுகள்	25
27- அமரதுங்கவுக்குக் கொடுத்தது	250
30- துப்பரவாக்குதற்கான செலவுகள்	100
31- கட்டுநிதிக்கு மீளளிப்பு செய்யப்பட்டது	

தபால், செலவு, எழுதுகருவி வகைச் செலவுகள், பிரயாணச் செலவுகள், நானாவிதச் செலவுகள் ஆகியனவற்றிற்கான பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட காசு ஏட்டிலே மேற்குறிப்பிட்ட உருப்படிகளைப் பதிவு செய்க.

பகுதி II

(i) தொழிற்பிரிப்பு காரணமாக குறிப்பிட்ட பல பிரதிகூலங்களை உற்பத்தியாளர் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்தகைய பிரதிகூலங்களுள் இரண்டினை எழுதுக.

(ii) சிறு வியாபாரி ஒருவன் நித்தமும் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகளைப் பெயரிடுக.

(iii) சுதந்திர வர்த்தக வலயங்களைத் தாபிப்பதன் மூலம் இலங்கை அரசாங்கம் எய்துவதற்கு உத்தேசித்த இரண்டு குறிக்கோள்களைத் தருக.

(iv) பங்குடமை ஒன்றில் முக்கியமான உள்ளார்ந்த பண்புகள் நான்கு இருக்கின்றன. அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

(v) கடல் கடந்த கம்பனி என்பதனாற் கருதப்படுவது யாது?

(vi) பொதுக் கூட்டுத்தாபனமொன்று தனக்குத் தேவையான நிதியைத் திரட்டுவதற்குக் கையாளும் இரண்டு வழிமுறைகளைக் கூறுக.

(vii) தனியார் தாபனமொன்றிலிருந்து பெறும் சேவைகளிலும் பார்க்க கூட்டுறவுத்தாபனமொன்றிலிருந்து சிறப்பான சேவைகளை நுகர்வோர் எதிர்பார்க்கின்றார்கள். அத்தகைய இரண்டு சேவைகளை குறிப்பிடுக.

(viii) ஒரு நாட்டினது பண வழங்கல் (நாணயத் தாள்களும் நாணயக் குத்திகளும்) அந்நாட்டின் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. அதற்கான இரண்டு காரணங்களைத் தருக.

(ix) வங்கியொன்று காசோலையொன்றிற்குக் கொடுப்பனவு செய்ய மறுக்கும் இரு சந்தர்ப்பங்களைத் தருக.

(x) வெளிநாட்டு நாணயமாற்று அனுமதிச்சீட்டு ஒருவருக்குத் தேவைப்படும் ஒரு சந்தர்ப்பத்தைக் குறிப்பிட்டு, அவர் அதனைப் பெறவேண்டிய நிறுவனத்தின் பெயரைத் தருக.

(xi) இலங்கையிலே தேசிய அபிவிருத்தி வங்கியினைத் தாபிப்பதன் பிரதான நோக்கம் யாது?

(xii) காப்புறுதி ஒப்பந்தமொன்றில் சம்பந்தப்படும் மூன்று கட்சிக்காரரையும் பெயரிடுக.

(xiii) சுப்பர் (சிறப்புச்) சந்தையின் பிரதான அமிசங்கள் இரண்டினை எழுதுக.

(xiv) விற்பனை முறை என்ற வகையில் வாடகைக் கொள்வனவு முறை பிரசித்தி பெற்றுள்ளமைக்கு இரண்டு காரணங்கள் தருக.

(xv) இலங்கையிலே, நுகர்வோரை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள இரு நிறுவனங்களின் பெயர்களைத் தருக.

6.

அனுராதபுரத்தில் வசிக்கும் பண்டார என்ற மொத்த வியாபாரி, தனது வியாபாரத்திற்கு தேவையான பண்டங்களைக் கொழும்பிலே குடியிருக்கும் முகம்மது லெப்பே என்பவரிடமிருந்து கொள்வனவு செய்தற்கு ஒழுங்குகள் செய்துள்ளார்.

(அ) பண்டங்களைப் பற்றி விசாரணை செய்யப்பட்ட தருணத்திலிருந்து பண்டங்களைக் கொள்வனவு செய்து கொடுப்பனவு செய்யும் சமயம் வரையில் இருவரும் பரிமாறிக்கொண்ட ஆவணங்களின் பெயர்களைத் தருக.

(ஆ) மேலே குறிப்பிட்ட ஆவணங்களுள் எவையேனும் இரண்டினைத் தெரிவுசெய்து, அவை சம்மந்தமான அடிப்படையான தகவல்களைக் கொண்டுள்ள மாதிரிப்படிவங்கள் இரண்டினைத் தயாரிக்க.

7.

உமது தமபி, தனி வியாபாரி ஒருவா ஆவா. அவா தேயிலையைப பொதி செயது விறபனை செயயும வியாபாரமொனறை ஆரமபிக்க விரும்புகிறா. தனது எணணம குறிதத உமது தமபி உமது ஆலோசனையைக கேடகினறா. பினவருவன தொடாபில உமது தமபிக்கு நீர் என்ன ஆலோசனை வழங்குவீர்?

(i) அனுமதிச் சீட்டினை வழங்கும் நிறுவனம் (ii) உரிமையும் மூலதனமும்

(iii) முகாமை (iv) பரிப்பு (v) சட்டமுறையான அந்தஸ்து

(vi) இலாபமும், நட்டமும் (vii) கணக்கீட்டு அறிக்கைகள்

8.

(அ) வர்த்தக வங்கியொன்றில் ஆரம்பிக்கப்படக்கூடிய மூன்று வகையான கணக்குகளின் பெயர்களைத் தருக.

(ஆ) காசோலைக்கு வரைவிலக்கணம் தருக.

(இ) கட்டளைக் காசோலையின் மாதிரியொன்றை வரைக. கற்பனையான பெயர்களைப் பயன்படுத்துக.

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப் பரீட்சை 1994 டிசம்பர்

வர்த்தகமும் கணக்கீயலும் – II விடைகள்

1.

ரிஷ்மியின் வியாபாரம்

1993 டிசம்பர் 31இல் முடிந்த ஆண்டிற்கான வியாபார, இலாப நட்டக் க/கு.

தொக்கு 01.01.93		8150	விற்பனைகள்	71450	
கொள்வனவுகள்	33450		(கழி)விற்பனைத் திரும்பல்	(3700)	67750
(கழி) வெளித்திருப்பல்	(2850)				
	30600				
(கூட்டு) உட்சுமைக்கூலி	1470	32070			
		40220			
(கழி) அறுதி தொக்கு 13.12.93		(7120)			
		33100			
மொத்த இலாபம்		34650			
		67750	மொத்த இலாபம் கீ/வ		67750
நிலைய நிர்வாகச் செலவுகள்					34650
வாடகை சென்மதி	2400		பெற்ற கழிவீடு	950	
தளபாட பெ.தேய்வு	425		வங்கி வட்டி	1500	2450
காப்புறுதி - முற்பணம்	200				
சம்பளங்கள்	12000				
தபால் தொலைபேசித்	475				
எழுது கருவி வகைகள்	160				
பிரயாணச் செலவு	760	16420			
விற்பனை வி.செலவு					
விளம்பரப்படுத்தல்	2800				
வான் திருத்தம்	1950				
வான் பெ.தேய்வு	6500	11250			
நிதி. பொருட் செலவு					
அனுமதித்த கழிவீடு	1350				
அறவிட முடியாக் கடன்	420				
ஐயக் கடன்கள்	360				
வங்கி கட்டணங்கள்	170	2300			
தேறிய இலாபம்		7130			
		37100			37100

ரிஷ்மியின் வியாபாரம்

1993 டிசெம்பர் 31ல் இருந்தவாறான ஐந்தொகை

மூலதனம்	71400		**நிலையான சொத்து**	கிரயம்	தே.பெ.தே	தேறியது
+ தேறிய இலாபம்	7130		தளபாடங்கள்	8500	1700	6800
	78530		வான் வாகனம்	65000	19500	45500
- எடுப்பனவுகள்	(4000)	74530		73500	21200	52300
			முதலீடுகள்			
நடப்புப் பரிப்புக்கள்			நிலையான வைப்பு			10000
சென்மதியாளர்கள்	7300					
நிலுவை வாடகை	400	7700	**நடப்புச் சொத்துக்கள**			
			தொக்கு 31.12.93		7120	
			கடன்பட்டோர்	9600		
			ஐயக் கடன் ஏற்பாடு	(960)	8640	
			முடிவுறாத காப்புறுதி		200	
			பெற வேண்டிய வட்டி		1500	
			வங்கி நிலுவை		2470	19930
		82230				82230

2. a.

(i) சொத்துக்கள் அதிகரித்தால் **வரவு** சொத்துக்கள் குறைதல் **செலவு**

(ii) பரிப்புக்கள் அதிகரித்தல் **செலவு** பரிப்புக்கள் குறைதல் **வரவு**

(iii) செலவுகளும் நட்டங்களும் அதிகரித்தல் **வரவு**
செலவுகளும் நட்டங்களும் குறைதல் **செலவு**

(iv) வருமானமும் ஆதாயமும் அதிகரித்தல் **செலவு**
வருமானமும் ஆதாயமும் குறைதல் **வரவு**

ஆ. **கொள்வனவு நாளேடு**

திகதி	விபரம்	பே.ஏ.ப	தொகை
1/5/94	தயாளன்		5000

விற்பனை நாளேடு

திகதி	விபரம்	பே.ஏ.ப	தொகை
12/5/94	ஜயதேவன்		5200

கொள்வனவு திரும்பல் நாளேடு

திகதி	விபரம்	பே.ஏ.ப	தொகை
1/5/94	தயாளன்		500

விற்பனைத் திரும்பல் நாளேடு

திகதி	விபரம்	பே.ஏ.ப	தொகை
1/8/94	ஜயதேவன்		800

பொருத்தின சேரி

திகதி	விபரம்	பே.ஏ.ப	வரவு	செலவு
10/5/94	தளபாடக் க/கு வரவு		1200	
	சில்வா அன்ட் க/கு செலவு			1200
	கம்பனி உபயோகத்திற்கு			
	தளபாடம் அட்.....			

கொள்வனவுக் க/கு

கடன்கொடுத்தோர்	5000		

தளபாடக் க/கு

நிர்வாக அங்கம்	1200		

தயாளன் க/கு

வெ.தி	500	கொள்	5000

ஜயதேவன் க/கு

விற்பனை	3200	உட்திரும்பல்	800

வெளித்திரும்பல் க/கு

	க/கொடு	500	

விற்பனைக் க/கு

	க/பட்	3200	

உட்திரும்பல் க/கு

க/ப	800		

சில்வா அன்ட் கம்பனி க/கு

	தளபாடம்	1200	

3. (அ)

1. நீண்ட காலங்களுக்கு பயன் தருவதற்கான செலவினம் மூலதனச் செலவினமாகும். குறுங்காலங்களுக்கு பயன் தருவதற்கான செலவினம் வருமானச் செலவினமாகும்.

2. மூலதனச் செலவினம் புதிய சொத்தைக் கொண்டு வரும் அல்லது இருக்கும் சொத்தின் பெறுமதியை அதிகரிக்கும். வருமானச் செலவினம் சொத்துக்களை ஆக்க அல்லது அதிகரிக்க உதவுவதில்லை.

3. நிதி ஆண்டின் இறுதியால் மூலதனச் செலவுகள் ஐந்தொகையில் காட்டப்படும். வருமானச் செலவுகள், வியாபார இலாப நட்டக் க/குகளில் காட்டப்படும்.

(ஆ)

1. காசுக் கொடுக்கல் வாங்கல்கள் வியாபாரக் கம்பனி ஒன்றில் வியாபார இலாப நட்டக் கணக்கும் பொது நலசங்க ஒன்றில் வருமானச் செலவுக் கணக்கும் தயாரிக்கப்படும்.

2. இலாப நட்டங்களை அறியும் நோக்கமாக வியாபாரக் கம்பனி ஒன்றில் வியாபார இலாப நட்டக் கணக்கும் பொது நலசங்கம் ஒன்றில் வருமானச் செலவுக் கணக்கும் தயாரிக்கப்படும்.

இ.

சிசில் பொது நல சங்கம்

1993 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானச் செலவுக் கணக்கு:

எழுது கருவிகள்	600		உறுப்பினர் கட்டணங்கள்		12000
திரைப்படக் காட்சிச் செலவு	7400		திரை.காட்சி வருமானம்		14000
தளபாட பெ.தேய்வு	2000		வருமானத்திலும் கூடிய		
பிரயாணச் செலவு	1000		செலவினம்		400
மின்சாரக் கட்டணம்	1200				
உறுப்பினருக்கான உதவிப்பணம்	14700	26900			
		26900			26900

4.

1. உலோக தாள் நாணயங்களில் கொடுக்கல் வாங்கல் செய்வதிலும் பார்க்க காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வது இலகு.

2. தமக்குக் கிடைக்கும் பிறர் காசோலைகளை நேரடியாகவே வங்கியில் வைப்புச் செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.

3. நாம் வருடாந்தம் கொடுக்க வேண்டிய பல்வேறு கொடுப்பனவுகளை நிலையான கட்டளை மூலம் வங்கிக்கு உத்தரவிட்டு வழங்க முடியுமாதல்.

4. பணம் போலன்றி காசோலைகளைப் பாதுகாப்பாக தபால் மூலம் குறைந்த செலவில் அனுப்ப முடியும்.

ஆ.

1. ஜெயந்தன் இட்ட காசோலைக்கு ஏற்ப வங்கி பல்வேறு கொடுப்பனவுகளைச் செய்திருத்தல்.

2. ஜெயந்தன் வைப்புச் செய்வதற்காக அனுப்பிய காசோலைகள் இதுவரை கணக்கின் செலவு வைக்கப்பட்டமை.

3. ஜெயந்தன் பெற்றுக் கொண்ட காசோலைப் புத்தகக் கட்டணம், வங்கியால் நடைமுறைக் க/கில் வரவு வைக்கப்பட்டமை.

சில்லறைக் காசேடு (முற்பண முறை)

பகுப்பாய்வு நிரல்

காசு	பே.ப	திகதி	விபரம்		மொத்தம்	தபால்	எழுது கருவி	பிரயாண செலவு	நானா வித செலவு	பேரேடு
1200		94.03.01	காசு							
		03	முத்திரைகள்		60	60				
		06	வில்சன்		150					150
		10	எழுதுகருவி		18		18			-
		13	தந்திகள்		16	16	-	-	-	-
		15	முத்திரைகள்		20	20	-	-	-	-
		18	பிரயாணச் செலவு		50		-	50	-	-
		22	தட்டச்சு - ரிபன்		100		100	-	-	-
		23	உபகரணச் செலவு		25		-	-	25	
		30	துப்பரவாகச் செலவு		100		-	-	100	
		27	அமரதுங்க		250		-	-	-	250
					789	96	118	50	125	400
789		31	காசு							
		31	மீதி.கீ.கொ.செ		1200					
1989					1989					
1200		94.04.01	மீ.கீ.கொ/வ							

5.

(i) 1. ஒரு தொழிலாளி விலகினால் அவ்விடத்தை நிரப்புவது சிரமம்.
2. தொடர்ந்து இயந்திர சாதனங்கள் பயன்படுவதனால் விரைவில் பழுதடையலாம்.
3. தொழிலின் ஒரு பகுதி இயங்காவிடின் ஏனைய எல்லாப் பகுதிகளும் இயங்க முடியாது.

(ii) 1. மூலதனப் பற்றாக்குறை. 2. தனித்து தீர்மானம் எடுப்பதில் சிரமம்.
3. கடன் வழங்குவதால் ஏற்படும் பிரச்சினைகள்.
4. தனிப்பட்ட இடையூறுகள் வியாபாரத்தைப் பாதித்தல்.
5. பொறுப்பு வரையறுக்கப்படாமையின் பிரதிகூலம்.

(iii) 1. ஏற்றுமதியை அதிகரித்தல். 2. வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்.
3. வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்தல். 4. ஏற்றுமதியைப் பல வகைப்படுத்தல்.

(iv) 1. பொதுவில் செயற்படுதல். 2. இலாபம் பெறும் நோக்கம்.
3. தொழிலொன்றில் ஈடுபடுதல். 4. தனிப்பட்ட பலர் சேர்தல்

(v) இலங்கையில் பதிவு செய்து இலங்கைக்கு வெளியில் தொழிலை மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். இவை இலங்கையில் தொழில் படமுடியாது.

(vi) 1. அரசின் மூலம் 2. பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்குவதன் மூலம்

(vii) 1. சந்தை விலையிலும் பார்க்க, குறைந்த விலைக்கு பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.
2. தட்டுப்பாடான பொருட்களைப் பங்கீட்டு அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்.
3. அளவுகளில் குறைவற்றதாக இருத்தல். 4. தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்.

(viii) 1. பொருளாதாரத்திற்குப் பொருந்தும் வகையில் நாணயத்தை அதாவது தாள்களையும், குற்றிகளையும் வெளியிடுதல் அரசின் கடமையாக இருத்தல்.
2. பணத்தின் பெறுமதியினை சீராக வைத்திருத்தல்.

(ix) 1. வங்கிக் கணக்கில் போதியளவு பணம் இல்லாதிருத்தல்.
2. தொகை இலக்கத்திலும், எழுத்திலும் வேறுபாடு இருத்தல்.
3. பிறக்குறிப்பு பிழையாக இருத்தல். 4. பிறப்பித்தோனால் தடை செய்யப்பட்டிருத்தல்.
5. செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருத்தல்.
6. காசோலையை எழுதியதில் பிழை இருத்தல்.
7. கணக்கு வைத்தவரின் கையொப்பத்தில் வேறுபாடு இருத்தல்.
8. திருத்தங்களுக்கு உரிய கையொப்பமின்மை.

(x) பொருட்களின் ஏற்றுமதியின் போது அல்லது பொருட்களை இறக்குமதி செய்யும்போது அல்லது வெளிநாடு செல்லும் போது தேவைப்படும் இலங்கை மத்திய வங்கி அல்லது நாணயக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் அனுமதி பெற வேண்டும்.

(xi) 1. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதமாக்குதல்.
2. பயனுள்ள முதலீடுகளுக்காக நீண்டகால மூலதன வசதிகளை வழங்குதல்.

(xii) 1. காப்புறுத்துவோர் 2. காப்புறுதியாளர்
3. மூன்றாம் கட்சியினர் (இழப்பீடு பெறுவதற்குத் தகுதி பெறும் வெளியார்)

(xiii) 1. பொருட்கள் தெரியக் கூடிய வகையில் வைத்திருத்தல்.
2. பல்வேறுபட்ட பல்வகைப் பொருட்களை ஒரே இடத்தில் விருப்பம் போல தெரிவு செய்ய முடியுமாதல்.
3. சுயசேவை அடிப்படையில் வியாபார நிறுவனம் செயற்படல்.
4. வாடிக்கையாளருக்கு விஷேட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல்.
5. பொருட்களின் விலை குறிக்கப்பட்டிருத்தல்.

(xiv) 1. பொருளின் பெறுமதியில் மிகக்குறைந்த ஒரு பகுதியைச் செலுத்திய பின் அதனைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு.

2. ஒரே முறையில் பெருந் தொகைப் பணத்தைச் செலுத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாதவர்களுக்கு தவணை முறையில் பணம் செலுத்திப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாதல்.

(xv) 1. சுகாதாரத் திணைக்களம். 2. நியாய வியாபார ஆணைக்குழு.
3. இலங்கைக் கட்டளைப் பணியகம். 4. உள்ளூர் ஆட்சிச் சபைகள்.

6.

அ. (i) விலை மனுக் கோரிக்கை (iv) விலைப்பட்டியல் () கட்டளை
(ii) விற்பனைப்பட்டியல் (v) கட்டளை அட்டவணை () ஒப்படைச் சீட்டு
(iii) பற்றுச்சீட்டு

விலை மனு கோரிக்கை (உள்ளடக்க வேண்டிய விடயங்கள்)

1. கொள்வனவாளரின் முகவரியும் திகதியும் 2. வழங்குவோரின் முகவரி
3. பொருட்களின் வகை 4. அளவு 5. கையொப்பம்

விலைப்பட்டியல் (உள்ளடக்க வேண்டிய விடயம்)

1. வழங்குவோரின் முகவரியும், திகதியும் 2. கொள்வனவாளரின் முகவரி
3. பொருளின் வகை, அலகின் விலை, பெறுமதி
4. பல்வேறுபட்ட நிபந்தனைகள் (கொண்டு செல்லல், கொடுப்பனவு) 5. கையொப்பம்

கட்டளை (உள்ளடக்க வேண்டிய விடயம்)

1. கொள்வனவாளரின் முகவரியும், திகதியும் 2. வழங்குவோரின் முகவரி
3. பொருள் விநியோக முறை 4. பொருள் வகையும் அளவும் 5.கையொப்பம்

விற்பனைப்பட்டியல் (உள்ளடக்கப்பட வேண்டிய விடயம்)

1. வழங்குவோரின் முகவரியும், திகதியும் 2. கொள்வனவாளரின் முகவரி
3. கட்டளை இலக்கம் 4. பொருட்களின் அளவு, விபரம், அலகின் விலை மொத்தப் பெறுமதி
5. கழிவு வழங்கப்படின் அது பற்றிய விபரம் 6. கையொப்பம்

பற்றுச்சீட்டு (உள்ளடக்கப்பட வேண்டிய விடயம்)

1. பணத்தைப் பெற்றுக் கொண்ட நிறுவனத்தின் முகவரியும், திகதியும்.
2. பணத்தின் தொகை இலக்கத்திலும், எழுத்திலும் 3. பற்றுச்சீட்டு இலக்கம்
4. பணத்தைப் பெற்றுக் கொண்டதற்கான சான்றிதழ் 5. முத்திரையின் மேல் கையொப்பம்
6. பணம் செலுத்தியவரின் பெயர், முகவரி 7. திகதி

7.

1. இலங்கைத் தேயிலை சபை
2. உரிமை தம்பிக்கு மட்டும் என்பதுவும், மூலதனத்தை அவரே இடவேண்டும் என்பதுவும்.
3. முகாமை தம்பியினாலேயே செய்யப்பட வேண்டும். 4. பரிப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
5. சட்ட முறையான அந்தஸ்து குறைவாகும். சட்ட ஆளுமை இல்லை. எனினும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் வியாபாரத்தின் பெயர்ப்பதிவு பெயர்ப்பதிவு செய்யப்பட வேண்டும். 1979ம் ஆண்டின் 01 ஆம் இலங்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், நிறுத்தல், அளத்தல், அதிகாரச் சட்டம் போன்றவற்றை அனுசரிக்க வேண்டும்.

() இலாப நட்டங்களை தம்பியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
() கணக்கீட்டு அறிக்கைகள் தயாரிப்பதோ அல்லது வைத்திருப்பதோ கட்டாயமல்ல. எனினும் இவற்றைத் தயாரிப்பது உகந்ததாகும்.

8.

அ. 1. சேமிப்புக் க/கு 2. நிலையான வைப்புக் க/கு 3. நடைமுறைக் க/கு.

ஆ. வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தில் குறிப்பிட்ட தொகைக் கணக்கு அல்லது காவிக்குச் செலுத்துமாறு கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு விடுக்கும் எழுத்திலான நிபந்தனையற்ற கட்டளையாகும்.

இ.

திகதி:.....

வங்கயின பெயா.....கணகக இலககம.....

ளா.....

வழங்குக.....

ரூபா.....

காசோலை இலக்கம்:.....

வரைவோன் ஒப்பம்.....

கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப்பரீட்சை 1993 டிசம்பர்

(புதிய பாடத்திட்டம்)

வர்த்தகமும் கணக்கீயலும் – I

01. ஏற்றுமதி விவசாயத்துடன் தொடர்புடைய தொகுதியைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க.
(1) கறுவா, மிளகு, ஆடைகள்
(2) தேயிலை, இறப்பர், தேங்காய்
(3) இறப்பர், கோப்பி, மிளகாய்
(4) மிளகு, வெங்காயம், காய்கறி வகைகள்

02. இலங்கையின் மொத்தத்தேசிய உற்பத்திக்கு, விவசாயத்தைத் தவிர, மிகக் கூடுதலான பங்களிப்பைச் செய்யும் தொகுதியைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
(1) கைப்பணிப் பொருட்களின் உற்பத்தி
(2) அரசாங்கத்துறைக் கைத்தொழில்கள்
(3) மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும்
(4) சிறிய நடுத்தர அளவான கைத்தொழில்கள்

03. பின்வருவனவற்றிலிருந்து நிருமாணக் கைத்தொழிலுக்கான ஓர் உதாரணத்தைத் தெரிவு செய்க.
(1) காலணிகள் கைத்தொழில்
(2) மீன்பிடிக் கைத்தொழில்
(3) இரத்தினக்கல் கைத்தொழில்
(4) கட்டடம் கட்டும் கைத்தொழில்

04. பண்டமாற்று முறை வழக்கற்றுப் போவதற்கான பிரதான காரணம் யாது?
(1) பண்டங்கள் சேவைகள் ஆகியவற்றினது பெறுமதியை அளவிடுவதற்குப் பொதுவான ஓர் அலகு இல்லாமை.
(2) பண்டங்களை இடத்துக்கிடம் கொண்டு செல்வது கஷ்டமாக இருந்தமை.
(3) போதியளவில் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படாமை.
(4) உற்பத்தியாளர்களைச் சந்திக்க முடியாமலிருந்தமை.

05. தனது வாடிக்கையாளரின் கடன்கள் தொடர்பில் பொறுப்பினை ஏற்கும் முகவர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் மேலதிகப்பணிசை (தரகுக் கூலி) யாது?
(1) விற்பனைத் தரகுக்கூலி
(2) பொறுப்புத் தரகுக்கூலி
(3) முகவர் தரகுக்கூலி
(4) வியாபாரத் தரகுக்கூலி

06. கூட்டுறவு சட்டத்திற்கமைய கூட்டுறவுச் சங்கமொன்று
(1) கூட்டுறவு அமைச்சரின் கட்டளைப்படி கலைக்கப்படலாம்.
(2) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கட்டளையின் பிரகாரம் கலைக்கப்படலாம்.
(3) பொதுக் கூட்டமொன்றில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இணங்க கலைக்கப்படலாம்.
(4) செயற்குழு நிறைவேற்றிய தீர்மானமொன்றிற்கு அமையக் கலைக்கப்படலாம்.

07. பின்வரும் நிறுவனங்களுள் கேள்வி நடைமுறையை மிகக்கூடுதலாகப் பயன்படுத்துபவை
(1) அரசாங்கத் திணைக்களங்கள்
(2) உற்பத்தி செய்யும் நிறுவகங்கள்
(3) வெளிநாட்டு வியாபாரக் கம்பனிகள்
(4) பெரிய அளவிலான வியாபாரக் கம்பனிகள்

08. இலங்கை மோட்டார்க் கார்ச் சங்கம்
(1) தனியார் பஸ் சொந்தக்காரருக்கான நலன்புரிசங்கமாகத் தொழில்படுகின்றது.
(2) மக்கள் மயமாக்கப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளருக்கான நலன்புரிச் சங்கமாகத் தொழிற்படுகின்றது.
(3) தனிப்பட்ட மோட்டார் வாகனச் சொந்தக்காரருக்கான நலன்புரிச் சங்கமாகத் தொழில்படுகின்றது.
(4) தனியர் மோட்டார் வாகனச்சாரதிகளுக்கான நலன்புரி சங்கமாகத் தொழிற்படுகின்றது.

09. பின்வருவனவற்றில் எது தொடர்பில் கடல்வழித் தந்தி முறைமை பயன் படுத்தப்படுகின்றது?
(1) ∴பக்ஸ் செய்திக்காக
(2) தொலைக்காட்சிச் செய்திக்காக
(3) கடுகதி தந்திக்காக
(4) வெளிநாட்டுத் தந்திக்காக

10. வர்த்தக வங்கியின் கடமையொன்று
(1) நாணயம் வழங்குவது
(2) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகளை வழங்குவது
(3) ஏனைய வங்கிகளைக் கட்டுப்படுத்துவது
(4) அரச வங்கியாகத் தொழிற்படுகிறது

11. ஒரு நாட்டினது கடன் முறைமையைக் கட்டுப்படுத்துவது
(1) வர்த்தக வங்கி
(2) சேமிப்பு வங்கி
(3) அபிவிருத்தி வங்கி
(4) மத்திய வங்கி

12. அரச ஈட்டு வங்கியும் இலங்கை விவசாய வங்கியும்
(1) அரச ஈட்டு முதலீட்டு வங்கியாக ஒன்றிணைக்கப்பட்டன.
(2) தேசிய சேமிப்பு வங்கியாக ஒன்றிணைக்கப்பட்டன.
(3) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமாக ஒன்றிணைக்கப்பட்டன.
(4) வரையறுத்த இலங்கை வணிக வங்கியாக ஒன்றிணைக்கப்பட்டன.

13. ஒரு பங்குடமையிலே வரையறுக்கப்படாத பரிப்பு (பொறுப்பு) என்பதனால் கருதப்படுவது யாது?
(1) வரையறையின்றிப் பங்காளிகளை எடுக்கக்கூடிய வல்லமை
(2) வரையறையின்றி மூலதனத்தை ஈடுபடுத்தக்கூடிய வல்லமை
(3) கம்பனியின் கடன்களுக்காகச் சொந்தப் பொறுப்பு ஏற்றல்
(4) கம்பனியிலிருந்து வரையறையின்றிப் பணத்தை எடுக்கக்கூடிய வல்லமை

14. பண்டகசாலையிடலிற் பயன்படுத்தப்படும் பிரதான ஆவணங்கள் இரண்டினைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
(1) தொக்கு அட்டையும் கட்டளையும் (2) தொக்கு அட்டையும் கொள்கல அட்டையும்
(3) கொள்கல அட்டையும் கூறுவிலையும் (4) கட்டளையும் கூறுவிலையும்

15. வாங்குவோனுக்கு மிக அனுகூலமான விற்பனை முறைமை யாது?
(1) தவணைக் கட்டணக் கொடுப்பனவு முறைமை
(2) வாடகைக் கொடுப்பனவு முறைமை
(3) பிற்போடப்பட்ட, கொடுப்பனவு முறைமை
(4) காசு விற்பனை முறைமை

16. இறக்கியேற்றுமிட வியாபாரத்துக்குப் பொருத்தமான உதாரணத்தைத் தெரிவு செய்க.
(1) பர்மாவிடமிருந்து சீனா கொள்வனவு செய்த அரிசி அதேநிலையில் இந்தியாவுக்கு அனுப் பப்படுவது.
(2) இலங்கைக்கு அறிவிக்காமல் சீனா இந்தியாவுக்கு அரிசி விற்பனை செய்வது
(3) இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டிய ஒரு தொக்கு கோதுமைமாவினை அமெரிக்கா இரசி யாவுக்கு விற்பனை செய்வது
(4) அமெரிக்காவிலிருந்து கோதுமை மாவினைக் கொள்வனவு செய்ததற்கு ஜேர்மனி இலங் கைக்கு உதவி செய்வது

17. பண்டத்தின் விற்பனை விலையை முகவருக்கு அறிவிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஆவணம்.
(1) விலையைப் பற்றிய விசாரணை (2) கூறு விலை
(3) கிரயப் பட்டியல் (இன்வொயிஸ்) (4) மாதிரி கிரயப்பட்டியல்

18, 19, 20 வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் பதங்களை பயன்படுத்துக.

அ - மக்கள் கம்பனிகள் இ - அரசாங்கத் திணைக்களங்கள்
ஆ - கூட்டுறவுச் சங்கங்கள் ஈ - வரையறுத்த பொதுக்கம்பனிகள்

18. இலாபத்தைத் தனது அங்கத்தவரிடையே பங்கிடாமல் தனது நிதிக்கு மாற்றக்கூடிய ஒரு நிறுவனம்
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

19. ஓர் அமைச்சின் கடமைகளைச் செய்வதற்குத் தாபிக்கப்பட்ட நிறுவனம்
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

20. பிரதான ஏற்றுமதிப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக தாபிக்கப்பட்ட நிறுவனம்
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ

21. மூன்று நிரல் காசு ஏட்டின் வரவுப் பக்கத்திலும் செலவுப் பக்கத்திலுமுள்ள நிரல்கள் குறிப்பிடுவது
(1) ஆட்குறிக்கும் கணக்கையும் பெயரளவுக் கணக்கையும்
(2) மெய்க் கணக்கையும் ஆட்குறிக்கும் கணக்கையும்
(3) மெய்க்கணக்கையும் பெயரளவுக் கணக்கையும்
(4) மெய், பெயரளவு, ஆட்குறிக்கும் கணக்குகள்

22. பின்வருவனவற்றுள் எத்தொகுதி விற்பனைகளின் பெறுமானத்தைத் தருகின்றது
(1) விற்பனைச் செலவு - மொத்த இலாபம் (2) விற்பனைச் செலவு + மொத்த இலாபம்
(3) மொத்த இலாபம் - விற்பனைச் செலவு (4) விற்பனைச் செலவு + தேறிய இலாபம்

23. பரதனுக்குக் கழிவீடாகக் கொடுக்கப்பட்ட 93 ரூபாய் தொகையானது அவரது கணக்கில் 39ரூபா யாக செலவு வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிழையை எவ்வாறு திருத்தலாம்?
(1) பரதனுக்கு 54 ரூபா செலவு வைப்பதன் மூலம்
(2) பரதனுக்கு 54 ரூபா வரவு வைப்பதன் மூலம்
(3) 54 ரூபாயை கழிவீட்டுக் கணக்கிற்கு செலவு வைப்பதன் மூலம்
(4) 54 ரூபாயை கழிவீட்டுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம்

24. வளங்களிலிருந்து உச்சப்பயன் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு
(1) எல்லாப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் பதிவு செய்யப்படல் வேண்டும்
(2) எல்லாக் கொடுப்பனவுகளும் அட்டறு கொடுப்பனவுகளும் பதிவு செய்யப்படல் வேண்டும்
(3) எல்லாப் பெறுவனவுகளும் அட்டறுப் பெறுவனவுகளும் பதிவு செய்யப்படல் வேண்டும்
(4) எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் தொடர்பான தகவல்கள் பேணப்படல் வேண்டும்

25. வியாபாரத் தேவைகளுக்காக ஒரு சொத்தைக் கடனுக்கு கொள்வனவு செய்வது சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் துணை ஏடு எது?
(1) விற்பனைக் குறிப்பேடு (2) கொள்வனவுக் குறிப்பேடு
(3) குறிப்பேடு (4) காசேடு

26. பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
(i) சொத்துக் கணக்கு - அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவு செய்யப்படுவது
(ii) மூலதனக் கணக்கு - அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவு செய்யப்படுவது
(iii) பரிப்புக் கணக்கு - அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவு செய்யப்படுவது

(1) (i) உம் (ii) உம் சரியானவை (2) (i) உம் (iii) உம் சரியானவை
(3) (ii) உம் (iii) உம் சரியானவை (4) (i) உம் (ii) உம் (iii) உம் சரியானவை
(i) மட்டும் சரியானது (வினா தவறானது)

27. பிழையான சமன்பாட்டைத் தெரிவு செய்க
(1) சொத்து - மூலதனம் = பரிப்புகள் (2) பரிப்புகள் + மூலதனம் = சொத்துகள்
(3) பரிப்புகள் + சொத்துக்கள் = மூலதனம் (4) சொத்துக்கள் - பரிப்புகள் = மூலதனம்

28. காசுக் கழிவீடு அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள்
(1) ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் கொடுப்பனவைச் செலுத்தும்போது
(2) காசு மூலமோ காசோலை மூலமோ கொடுப்பனவு செய்யப்படும்போது
(3) பண்டங்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்படும் போது
(4) காசோலை மூலம் மட்டுமே கொடுப்பனவு செய்யப்படும் போது

29. வங்கி இணக்கக்கூற்று
(1) சென்மதியாளரால் (கடன் கொடுத்தோர்) தயாரிக்கப்பட வேண்டும்
(2) வருமதியாளரால் (கடன்பட்டோர்) தயாரிக்கப்பட வேண்டும்
(3) வங்கியினால் தயாரிக்கப்படல் வேண்டும்
(4) வியாபாரத் தாபனங்களில் தயாரிக்கப்படல் வேண்டும்

30. பொறியொன்றைப் பொருத்துவது சம்பந்தமான செலவுகளை நானாவிதச் செலவுகள் கணக்கில் வரவு வைப்பது
(1) கோட்பாட்டு வழுவாகும் (2) பதிதல் வழுவாகும்
(3) ஈடாக்கும் வழுவாகும் (4) முதற் பதிவேட்டிலுள்ள வழுவாகும்

31. பரீட்சை நிலுவைக்கு வெளியே அறவிடமுடியாக் கடன்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் பொருத்தமான இரட்டைப் பதிவு யாது?
(1) வருமதியாளர் கணக்கில் வரவு வைத்து அறவிடமுடியாக் கடன்கள் கணக்கிற் செலவு வைத்தல்
(2) அறவிட முடியாக் கடன்கள் கணக்கில் வரவு வைத்து வருமதியாளர் கணக்கிற் செலவு வைத்தல்
(3) வருமதியாளர் கணக்கில் வரவு வைத்து காசுக் கணக்கில் செலவு வைத்தல்
(4) அறவிடமுடியாக் கடன்கள் கணக்கில் வரவு வைத்து விற்பனைக் கணக்கில் செலவு வைத்தல்

32. முற்கொடுப்பனவு ஒன்றைப் பதிதல் தொடர்பில் பொருத்தமான இரட்டைப் பதிவினைத் தெரிவு செய்க.
(1) செலவுகள் கணக்கில் வரவு வைத்து முற்கொடுப்பனவு செய்யப்பட்ட செலவுகள் கணக்கிற் செலவு வைத்தல்
(2) முற் கொடுப்பனவு செய்யப்பட்ட செலவுகள் கணக்கில் வரவு வைத்து செலவுகள் கணக்கில் செலவு செய்தல்
(3) செலவுகள் கணக்கில் வரவு வைத்து காசுக் கணக்கில் செலவு வைத்தல்
(4) முற்கொடுப்பனவு செய்யப்பட்ட செலவுகள் கணக்கில் வரவு வைத்து காசுக் கணக்கில் செலவு வைத்தல்

33. ஓர் உடமையாளர் தனது சொந்தத் தேவைக்காக எடுத்துச் சென்ற பண்டங்கள் தொடர்பில் சரியான பதிவு யாது?
(1) கொள்வனவுகள் கணக்கில் வரவு வைத்து எடுப்பனவுக் கணக்கிற் செலவு வைத்தல்
(2) எடுப்பனவுகள் கணக்கில் வரவு வைத்து மூலதனக் கணக்கில் செலவு வைத்தல்
(3) எடுப்பனவு கணக்கில் வரவு வைத்து கொள்வனவுகள் கணக்கிற் செலவு வைத்தல்
(4) கொள்வனவுகள் கணக்கில் வரவு வைத்து மூலதனக் கணக்கிற் செலவு வைத்தல்

34. பின்வருவனவற்றுள் புத்துருவாகும் வேலை என்பதன் சரியான கருத்தைத் தருவது எது?
(1) கைவசமுள்ள பூர்த்தி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி
(2) அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி
(3) உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி
(4) விற்பனைகளிலிருந்து விற்ற பண்டங்களின் கொள்விலையைக் கழித்த பின் உள்ள பெறுமதி

35. ஒரு சொத்தின் ஆண்டுக்கான தேய்மானத்தின் பெறுமதியானது
(1) அதன் வினைத்திறனைப் பேணுவதற்காக ஆண்டு தோறும் ஏற்படும் செலவாகும்
(2) இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட சொத்தின் பெறுமதியாகும்
(3) சொத்தின் பெறுமதியை அதன் பயனுள்ள வாழ்நாளினால் பிரிப்பதனால் கிடைக்கும் பெறுமதியாகும்
(4) சொத்தினது கணிக்கப்பட்ட பெறுமதியாகும்

36. வாடிக்கையாளரினால் திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்கள் தொடர்பில் சரியான இரட்டைப் பதிவு யாது?
(1) கொள்வனவுகள் கணக்கில் வரவு வைப்பதும் உட்டிரும்பல் கணக்கில் செலவு வைப்பதும்
(2) கொள்வனவுகள் கணக்கில் வரவு வைப்பதும் வாடிக்கையாளர் கணக்கில் செலவு வைப்பதும்
(3) உட்டிரும்பல் கணக்கில் வரவு வைப்பதும் கொள்வனவுகள் கணக்கில் செலவு வைப்பதும்
(4) உட்டிரும்பல் கணக்கில் வரவு வைப்பதும் வாடிக்கையாளர் கணக்கில் செலவு வைப்பதும்

37. சில்லறைக் காசாளர் ஒருவருக்கு 200 ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலப்பகுதியில் 148 ரூபாய் செலவு செய்யப்பட்டிருந்தால் அக் காலப்பகுதியின் இறுதியில் மீளளிப்புச் செய்ய வேண்டிய தொகை.
(1) 200 ரூபாய் (2) 54 ரூபாய் (3) 254 ரூபாய் (4) 146 ரூபாய்

38. விளையாட்டுக் கழகத்தினால் மூலதனக் கணக்கிற்குப் பதிலாகப் பேணப்படும் கணக்கு யாது?
(1) உணவக வியாபாரக் கணக்கு (2) பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கு
(3) திரட்டு நிதியக் கணக்கு ஒன்று (4) வருவாய், செலவுக்கணக்கு

39. கொள்வனவுகள் குறிப்பேட்டில் பதிவுகளைச் செய்தற்குப் பயன்படுத்தப்படும் ஆவணம்
(1) செலவுத் தாள் (2) கிரயப்பட்டியல்
(3) உறுதிச் சீட்டு (4) வரவுத் தாள்

40. நடப்புப் பரிப்பு ஒன்று
(1) ஒரு வருடத்தினுள் தீர்க்கப்பட வேண்டும்
(2) இரண்டு வருடங்களினுள் தீர்க்கப்பட வேண்டும்
(3) மூன்று வருடங்களினுள் தீர்க்கப்பட வேண்டும்
(4) நீண்ட காலப்பகுதியினுள் தீர்க்கப்பட வேண்டும்

01. [ ][X][ ][ ]	02. [ ][ ][X][ ]	03. [ ][ ][ ][X]	04. [X][ ][ ][ ]
05. [ ][X][ ][ ]	06. [ ][X][ ][ ]	07. [X][ ][ ][ ]	08. [ ][ ][X][ ]
09. [ ][ ][ ][X]	10. [ ][X][ ][ ]	11. [ ][ ][ ][X]	12. [X][ ][ ][ ]
13. [ ][ ][X][ ]	14. [ ][X][ ][ ]	15. [ ][ ][X][ ]	16. [X][ ][ ][ ]
17. [ ][ ][ ][X]	18. [ ][X][ ][ ]	19. [ ][ ][X][ ]	20. [X][ ][ ][ ]
21. [ ][ ][ ][X]	22. [X][ ][ ][ ]	23. [X][ ][ ][ ]	24. [ ][ ][ ][X]
25. [ ][ ][X][ ]	26. [ ][X][ ][ ]	27. [ ][ ][ ][X]	28. [X][ ][ ][ ]
29. [ ][ ][ ][X]	30 [X][ ][ ][ ]	31. [ ][X][ ][ ]	32. [ ][X][ ][ ]
33. [ ][ ][X][ ]	34. [ ][X][ ][ ]	35. [ ][X][ ][ ]	36. [ ][ ][ ][X]
37. [ ][ ][ ][X]	38. [ ][ ][X][ ]	39. [ ][X][ ][ ]	40. [X][ ][ ][ ]

வர்த்தகமும் கணக்கீடலும் பகுதி II

1992 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று இருந்தவாறு சந்தரா எனும் தனி வியாபாரியின் ஏடுகளிலிருந்து பின்வரும் பாடசை நிலுவை தயாரித்தெடுக்கப்பட்டுள்ளது.

	வரவு ரூபா	செலவு ரூபா
மூலதனக் கணக்கு		80 270
1992 ஜனவரி 1 இல் தொக்கு	14 930	
தளவாடங்களும் பொருத்திகளும்	7 350	
மோட்டர் வான் (கிரயத்தில்)	59 000	
கொள்வனவுகள்	78 200	
உட்சுமைக் கூலி	1 550	

விற்பனைகள்		119 305
வெளித் திரும்பல்கள்		3 750
வியாபார வருமதியாளரும் சென்மதியாளரும்	7 800	5 220
அறவிடமுடியாக் கடன்கள்	380	
உட்டிரும்பல்கள்	2 200	
அறவிடமுடியா ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு 1992 ஜனவரி		180
சம்பளங்கள்	8 160	
கழிவீடுகள் - அனுமதிக்கப்பட்டவையும் பெற்றவையும்	1 415	890
வங்கி நிலுவை	1 835	
காப்புறுதி	1 800	
எடுப்பனவுகள்	2 200	
வங்கிக் கடன்		15 000
மோட்டார் வான் செலவுகள்	660	
வாடகையும் இறைகளும்	640	
பிரயாணச் செலவுகள்	1 500	
விளம்பரப்படுத்தல்	6 400	
பொறிகள்	27 000	
தேய்மானத்துக்கான ஏற்பாடுகள்		
தளபாடங்களும் பொருத்திகளும்		1 250
மோட்டார் வான்		6 300
பொதுச் செலவுகள்	6 845	
மோட்டார் வான் பழுதுபார்த்தல்	2 300	
	232 165	232 165

1992 டிசெமபா 31 இல முடிவடைநத ஆணடுககான வியாபார, இலாப நடடக கணககையும அதே தகதககுாய ஐநதொகையையும் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு தயாரிக்க:

(1) 1992 டிசெம்பர் 31 இல் தொக்கு 18 685 ரூபாய்
(2) தேய்மானத்துக்கான ஏற்பாடு (கிரயத்தில்) மோட்டர் வான் 10% தளவாடங்களும் பொருத்திகளும் 5%
(3) அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டை 210 ரூபாயால் கூட்டுவது
(4) வங்கிக்கடன் மீதான ஆண்டு வட்டியான 1 500 ரூபாய்த் தொகை ஏடுகளிலே பதிவு செய்யப்படவில்லை
(5) அட்டுறுவான வீட்டு வாடகை 260 ரூபாய்
(6) முன்னதாகச் செலுத்தப்பட்ட காப்புறுதி 200 ரூபாய்

02. கபில கம்பனியின் கணக்குப் பதிவாளராக நீர் கடமையாற்றுகிறீர் எனக் கருதுக.

(1) 1991 டிசெம்பர் தயாரிக்கப்பட்ட பரீட்சை நிலுவையின் தொகைகள் ஒத்தவையாக இருந்த போதிலும் பதிவுசெய்தலின் போது சில வழுக்கள் ஏற்பட்டிருந்தன என்று கணக்காளர் எடுத்துக் காட்டியிருந்தார். பதிவு செய்தலின்போது ஏற்பட்டிருக்கக்கூடிய நான்கு வகையான வழுக்களைக் கூறுக?

(11) 1992 டிசம்பர் 31 இல் பரீட்சை நிலுவை தயாரிக்கப்படுகையில், வரவுப் பக்கத்தின் கூட்டுத் தொகையானது செலவுப்பக்கத்தின் கூட்டுத்தொகையிலும் அதிகமாக இருந்தது என்பது கண்டு பிடிக்கப்பட்டது.
பின்வரும் வழுக்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.
1. உட்டிரும்பல் ஏட்டின் கூட்டுத்தொகையான 750ரூபா உட்டிரும்பல் கணக்கில் 570 ரூபாயாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது
2. சுனில் என்பவரிடமிருந்து கிடைத்த 350 ரூபாய்க்கான காசோலை காசு ஏட்டிலே சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது அவருடைய ஆட்குறிக்கும் கணக்கில் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

03. பொறிகளைப பழுதுபாாததறகாகக கொடுககபபடட 500 ரூபாய, சிலலறைக காசு ஏடடிலே, மொதததொகை நிரலில பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பொருத்தமான பகுப்பாய்வு நிரலுக்குக் கொண்டு செல்லப்பட வில்லை.

(அ) மேலே குறிப்பிடப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைக் காட்டுக
(ஆ) தொங்கல் கணக்கைத் தயாரிக்க.

03. கணககுப பதவியலில பாசசயமலலாத எமது நணபா ஒருவா, பெறுவனவுகள கொடுபபனவுகள ஆகியவறறினைப பதிவு செய்வதனால் பெறக் கூடிய பயனை விளங்கப்படுத்துமாறு உம்மைக் கேட்டுள்ளார்.

(i) அதன் பயன்பாட்டை விளக்குவதற்கு நீர் எடுத்துக்கூறும் ஐந்து விடயங்களை எழுதுக.
(ii) தனி வியாபாரி என்ற முறையில் காந்தன் புதிய வியாபாரமொன்றை ஆரம்பித்தான். வியாபாரத்தை உண்மையாகவே ஆரம்பித்தற்கு முன்னர் அவன் மோட்டர் கார் ஒன்றினை 50000 ரூபாய்க்கும், காணியையும், கட்டடங்களையும் 15000 ரூபாய்க்கும், பண்டங்கள் பலவற்றை 125000 ரூபாய்க்கும் கொள்வனவு செய்தான். தான் வாங்கிய பண்டங்களுக்குரிய முழுத் தொகையையும் கொடுக்காததால் அவன் 40000 ரூபாய் செலுத்தி கணக்கைத் தீர்க்க வேண்டியிருந்தது. காந்தன் தன்னுடைய நண்பனான யாதவனிடமிருந்து வியாபார நடவடிக்கைகளுக்காக 30000 ரூ"பாயைக் கடனாகவும் பெற்றிருந்தான். இக்கொடுக்கல் வாங்கல் யாவற்றிற்கும் பின்னர், வியாபார நடவடிக்கைகளுக்காக அவன் கைவசம் 10000 ரூபாயும் வங்கியில் 60000 ரூபாயும் இருந்தது.

இவ்விடயங்கள் யாவற்றையும் கருத்திற்கொண்டு காந்தனின் மூலதனக் தொகையைக் கணிக்க.

04. ஆனந்தனின் காசு ஏட்டின் வங்கி நிரல்களும் 1992 யூன் மாதத்திற்கான வங்கிக் கூற்றும் பின்வருமாறு:

காசு ஏடு - வங்கி நிரல்கள்

வரவு			செலவு		
திகதி	விவரங்கள்	ரூபா	திகதி	விவரங்கள்	ரூபா
1993 ஜூன் 01	நிலுவை மு/கொ	23790	1993 ஜூன் 5	மாலினி	
07	சில்வா			(காசோலை இல.200)	1500
	(காசோலை இல. 8)	1580	12	விஜேரத்ன	
				(காசோலை இல.201)	4330
16	பீரிஸ்				
	(காசோலை இல. 215)	930	16	தர்மசிறி	
				(காசோலை இல. 202)	880
28	சிரிசேன				
	(காசோலை இல. 95)	3070	20	ஜெயக்கொடி கம்பனி	
				(காசோலை இல. 203)	570
30	பத்மா				
	(காசோலை இல. 65)	6240	30	நிலுவை கீ.கொ	28330
		35610			35610
ஜூலை 1	நிலுவை மு.கொ	28330			

வங்கிக் கூற்று

திகதி			வரவு ரூபா	செலவு ரூபா	நிலுவை ரூபா
1993 ஜூன்	01	நிலுவை மு/கொ			23790
	07	காசோலை இலக்கம் 08 (சில்வா)		1580	25370
	08	காசோலை இலக்கம் 200 (மாலினி)	1500		23870
	18	காசோலை இலக்கம் 215 (பீரிஸ்)		930	24800
	19	காசோலை இலக்கம் 201 (விஜேரத்ன)	4330		20470
	28	காசோலை இலக்கம் 95 (சிரிசேன)		3070	23540
	29	நிலையான கட்டளை (காப்புறுதி)	440		23100
	30	காசோலை (ஜயசிங்க)		900	24000
	30	வங்கிக் கட்டணங்கள்	700		23300

(i) 1993 ஜூன் 30ஆந் திகதியன்று இருந்தவாறு ஆனந்தனின் காசு ஏட்டினைத் திருத்துக.

(ii) 1993 ஜூன் 30ஆந் திகதியன்று இருந்தவாறான வங்கி இணக்கக் கூற்றினைத் தயாரிக்க.

பகுதி II

05. (i) "பண்டமாற்றுமுறையினால் நேரமும் மனித முயற்சியும் வீணாகின்றது" இக் கூற்றினை ஆதரவாக நிறுவுவதற்கு இரண்டு காரணங்கள் தருக?

(ii) கேள்வி வைப்புகள் எனும் பதத்தினை விளங்கப்படுத்தும் வகையில் ஒரு வசனம் எழுதுக?

(iii) மொத்தத்தேசிய உற்பத்தியில் அடங்கும் இரண்டு உருப்படிகளைத் தருக?

(iv) உற்பத்தியினை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவற்றின் பெயர்களைத் தருக?

(v) பேரளவு உற்பத்தியினைச் சிற்றளவு உற்பத்தியிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் நான்கு அம்சங்களைத் தருக?

(vi) தொழிற் பிரிவினால் ஏற்படும் இரண்டு பிரதிகூலங்களை எழுதுக?

(vii) மொத்த விற்பனை நிலையமொன்றை இரு பிரதான திணைக்களங்களாகப் பிரிக்கலாம். அத் திணைக்களங்களின் பெயர்களைத் தருக?

(viii) காசுக் கட்டளைகளுக்குப் பதிலாக வியாபாரி ஒருவர் காசோலைகளை விரும்புவதற்கான காரணம் யாது?

(ix) விளம்பரப்படுத்துவதன் மூலம் ஓர் உற்பத்தியாளர் பெறும் இரண்டு அனுகூலங்களைத் தருக.

(x) முக்கியமான மூன்று வகையான காப்புறுதிகளைத் தருக?

(xi) வரையறுத்த தனியார் கம்பனியொன்றைப் பதிவு செய்தற்காகக் கம்பனிகள் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இரண்டு ஆவனங்களை எழுதுக?

(xii) தனது வியாபாரம் விரிவடையும் போது தனி வியாபாரி ஒருவர் எதிர்நோக்க வேண்டியிருக்கும் இரண்டு பிரச்சினைகளை எழுதுக?

(xiii) பங்குடமை என்பதனை வரையறுத்துரைக்க?

(xiv) வரையறுத்த பொதுக் கம்பனியொன்றினால் வழங்கப்படும் இருவகையான பங்குகளைக் குறிப்பிடுக?

(xv) வர்த்தக வங்கியொன்றினால் ஒரு வியாபாரிக்கு வழங்கப்படும் முக்கியமான இரண்டு சேவைகளின் பெயர்களைத் தருக?

06. சந்தரன எனும சிலரை வியாபாரி ஒருவர் நடைமுறைக் கணக்கு ஒன்றினை அண்மையில் ஆரம்பித்திருந்தார். அவர் தனது வீட்டு வாடகையைக் கோடிட்ட காசோலையொன்றின் மூலம் செலுத்த வேண்டியுள்ளது. அவர் எழுப்பும் பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகள் தருக?

(i) கோடிட்ட காசோலை என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) இரண்டு வகையான கோடிடல்களின் பெயர்களைத் தருக?

(iii) கீழே ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூற்றும் சரியா? பிழையா? என்று கூறுக. கூற்றினைக் குறித்து நிற்கும் எழுத்தை எழுதி அதற்கு எதிரில் சரி அல்லது பிழை என்று எழுதுக?

(iv) கோடிட்ட காசோலை ஒன்றிற்குக் காசு பெறுவதற்கான இரண்டு வழிமுறைகளை எழுதுக.

07. (i) வரையறுத்த கம்பனி ஒன்றினை ஆக்குவோர்களின் தொழிற்பாடுகள் யாவை?

(ii) நீர் ஒரு கம்பனியின் ஆக்குவோனாக இருந்தால் அதற்கான பெயரை எவ்வாறு தெரிவு செய்வீர்?

(iii) அமைப்புப் புறவிதிகளில் இடம் பெறவேண்டிய ஐந்து வாசகங்கள் தருக?

(iv) வரையறுத்த கம்பனியொன்றிற்கு மூலதனம் திரட்டுவதற்காக பங்குகளை வழங்குதல் தவிர்ந்த, வேறு இரண்டு முறைகளை எழுதுக?

08. (i) தீயினால் ஏற்படும் சேதங்களைவிட, தீக் காப்புறுதியில் அடங்கும் வேறு சேதங்களும் உண்டு.அத்தகைய மூன்று சேதங்களின் பெயர்களைத் தருக?

(ii) மோட்டார் வாகனங்களுக்கான காப்புறுதிகளையும் கன்னமிடலுக்கு எதிரான காப்புறுதிகளையும் எவ்வகையான காப்புறுதியின் கீழ் பெறலாம்?

சந்திரா வியாபார நிறுவனம் 1992 டிசெம்பர் 31ல் முடிவுற்ற வருடத்திற்கான வியாபார, இலாப நட்டக்கணக்கு

தொக்கு (01-01-92)		14930	விற்பனைகள்		119305
கொள்வனவுகள்	78200		கழி: உட்டிரும்பல்கள்		(2200)
கழி: வெளித்திரும்பலலகள்	(3750)				117105
	74450				
கூட்டு: உட்சுமைக்கூலி	1550	76000			
விற்கவிருந்த சரக்கின் கொள்விலை		90930			
கழி: எஞ்சிய தொக்கு (31-12-92)		(18685)			
விற்பனைக் கிரயம்		72245			
மொத்த இலாபம் கீ/கொ/செ		44860			
		117105			117105
நிலைய நிர்வாகச் செலவுகள்			மொத்த இலாபம்		
காப்புறுதி 1800			கீ/கொ/வ.		44860
முற்பண காப்புறுதி (200)	1600				
வாடகையும் இறைகளும் 640			பெற்ற கழிவீடு		890
அட்டுறு வாடகை 260	900				
பொதுச் செலவு	6845				
சம்பளங்கள்	8160				
பெறுமானத்தேய்வு- தள, பொருத்தி	368	17873			
விற்பனை, விநியோகச் செலவுகள்					
மோட்டர் வான் செலவு	660				
பிரயாணச் செலவுகள்	1500				
விளம்பரப்படுத்தல்	6400				
மோட்டார் வான் தேய்மானம்	5900				
மோட்டார் வான் பழுதுபார்த்தல்	2300				
அறவிட முடியாக் கடன்	380				
ஐயக்கடன்	210				
கொடுத்த கழிவீடு	1415	18765			
நிதிச் செலவுகள்					
வங்கிக்கடன் வட்டி	1500	1500			
ஏனைய செலவு					
தேறிய இலாபம் (மூலதனக்கணக்கு மாற்றப்பட்டது)		7612			
		45750			45750

சந்திராவின் வியாபார நிலையம் 1992 டிசெம்பர் 31ல் இருந்தவாறான ஐந்தொகை

			நிலையான சொத்துக்கள்	கொ.வி	தி.பெ.தே	மீதி
மூலதனம்	80270					
கூட்டு தேறிய இலாபம்	7612		பொறிகள்	27000	-	27000
	87882		மோட்டார்வான்	59000	12200	46800
கழி: எடுப்பனவுகள்	(2200)	85682	தளபாடங்களும்			
			பொருத்திகளும்	7350	1618	5732
நீண்டகாலக்கடன்				93350	13818	79532
வங்கிக்கடன்	15000	15000	**நடைமுறைச்சொத்துக்கள**			
நடைமுறைப்பொறுப்புக்கள்			தொக்கு (31.12.92)		18685	
சென்மதியாளர்	5220		வருமதியாளர்	7800		
அட்டுறு வங்கிவட்டி	1500		கழி:ஐயக்கடன் ஏற்பாடு	390	7410	
அட்டுறு வாடகை	260	6980	முற்செலுத்திய காப்புறுதி		200	
			வங்கி மீதி		1835	28130
		107662				107662

02. 1. கைவிடப்படும் வழுக்கள் (முற்றாகப் பதியப்படாத வழுக்கள்)
2. கூட்டிக் குறைத்து செய்யும் வழுக்கள்
3. ஈடு செய்யும் வழுக்கள்
4. இரட்டிப்பு வழுக்கள்
5. கோட்பாட்டு வழுக்கள்

குறிப்பேடு

	விபரம்	வரவு	செலவு
1.	உட்டிரும்பல் கணக்கு தொங்கல் கணக்கு (உட்டிரும்பல் கணக்கில் ரூ.180குறைத்துப் பதிந்திருந்தவழு திருத்தப்பட்டது)	180	180
2.	தொங்கல் கணக்கு சுனில் கணக்கு (சுனிலிடமிருந்து ரூ. 350 காசோலை, அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்ட வழு திருத்தப்பட்டது)	700	700
3.	பொறி பழுது பார்த்தற் செலவுக்கணக்கு தொங்கற் கணக்கு (சில்லறைக்காசேட்டில் இடம்பெற்ற பொறி திருத்தச்செலவு, உரிய நிரவுக்குக் கொண்டு செல்லப்படாத வழு திருத்தப்பட்டது)	500	500

தொங்கல் கணக்கு

சுனில்	700	மீதி கீ. கொ. வ.	20
		உட்டிரும்பல்	180
		பொறி திருத்தம்	500
	700		700

03. **பெறுவனவுகள், கொடுப்பனவுகள் ஆகியவற்றினைப் பதிவு செய்வதால் பெறக் கூடிய பயன்கள்:**

1. மாத இறுதியில் உள்ள காசு மீதியை அறிந்து கொள்ளலாம்.
2. குறித்த காலத்தில் மேற்கொண்ட பெறுவனவுகளையும், கொடுப்பனவுகளையும் இனம் கண்டு கொண்டு அவை தொடர்பாக உள்ள தொகைகளையும் அறியலாம்.
3. பெறுவனவுகளையும், கொடுப்பனவுகளையும் அறிந்து கொள்வதால், நிறுவனத்தின் நன்மை கருதி எதிர்காலத்தில் திட்டமிட்ட வகையில் செயற்படலாம்.
4. உச்ச லாபம் கருதி செயற்படலாம்.
5. பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மீது கட்டுப்பாடு விதிக்கலாம்.
6. பெறவேண்டிய கடன்களையும், செலுத்த வேண்டிய கடன்களையும் அறிந்து அதற்கேற்ற வகையில் செயற்படலாம்.
7. வருமானவரி தேவைகளுக்கு பயன்படுத்தலாம்.

(ii)

விபரம்	வரவு	செலவு
சொத்துக்கள்		
மோட்டார் கார்	50,000	
காணி, கட்டடங்கள்	150,000	
பண்டங்கள் (சரக்கு)	125,000	
கைவசமுள்ள காசு	10,000	
வங்கி மீதி	60,000	
பரிப்புக்கள்		
வியாபாரக்கடன் கொடுத்தோர்		40,000
யாதவனின் கடன்		30,000
மூலதனம்		325,000
	395,000	395,000

காந்தனின் மூலதனம் 325,000/= ஆகும்.

ஆனந்தனின் செம்மையாக்கிய காசேடு (வங்கி நிரல்)

04.

நிலுவை கீ.கொ.வ	28330	(நிலையியற் கட்டளை)	
ஐயசிங்கன் காசோலை	900	வங்கி செலுத்திய	
		காப்புறுதி	440
		வங்கிக் கட்டணங்கள்	700
		நிலுவை கீ.கொ.செ.	28090
	29230		29230

காசேட்டின்படி வங்கி மீதி		28090
கூட்டு: மாற்றப்படாத காசோலைகள்		
தர்மசிறி	880	
ஜெயக்கொடி கம்பனி	570	1450
கழி: வசூலிக்கப்படாத காசோலைகள்		29540
பத்மா		6240
வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி		23300

05.

(i) 1. ஒருவர் தமக்குத் தேவையான ஒரு பண்டத்தை பெறுவதற்காக தன்னிடமுள்ள பண்டத்தை வாங்கக்கூடியவரும், அதே சமயம் தனக்கு தேவையான பொருளை வைத்திருக்கக் கூடியவருமான ஒருவரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நேரம் வீணாகிறது.

2. இவ்வாறு தேடி அலைந்த போதும் அந்நபரை கண்டுபிடிக்க முடியாது விட்டால் அவரது முயற்சி வீணாகிறது. மேலும் அவ்வாறான ஒருவரை கண்டுபிடித்த பின்பும் பொருளை பரிமாறுவதில் விலை, அளவு, பங்கிடுதல் தொடர்பான சிக்கல்கள் ஏற்பட்டு ஒரு பொதுத் தீர்மானத்திற்கு இருவரும் வர முடியாது இருப்பின் அவனது முயற்சி வீணாகிறது.

(ii) கேள்வி வைப்புக்கள் என்பது பணம் பெறுவதில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நினைத்த மாத்திரத்தே பணம் பெறக்கூடிய அல்லது காசோலை மூலம் பணம் பெறக்கூடிய வட்டி வழங்கப்படாத ஒரு வங்கி நடைமுறை கணக்குகளாகும்.

(iii) 1. குறிப்பிட்ட ஒரு வருடகாலத்தின் ஒரு நாட்டின், அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பொருட்களினதும், சேவைகளினதும் பெறுமதியை வெளிப்படுத்தும் மொத்த உள்நாட்டு உற்பத்தி.

2. குறித்த நாட்டிற்கு சொந்தமானதும் வெளிநாடுகளில் உழைக்கப்படுவதுமான வருமானத்திற்கும் மாறாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெளிநாட்டவரது வருமானத்திற்கும் இடையிலான தேறிய பெறுமதி.

(iv) 1. பொருள் / பண்ட உற்பத்தி. 2. சேவை உற்பத்தி

(v) 1. முதலீட்டின் அளவு 2. ஊழியர் தொகை
3. தொழில் அமைப்பு வகை 4. உற்பத்தி அளவு

(vi) 1. ஒருவரே தொடர்ந்து ஒரு வேலையைச் செய்யும் போது ஏற்படுகின்ற உள ரீதியான சலிப்பினால் நாளடைவில் உற்பத்தியின் அளவு குறைவடையும்.

2. ஒரு கட்ட வேலையில் ஏற்படுகின்ற தடை, தாமதம் மொத்த உற்பத்தியையுமே பாதித்து விடும்.

(vii) கொள்வனவு, விற்பனை தொடர்பான வியாபாரத் திணைக்களம்
போக்குவரத்து பண்டகசாலை, விளம்பரம், கணக்கு வைத்தலும் நிர்வகித்தலும் சம்பந்தமான வியாபார சேவைத்திணைக்களம்.

(viiii)1.காசுக்கட்டளையில் ஆகக்கூடியது 1000 ரூபாவே அனுப்பலாம் என்றதால் எவ்வளவு கூடுதலான பெறுமதிக்கும் காசோலையை பயன்படுத்தமுடியும்.

2. காசோலைகளை இலகுவில் பிறருக்கு கைமாற்றலாம்.

3. காசுக்கட்டளைகளை மாற்றுவதற்கு அஞ்சல் நிறுவனங்களில் தாமதம் ஏற்படும்.

4. காசோலையை உரியவரின் வங்கிக் கணக்கிலும் சேர்ப்பித்து விடலாம் இவ்வாறான காரணங்களால் ஒருவர் காசோலையை விரும்புகிறார்.

(ix) 1. அவனது உற்பத்திப் பொருள் நுகர்வோர் மத்தியில் அறிமுகமாவதால், அவனது விற்பனையை குறைந்து போகாமல் பாதுகாக்கிறான்.

2. ஏற்கனவே உள்ள வாடிக்கையாளரை தொடர்ந்து வைத்திருப்பதுடன், மேலும் புதிய வாடிக்கையாளரை தேடிக் கொள்கிறான்.

(x) 1. தீயபாயக் காப்புறுதி 2. விபத்துக் காப்புறுதி 3. ஆயுள் காப்புறுதி

(xi) 1. அமைப்பு அகவிதி 2. அமைப்புப் புறவிதி

(xii) வியாபாரம் விரிவடையும்போது.
அ) நிறுவனத்தை முகாமை செய்வதில் அவருக்குள்ள திறமை போதாததால் நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகள் எழும்.
ஆ) மேலதிகமான மூலதனத்தை வியாபாரத்துள் இடுவதற்கு அவருக்கு நிதிப்பலம் இல்லை.

(xiii) ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இலாபம் பெறும் நோக்குடன் இணைந்து செயல்படும் ஓர் வியாபார அமைப்பு முறையாகும்.

(xiv) 1. சாதாரண பங்குகள் 2) முன்னுரிமைப் பங்குகள்

(xv) அ) வங்கி மேலதிகப்பற்று கடன் வசதிகளை வழங்குகிறது.
ஆ) காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு வசதி செய்து கொடுத்தல்.
இ) வியாபாரி சார்பான கொடுப்பனவுகளையும் பெறுவனவுகளையும் இது மேற்கொள்கிறது.

06.

(i) காசோலையின் முன்புறத்தில் இரு சமாந்தரக் கோடுகளை இடுதலே கோடிட்ட காசோலைக்கான அடையாளமாகும். இதனை உடனேயே பணமாக மாற்ற முடியாது. அவரது வங்கிக் கணக்கில் இட்டு வசூலிக்கப்பட்ட பின்பே பணமாக மாற்ற முடியும்.

(ii) 1. பொதுக்குறுக்குக் கோடிடல் 2. சிறப்புக் குறுக்குக் கோடிடல்

(iii) அ) கோடிட்ட காசோலையை பெற்றவர் தனது சொந்த வங்கிக் கணக்கில் அதனை இட்டு, வசூலிக்கப் பட்ட பின்பு பணத்தை பெறலாம்.
ஆ) வங்கிக் கணக்கு ஒன்று இல்லாதவர், வங்கிக் கணக்கை பேணும் பிறிதொருவருக்கு காசோலையை சாட்டுதல் செய்து அவரிடமிருந்து பணம் பெறலாம்.
இ) பிறப்பிப்தோர் மூலம் கோடுகளை நீக்கச் செய்து பின்பு வங்கியில் சமர்ப்பித்து பணம் பெறலாம்.

07.

(i) அ) முதலில் கம்பனியின் வகை, நோக்கம், தொழிலை நிறுவும் இடம், மூலதனம் போன்றவற்றைத் தீர்மானித்தல்.
ஆ) பெயரொன்றைத் தெரிவு செய்து அதனைப் பதிவு செய்தல்.
இ) தேவைப்படும் ஆவணங்களைத் தயாரித்து பதிவு செய்தல்.

(ii) 1. ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு கம்பனியின் பெயர்களை தவிர்த்து வேறு பெயர்களை தெரிவுசெய்வேன்.
2. ஜனாதிபதி, மாநகர, கூட்டுறவு, தேசிய, லங்கா போன்ற சொற்கள் எனது கம்பனிப் பெயருடன் சேர்த்துக் கொள்ளாதவாறு கவனிப்பேன்.

(iii) 1. கம்பனியின் பெயர்.
2. கம்பனியின் தலமைச்செயலகம் அமைந்துள்ள இடம், மாவட்டம்
3. கம்பனியின் வேறுபட்ட நோக்கங்கள்
4. பங்கு மூலதனம் பற்றிய விபரம்
5. பொறுப்பு வரையறுக்கப்பட்ட முறை
6. ஆக்குவோர் ஒற்றுமையுடன் செயல்படுவதாகக் குறிப்பிடும் கூற்று

(iv) 1. தனிச்சம்களை (தொகுதிக்கடன்) வெளியிடல்
2. வங்கியிலிருந்து நீண்டகாலக் கடன்களைப் பெறுதல்
3. ஈட்டுக்கடன் பெறல்

08.

(i) 1. கலவரங்களால் ஏற்படும் சேதம் (இனக்கலவரம், உள்நாட்டுக்கலவரம்)
2. புயல் காற்றுக்களால் ஏற்படும் சேதம்
3. தீங்கு விளைவிப்போரால் ஏற்படும் சேதம்
4. வெள்ளப் பெருக்கினால் ஏறுபடும் சேதம்

(ii) 1. விபத்துக் காப்புறுதி

(iii) (அ) பிழை (ஆ) சரி (இ) சரி (ஈ) பிழை (உ) பிழை

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை, 1992 டிசெம்பர்

(புதிய பாடத்திட்டம்)

வர்த்தகமும் கணக்கீயலும் – I

01. இலங்கையின் கைத்தொழிற் துறையில் சமீபகாலத்திற் காணப்படும் புதிய தோற்றப்பாடு எது?
(1) ஏற்றுமதி இறக்குமதி முறைமை (2) சுதந்திர வர்த்தக வலயம்
(3) கூட்டுறவு முறைமை (4) வர்த்தக வங்கித்தொழில் முறைமை

02. பின்வருவனவற்றுள் மூலதனப் பண்டங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
(1) மூலப்பொருள்கள், வலு, சாதனங்கள்
(2) கட்டடங்கள், நூல்கள், புடவைகள்
(3) பொறித்தொகுதி, கட்டடங்கள், மோட்டார் வாகனங்கள்
(4) பொறித்தொகுதி, மூலப்பொருள்கள், வலு

03. தொழிற் பிரிப்பின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளில் ஒன்று
(1) உற்பத்தி அதிகரிப்பு
(2) உற்பத்தியில் தொடர்ச்சி
(3) உழைப்பிற்கு உயர்ந்த கூலிகளின் கொடுப்பனவு
(4) தரமான பண்டங்களைப் பேணிவருதல்

04. சில்லறை விற்பனையாளர்களால் தமது நிரந்தர வாடிக்கையாளர்களுக்கு ஆற்றப்படத்தக்க சேவையைக் காட்டும் கூற்றினைத் தெரிவு செய்க?
(1) இன்றியமையாப் பண்டங்களை வழங்குதல்
(2) காசுக்குப் பண்டங்களை விற்றல்
(3) கடனுக்குப் பண்டங்களை வழங்குதல்
(4) ஆடம்பர வாழ்வுக்கான பண்டங்களை வழங்குதல்

05. பின்வருவனவற்றுள் எது விரும்பப்படும் ஓரிடத்திற்குப் பண்டங்களின் பாரிய ஒப்படையொன்றைத் துரிதமாக அனுப்புவதற்குகந்த பிரசித்தி வாய்ந்த முறையாகும்.
(1) வீதிகள் (2) புகையிரதப்பாதைகள் (3) ஆகாயம் (4) நீர்வழிகள்

06. ஒரு வியாபாரத்தாபனம் தனது ஊழியர்களுக்கு அவர்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படும் விதிகள், பிரமாணங்கள் பற்றிய அறிவினை அளித்தற்குப் பின்வரும் முறைகளுள் எதனைப் பிரயோகித்தல் வேண்டும்
(1) செய்தித் தாள்கள் (2) சுற்றறிக்கைகள்
(3) இன்டர்கொம் (4) தந்திகள்

07. பின்வருவனவற்றுள் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குப் பொருத்தமாக அமையும் கூற்றினைத் தெரிவு செய்க.
(1) அது ஒரு தனியார் காப்புறுதித் தாபனமாகும்
(2) அது பொதுவான காப்புறுதிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட முதற் கூட்டுத்தாபனமாகும்.
(3) அது பொதுவான காப்புறுதிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட இரண்டாவது கூட்டுத்தாபனமாகும்.
(4) அது உறுதியீட்டுப் பூட்கைகளை வழங்குவதற்கு மட்டும் தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனமாகும்.

08. ஒரு நாடு பண்டங்களை இறக்குமதி செய்து, அவற்றை அவற்றில் எம்மாற்றங்களையும் செய்யாது ஏற்றுமதி செய்கிறது. அத்தகைய வியாபாரத்தை குறித்து நிற்கும் தொடர் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) ஏற்றுமதி வியாபாரம் (2) வெளிநாட்டு வியாபாரம்
(3) சர்வதேச வியாபாரம் (4) இறக்கியேற்றுமிட வியாபாரம்

09. பின்வருவனவற்றுள் கைத்தொழில் ஏற்றுமதிப் பொருள்களை மட்டும் உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க?
(1) வளமாக்கி, அரிசி, கோதுமை
(2) தேயிலை, தெங்குப் பொருள்கள், இறப்பர்
(3) இரத்தினக்கற்கள், முகமூடிகள், ஆபரணங்கள்
(4) இரத்தினக்கற்கள், அரிசி, தெங்குப் பொருள்கள்

10. பின்வருவோருள் ஒருங்கே விற்பனையாளரின் முகவராகவும் அத்துடன் வாங்குபவரின் முகவராகவும் செயற்படுபவர் யார்?
(1) அனுப்பு முகவர் (2) தரகு முகவர்
(3) ஏலங்கூறுவோன் (4) காரணி

11. கமக்காரர் ஒருவர் ஒரு புசல் நெல்லை விற்றுப் புடவைகள் வாங்குகிறார். இக்கூற்றுக்குப் பொருத்தமான பணத்தின் தொழிற்பாடு யாது?
(1) பெறுமானத்தின் அளவீடு (2) பரிமாற்ற ஊடகம்
(3) பெறுமானத்தின் களஞ்சியம் (4) தவணையிட்ட கொடுப்பனவு முறை

12. பின்வருவனவற்றுள் எது வர்த்தக வங்கிகளின் ஒரு பிரதான தொழிற்பாடாகும்?
(1) நாணயத்தை வழங்குதல்
(2) மத்தியவங்கிக்குக் கடன்களை வழங்குதல்
(3) வாடிக்கையாளர்களுக்குக் கொடுகடன் வசதிகளை விரிவுபடுத்தல்
(4) அரசாங்கத்திற்கு வேண்டிய போது மதியுரை வழங்குதல்

13. பின்வருவனவற்றுள் விளம்பரப்படுத்தலின் நோக்கத்தைச் சரியாக விவரிக்கும் கூற்றைத் தெரிவு செய்க?
(1) வாடிக்கையாளர்கள் மத்தியில் பண்டங்கள் பற்றிய உணர்வினை (அறிவினை) ஏற்படுத்துதல்
(2) பண்டங்களின் விலையை அதிகரித்தல்
(3) உற்பத்தியை அதிகரித்தல்
(4) வியாபாரிகளுக்கு உதவுதல்

14. தனது பங்குகளை மாற்றமுடியாத வரையறுத்த பொறுப்புக் கம்பனிகளின் வகை எது?
(1) வரையறுத்த பொதுப் பொறுப்புக் கம்பனிகள்
(2) மக்கள் கம்பனிகள்
(3) வரையறுத்த தனியார் கம்பனி
(4) வரையறுக்கப்படாக் கம்பனிகள்

15. பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தில் ஊறுப்புரிமை பெறத் தக்கவர்கள் யார்?
(1) ஆசிரியர்கள் மட்டும் (2) ஆசிரியர்களும், மாணவர்களும்
(3) ஆசிரியர்களும், பெற்றோரும் (4) பெற்றோரும், மாணவர்களும்

16. வரையறுத்த பொறுப்புக் கம்பனியொன்றைப் பதிவு செய்வதற்குத் தேவைப்படும் இரு ஆவணங்களையும் காட்டும் தொகுதி பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) பணிப்பாளர்கள் பட்டியலும் பங்குதாரர்கள் பட்டியலும்
(2) பங்குதாரர்கள் பட்டியலும் முன்விவரணமும்
(3) ஒன்றிணைப்புச் (உருவாக்கற்) சான்றிதழும் முன்விவரணமும்
(4) அமைப்புப் புறவிதிகளும் கம்பனியமைப்பக விதிகளும்

17. ஒரு வியாபரி போதிய அளவு தொக்குகளை (இருப்புப் பொருள்களை) எப்பொழுதும் களஞ்சியப்படுத்ததி வைத்திருப்புது ஏன்?

(1) பண்டங்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் ஒரு வியாபாரியின் பிரதான தொழிற்பாடாகும்.
(2) வாடிக்கையாளர்களுக்குக் கடனுக்குப் பண்டங்களை வழங்குவதற்காக
(3) தொடர்ச்சியாக வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக
(4) பணத்தை வங்கியில் வைப்புச் செய்வதிலும் பார்க்க பண்டங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் கூடிய இலாபகரமானது.

18. பின்வருவனவற்றுள் எது வாடகைக் கொள்வனவு முறை பற்றிச் சரியான விவரணத்தைத் தருகிறது?
(1) கடைசித் தவணைக் கட்டணம் செலுத்தப்படும் வரை பண்டங்களின் உரிமை வாங்குபவருக்குச் செல்வதில்லை.
(2) முதலாவது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டவுடனேயே பண்டங்களின் மீதான உரிமை வாங்குபவருக்குச் செல்லும்.
(3) வாங்குவோன் தவணைக் கட்டணங்களைச் செலுத்தத்தவறின், விற்போன் பண்டங்களைக் கோரும் உரிமை அற்றவன் ஆவான்.
(4) கடைசித் தவணைக் கட்டணம் செலுத்தப்படும் வரை வாங்குவோன் பண்டங்களை பயன்படுத்த முடியாது.

19. மாதிக் கிரயப்பட்டியல் **(Proforma Invoice)** எப்பொழுது பயன்படுத்தப்படும்?
(1) முகவருக்குப் பண்டங்களின் விலையை அறிவிப்பதற்கு
(2) வாடிக்கையாளருக்கு வரவு வைக்கப்பட்ட தொகையை அறிவிப்பதற்கு
(3) வாடிக்கையாளருக்குச் செலவு வைக்கப்பட்ட தொகையை அறிவிப்பதற்கு
(4) பண்டங்களைக் கொள்வனவு செய்யும் படி வாங்குபவரை வேண்டிக் கொள்வதற்கு

20. கிராமப்புறத்தில் வசிக்கும் ஒருவருக்கு 100ரூபாவை அனுப்பி வைப்பதற்கு மிகவசதியான முறை எது?
(1) ஓர் அஞ்சற் கட்டளை (2) ஒரு காசோலை
(3) ஒரு காசுக் கட்டளை (4) ஒரு வங்கி வரைவு

21. கொடுக்கல் வாங்கல்களின் இருவகை அமிசங்களைப் பதிவு செய்யும் முறைமை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) இரட்டை எண்ணக்கருமுறைமை (2) இரட்டை தகவல் முறைமை
(3) இரட்டைப் பதிவு முறைமை (4) இரட்டைக் கணக்கீட்டு முறைமை

22. பின்வருவனவற்றுள் எது கணக்குகளைப் பேணுதலின் நன்மையை மிகச் சரியாகக் காட்டுகின்றது?
(1) அது உரிமையாளரின் உரிமையை அறிவதற்கு உதவும்
(2) அது சரியான முகாமைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவும்
(3) அது சொத்துக்களையும், பொறுப்புக்களையும் அறிவதற்கு உதவும்
(4) அது பிற வணிக நிறுவகங்களுடன் போட்டியிடுவதற்கு உதவும்

23. ஒரு வியாபாரத் தாபனத்தின் கணக்குப் பதிவியலாளர் கணக்குகளின் எண்கணிதச் செம்மையை உறுதிப்படுத்தும் நோக்குடன் குறித்த அவ்வக்காலங்களில் பின்வருவனவற்றுள் எதனைத் தயாரிப்பார்?
(1) பரீட்சை மீதி (2) பொதுவான குறிப்பேடு
(3) ஐந்தொகை (4) காசேடு

24. பணத்தைச் செலுத்துவதன் மூலம் பொறுப்பொன்றைத் தீர்த்தல்
(1) சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகிய இரண்டையும் அதிகரிக்கச் செய்யும்
(2) சொத்துக்களை அதிகரிக்கச் செய்து பொறுப்புக்களைக் குறிக்கும்
(3) சொத்துக்களைக் குறைத்து பொறுப்புக்களை அதிகரிக்கச் செய்யும்
(4) சொத்துக்களைக் குறைப்பதுடன் பொறுப்புக்களையும் குறையும்

25. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான சரியான இரட்டைப்பதிவைத் தரும் கூற்றை தெரிவு செய்க
(1) சமனுக்குக் காசோலை மூலம் பணம் செலுத்தப்பட்டது செலவு சமன் செலவு வங்கி
(2) திலக்கிடமிருந்து காசு பெற்றுக்கொள்ளப்பட்டது வரவு காசு வரவு திலக்
(3) சுசந்தவின் கடன் ஒரு காசோலை மூலம் தீர்க்கப்பட்டது வரவு சுசந்த, செலவு வங்கி
(4) ரமனாயக்காவிடமிருந்து கடனுக்குப் பண்டங்கள் வாங்கப்பட்டன. வரவு தொக்கு, செலவு மூலதனம்.

26. பின்வரும் கணக்குகளுள் எது இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டதன் பின்பு மீதியொன்றைக் காட்டும்?
(1) வங்கிக் கட்டணங்கள் (2) தேய்மானத்திற்கான ஏற்பாடு
(3) உட்சுமைக் கூலி (4) கொள்வனவுகள்

27. காசேட்டின்படி மேலதிகப்பற்று என்பது கருதுவது.
(1) காசு நிரலின் செலவு மீதி (2) வங்கி நிரலின் வரவு மீதி
(3) காசு நிரலின் வரவு மீதி (4) வங்கி நிரலின் செலவு மீதி

28. ஆதாயம் எப்பொழுது வருமானமாகக் கருதப்படுமெனத் தெரிவு செய்க.
(1) அதன் நன்மைகள் நடப்பு வருடத்திற்கு மட்டும் பொருத்தமாக அமையும் பொழுது
(2) அதன் நன்மைகள் அடுத்துவரும் ஆண்டிற்கு விரிவெய்தும் பொழுது
(3) அதன் நன்மைகள் கடந்த ஆண்டிற்கு மட்டும் பொருத்தமாக அமையும் பொழுது
(4) அதன் நன்மைகள் ஆண்டுகள் பலவற்றிற்கு விரிவெய்தும் பொழுது

29. பின்வருவனவற்றுள் எது கொள்வனவுகள் குறிப்பேட்டில் இடம் பெறுவதில்லை.
(1) காசுக் கழிவீடுகள்
(2) கடன்கொடுத்தோருக்குச் செய்யப்படவுள்ள கொடுப்பனவுகள்
(3) பண்டங்கள் பற்றிய விபரங்கள்
(4) வியாபாரக் கழிவீடுகள்

30. உட்டிரும்பல்கள் குறிப்பேட்டின் மொத்தத் தொகை எதற்கு இடம் மாற்றப்படும்?
(1) உட்டிரும்பல்கள் கணக்கின் வரவுப் பக்கத்திற்கு
(2) உட்டிரும்பல்கள் கணக்கின் செலவுப் பக்கத்திற்கு
(3) விற்பனைகள் கணக்கின் வரவுப் பக்கத்திற்கு
(4) விற்பனைகள் கணக்கின் செலவுப் பக்கத்திற்கு

31. வரவுக் குறிப்புகள் பற்றிய விவரங்கள் பதியப்படும் உப ஏடு எது?
(1) விற்பனைகள் குறிப்பேடு (2) கொள்வனவுகள் குறிப்பேடு
(3) உட்டிரும்பல்கள் குறிப்பேடு (4) வெளித் திரும்பல்கள் குறிப்பேடு

32. சரியான கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தெரிவு செய்க.
(1) சொத்துக்கள் + ஆதாயம் = மூலதனம்
(2) மூலதனம் + பொறுப்புக்கள் = சொத்துக்கள்
(3) மூலதனம் + செலவுகள் = சொத்துக்கள்
(4) மூலதனம் + சொத்துக்கள் = பொறுப்புக்கள்

33. மொத்த இலாபத்தைத் தரும் சரியான முறையைத் தெரிவு செய்க.
(1) விற்பனைகளிலிருந்து கொள்வனவுகளைக் கழித்தல்
(2) விற்பனைகளிலிருந்து விற்பனைசெய்யப்பட்ட பண்டங்களின் கிரயத்துடன் கூட்டுதல்
(3) தொடக்கத்தொக்கினை விற்பனைசெய்த பண்டங்களின் கிரயத்துடன் கூட்டுதல்
(4) காலப் பகுதியின் தேறிய இலாபத்திலிருந்து செலவுகளைக் கழித்தல்

34. இலாபத்தைப் பெற்றுக் கொள்ளாத நிறுவகமொன்று மூலதனக்கணக்கிற்குப் பதில் எதனைத் தயாரிக்கின்றது?
(1) வருமான செலவீட்டுக் கணக்கு (2) ஐந்தொகை
(3) திரண்ட நிதியக் கணக்கு (4) உறுப்புரிமைக் கணக்கு

35. ஐந்தொகையொன்றிலே நடப்புச் சொத்துக்கள் காட்டப்படக் கூடிய சரியான ஒழுங்கு.
(1) தொக்கு, கடன்பட்டோர், வங்கி, காசு
(2) காசு, தொக்கு, வங்கி, கடன்பட்டோர்
(3) வங்கி, கடன்பட்டோர், காசு, தொக்கு
(4) கடன்பட்டோர், வங்கி, காசு, தொக்கு

36. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று பற்றிய சரியான கருத்தைத் தரும் கூற்றைத் தெரிவுசெய்க?
(1) அது கணக்கு மூடப்படும்பொழுது வங்கியினால் அனுப்பப்படும் கூற்றாகும்.
(2) அது காசேட்டின் வங்கி மீதியை வங்கிக் கூற்றின் மீதியுடன் இணங்கச் செய்வதற்கான கூற்றாகும்.
(3) அது காசேட்டிலுள்ள மீதியைக் காண்பதற்காக வங்கியினால் தயாரிக்கப்படும் ஒரு கூற்றாகும்.
(4) அது காசேட்டில் வழுவொன்று இருக்கும்பொழுது வங்கியினால் அனுப்பப்படும் கூற்றாகும்.

37. சில்லறைப் பணக்கட்டுநிதி ரூபா. 200 ஆகும். குறித்த மாதகாலத்தில் சில்லறைக் காசாளரால் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 180 ஆகும். அடுத்துவரும் மாதத்தின் தொடக்கத்தில் பிரதமகாசாளரிடமிருந்து அவர் எவ்வளவு தொகையைப் பெற்றுக்கொள்வார்?
(1) ரூபா. 200 (2) ரூபா. 180 (3) ரூபா. 20 (4) ரூபா. 220

38. பரீட்சை மீதியொன்று இணங்காவிட்டால் வித்தியாசத்தை எந்தக் கணக்கிற் பதிவீர்?
(1) இலாபநட்டக்கணக்கு (2) வியாபாரக்கணக்கு
(3) தொங்கற்கணக்கு (4) மூலதனக்கணக்கு

39. மூலக்கிரயத்திற்குப் (முதற்கிரயம்) பொருத்தமான இனங்களை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கொள்வனவுகள், பூர்த்தியெய்திய பண்டங்கள், நேர்ச் செலவுகள்
(2) பூர்த்தியெய்திய பண்டங்கள், நேர்த்திரவியங்களின் கிரயம், நேர்உழைப்புக்கிரயம்
(3) நேர்த்திரவியங்களின் கிரயம், தொழிற்சாலைமேந்தலைகள், பூர்த்தியெய்திய பண்டங்கள்
(4) பயன்படுத்திய மூலப்பொருள்களின் கிரயம், நேர் உழைப்புக்கிரயம், நேர்ச்செலவுகள்

40. வாடகைக்கணக்கில் கீழே கொணரப்பட்ட செலவு மீதி பின்வருவனவற்றுள் எதனைக்கருதும்?
(1) தாபனம் அத்தொகையைச் செலுத்துதல் வேண்டும்.
(2) தாபனம் வாடகையை முற்பணமாகச் செலுத்தியுள்ளது.
(3) காட்டப்பட்ட தொகை தாபனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டியது.
(4) காட்டப்பட்டதொகை தாபனத்தால் முன்னதாகவே பெற்றுக்கொள்ளப்பட்டது.

01.		X			02.			X		03.	X				04.			X	
05.	X				06.		X			07.			X		08.				X
09.			X		10.			X		11.		X			12.			X	

13. 
14. 
15. 
16. 
17. 
18. 
19. 
20. 
21. 
22. 
23. 
24. 
25. 
26. 
27. 
28. 
29. 
30 
31. 
32. 
33. 
34. 
35. 
36. 
37. 
38. 
39. 
40. 

வர்த்தகமும் கணக்கீயலும் பகுதி II

01.

சாமினி எனும தனிவியாபாரி ஒருவரின ஏடுகளிலிருந்து 1991 டிசெமபா 31ல இருந்தபடி பினவரும பாடசை மதி பெயாததெடுகக பட்டது.

	வரவு	செலவு
	ரூபா	ரூபா
காணியும் கட்டங்களும்	60200	
பொறித்தொகுதி	50800	
1991 ஜனவரி 1 இல் இருந்தபடி தொக்கு	5000	
கொள்வனவுகள்	149000	
மூலதனம்		80000
வங்கி மேலதிகப்பற்று		12900
தளபாடமும் பொருத்திகளும்	20000	
தேய்மானத்திற்கான ஏற்பாடு பொறித்தொகுதி		10000
தளபாடமும் பொருத்திகளும்		2300
முதலீடுகள்	15000	
கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்	16000	12750
ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு		2200
விற்பனைகள்		232250
கைவசமுள்ள காசு	4100	
வெளிச்சுமைக்கூலி	1800	
எடுப்பனவுகள்	6500	
மின்சாரம்	1800	
உட்திரும்பல்களும் வெளித்திரும்பல்களும்	5500	6200
நானாவிதச் செலவுகள்	1500	
அனுமதிக்கப்பட்டவையும் கிடைத்தமையுமான கழிவீடுகள்	1400	1800
எழுதுகருவி வகைகள்	2800	
வங்கிக் கட்டணங்கள்	1200	
வாடகையும் இறைகளும்	4500	
சம்பளங்கள்	12100	
காப்புறுதி	1200	
	360400	360400

'பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு 1991 டிசெம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கான வியா பார இலாப நட்டக் கணக் கொன்றையும் அத்தேதியில் இருந்தபடியான ஓர் ஐந்தொகையையும் தயாரிக்க.

(1) சாமினி தனது சொந்த உபயோகத்திற்கென ரூபா. 3400 எனும் பெறுமானத்திற்கான பண்டங்களை எடுத்துள்ளார். இப்பண்டங்கள் பற்றிய பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

(2) 1991 டிசெம்பர் 31ல் இருந்தபடி தொக்கு ரூபா. 8000 ஆகும்.

(3) தேய்மானத்திற்கான ஏற்பாடு (கொள்விலையில்)
பொறித்தொகுதி ஆண்டொன்றிற்கு 10%
தளபாடமும் பொருத்திகளும் ஆண்டொன்றிற்கு 5%

(4) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ரூபா. 1000 எனும் தொகையால் அதிகரிக்கப்பட்டது.

(5) செய்த முதலீடுகளின் மீதான ஆண்டுக்குரிய வட்டி ரூபா. 1500 ஏடுகளிற் பதியப்பட்டிருக்கவில்லை.

(6) சேர்ந்த வாடகை ரூபா. 1500 ஆகும்.

02.

(i) ஒரு வியாபாரத் தாபனத்தின் காசேடானது பிற துணை ஏடுகளிலிருந்து வேறுபடும் இரு வழிகளைக் குறிப்பிடுக.

(ii) வியாபாரிகள் பலர் காசேட்டிற்கு மேலதிகமாக சிறு செலவுக் காசேடு ஒன்றையும் ஏன் பேணி வருகின்றனர் என்பதற்கு இரு காரணங்கள் தருக?

(iii) எழுதுகருவிவகை, அஞ்சற் செலவு, பயணச் செலவுகள், நானாவிதச் செலவுகள் என்பவற்றுற்கான பகுத்தாய்வு நிரல்களுடன் சிறு செலவுக் காசேடு ஒன்றிலே பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிக. செலவிடப்பட்ட தொகை மாதத்தின் கடைசி நாளில் மீள நிரப்பப்படும்.

			ரூபா
1992	ஜனவரி 01	கிடைத்த சிறு செலவுப் பணக்கட்டுநிதி	1000
	02	நானாவிதச் செலவுகள்	40
	02	எழுதுகருவி வகை	60
	05	சம்பள முற்பணம்	100
	08	பயணச் செலவுகள்	30
	09	அஞ்சற் செலவு	20
	10	சுற்றுதாள்	20
	11	பயணச் செலவுகள்	40
	14	காப்புறுதிக் கட்டணம்	100
	15	அஞ்சற் செலவு	20
	18	எழுதுகருவி வகை	50
	20	நானாவிதச் செலவுகள்	10
	25	தளபாடம்	100
	30	எழுதுகருவி வகை	75

03.

1. உற்பத்திக் கணக்கு என்பதனால் நீர் கருதுவது யாது?
2. உற்பத்திக் கணக்கொன்றின் பிரதான கூறுகளை பெயரிடுக?
3. பின்வரும் தரவுகளை பயன்படுத்தி 1991 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கொன்றைத் தயாரிக்க?

	ரூபா
மூலப்பொருட்தொக்கு 1991 ஜனவரி 1 (கொள்விலையில்)	16500
கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள்	200000
மூலப்பொருட் தொக்கு 1991 டிசெம்பர் 31	33000
உட்சுமைக்கூலி (மூலப்பொருள்கள்)	2000
நேர்க்கூலிகள்	1800
தொழிற்சாலைக் கூலிகள்	7000
பொறித் தொகுதியிக் தேய்மானம்	6000
தொழிற்சாலைச் செலவுகள்	8000
எரிபொருளும் சக்தியும்	6000

04.

(1) பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கிற்கும் வருமான செலவினக் கணக்கிற்கும் இடையிலான மூன்று வேறுபாடுகளை எழுதுக?

(2) இலாபத்தை பெற்றுக் கொள்ளா நிறுவகங்கள் என்பதாற் கருதப்படுவது யாது?

(3) ஜனார்த்தன கழகத்தின் செயலாளர் 1991 இல் டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்குப் பின்வரும் பெறுவனவுகள் , கொடுப்பனவுகள் கணக்கினைச் சமர்ப்பித்துள்ளார்.

பெறுவனவுகள்	ரூபா		கொடுப்பனவுகள்	ரூபா
வங்கி மீதி 1991 01.01		1500	எழுதுகருவி வகைகள்	1200
கிடைக்கப்பெற்ற ஒப்பப் பணம்			கட்டடம் பழுதுபார்த்தல்	1600
			பயணச்செலவுகள்	350
1990	120		இறைகளும், வரிகளும்	6100
1991	12500		காப்புறுதி	1200
1992	250	12870	தட்டச்சுப் பொறிக்கொள்வனவு	3500
மண்டபவாடகை வருமானம்		8500	கண்காட்சி செலவுகள்	2200
அனுமதிச்சீட்டு விற்பனை		5600	மீதி 1991/12/31	12320
		28470		28470

உமக்குப் பின்வரும் தகவல்களும் தரப்படுகின்றன.

(1) 1991 ஜனவரி 01 இல் இருந்தபடி சாதனங்களின் பெறுமானம் ரூபா. 6000 ஆகும். அது 20% படி தேய்மானம் செய்யப்படுதல் வேண்டும் .

(2) செலுத்தப்பட வேண்டிய இறைகளும், வரிகளும் ரூபா. 50 ஆகும்.

(3) மண்டபத்திற்கான வாடகைக் கட்டணமாக ரூபா. 300 முன்னதாகவே பெற்றுக்கொள்ளப்பட்டது. 1991 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கு ஜனார்த்தனன் கழகத்தின் வருமான செலவீட்டுக்கணக்கைத் தயாரிக்க.

பகுதி II

05.

(i) உற்பத்தியின் காரணிகளைப் பெயரிடுக?

(ii) பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் கைத்தொழில்களை இரு பகுதிகளாகப் பிரிக்க முடியும். அவை எவை?

(iii) தனி வியாபாரியுடன் ஒப்பிடும் பொழுது பங்குடமையொன்றின் இரு அனுகூலங்களை குறிப்பிடுக?

(iv) தொழிற்பிரிவின் இரு பிரதிகூலங்களை குறிப்பிடுக?

(v) பண்டமாற்று முறைமையின் இரு பிரதிகூலங்களை எழுதுக?

(vi) வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றின் மூலம் ஒரு வியாபாரி பெற்றுக் கொள்ளக்கூடிய இரு நன்மைகளைக் கூறுக?

(vii) ஒரு பண்டத்தின் விலைத் தளம்பலை ஒரு மொத்த விற்பனையாளர் கட்டுப்படுத்தும் இரு முறைகளை எழுதுக?

(viii) பகுதிப் பண்டகசாலை ஒன்றின் இரு அனுகூலங்களை எழுதுக?

(ix) ஆகாயப் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் சமுத்திரப் போக்குவரத்தின் இருநன்மைகளை எழுதுக?

(x) பணத்தின் இரு சிறப்புக்களைக் குறிப்பிடுக?

(xi) வணிக நிறுவனங்களின் இரு வகைகளைப் பெயரிடுக?

(xii) இலங்கையில் கூட்டுத்தாபனங்கள் தாபிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்த இரு காரணங்களைக் குறிப்பிடுக?

(xiii) கூட்டுறவு முறைமையின் இரு தத்துவங்களை எழுதுக?

(xiv) வரையறுத்த பொதுப் பொறுப்புக் கம்பனிகளின் இரு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக?

(xv) இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் இரு தொழிற்பாடுகளைக் கூறுக?

06. நிர்மலி, திலமினி எனும் இரு சகோதரியர் இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்வதற்காக வரையறுத்த பொறுப்பு கம்பனியொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தனர். அத்துடன் பங்கு மூலதனத்தைத் தாமே வழங்கவும் அவர்கள் தீர்மானித்தனர்.

(i) எந்த வகையான வரையறுத்த பொறுப்புக் கம்பனியை அவர்கள் தெரிவு செய்தல் வேண்டும்?

(ii) எந்த அதிகாரச் சட்டத்தின் கீழ் அவர்கள் கம்பனியைப் பதிவு செய்தல் வேண்டும்?

(iii) தமது கம்பனிக்கான பெயரை தெரிவு செய்தல் தொடர்பில் அவர்களுக்கு நீர் வழங்கக்கூடிய அறிவுரை யாது?

(iv) அவர்கள் தமது கம்பனியைப் பதிவு செய்ய வேண்டிய அலுவலகத்தின் பெயரைத் தருக?

(v) கம்பனியைப் பதிவு செய்வதற்குத் தேவைப்படும் மூன்று ஆவணங்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

07.

(i) வெளிநாட்டு வியாபாரம் ஏன் அவசியம் என்பதைக் காட்டுவதற்கு இரு காரணங்கள் தருக?

(ii) பண்டங்களை ஏற்றுமதி செய்யும் செயல் முறையின் ஐந்து படிகளை எழுதுக?

(iii) இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் கட்புலனுக்குட்படும் ஏற்றுமதிகளுக்கும் கட்புலனுக்குட்படா ஏற்றுமதிக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக?

(iv) சர்வதேச வியாபாரத்தில் அனுப்பு பணத்தொகைகளை மாற்றுதற்குப் பயன்படுத்தப்படும் இரு முறைகளை எழுதுக?

(v) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பண்டங்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றை பெயரிடுக?

08.

அப்பியாசக்கொப்பிகளை உற்பத்தி செய்யும் ஒருவரான பிரதீப் என்பவர் தனது உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்தல் தொடர்பாக உமது ஆலோசனையை நாடுகிறார்.அவர் பின்வரும் தனது வினாக்களுக்கு விடையளிக்குமாறு உம்மிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அவற்றுக்கு விடை தருக?

(i) விளம்பரப்படுத்துதல் என்பதால் நீர் கருதுவது யாது? சுருக்கமாக விளக்குக?

(ii) விளம்பரப்படுத்தும் ஊடகமொன்றைத் தெரிவு செய்தலில் நீர் கருத்திற் கொள்ள வேண்டிய இரு காரணிகள் யாவை?

(iii) அப்பியாசக் கொப்பிகள் தொடர்பில் நுகர்வோருக்கு அவை பற்றிய உணர்வினை ஏற்படுத்தும் விள -ம்பரப்படுத்தலுக்குப் பொருத்தமான இரு ஊடகங்களைப் பெயரிடுக?

(iv) விளம்பரப்படுத்தலின் இரு அனுகூலங்களை எடுத்துரைக்க?

(v) விளம்பரப்படுத்தலை நாடாது அப்பியாசக் கொப்பிகளுக்குப் பிரசித்தம் வழங்கக்கூடிய இரு வழிகளைக் குறிப்பிடுக?

சாமினி நிறுவனத்தின் 31-12-91 இல் முடிந்த ஆண்டிற்கான
வியாபார இலாப நட்டக் கணக்கு

ஆரம்ப இருப்பு			5000	விற்பனை	232250	
கொள்வனவு	149000			உட்திரும்பல்	(5500)	226750
வெளித்திரும்பல்	(6200)	142800				
பற்று		(3400)	139400			
			144400			
இறுதி இருப்பு			(8000)			
விற்ற சரக்கின் கொள்விலை			136400			
மொத்த இலாபம் கீ/கொ/செ			90350			
			226750			226750
நிலைய நிர்வாக செலவு				மொத்தலாபம்		
வாடகை	4500			கீ/கொ/வ		90350
	1500	6000				
காப்புறுதி		1200		பெற்ற கழிவு	1800	
சம்பளம்		12100		முதலீட்டு வட்டி	1500	3300
பொறி பெறுமான தேய்வு		5080				
தளபாட பெறுமான தேய்வு		1000				
மின்சாரம்		1800				
நானாவிதச் செலவு		1500				
எழுதுகருவி		2800	31480			
விற்பனை விநியோக செலவு						
ஐயக்கடன்		1000				
வெளிச்சுமைக்கூலி		1800				
கொடுத்த கழிவு		1400	4200			
நிதிச்செலவு						
வங்கிக்கட்டணம்		1200	1200			
மேலதிக செலவு						
தேறிய லாபம்			56770			
			93650			93650

சாமினி நிறுவனத்தின் 31-12-91 இல் உள்ளவாறான ஐந்தொகை

உரிமையாண்மை			**நிலையான சொத்து**	கொ.வி	நி.பெ.தே	தே.பெ
மூலதனம்		80000	பொறித்தொகுதி	50800	15080	35720
தேறிய இலாபம்	56770		தளபாடம்	20000	3300	16700
பற்று (6500+3400)	(9900)	46870	காணிகட்டம்	60200		60200
				131000	18380	112620
		126870	முதலீடு			15000
			நடைமுறைச்சொத்து			
நடைமுறைப்பொறுப்பு			இறுதி இருப்பு		8000	
சென்மதி வாடகை	1500		கடன்படுனர்	16000		
வங்கி மேலதிகப்பற்று	12900		கழி-ஐயக்கடன் ஏற்பாடு	(3200)	12800	
கட்ன்கொடுனர்	12750	27150	வருமதி வட்டி		1500	
			காசு		4100	26100
		154020				154020

02.

(i) அ) வங்கி இ காசு ஆகிய நிரல்களை உள்ளடக்கிய பேரேடாகவும் கழிவு நிரல்களை உள்ளடக்கிய துணை ஏடாகவும் இக் காசேடானது ஒரே நேரத்தில் செயற்படுகிறது.

ஆ) வங்கிக்கு பணம் அனுப்பல், வங்கியிலிருந்து பணம் பெறல் ஆகிய சந்தர்ப்பங்களில் வரவு, செலவு ஆகிய இரண்டு பதிவுகளையும் இக் காசேடு எனும் ஒரு பேரேட்டிலேயே மேற் கொள்ள முடிகிறது?

(ii) அ) பிரதம காசாளரது வேலைப்பழுவைக் குறைத்து அடிக்கடி ஏற்படும் மிகச் சிறிய ஒழுங்கின் மையை தவிர்த்து, காசேடு ஓர் சீரானதாக இருக்க இவ் சில்லறை காசேடு உதவுகிறது?

ஆ) சிறு சிறு செலவுகளை எந்நேரமும் மேற்கொள்ளவும், அச் செலவுகள் மீது கட்டுப்பாடு விதிக்கவும், இச்சில்லறைக் காசேடு பேணப்படுகிறது.

வரவு	திகதி	விபரம்	தொகை	எழுது கருவி	அஞ்சல் செலவு	பயணச் செலவு	நானா வித செலவு	பேரேடு
1000	ஜனவரி 1	காசு						
	2	நானாவித செலவு	40				40	
	2	எழுது கருவி	60	60				
	5	சம்பள முற்பணம்	100					100
	8	பயணச் செலவு	30			30		
	9	அஞ்சற் செலவு	20		20			
	10	சுற்று தாள்	20				20	
	11	பயணச் செலவு	40			40		
	14	காப்புறுதிக்கட்டணம்	100					100
	15 அஞ்சல்	செலவு	20		20			
	18	எழுதுகுருவி	50	50				
	20	நானாவித செலவு	10				10	
	25	தளபாடம்	100					100
	30	எழுதுகருவி வகை	75	75				
			665	185	40	70	70	300
	30	மீ/கீ/கொ/செ	335					
1000			1000					
335	மாசி 1	மீ/கீ/கொ/வ						
625	1	காசு						

03.

1. ஓர் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் நிறுவனமானது குறித்த ஓர் காலப்பகுதியில் உற்பத்தி தொடர்பாக மேற்கொண்ட சகல மொத்த செலவீனங்களையும் கணக்கிட்டு கொள்ளும் முகமாக தயாரிக்கப்படும் கணக்கு உற்பத்திக் கணக்காகும்.
2. 1. பயன்படுத்திய மூலப்பொருள் செலவு
   2. மூலச் செலவு
   3. தொழிற்சாலைச் செலவு

31 டிசெம்பர் 1991 ல் முடிவுற்ற ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கு

மூலப்பொருள்				
ஆரம்ப இருப்பு 01.01.91		16500	ஆக்கப்பொருட் செலவு	214300
கொள்வனவு மூலப்பொருள்	200000		வியாபாரக் க/கு மாற்றம்	
உட்சுமைக் கூலி	2000	202000		
		218500		
இறுதி இருப்பு		(33000)		
பயன்படுத்திய மூலப்பொருள்செலவு		185500		
நேர்க்கூலிகள்		1800		
மூலச்செலவு		187300		
தொழிற்சாலைச் செலவு				
கூலிகள்	7000			
செலவுகள்	8000			
பொறி தேய்மானம்	6000			
எரிபொருள், சக்தி	6000	27000		
		214300		214300

04.

(i)

	பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு	வருமானம் செலவுக் கணக்கு
1.	காசு நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும்	காசு, நிலுவை, முற்பண நடவடிக்கை உள்ளடக்கப்படும்
2.	பல ஆண்டுத்தகவல்கள் உள்ளடக்கப்படும்	ஒரு வருடத் தகவல்கள் உள்ளடக்கப்படும்
3.	காசு நிலுவைகள் வெளிப்படுத்தப்படும்	இலாபநட்ட நிலைமைகளை வெளிப்படுத்தப்படும்

(ii) இலாபம் பெறுதலை முதன்மையான நோக்கமாக இவை கருதமாட்டாது. அங்கத்துவ பணம், சந்தாப்பணம் மூலம் மூலதனத்தை திரட்டிக் கொள்ளும். இலாபங்களை ஆண்டு தோறும் பங்கீடு செய்யாது அவைகளை சமூக அபிவிருத்திக்கு பயன்படுத்தும்.

ஜனார்த்தனன் கழகத்தின் 31.12.1991ல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமான செலவுக் க/கு

எழுதுகருவி வகை		1200	கிடைத்த ஒப்பப் பணம்		12500
கட்டடம் பழுதுபார்த்தல்		1600	மண்டப வாடகை கட்டணம்	8500	
பயணச் செலவு		350	மண்டப வாடகை	(300)	8200
இறைகளும் வரிகளும்	6100		அனுமதிச் சீட்டு விற்பனை		5600
செலுத்த வேண்டியது	50	6150			
காப்புறுதி		1200			
பெறுமானத் தேய்வு		1200			
கண்காட்சிகள்		2200			
செலவிலும் கூடிய வருமானம்		12400			
		26300			26300

05.

(i) நிலம், உழைப்பு, முதல், முயற்சி

(ii) 1. அகழ்வுக் கைத்தொழில் 2. ஆக்க கைத்தொழில்

(iii) அ) நட்டம் அனைத்து பங்காளரிடையேயும் பகிரப்படுவதால் தனியொருவரது நட்ட சுமை குறைக்கப்படும்.
ஆ) பங்காளர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருப்பதால் பலரது ஆலோசனைகளும் பெறப்பட்டு நிறுவனம் திறமையான முறையில் இயங்கக் கூடியதாக இருக்கும்.

(iv) அ) உற்பத்தி தொடரில் ஒரு பகுதியினரிடையே ஏற்படும் வேலைத்தடை, மொத்த உற்பத்தியினையும் தடைப்படுத்தி தாமதப்படுத்தி விடும்.
ஆ) ஒரே வேலையில் தொடர்ந்து ஈடுபடுவதால் உளரீதியான சலிப்பு ஏற்பட்டு நாளடைவில் உற்பத்தி அளவில் குறைந்து கொண்டு செல்ல வாய்ப்புண்டு

(v) அ) எல்லாப் பண்டங்களையுமே சேகரித்து வைக்க முடியாது.
ஆ) தனக்கு தேவையான ஒரு பொருளை பெறுவதற்காக தன்னிடமுள்ள பொருளை பெற விரும்பும் அப்பொருள் தேவைப்படும் ஒருவரை தேடிப்பிடிப்பது சிரமமானதும் காலதாமதமானதும் ஆகும்.

(vi) அ) கொடுக்கல் வாங்கல்களை காசோலை மூலம் மேற்கொள்ளும் போது பணத்தை வைத்திருத்தல், காவிச்செல்லல் போன்ற சிரமங்களும் அது தொடர்பான பிரச்சினைகளும் தவிர்க்கப்படும்.
ஆ) வங்கியில் பணம் இல்லாத போதும், வங்கி மேலதிகப்பற்று மூலம் தொடர்ந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம்.

(vii) அ) பொருட்கள் அதிக அளவில் கிடைக்கும் காலத்தில் மேலதிகமானவற்றை களஞ்சியப்படுத்தி விலைவீழ்ச்சியை தவிர்த்தல்.
ஆ) பற்றாக்குறை நிலவும் காலங்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் பொருட்களை சந்தைக்கு விட்டு விலை ஏற்றத்தை தவிர்த்தல்.

(viii) அ) ஒரே இடத்தில் தேவையான எல்லாப் பொருட்களையும் அல்லது கூடியளவு பொருட்களை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும்.
ஆ) தரமான பொருட்களை சரியான விலைகளில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

(ix) அ) ஒரே தடவையில் அதிகளவு பொருட்களை கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.
ஆ) போக்குவரத்து செலவு கட்டணம் என்பன குறைவாக இருக்கும்.

(x) அ) பணம் எல்லா மக்களாலும் புரிந்து கொள்ளக்கூடியதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான சாதனம்.
ஆ) பணம் ஓர் பெறுமானத் திரட்டாக செயல்படக்கூடியது.

(xi) அ) 1. தனியுடைமை 2) பங்குடமை

(xii) அ) கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்கில் பல தொழில் முதலீட்டு வாய்ப்புக்கள் உள்ளதாகையால் கூட்டுத்தாபனங்களை அமைப்பதென்பது சாத்தியமான ஒன்று.
ஆ) வேலையற்றோர் அதிகம் காணப்படுவதால் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்படாது.

(xiii) 1. தாமாகவே சேர்ந்து விலகக்கூடிய சுதந்திரம்.
2. ஜனநாயக ரீதியிலான நிர்வாக முறைமை.

(xiv) அ) முன்விபரணம் மூலம் பகிரங்கமாக பங்குகளை வெளியிடுதல் மூலம் மூலதனத்தை திரட்டிக் கொள்ளல்.
ஆ) பங்குகளை தமது விருப்பப்படியே பங்காளர் கைமாற்றல்

(xv) அ) திட்டமிட்டதும் நேர ஒழுங்கிலுமான புகையிரத சேவையை வழங்கல்.
ஆ) புகையிரத பாதைகளை அமைத்து பராமரிப்பதுடன் பயணிகளுக்கும் பாதுகாப்பளித்தல்.

06.

(i) வரையறுத்த பொதுக்கம்பனி
(ii) 1982 ஆண்டு கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல்.
(iii) ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனி ஒன்றின் பெயரை தெரிவுசெய்தல் கூடாது ஜனாதிபதி, மாநகரம், கூட்டுறவு, தேசிய, ஸ்ரீலங்கா போன்ற சொற்களை பெயருடன் சேர்த்துக் கொள்ளக்கூடாது.
(iv) கம்பனி பதிவாளர் அலுவலகம், மாகாணசபையின் அலுவலகம்
(v) கூட்டுப்பத்திரம் - அமைப்பு புறவிதி
கூட்டுச் சட்டக் கோவை - அமைப்பு அக விதி
சட்ட உறதி உரை

07.

(i) ஒரு நாட்டிலுள்ள பற்றாக்குறையான பொருட்களையும் தேவையானதும், அதே சமயம் உள்நாட்டில் பெற்றுக் கொள்ள முடியாததுமான பொருட்களை பிற நாடுகளிடமிருந்து பெறுவதற்கு இவ் வெளிநாட்டு வியாபாரம் அவசியம்.

நாட்டிலுள்ள மேலதிகமான பொருட்களையும் வெளிநாட்டவரால் விரும்பப்பட்டு அவர்களால் அதிகவிலை கொடுத்து வாங்கிக் கொள்ளக்கூடியதுமான உள்நாட்டுப் பொருட்களையும் பிறநாட்டவருக்கு விற்பனை செய்யவும் இவ் வெளிநாட்டு வியாபாரம் அவசியம்.

(ii) 1. விலை விசாரணைகளுக்கு கூறுவிலை வழங்கல்.
2. வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டளைகளைப் பெறல்.
3. ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெறல்.

4. பொருட்களை சேகரித்து, பொதிகட்டி, களஞ்சியப்படுத்தல்
5. காப்புறுதி செய்து கப்பலில் பொருள்களை ஏற்றி சுமைச்சீட்டுப் பெறல்.
6. பட்டியல்களைத் தயாரித்து ஆவணங்களைப் பெற்ற அனுப்புதல்.

(iii) 1. கட்புலனாகும் பொருட்கள் - தேயிலை, இறப்பர், தைத்த ஆடை
2. கட்புலனாகும் பொருட்கள் - தொழிலாளரை அனுப்புதல், உல்லாசப் பயணிகள்

(iv) 1. விமானத் தபால் மாற்றீடு 2. மாற்று உண்டியல்

(v) 1. நுகர்வுப்பொருட்கள்
2. இடைநிலைப் பொருட்கள்
3. முதலீட்டுப் பொருட்கள்

08.

(i) உற்பத்தி செய்யப்பட்ட புதிய பொருளை சகல மக்களுக்கும் அறிமுகப்படுத்துவதன் முகமாகவும், ஏற்களவே சந்தையிலுள்ள ஓர் பொருளுக்கு மீண்டும் உயர்ந்ததோர் கேள்வியை ஏற்படுத்தும் முகமாகவும், அப்பொருள் பற்றிய பாவனை, பயன்பாடு, கிடைக்குமிடங்கள், விலைவிபரம் போன்ற சகல விபரத்தையும் பல்வேறு ஊடகங்கள் மூலம் சகல மக்களுக்கும் தகவல் வழங்கும் ஓர் செயற்பாடே விளம்பரம் எனப்படும்.

(ii) போட்டியாளரது விளம்பர ஊடகத்தினையும் முறையையும் கவனத்திற் கொண்டு, அவைகளையும் தாண்டி நுகர்வோரை சென்றடையும் வண்ணம் சாதுரியமான விளம்பர ஊடகத்தையும், கவர்ச்சிகரமான விளம்பர முறையையும் தெரிவு செய்தல்.
விளம்பர செலவினைக் கவனித்தல்.

(iii) 1. தொலைக்காட்சி 2. பத்திரிகைகள்

(iv) 1. நுகர்வோர் தரமானதும் சரியானதுமான பொருளை தெரிவு செய்யவும், போலி உற்பத்திகளில் இருந்து பாதுகாக்கப்படவும் இவ் விளம்பரம் உதவுகிறது.
2. வாடிக்கையாளரை கவர்ந்து கொள்வதன் மூலம், வியாபாரிகள் விற்பனையை அதிகரித்துக் கொள்ள முடிகிறது.

(v) பாடசாலையில் மாணவர்களுடன் கலைந்துரையாடலை நடத்துவதன் மூலம் மாணவா மத்தியில் பொருளை அறிமுகப்படுத்துதல். பாடசாலையிலேயே ஓர் மலிவு விற்பனையை மேற்கொள்ளல்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திரப் (சாதாரண தர)ப்பரீட்சை, 1991 டிசெம்பர்

(புதிய பாடத்திட்டம்)

வர்த்தகமும் கணக்கீடலும் – I

01. பின்வருவனவற்றிலிருந்து உற்பத்திக்காரணிகளை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) முயற்சி, காசு, மூலப்பொருட்கள், மூலதனம்
(2) உழைப்பு, மூலதனம், நிலம், முயற்சி
(3) கூலி, வட்டி, வாடகை, இலாபம்
(4) மூலப்பொருட்கள், பொறிகள், வாடகை, இலாபம்

02. பின்வருவனவற்றிலிருந்து துணைச் சேவைகளைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம், உற்பத்தி
(2) கற்பித்தல், நலன்பேணல், எழுதுனர் சேவை
(3) பாடசாலையிடுதல், வங்கிச்சேவை, போக்குவரத்து சேவை
(4) வங்கிச்சேவை, பண்டசாலையிலிருத்தல், கற்பித்தல்.

03. மொத்த வியாபாரத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் யாது?
(1) வீட்டில் நடைபெறும் விருந்துபசாரமொன்றிற்கு 10 இறாத்தல் பாண் வாங்குவது.
(2) அலுவலக உபயோகத்திற்கான மரத் தளபாடங்கள் வாங்குவது.
(3) கட்டிடமொன்றை நிறுவுவதற்கு 20 மூட்டை சீமெந்து வாங்குவது.
(4) ஹோட்டலில் விற்பதற்காக 50 இறாத்தல் பாண் வாங்குவது.

04. பின்வருவனவற்றிலிருந்து நிருமாணக் கைத்தொழிலை தெரிவு செய்க:
(1) கடதாசிக் கைத்தொழில் (2) மீனவக் கைத்தொழில்
(3) உப்புக் கைத்தொழில் (4) இரத்தினக் கற் கைத்தொழில்

05. பேரளவுக் கைத்தொழில் ஒன்றின் மிக முக்கியமான அம்சத்தைத் தெரிவு செய்க:
(1) பெரிய தொழிற்சாலை ஒன்று இருப்பது.
(2) கைத்தொழிலானது நகரில் அல்லது நகருக்கு அண்மையில் தமாபிக்கப்பட்டிருப்பது.
(3) வினைத்திறன் மிக்க முகாமையாளர் இருப்பது.
(4) தொழிற் பிரிப்பு பயன்படுத்தப்படுதல்.

06. கூட்டுறவுக் கடையொன்றின் பிரதான பணி
(1) பங்கீட்டுப் பொருட்களை அதிக விலையில் விநியோகம் செய்வது.
(2) பண்டங்களை நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பது.
(3) பண்டங்களை அதிக விலைகளில் மொத்த வியாபாரிக்கு விற்பது.
(4) அருமைப்பாடுடைய பண்டங்களை அதிக விலைகளில் விற்பது.

07. இறக்குமதியாளர் ஒருவர் தானே பண்டங்களின் உடைமையாளர் என்பதை நிரூபிப்பதற்கு சமர்ப்பிப்பது.
(1) தரவானை (2) வார்நாமம்
(3) நாணயக்கடிதம் (4) வங்கிக் கட்டளை

08. வங்கிகளின் வங்கிகளாகத் தொழில்படுவது.
(1) இலங்கை வங்கி (2) மக்கள் வங்கி
(3) இலங்கை மத்திய வங்கி (4) அபிவிருத்தி வங்கி

09. இலங்கையிற் கப்பற் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனம்.
(1) காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (2) இலங்கை மத்திய கேள்விப் பணியகம்
(3) இலங்கை மத்திய வங்கி (4) இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

10. தொடர்பாடல் என்பதன் கருத்து என்ன?
(1) பண்டங்களையும் சேவைகளையும் விளம்பரம் செய்வது.
(2) சந்தைகள் பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு அளிப்பது.
(3) வேலையாளரை முகாமை செய்வது.
(4) தகவல்களைப் பரிமாற்றம் செய்வது

11. பின்வருவனவற்றுள் ஆயுட்காப்புறுதிப் பத்திரத்திற்காக செலுத்த வேண்டிய கட்டுப்பணத்தை நிர்ணயிக்கும் காரணிகளைக் கொண்ட தொகுதி எது?
(1) காப்புறுதியின் பெறுமானம், காப்புறுதியின் காலம், ஆபத்தின் தன்மை, வயது.
(2) காப்புறுதியின் பெறுமானம், காப்புறுதியின் காலம், காப்புறுதி அளிப்பவரின் உத்தியோகம்.
(3) காப்புறுதியின் பெறுமானம், ஆபத்தின் தன்மை, குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை.
(4) காப்புறுதியின் பெறுமானம், வயது, சொத்துக்களின் பெறுமானம்.

12. அமைப்புப் புறவிதிகளை விபரிக்கும் கூற்றினைத் தெரிவு செய்க:
(1) கம்பனி ஒன்றின் உள்ளக நிருவாகத்தை கட்டுப்படுத்தும் விதிகளையும், பிரமாணங்களையும் கொண்ட ஆவணம்.
(2) கம்பனியைத் தாபித்தல், கம்பனிச் சட்டத்தின் தேவைகளுக்கு அமையவே சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் ஓர் ஆவணம்.
(3) வெளியாருடன் தொடர்புகளைக் குறிப்பிடும் ஓர் ஆவணம்.
(4) கம்பனியின் மூலதனத்திற்கு நிதியளிக்குமாறு பொது மக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஓர் ஆவணம்.

13. விசேட சந்தர்ப்பங்களிலே அரசிடமிருந்து கடனுக்குப் பண்டங்களைப் பெறும் ஒழுங்கமைப்பு யாது?
(1) தனி வியாபாரி (2) பங்குடமை
(3) கூட்டுறவுச் சங்கங்கள் (4) அரசாங்கக் கூட்டத்தாபனங்கள்.

14. பங்குடமையொன்றின் பெறுமானம் 10 ரூபாயாகும் எனக் கூறுவது பணத்தின் எந்த தொழிற்பாட்டைக் குறிக்கின்றது?
(1) பரிமாற்று ஊடகம் (2) பெறுமான அளவை
(3) பெறுமானக் களஞ்சியம் (4) பிற்போட்ட கொடுப்பனவுக்கான ஓர் நியமம்

15. "கடன்களை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கான ஓர் ஊடகமாக பணத்தைப் பயன்படுத்தலாம்." இக்கூற்றோடு தொடர்புடைய பணத்தின் தொழிற்பாடு யாது?
(1) பரிமாற்று ஊடகம் (2) பெறுமான அளவை
(3) பெறுமானக் களஞ்சியம் (4) பிற்போட்ட கொடுப்பனவுக்கான ஓர் நியமம்.

16. வருமானத்தின் ஒரு பகுதியை வருங்காலத் தேவைகளுக்காக செலவிடாமல் வைத்திருப்பது பணத்தின் எந்தத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையது?
(1) பரிமாற்று ஊடகம் (2) பெறுமான அளவை
(3) பெறுமானக் களஞ்சியம் (4) பிற்போட்ட கொடுப்பனவுக்குரிய ஒரு நியமம்.

17. துறைமுகத்துக்குக் கப்பலொன்று வந்தவுடன் பண்டங்களை இறக்குவதற்கான அனுமதியை பெறுவதற்கு எந்த ஆவணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்?
(1) கப்பல் அறிக்கை (2) தோற்றுவாய் சான்றிதழ்
(3) வார்நாமம் (4) இறக்குமதி உத்தரவுச் சீட்டு

18. ஓர் ஏற்றுமதியாளருக்கு மிகக்கூடிய விரைவில் பணம் அனுப்பக்கூடிய முறை யாது?
(1) மாற்றுண்டியல் (2) தந்திமுறை மாற்றல்
(3) வங்கிக் கட்டளை (4) விமானத் தபால் மாற்றல்

19. பண்டங்களை வாங்கவுள்ள பரிச்சயமற்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு பண்டங்களை அனுப்புவதற்கு முன்னர், பணத்தை அனுப்பும்படி அறிவித்தற்கு எந்த எந்த ஆவணத்தை அவருக்கு அனுப்ப வேண்டும்.
(1) பட்டியல் (2) கூறுவிலை
(3) பெயரளவு பட்டியல் (4) கட்டளை

20. பின்வருவனவற்றுள் விசேட குறுக்குக் கோடு எது?
(1) (2) (3) (4)

21. பின்வருவனவற்றுள் சொத்துக்களை மட்டுமே கொண்டுள்ள தொகுதி எது?
(1) கடன்பட்டோர், காசு, இலாபம், கட்டடங்கள்
(2) பொறிகள், காசு, கடன்பட்டோர், கட்டடங்கள்
(3) கடன்கொடுத்தோர், காசு, கட்டடங்கள், வங்கிக்கடன்

22. பின்வருவனவற்றிலிருந்து பிழையான இரட்டைப்பதிவினைத் தெரிவு செய்க:
(1) சேனாவிற்கு விற்கப்பட்ட பண்டங்கள் - சேனாவின் கணக்கில் வரவு வைத்தல், விற்பனைக் கணக்கில் செலவு வைத்தல்.
(2) மூலதனமாக புகுத்தப்பட்ட காசு - காசுக்கணக்கில் வரவு வைத்தல், மூலதனக்கணக்கில் செலவு வைத்தல்.
(3) கமாலுக்கு திருப்பி அனுப்பப்பட்ட பண்டங்கள் - கொள்வனவுக் கணக்கில் வரவு வைத்தல், கமாலின் கணக்கில் செலவு வைத்தல்.
(4) ராஜாவிடம் வாங்கிய பண்டங்கள் - கொள்வனவுக் கணக்கில் வரவு வைத்தல், ராஜாவின் கணக்கில் செலவு வைத்தல்.

23. உடமையாளரின் உரிமைப்பங்கினை குறிக்கும் சரியான தொகுதி எது?
(1) சொத்துக்கள் - பரிப்புக்கள்
(2) சொத்துக்கள் - மூலதனம்
(3) சொத்துக்கள் + பரிப்புக்கள்
(4) சொத்துக்கள் + மூலதனம்

24. தேய்மான ஏற்பாட்டுக் கணக்கொன்றிருந்தால், சொத்து ஒன்றின் ஆண்டு தேய்மானத்திறகான சரியான இரட்டைப்பதிவு யாது?
(1) இலாப நட்டக்கணக்கில் வரவு வைத்தல், தேய்மான ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைத்தல்.
(2) சொத்துக்கள் கணக்கில் வரவு வைத்தல், தேய்மான ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைத்தல்.
(3) சொத்துக்கள் கணக்கில் வரவு வைத்தல், தேய்மான ஏற்பாட்டுக் கணக்கில் செலவு வைத்தல்.
(4) தேய்மான ஏற்பாட்டுக் கணக்கில் வரவு வைத்தல், இலாப நட்டக் கணக்கில் செலவு வைத்தல்

25. காசுக்கழிவு அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தைத் பின்வருவனவற்றிலிருந்து தெரிக:
(1) கொடுத்தற்குரிய பணம் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படும் போது,
(2) கொடுத்தற்குரிய பணம் காசோலை அல்லது காசு மூலம் கொள்வனவு செய்யப்படும்போது.
(3) காசுமூலம் மட்டுமே கொடுப்பனவு செய்யப்படும்போது.
(4) கொடுத்தற்குரிய பணம் குறித்த காலப் பகுதிக்குள் கொடுப்பனவு செய்யப்படும் போது.

26. பட்டியல் ஒன்றின் பெறுமதி 500 ரூபாய். அதற்கு 5 சதவீத காசுக் கழிவீடு உண்டு. குறித்த காலப் பகுதிக்குள் இந்தப் பட்டியல் தீர்க்கப்பட்டிருந்தால் செலுத்தப்பட்ட தொகையைக் கூறுக?
(1) 400 ரூ (2) 425 ரூ
(3) 450 ரூ (4) 475 ரூ

27. பின்வருவற்றிலுள்ள சரியான கூற்றைத் தெரிவு செய்க:
(1) காசானது முதலீடாகப் புகுத்தப்படல், சொத்துக்கள் அதிகரிக்கும், பரிப்புக்கள் குறையும்.
(2) மோட்டார் வாகனங்களை காசு கொடுத்து கொள்வனவு செய்தல்:-
சொத்துக்கள் அதிகரிக்கும், பரிப்புக்கள் அதிகரிக்கும்
(3) அலுவலக உபகரணங்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்:-
சொத்துக்கள் அதிகரிக்கும், பரிப்புக்கள் அதிகரிக்கும்.
(4) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்தல்:-
சொத்துக்கள் அதிகரிக்கும், பரிப்புக்கள் அதிகரிக்கும்

28. ஒரு கம்பனிக்கு கிடைக்கும் காசோலையொன்று முதலிற் பதிவு செய்யப்படுவது:-
(1) காசு ஏட்டின் வரவுப் பக்கத்திலுள் வங்கி நிரலில்.
(2) காசு ஏட்டின் செலவுப் பக்கத்தினுள் வங்கி நிரலில்.
(3) காசு ஏட்டின் வரவுப் பக்கத்திலுள்ள காசு நிரலில்.
(4) காசு ஏட்டின் செலவுப் பக்கத்திலுள்ள காசு நிரலில்.

29. வருமான செலவுக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டிய விடயத்தைத் தெரிவு செய்க:
(1) விற்பனைகளும், ஆரம்பத் தொக்கும் (கையிருப்பு)
(2) உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் கிரயமும், விற்பனைகளும்.
(3) புத்துருவாகும் வேலையும், மூலப்பொருட்களும்.
(4) கிடைத்த உறுப்புரிமைக் கட்டணங்களும், கிடைக்க வேண்டிய உறுப்புரிமைக் கட்டணங்களும்.

30. பரீட்சை நிலுவையிலிருந்து கண்டுபிடிக்கக்கூடிய வழு எது?
(1) விற்பனைச் செலவான 60 ரூபாய் விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தமை.
(2) சந்திர பாலனிடமிருந்து கிடைக்கப்பெற்ற 85 ரூபாவுக்கான காசோலை அவரது கணக்கில் 58 ரூபாயாக பதிவு செய்யப்பட்டிருந்தமை.
(3) 30 ரூபாவுக்கான கடன் விற்பனைகள் இரு கணக்கிலும் 30 ரூபாய் எனப் பதிவு செய்யப்பட்டிருந்தமை.
(4) 500 ரூபாவுக்கான கொள்வனவு ஒன்று முற்றாக விடப்பட்டிருந்தமை.

31. 1990 டிசெம்பர் 31 இல் கம்பனியிலே நானாவிதக் கடன்பட்டோர் தொகை 6800 ரூபாவாக இருந்தது. கெட்ட (அறவிட முடியாத) கடன்கள். ஐயக்கடன்கள் ஆகியவற்றிற்கான ஏற்பாட்டுக் கணக்கிலிருந்த நிலுவை 300 ரூபாவாகும். கெட்ட கடன்களும் ஐயக்கடன்களும் 5% ஏற்பாடொன்றை ஏற்படுத்த முடிவு செய்தால் இலாப நட்டக்கணக்கில் வரவு வைக்க வேண்டிய தொகை எவ்வளவு?
(1) 940 ரூபா (2) 680 ரூபா
(3) 340 ரூபா (4) 400 ரூபா

32. தாபன நிருவாகத் தாக்கல்களைக் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க:
(1) கழிவீடு, வாடகை, காப்புறுதி
(2) கெட்ட கடன்கள், தொலைபேசிக் கட்டணங்கள், காப்புறுதி
(3) வாடகை, உட்சுமைக்கூலி, கூலி
(4) சம்பளங்கள், காப்புறுதி, வாடகை

33. காசோலை மூலம் கொடுப்பனவுகள் செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கும் ஆவணம்.

(1) பற்றுச்சீட்டு (2) அடியிதழ் (3) செலவுத்தாள் (4) வரவுத்தாள்

34. "இரட்டைப்பதிவு" என்னும் பதத்தினைச் சிறப்பாக விபரிக்கும் சொற்தொடர் எது?
(1) கணக்குகளில் இரு முறை பதிவு செய்யப்படவேண்டிய கொடுக்கல், வாங்கல்
(2) வரவு வைக்கப்படவேண்டிய சொத்துக்களும், செலவு வைக்கப்பட வேண்டிய பரிப்புக்களும்.
(3) ஒவ்வொரு கொடுக்கல், வாங்கல்களினதும் இரு விளைவுகள் சம்பந்தப்பட்ட கணக்குகளில் வரவுப் பதிவாகவும், செலவுப் பதிவாகவும் காட்டுவது.
(4) ஒரு கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பெறுமானத்தை இரண்டு கணக்குகளிற் பதிவு செய்தல்.

35. ஐந்தொகையிலே நிலையான சொத்துக்கள் எந்த ஒழுங்கில் தோன்றுகின்றன.
(1) மோட்டார் வாகனங்கள், நிலம், கட்டடங்கள், உபகரணம்
(2) நிலம், கட்டடங்கள், மோட்டார்வாகனங்கள், உபகரணம்
(3) கட்டடங்கள், நிலம், உபகரணம், மோட்டார் வாகனங்கள்
(4) நிலம், உபகரணங்கள், கட்டடங்கள், மோட்டார் வாகனங்கள்

36. வரவு நிலுவைகளை மட்டுமே கொண்டுள்ள கணக்குகளின் தொகுதியைத் தெரிவு செய்க:
(1) கட்டடங்கள், உபகரணங்கள், எழுதுகருவிவகைகள், செலுத்தப்பட்ட வாடகை
(2) மூலதனங்கள், உபகரணங்கள், கிடைத்த கழிவீடு, காப்புறுதி
(3) கட்டடங்கள், மூலதனங்கள், கெட்ட கடன்கள், காப்புறுதி
(4) கட்டடங்கள், கிடைத்த வட்டி, நிலம், எழுதுகருவி வகைகள்

37. கம்பனி அலுவல்களில் இக்கடிதத்தைக் காட்டும் குழுக்களைக் கொண்டுள்ள தொகுதியைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க:
(1) கம்பனியின் வேலையாளர், தொழிற்சங்கங்கள், கடன்பட்டோர், கடன் கொடுத்தோர்
(2) கம்பனியின் வேலையாளர், வாடிக்கையாளர், மாணவர்கள், கணக்காளர்
(3) கம்பனியின் வேலையாளர், ஆசிரியர்கள், கணக்காளர், கணக்குப்பதிவாளர்
(4) கணக்காளர், கணக்குப்பதிவாளர், வங்கியாளர், கடன்பட்டோர்

38. 65000 ரூபாவுக்கான ஒரு மோட்டார் வான் கமாலுக்கு விற்கப்பட்டது. கமாலிடம் இருந்த75000 ரூபாவுக்குப் புதிய மோட்டார் கார் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தற்கு பயன்படுத்தப்படும் துணை ஏடு.
(1) கொள்வனவு நாட்குறிப்பேடு (2) காசேடு
(3) உட்டிரும்பல் ஏடு (4) நாட்குறிப்பேடு

39. விமல் என்பவருக்கு செலவுத்தாள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது பதிவு செய்யப்படும் துணை ஏடு:
(1) கொள்வனவு நாட்குறிப்பேடு (2) காசேடு
(3) உட்டிரும்பல் ஏடு (4) நாட்குறிப்பேடு

40. கடன் ஒன்றுக்காக காசோலை மூலம் செலுத்தப்படும் அரை ஆண்டு வட்டி பதிவு செய்யப்படவேண்டிய ஏடு:
(1) கொள்வனவு நாட்குறிப்பேடு (2) காசேடு
(3) உட்டிரும்பல் ஏடு (4) நாட்குறிப்பேடு

01.		X			02.			X		03.				X	04.	X			
05.				X	06.		X			07.			X		08.			X	
09.		X			10.				X	11.	X				12.			X	
13.			X		14.		X			15.				X	16.			X	
17.	X				18.		X			19.	X				20.			X	
21.		X			22.			X		23.	X				24.	X			
25.				X	26.				X	27.			X		28.			X	
29.				X	30		X			31.				X	32.				X
33.		X			34.			X		35.		X			36.	X			
37.	X				38.				X	39.			X		40.		X		

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 1991 டிசெம்பர்

(புதிய பாடத்திட்டம்)

வர்த்தகமும் கணக்கியலும் – II

மூன்று மணி

பரீட்சாத்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

பகுதி Iல் இருந்து முதலாம் வினாவுக்கும், வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
பகுதி IIல் இருந்து ஐந்தாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
(முதலாம், ஐந்தாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

பகுதி I

01.

ஜயதேவன ஒரு தனவியாபாரி. 1990 திசெமபர் 31 இல இருநதவாறு ஜயதேவனின ஏடுகளிலிருநது பின வரும பாடசை நிலுவை பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

	ரூபா	ரூபா
மூலதனம்		64000
விற்பனைகள்		118080
வாடகையும், இறைகளும்	800	
கைவசமுள்ள காசு	600	
கொள்வனவுகள்	75000	
உட்டிரும்பல்கள்	1200	
பெற்ற கழிவீடு		1440
எழுது கருவி வகைகள்	400	
அறவிடமுடியாத, ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு ஜனவரி 1, 1990		180
தொக்கு (கையிருப்பு) ஜனவரி 1, 1990	23200	
சம்பளங்கள்	16900	
தொலைபேசிக் கட்டணம்	240	
அலுவலக உபகரணம்	9840	
விநியோக வான்வண்டி - கிரயத்தில்	50000	
கடன்பட்டோரும், கடன்கொடுத்தோரும்	7760	8000
அறவிடமுடியாத கடன்கள்	40	
உட்சுமைக்கூலி	1200	
எடுப்பனவுகள்	3200	
வங்கிக் கட்டணங்கள்	120	
வங்கி நிலுவை	1200	
	191700	191700

1990 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார, இலாப நட்டக் கணக்கையும் அதே தினத்திற்குரிய ஐந்தொகையையும் தயாரிக்குக: அவற்றைத் தயாரிக்கையில் பின்வரும் செம்மையாக்கங்களைக் கருத்திற் கொள்க

1. தொக்கு 1990 திசெம்பர் 31இல் உள்ளவாறு - 2200 ரூபா
2. அட்டுறுவாடகையும் இறைக்கும் - 250 ரூபாய்
3. அறவிட முடியாக்கடன்களும், ஐயக்கடன்களுக்குமான ஏற்பாடு 290 ரூபாயாக அதிகரிக்கப் பட வேண்டும்.
4. தேய்மானத்திற்கு பின்வருமாறு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
   அ) அலுவலக உபகரணம் 5% ஆ) விநிகோக வான் வட்டி 10%

(30 புள்ளிகள்)

2.

1. அ) பரீட்சை நிலுவை ஒன்றினால் வெளிப்படுத்தப்படும் இரு வகையான வழுக்களைக் குறிப்பிடுக.
   ஆ) பரீட்சை நிலுவை ஒன்றினால் வெளிப்படுத்தப்படாத இரு வகையான வழுக்களைக் குறிப்பிடுக

2. 1990 திசெம்பர் 31 இல் இருந்தவாறு கணக்குப் பதிவாளரினால் பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை நிலுவை இணங்காததால், அவர் வித்தியாசமானதை தொங்கற் கணக்கிற்கு மாற்றிவிட்டார்.
   பின்வரும் வழுக்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன.
   அ) கொள்வனவு நாட்குறிப்பேட்டில் 150 ரூபாய் குறைத்தெழுதப்பட்டிருந்தது.
   ஆ) வாடகையாக செலுத்தப்பட்ட தொகையான 210 ரூபாய், வாடகைக் கணக்கில் 120 ரூபாயாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

   இ) சில்வாவிடத்தில் கடன் கொள்வனவு செய்த பண்டங்களின் பெறுமானம் 1500 ரூபாய். இத் தொகை கொள்வனவுக் கணக்கில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.

   மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைக் காட்டுக:

(15 புள்ளிகள்)

03.

1. காசேட்டில் உள்ள வங்கி நிலுவையானது வங்கிக் கூற்றிலுள்ள நிலுவையிலிருந் அடிக்கடி வேறுபடு வதற்கான காரணங்கள் இரண்டு தருக.

2. வங்கிக் நடைமுறைக் கணக்கின் மூலம் வியாபாரி ஒருவர் பெறும் அனுகூலங்கள் இரண்டு தருக.

3. 1990 திசெம்பர் 31 இல் இருந்தவாறான வங்கி நிலுவையைக் காட்டும் வகையில், பின்வரும் தக வல்களின் துணையுடன், சந்திரனின் வங்கி இணக்கக்கூற்றினைத் தயாரிக்க.

அ) 1990 திசெம்பர் 31 இல் காசேட்டின் வங்கி நிரலிலிருந்து வரவு நிலுவை - 12200 ரூபாய்

ஆ) காசேட்டில் இதுவரையிலும் பதிவு செய்யப்படாத வங்கிக் கட்டணங்களின் தொகை-125ரூபாய்

இ) கடன்பட்டவர் ஒருவர் வங்கியில் நேரடியாகச் செலுத்திய தொகையின் 500 ரூபாய், காசேட் டில் பதிவு செய்யப்படவில்லை.

ஈ) கடன் கொடுத்தவர்களின் பெயர்களில் 1150ரூபாய்க்கு வழங்கப்பட்ட காசோலைகள் இன்னும் அவர்களால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(15 புள்ளிகள்)

04.

1. நாட்குறிப்பேட்டிற் காணப்படும் நான்கு வகையான பதிவுகளின் பெயர்களைத் தருக.

2. நாட்குறிப்பேட்டை வைத்திருக்கும் வியாபாரி ஒருவர் பெறும் இரு அனுகூலங்களைத் தருக.

3. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

அ) 1991 பெப்ரவரி 1 - அலுவலக உபயோகத்திற்கான "மொறட்டுவ தளபாடக் கம்பனி" யிலிருந்து 5000 ரூபாய் பெறுமதியான தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

ஆ) 1991 யூன் 30 - அட்டுறு காப்புறுதி 125 ரூபாய்

அ) 1991 யூன் - பெற்ற கடன்களை தீர்த்தற்காக, பெரேரா என்பவர் 20000 ரூபாய் பெறும தியான தனது மோட்டார் காரை கம்பனிக்கு மாற்றினார்.

ஈ) 1991 யூன் 30 - ராஜாவின் கணக்கிலுள்ள வரவு நிலுவையான 500 ரூபாய் அறவிடமுடியாத தனக்கென பதிவழிக்கப்பட்டுள்ளது.

(15 புள்ளிகள்)

பகுதி II

05.

1) சிறப்புத் தேர்ச்சியை எடுத்துக்காட்டுவதற்கு இலங்கையிலிருந்து இரண்டு உதாரணங்கள் தருக?
2) வர்த்தக சேவைகளை இரண்டு பிரதான பகுதிகளாக பிரிக்கலாம், அவை யாவை?
3) பங்குடமையோடு ஒப்பிடுகையில் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிக்குரிய அனுகூலங்கள் இரண்டி னைக் குறிப்பிடுக?
4) பங்குடமையொன்று கலைக்கப்பட வேண்டிய இரு சந்தர்ப்பங்களைக் கூறுக?
5) சாதாரண பங்குகளுக்கும், முன்னுரிமைப் பங்குகளுக்கும் இடையே காணப்படும் இரு வேறுபாடுகளைக் கூறுக?
6) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றை பதிவு செயதற்குக் கம்பனிகள் பதிவாளருக்கு பல ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவற்றுள் இரண்டு ஆவணங்களின் பெயரைத் தருக?
7) மொத்த வியாபாரி ஒருவர், சில்லறை வியாபாரிக்கு ஆற்றும் சேவைகள் இரண்டினைக் கூறுக?
8) வாடகைக் கொள்வனவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் ஒருவர் பெறும் இரண்டு அனுகூலங்களைக் கூறுக?
9) சில்லறைக் கடை ஒன்றைத் தாபித்தற்கு உத்தேசிக்கும் ஒருவர் அதன் நிலையம், காணி, கட்டடங்கள் முதலானவை குறித்து ஒரு தீர்மானம் எடுத்தற்கு முன்னர், கருத்திற் கொள்ளவேண்டிய முக்கியமான இரு காரணிகளைக் குறிப்பிடுக.
10) பகுதிக் கடையொன்றின் முக்கியமான சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
11) இலங்கைக்குத் தமது சேவையை வழங்கும் வெளிநாட்டு ஆகாய விமானக் கம்பனிகள் இரண்டின் பெயர்களைத் தருக?
12) காப்புறுதி செய்து கொள்ளும் வியாபாரி ஒருவர் பெறும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
13) விளம்பரம் செய்யப்படுவதனால் நுகர்வோர் பெறும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
14) கடற் போக்குவரத்து தொடர்பில் இலங்கைத் துறைமுக அதிகார சபை நிறைவேற்றும் பணிகள் இரண் டினைக் குறிப்பிடுக?
15) போதிய தொக்குகளை களஞ்சியப்படுத்தி வைக்காததால் ஏற்படும் பாதகமான விளைவுகள் இரண்டினைத் தருக?

06.

ஜகத், சிவா, ஜபீர் ஆகிய மூவரும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காகப் பங்குடமையொன்றை அமைத்துக் கொண்டார்கள். எழுதப்பட்ட உடன்படிக்கையொன்று அவர்களிடையே இல்லை எனக் கருதிக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1) எந்த அடிப்படையில் அவர்கள் மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்?
2) ஆண்டுக்குரிய இலாபத்தை எந்த விகிதத்தில் பிரித்துக் கொள்வது என்று மூவரும் இதுவரையும் தீர்மானிக்கவில்லை. அவர்களுக்கு நீர் என்ன ஆலோசனை வழங்கலாம்?

3) வியாபார நிறுவனத்தின் முகாமைப் பணிசெய்யும் ஜகத் மாதாந்தம் 500 ரூபாவைத் தனது சம்பளமாக எடுத்துள்ளான். இக் கொடுப்பனவு தொடர்பாக உமது அபிப்பிராயம் என்ன?

4) வியாபாரத்தில் தான் இட்ட மூலதனத்திற்கு மேலதிகமாக 20000 ரூபாவை சிவா வியாபாரத்தில் முத லீடு செய்துள்ளான். ஓராண்டு காலத்திற்கு சிவாவுக்குரிய வட்டி எவ்வளவு?

5) பிரதீபன் என்பவன் ஜகத்தின் நண்பன். பிரதீபனையும் பங்குடமையிற் சேற்பதற்கு ஜகத் விரும்புகிறான். இவ்விடயம் தொடர்பில் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும்?

(15 புள்ளிகள்)

07.

1) பண்டங்களைக் களஞ்சியப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய இரு காரணிகளைக் குறிப் பிடுக:

2) பண்டசாலைக் காப்பாளர் ஒருவரின் கடமைகள் இரண்டினைக் குறிப்பிடுக:

3) பின்வருவன பற்றி சிறு குறிப்புகள் எழுதுக:
   அ) பண்டகசாலை அட்டை
   ஆ) கொள்கல அட்டை
   இ) வழங்கல் அட்டை

(15 புள்ளிகள்)

08.

1) இலங்கையிலே மூன்று மட்டங்களிலான கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றின் பெயர்களைத் தருக?

2) கூட்டுறவுச் சங்கங்களைப் பொதுக் கம்பனியுடன் ஒப்பிடுகையில் அவற்றுக்கிடையே சில ஒற்றுமைகள் இருப்பதைக் காணலாம். அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

3)
அ) கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எத்தனை உறுப்பினர்கள் தேவை?
ஆ) கூட்டுறவுக் சங்கமொன்றின் உறுப்பினராவதற்கு இருக்கவேண்டிய தகைமைகள் இரண்டினைத் தருக?
இ) கூட்டுறவுக் கம்பனியொன்றைப் பதிவு செய்தற்கான ஆவணங்கள் யாருக்கு அனுப்பவேண்டும். அவற்றை யார் ஊடாக அனுப்ப வேண்டும்?
ஈ) கூட்டுறவுச் சங்கமொன்றை பதிவு செய்தற்குத் தேவையான இரண்டு ஆவணங்களின் பெயர்களைத் தருக?

****

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 1991 டிசெம்பர்

(புதிய பாடத்திட்டம்)

வர்த்தகமும் கணக்கியலும் – I

1, 12, 90 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஜயதேவனின் வி.இ.ந. கணக்கு:

ஆரம்ப இருப்பு		23200	விற்பனைகள்	118080	
கொள்வனவுகள்	75000		உட்டிரும்பல்கள்	1200	116880
உட்சுமைக்கூலி	1200	76200			
		99400			
கழி இறுதி இருப்பு		22000			
விற்ற சரக்கின் கொள்விலை		77400			
மொ.இ.கீ.கொ. செலவு		39480			
		116880			116880
நிலைய நிர்வாகச் செலவுகள்					
வாடகையும், இறைகளும்	1050		மொ.லா.மீ.கீ.கொ வரவு	39480	
அலு. உப, தேய்வு	492		பெற்ற கழிவு	1440	40920
எழுதுகருவி வகை	400				
சம்பளம்	16900				
தொலைபேசி கட்டணம்	240	19082			
வி.வி. செலவுகள்					
ஜயக் கடன் ஏற்பாடு	110				
விநியோக வண்டி தேய்மானம்	5000				
அ.மு.கடன்	40	5150			
நிதிச் செலவுகள்					
வங்கிக்கட்டணம் தேறியஇலாபம்	120	120			
		16568			
		40920			40920

31.12.90 ல் உள்ளவாறான ஜயதேவனின் ஐந்தொகை.

விபரம்	ரூபா	ரூபா	நிலையான சொத்து	கொ.வி	தீ.பெ.தே	தே.வீ.
மூலதனம்	64000		அலுவலக உபகரணம்	9840	492	9348
தே. லாபம்	16568		விநியோகவான்	50000	5000	45000
	80568					54348
-) பற்றுக்கள் (எடுப்பனவுகள்)	3200	77368	**நடைமுறைச்சொத்து**			
			இ.இருப்பு 31.12.90		22000	
நடைமுறைப் பொறுப்பு			க.்.பட்டோர்	7760		
க/கொடுத்தோர்	8000		-) ஐ.க. ஏற்பாடு		7470	
அட்டுறுவாடகையும் இறையும்	250	8250	காசு		600	
			வங்கி நிலுவை		1200	31270
		85618				85618

02.

1) அ) கணக்கு மாறிப் பதிதல் (பிழையான பக்கம்)
ஒரு பக்கப் பதிவு மட்டும் பதியப்படல்

ஆ) ஈடுசெய் வழுக்கள்.
முற்றாக பதியப்படாத பதிவுகள்.
இரட்டிப்பு வழுக்கள், (வரவுப்பக்கம், செலவுப்பக்கம் இரண்டிலும் இரு மடங்கு தொகை பதியப்படுதல்)

2) அ) கொள்வனவுக் கணக்கு வரவு 150/=
தொங்கல் கணக்கு செலவு 150/=
(கொள்வனவுக் கணக்கு குறைக்கப்பட்ட 150/= தொகையானது கூட்டிப் பதியப்பட்டுள்ளது)

ஆ) வாடகைக் கணக்கு வரவு 90/=
தொங்கல் கணக்கு செலவு 90/=
(குறைத்து எழுதப்பட்ட வாடகைக் கணக்கு கூட்டிக்காட்டப்பட்டுள்ளது)

இ) தொங்கல் கணக்கு வரவு 1500/=
சில்வா கணக்கு செலவு 1500/=
(செலவு வைக்கப்படாத 1500/= தொகை சில்வா கணக்கில் இடப்பட்டுள்ளது)

03.

1) * வங்கி மேற் கொள்ளும் சில செயற்பாடுகள் காசேட்டில் இடம் பெறாத போது.
உதாரணமாக:- நிலையான கட்டளையின் பேரில் செலுத்தும் மின்சாரக் கட்டணம். காப்புறுதி போன்றன.

* நேரடியாக சில வாடிக்கையாளர்கள் வங்கியில் வைப்புச் செய்யும் போது இத்தகைய சந்தர்ப்பத்தில் காசேட்டில் பதிவு இடம் பெறாது. இதனால் காசேட்டு மீதி வங்கிக் கூற்றிலுள்ள மீதியுடன் வேறுபடும்.

* வங்கி அறவிட்டுக் கொள்ளும் காசோலைப் புத்தக கட்டணம், வங்கிக்கூலி என்பன காசேட்டில் பதியப்படாத போதிலும், மீதி வேறுபட்டுக் காணப்படும்.

* மாற்றப்படாத காசோலைகளினாலும்.

* வசூலிக்கப்படாத காசோலைகளினாலும், காசேட்டு மீதி வங்கிக்கூற்று மீதியுடன் வேறுபட்டுக் காணப்படும்.

2) * வங்கி மேலதிக பற்று வசதியினைப் பெறமுடியும்.

* பாதுகாப்பாக காசோலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

3) **31.12.90 ல் வங்கிக் கணக்கு இணக்கக்கூற்று:**

காசேட்டின்படியான வங்கி மீதி		12,200
கூட்டுக: கடன்பட்டோர் நேரடியாக கட்டியது	500	
சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்	1500	1,650
		13,850
கழிக்குக: வங்கிக் கட்டணம்	125	(125)
வங்கிக் கூற்றுமீதி (31.12.90ல்)		13,725

4.

1) கொள்வனவு, விற்பனை, உட்திரும்பல், செவித்திரும்பல்

2) * சிக்கலான கொடுக்கல், வாங்கல் பற்றியும், அக் கொடுக்கல், வாங்கல் பதியும் முறை பற்றியும் பொதுத் தினசேரிப் பதிவுகள் தெளிவாக விளக்குகின்றன.

* ஒவ்வொரு கொடுக்கல், வாங்கல் பற்றியும், நிகழ்ச்சி பற்றியும் விளம்பரம் தொடுக்கப்படுவதால் அவை தொடர்பாக பேரேட்டில் பதியப்பட்ட வரவு அல்லது செலவுப்பதிவுகள் பற்றிய விபரங்களை அறிய நாட்குறிப்பேடு உதவும்.

* கடந்தகால கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரம் தேவைப்படும் இடத்து நாட்குறிப்பேட்டை ஒரு மூலாதாரமாக பயன்படுத்த முடியும்.

* பேரேட்டுக்கு மாற்றுமிடத்து ஏற்படக் கூடிய வழுக்களையும், நேர்மையீனங்களையும், நாட்குறிப்பேட்டை ஒப்பிடுவதன் மூலம் பிழைகளை இனங்கான முடியும்.

3) அ) தளபாடக் கணக்கு வரவு - 5000/=
மொறட்டு தளபாடக் கம்பனிக்கணக்கு செலவு - 5000/=

ஆ) காப்புறுதிகள் கணக்கு வரவு - 125/=
அறுட்டுக் காப்புறுதி கணக்கு செலவு - 125/=

இ) மோட்டார் வான் கணக்கு வரவு - 20,000/=
பெரேரா கணக்கு செலவு - 20,000/=

ஈ) அ.மு. கடன் கணக்கு வரவு - 500/=
ராஜா கணக்கு செலவு - 500/=

05.

1) சிறப்புத் தேர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவதால் ஏற்படும் தேர்ச்சியே அல்லது சிறந்த அனுபவமே இது ஆகும்.
உதாரணமாக:- பெருந்தோட்டக் கைத்தொழில்.

2) வியாபாரம், துணைச்சேவை

3) ✪ மூலதனம் பெருமளவு திரட்டும் வாய்ப்புண்டு.
✪ நீடித்தவாழ் உடையது.
✪ நிர்வாகம், கணக்காய்வுக் கட்டத்தின் படி இடம் பெறுவதால், திறமையான முறையில் இயங்கும் வாய்ப்புண்டு.
✪ பங்குதாரரான பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கும்.
✪ மேலதிக மூலதனம் தேவைப்படின் திபெஞ்சர்களை வழங்குவதன் மூலமும் நிதி திரட்ட முடியும்.

4) ✪ பங்குடமை நட்டத்தில் இயங்குமாயின்.
✪ பங்குடமையைக் கலைக்குமாறு பங்காளிகள் எழுத்து மூலம் சமர்ப்பித்தார்.
✪ பங்காளி ஒருவர் முறிவடைந்தால்.
✪ பங்காளி ஒருவர் சித்தசுவாதீனமுற்றால்.
✪ பங்குடமை சட்ட விரோதமானது எனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில்.

5)	சாதாரண பங்குகள்	முன்னுரிமைப் பங்குகள்
☆	இலாபம் குறித்து வழங்கப்படுவது இல்லை.	குறிக்கப்பட்ட வீத இலாபம் குறித்து வழங்கப்படும்.
☆	உரிமைப் பங்குகளாகக் கருதப்படும்.	கடன் போன்றே தரப்படும்.
☆	இலாபம் கூடினால், இலாபப் பங்கும் கூடும்.	இலாப அளவு மாறாது.
☆	வாக்களிக்கும் உரிமையுண்டு.	உரிமையில்லை.
☆	இடைக்காலப் பங்குலாபம் கிடைக்கும்.	கிடைக்கமாட்டாது.
☆	கம்பனியில் நிர்வாகத்தை தேர்ந்தெடுக்க உரிமையுண்டு.	உரிமையில்லை.

6) ✎ கூட்டுப்பத்திரம்
✎ நியதிச் சட்ட அறிக்கை (கூட்டுச் சட்டக்கோவை)
✎ கம்பனியின் உறுதியுரை
✎ கம்பனி அமையும் மாவட்டம்
✎ இயக்குனர் விபரம் (அவரது சம்மதமும், உறுதியுரையும்)
✎ இயக்குனர் பெயர்ப்பட்டியல்

7) ✎ கடன் வசதியளித்தல்
✎ விளம்பரம் செய்தல்
✎ தேவைக்கேற்ப பொருட்களை சில்லறை வியாபாரிக்கு விநியோகிப்பதால், சில்லறைவியாபாரிக்கு களஞ்சிய வசதியில்லை.
வியாபாரக்கழிவு, காசுக்கழிவு என்பவற்றைக் கொடுத்து வியாபாரத்தை ஊக்குவிப்பார்.
✎ புதிய பொருள்களை அறிமுகம் செய்து கொடுப்பார்.

8) ✯ பெறுமதி கூடுதலான பொருட்களையும் வாங்கும் வசதி.
✯ பெறுமதியை மாதாந்தம் செலுத்தலாம்.
✯ வருமானம் குறைந்த பிரிவினரும் இம் முறையுடன் கீழ் பொருட்களைப் பெறும் வாய்ப்பு உண்டு.

9) ✯ சன நெருக்கடி உள்ள இடமாகவும்; வருமானம் கூடிய மக்கள் வாழும் இடமாகவும் இருக்கும்

இடத்தை தேர்வு செய்தல்.

- ✯ எத்தகைய வியாபாரத்தை மேற்கொள்ளல் எனத் தீர்மானித்தல் வேண்டும்.
- ✯ எந்தக் காலத்தில் எந்தப் பொருட்களை விற்கமுடியும் என அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
- ✯ போட்டியாளர் பற்றித் திட்டமிட வேண்டும்.

10) ✯ ஒவ்வொரு வகைப் பொருட்களுக்கும் எனதனித் தனி பிரிவுகள் காணப்படுதல்.
- ✯ பலவகையான பொருட்கள் விற்பனைக்கிருத்தல்.
- ✯ ஒரே கூரையின் கீழ் பலவகையான பொருட்கள் இருத்தல்.
- ✯ நகர் புறங்களிலேயே இது பெரும்பாலும் அமைந்து காணப்படும்.

11) கே.எல்.எம் பிரிட்டிஸ் எயர்வேய்ஸ், சுவிஸ்எயர், சிங்கப்பூர் எயர்லையின்ஸ்.

12) இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் நட்ட ஈட்டைப் பெறும் வாய்ப்பு தொடர்ந்தும் வியாபாரத்தில் தோல்வியின்றி மேற்கொள்ள முடியும்.

13) ✷ பொருட்களின் பயன்பாடு, பொருட்களின் தன்மை, என்பவற்றை அறிய முடியும்.
- ✷ பொருட்களை வழங்குவோர், வழங்கும் விசேட சலுகைகள், விலைக்குறைவுகள், என்பவற்றை அறிய முடியும்.
- ✷ போலிக் பண்டங்களை இனம் காண முடிதல்.

14) ✷ கப்பல்களும் பண்டங்களை ஏற்றுதலும், இறக்குதலும்.
- ✷ துறைமுக மேடைகளைப் பராமரித்தல்.
- ✷ துறைமுக வளாகத்துள் புகைவண்டிச் சேவையை நடாத்துதல்.
- ✷ கப்பல்களுக்கு தேவையான வசதிகளைச் செய்தல்.

15) ✷ உற்பத்தி தடைப்படும்.
- ✷ பணியாட்கள் வேலையின்றி இருக்க நேரிடும்.
- ✷ போட்டி நிறுவனங்களுடன் தொடர்ந்தும் நிலைக்க முடியாது போகலாம்.
- ✷ சந்தை வாய்ப்பை இழக்க நேரிடும்.
- ✷ கூடிய விலை கொடுத்து வாங்க நேரிடும்.

06.

1) உடன் படிக்கை இல்லாதவிடத்து, மூலதனம் சமமாக இடப்படுதல் வேண்டும்.

2) சமமாக மூலதனம் இடப்பட்டிருந்தால், இலாபம் சமனாகவும் அல்லது மூலதன விகிதப்படி இலாபம் பிரிக்கப்படலாம்.

3) உடன்படிக்கையில் கூறப்படாத இடத்து முகாமைச் சம்பளம் பெற "ஜகத்" திற்கு உரிமையில்லை. ஆகவே இத்தொகை பற்றாக கருதப்படும்.

4) 100/=

5) மற்றைய இலாபங்களிலும் விரும்பினால், மூலதனத்தையிடுவதன் மூலம் (பழைய பங்காளிகள் இட்ட அளவுக்கு) பங்காளியாகச் சேரமுடியும்.

07.

1) ✡ பொருட்களின் தன்மைக்கேற்ப, அவற்றின் தரம் கெடாமல் பாதுகாப்பாக அடுக்கி வைத்தல் வேண்டும்.
- ✡ அடிக்கடி எடுக்கும் பொருட்களை, விரைவில் எடுக்கக்கூடியதாக அடுக்கி வைத்தல்.
- ✡ தீப்பற்று, களவாடப்படல், ஊழியர் மோசடி என்பன நடைபெறாவண்ணம் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.
- ✡ பண்டங்களை களஞ்சியப்படுத்தும் போது, மூலப் பொருட்கள் இடைநிலைப் பொருட்கள், முடிவுப் பொருட்கள் என பாகுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- ✡ பெறுமதியான பண்டங்களை பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும்.

2) ✡ களஞ்சியத்துக்கு வந்து சேரும் பண்டங்களின் படிவங்களுக்கேற்ப அவற்றை பரிசீலனை செய்து பொறுப்பேற்றல்.
- ✡ பொருத்தமான இடத்தில் பொருத்தமான முறையில் அடுக்கி வைத்தல்.
- ✡ அவை தொடர்பான பதிவுகளைப் பேணுதல்.
- ✡ கட்டளைகளுக்கேற்ப பொருட்களை விநியோகித்தல்.
- ✡ பொருட்களின் தரம் கெடாமல் அவற்றுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

3) **பண்டகசாலை அட்டை:**

களஞ்சியமொன்றில் வைக்கப்படும் ஒவ்வொரு வகை பண்டத்துக்கும், வெவ்வேறாக இந்த அட்டை வைக்கப்பட்டிருக்கும்.

இவ்வட்டையில்

பண்டத்தின் பெயர், வகை, குறியீட்டு இலக்கம், தரம் திகதி, கிடைத்தளவு விநியோக அளவு போன்றன காணப்படும்.

ஆ) **கொள்கல அட்டை:-**

இ) **வழங்கல் அட்டை:-**

களஞ்சியங்களிலிருந்து பண்டங்கள் விநியோகிக்கப்படுவது எழுத்துருவிலான கட்டளையின் மீதாகும். அவ்வாறான கட்டளை "பண்டங்கள் வழங்கல்" கட்டளை எனப்படும். இக் கட்டளை நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற அலுவகர் ஒருவரினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இப் பத்திரத்தில், அதன் இலக்கம், திகதி, பண்டங்களின் விபரம், அளவு, யாருக்கு வழங்கப்படவேண்டியது போன்ற விடயங்கள் இடம் பெறும்.

08.

1) பிரதேச மட்டத்திலான சங்கங்கள்.
மாவட்டமட்டத்தினாலான சங்கங்கள்.
தேசிய மட்டத்தினாலான சங்கங்கள்.

2) கட்டாயமாக பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.
கட்டாயமாக கணக்காய்வுகள் செய்யப்படுதல் வேண்டும்.
உறுப்பினர்களால் இயக்குனர் சபை தெரிவு செய்யப்படுதல்.

3) அ) ஆகக் குறைந்தது 10 பேர்.

ஆ) (i) 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(ii) அசையாத சொத்துக்களை கொண்டிருத்தல் வேண்டும்.
(iii) குறித்த ஒரு பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
(iv) தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்.

இ) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு.
கூட்டுறவுச் சங்க பரிசோதகர் ஊடாக.

ஈ) ✡ பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்.
✡ கூட்டுறவு சங்கத்தின் சட்டதிட்டக் கோவையின் இரட்டைப்பதிவுகள்.
✡ நடைபெற்ற கூடங்களின் அறிக்கை பற்றிய விபரம்.
✡ சங்கத்தின் கடந்த கால நிதியறிக்கைகள்.
✡ சங்கத்தின் அமைவிடம், இந்த இடத்துக்குச் செல்லும் வழியைக் காட்டும் வரைபடம்.

முற்றும்.

****

கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, டிசெம்பர் 1990
GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD.LEVEL) EXAMINATION, DECEMBER - 1990

(91) வர்த்தகமும் கணக்கியலும் I ஒரு மணி

(91) **COMMERCE AND ACCOUNTS** **I** **ONE HOUR**

கவனிக்க: (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
(11) 1முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளுள் மிகப் பொருத்தமானது என்று நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க:
(111) விடைத்தாளில், உமது தெரிவுக்கு ஒத்த எண்ணின்மீது பென்சிலால் புள்ளடி (✖) இடுக.

1. இலங்கையிலே "முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்" ஒன்றில் காணக்கூடிய மிக முக்கிய இயல்பு என்ன?
(1) வருமான வரி செலுத்துவதிலிருந்து எல்லா முதலீட்டாளருக்கும் விலக்களிக்கப்பட்டுள்ளமை.
(2) எல்லாக் கைத்தொழில்களும் ஏற்றுமதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளமை.
(3) இவ்வலயங்களில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை.
(4) இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழிலிகளில் மட்டுமே முதலீடு செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை.

2. பின்வருவனவற்றிலிருந்து பதிலீட்டுப் பண்டங்களுக்கான சரியான உதாரணத்தைத் தெரிவு செய்க.
(1) தேயிலையும், சீனியும் (2) கோப்பையும், பீரிசும்
(3) கொழுப்பெண்ணையும் எண்ணெயும் (4) ஊற்றுப் பேனாவும் குமிழ் முனைப் பேனாவும்

3. "பிரதேச சிறப்பு தேர்ச்சி"யை எடுத்துக் காட்டும் மிகப் பொருத்தமான செயற்பாட்டைத் தெரிவு செய்க.
(1) இரத்தினபுரியிலுள்ள இரத்தினக் கைத்தொழில்
(2) கடலில் மீன் பிடித்தல்.
(3) இலங்கையிலுள்ள உடைகளை ஏற்றுமதி செய்தல்.
(4) இலங்கையில் உல்லாசப் பயணம்.

4. சிற்றளவு உற்பத்தியாளர் ஒருவர் தமது உற்பத்திப் பொருள்களை நுகர்வோரிடையே விநியோகிக்க விரும்புகிறார். மிகப் பொருத்தமான முறை யாது?
(1) மொத்த வியாபாரிகளூடாக விநியோகம் செய்வது.
(2) தீவின் பல்வேறு பாகங்களிலுமுள்ள முகவர்கள் ஊடாக விநியோகம் செய்வது.
(3) சில்லறை வியாபாரிகளூடாக விநியோகம் செய்வது.
(4) நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்வது.

5. சில்லறை வியாபாரிகள் பல்வேறு பணிகளை நிறைவேற்றுகின்றனர். அவற்றுள் நுகர்வோருக்கு மிக முக்கியமானது எது?
(1) வாடிக்கையாளரது இல்லங்களிற் பண்டங்களை ஒப்படைப்பது.
(2) வாடிக்கையாளரது தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப பண்டங்களை வழங்குவது.
(3) சந்தை தொடர்பான தகவல்களை உற்பத்தியாளருக்கு வழங்குவது.
(4) வாடிக்கையாளருக்கு பண்டங்களைக் கடனுக்குக் கொடுப்பது.

6. விற்பனை செய்யுமிடத்தைப் பொறுத்தமட்டிலே பின்வருவனவற்றுள் மிகச்சிறந்த சோடி எது?
(1) மருந்து வகைகள் - ஞாயிறு சந்தை
(2) கார்கள் - மீன்சந்தை (சுப்பர் மார்க்கற்)
(3) மீன் - நடைபாதை
(4) ஐஸ்கிறீம் - கிரிக்கற் விளையாட்டரங்கு

7. பேரளவுச் சில்லறைக் களஞ்சியம் ஒன்றைத் தாபிப்பதற்கான சிறந்த இடம் எது?
(1) போதிய இடவசதியுள்ள ஓரிடம்.
(2) வதிவிடங்களுள்ள ஓரிடம்.
(3) சனத்தொகை செறிவாகவுள்ள ஓரிடம்.
(4) துறைமுகத்துக்கு அண்மையிலுள்ள ஓரிடம்.

8. மொத்த வியாபாரி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க?
(1) மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரிகளுக்கு மட்டுமே பண்டங்களை விற்பனை செய்வோர்.
(2) மொத்த வியாபாரி, பண்டங்களை பெருந்தொகையாக மட்டுமே விற்பனை செய்வோர்.
(3) உற்பத்தியாளர் தமது பணிகளைத் தடையின்றி செய்வதற்கு மொத்த வியாபாரி உதவுவார்.
(4) மொத்த வியாபாரி காசுக்கு மட்டுமே பண்டங்களை விற்பனை செய்வார்.

9. பண்டங்களை நிலையான விலைகளில் மொத்த வியாபாரி விற்பனை செய்ய விரும்பினால்.
(1) தடையின்றி விநியோகம் செய்வதற்குப் போதிய அளவு பண்டங்கள் அவருடைய கையிருப்பில் இருத்தல் வேண்டும்.
(2) முன்னரிலும் கூடுதலாக அவர் பண்டங்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.
(3) விலைகள் குறைவாக இருக்கும் போது மட்டுமே அவர் பண்டங்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.
(4) பண்டங்களை விநியோகம் செய்வதற்கு அவர் தமக்குச் சொந்தமான வாகனங்களை வைத்திருத்தல் வேண்டும்.

10. பின்வரும் கூற்றுக்கள் இலங்கையின் ஏற்றுமதிகள் சம்பந்தமானவை. சரியான கூற்று எது?
(1) எமது ஏற்றுமதிகளில் கோதுமை மா முக்கியமானதோர் உருப்படியாகும்.
(2) ஏற்றுமதி செய்வதை பிரதான நோக்காகக் கொண்டே இலங்கையில் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது.
(3) அண்மை ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தொழில் பொருள்களின் பெறுமானமானது ஏற்றுமதி செய்யப்பட்ட விவசாய பொருள்களின் பெறுமானத்திலும் கூடுதலாக இருந்தது.
(4) அரச நிறுவனங்களுக்கு மட்டுமே ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு இலங்கையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

11. பண்டங்கள் துறைமுகத்தை வந்தடைந்தவுடன் இறக்குமதியாளர் அல்லது அவரது முகவர், சுங்கப்பகுதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணம் என்ன?
(1) தரவானை (தருவிக்கும் பொருட் பட்டியல்) (2) ஒரு பதிவு
(3) கப்பல் அறிக்கை (4) தோற்றுவாய்ச் (மூல நாட்டுச்) சான்றிதழ்

12,13,14 ஆகிய வினாக்களுக்கு விடையளித்தற்குப் பின்வரும் தலைப்புக்களைப் பயன்படுத்துக:
A - அனுப்பும் முகவரி **B** - ஏலவிற்பனையாளர்
C - தரகர் **D** - காரணிகள்

12. முதல்வர் சார்பிலே பண்டங்களையோ, சொத்துக்களையோ விற்பனை செய்து பணிசை பெறுவது யார்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

13. முதல்வர் சார்பிலே பொதிகளைச் சேகரித்து, பண்டங்களைக் பொதிகளாகக் கட்டி உரியவர்களிடம் ஒப்படைப்பது யார்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

14. தான் நிறைவேற்றும் பணிகள் தொடர்பாகக் கூடுதலான அதிகாரங்களையுடைய முகவர் யார்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

15. பின்வரும் கூற்றுக்களிலிருந்து கேள்வி முறைமையுடன் தொடர்புடைய கூற்றினைத் தெரிவு செய்க:
(1) விவசாய விளைப்பொருள்களை விற்பனை செய்வதற்கு இதுவே மிகப் பொருத்தமான முறைமை.
(2) தமது பண்டங்களை விற்பனை செய்வதற்கு வியாபாரிகள் இந்த முறைமையினை விரும்புவர்.
(3) மூலப் பொருள்களைக் கொள்வனவு செய்தற்கு உற்பத்தியாளர் இதுவே சிறந்த முறைமை எனக் கருதுவீர்.
(4) கூறு விலைகளை இரகசியமாக வைத்திருப்பதற்கு இம்முறைமையினைப் பயன்படுத்தலாம்.

16. இது பணத்தினது அத்தியாவசியமான இயல்பாகும்.
(1) சமூகத்தினாற் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை.
(2) பெறுமானக் களஞ்சியமாக இருக்கும் வல்லமை.
(3) நீடித்த உழைக்கும் தன்மை.
(4) பண்டங்களைக் கொள்வனவு செய்யக்கூடிய ஆற்றல் உள்ளமை.

17. பிரபலமான பொருள்களைக்கூட மீண்டும் விளம்பரஞ் செய்யவேண்டிய அவசியம் உற்பத்தியாளருக்கு அடிக்கடி நேரிடுகிறது. இதற்கான காரணம்.
(1) தமது உற்பத்திப் பொருள்கள் பற்றி உற்பத்தியாளர் பொதுமக்களுக்கு கிரமமாக அறிவூட்ட வேண்டியமை.
(2) ஒவ்வோராண்டும் குறிப்பிட்டதொரு தொகை விளம்பரஞ் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்படு கின்றமை.
(3) பிரபலமான பொருள்களோடு போட்டியிடுதற்கு, அதைப் போன்ற புதிய பொருள்கள் சந்தையில் அறிமுகஞ் செய்யப்படுகின்றமை.
(4) ஏனைய உற்பத்தியாளரும் தமது உற்பத்திப் பொருள்களை விளம்பரஞ் செய்கின்றமை.

18. நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் ஒருவர், குறுந் தவணைக் கடனிலும், பார்க்க வங்கி மேலதிகப் பற்று ஒன்றினை விரும்புவதற்குக் காரணம் என்ன?
(1) வங்கி மேலதிகப்பற்றைப் பெறுவதற்கு ஆவணங்கள் தேவையில்லை.
(2) வட்டி செலுத்த வேண்டிய அவசியம் இல்லாமை.
(3) மேலதிகப்பற்றைத் தீர்ப்பது சம்பந்தமான பொறுப்பு குறைவாகவுள்ளமை.
(4) இம்முறையின் மூலம் பெருந் தொகையைப் பெறக் கூடியமை.

19. பங்குடமையோடு ஒப்பிடுகையிலே, பின்வரும் கூற்றுக்களில் தனி வியாபாரிக்கு பிரதிகூலமாக அமைவது எது?
(1) வியாபாரத்தின் பரிப்பு, (பொறுப்பு) வரையறையுடையதாகும்.
(2) வியாபாரத்தை விரிவாக்குவதற்கு அவசியமான மேலதிக மூலதனத்தைப் பெறும் வாய்ப்புகள் வரையறுக்குட்பட்டவை.
(3) வியாபாரமானது தொடர்ந்து நடைபெறுவது நிச்சயமில்லை.
(4) முகாமையாளரால் எடுக்கப்படும் முடிவுகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சரியானவையாக இருக்கின்றமை.

20. இலாபமீட்டித்தராத அரசக் கூட்டுத்தாபனங்கள் பொருளாதாரத்தைப் பாதகமான முறையிற் பாதிப்பதனால், அந்நிலைமையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யாது?
(1) அத்தகைய அரசக் கூட்டுத்தாபனங்கள் மூடி விடுவது.
(2) புதிதாக, அரசக் கூட்டுத்தாபனங்களைத் தாபிக்காமல் இருப்பது.
(3) கூட்டுத்தாபனங்களை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பது.
(4) கூட்டுத்தாபனங்களை மக்கள் மயமாக்குவது.

21. வியாபாரத் தாபனமொன்றின் சொத்துக்களைக் கோர முடிவது.
(1) வியாபாரத் தாபனத்தின் உள்ளக உரிமையாளரினால் மட்டுமே.
(2) நெடுந் தவணைக் கடன் வழங்குபவரினால் மட்டுமே.
(3) வியாபாரத் தாபனத்தின் கடன்கொடனரினால் மட்டுமே.
(4) சொத்துக்களைக் கொள்வனவு செய்தற்கு நிதி வழங்கியவர்களினால்.

22. பின்வருவனவற்றுள் சரியான சமன்பாட்டைத் தெரிவு செய்க.
(1) மூலதனம் + பரிப்புகள் (பொருப்புகள்) = தேறிய சொத்துக்கள்
(2) சொத்துகள் - பரிப்புகள் = மூலதனம்
(3) மூலதனம் = சொத்துகள் + பரிப்புகள்
(4) பரிப்புகள் = மூலதனம் + நடைமுறைச் சொத்துக்கள்

23. ஐந்தொகை தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. மிகப் பொருத்தமான கூற்று யாது?
(1) குறிப்பிட்டதொரு நேரத்திலுள்ள சொத்துக்களினதும், பரிப்புக்களினதும் பெறுமானங்களை ஐந்தொகையில் காட்டப்படுகின்றன.

(2) வியாபாரத் தாபனமொன்றின் சகல கொடுக்கல் வாங்கல்களும் ஐந்தொகையிலே பதிவு செய்யப்படுகின்றன.
(3) வியாபாரத் தாபனமொன்றின் நிலையான சொத்துக்களையும் நடைமுறைப் பரிப்புக்களையும் காட்டுவதற்கே இக்கூற்று தயாரிக்கப்படுகின்றது.
(4) குறிப்பிட்டதோர் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களையும் ஏற்பட்ட பரிப்புக்களையும் காட்டுவதற்கு இக்கூற்று தயாரிக்கப்படுகின்றது.

24. சொத்துக்கள், பரிப்புகள் ஆகிய இரண்டினதும் தொகையையும் குறைக்கும் கொடுக்கல் வாங்கல் யாது?
(1) ராஜா கம்பனியிலிருந்து 2, 500 ரூபாய்க்குப் பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை.
(2) 3, 500 ரூபா பெறுமதியான சொத்து 3, 600 ரூபாய்க்கு விற்கப்பட்டமை.
(3) தனது சொந்த உபயோகத்திற்காக உரிமையாளரால் 1,900 ரூபாய்க்குத் தாபனத்திலிருந்து எடுக்கப்பட்டமை.
(4) 1,600 ரூபா காசு கொடுத்துப் பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை.

25. நடைமுறைச் சொத்துக்கள் மட்டும் கொண்டிருக்கும் தொகுதியைத் தெரிவு செய்க:
(1) சில்லறைக் கடன்படுனர், ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு, கையிருப்புக் காசு.
(2) காலாவதியாகாத காப்புறுதி, சில்லறை கடன்படுனர், வங்கியிலுள்ள காசு.
(3) வங்கிக்கடன், அட்டுறு இறைகள், சென்மதி உண்டியல்.
(4) காலாவதியாகாத காப்புறுதி, சில்லறைக் கடன்கொடுனர், வங்கியிலுள்ள காசு.

26. வங்கிக் கூற்றிலே காட்டப்படாத உருப்படி எது?
(1) வங்கிக் கட்டணங்கள்
(2) வங்கிக்கு நேரடியாக அனுப்பும் பணம்
(3) வைப்புச் செய்யப்பட்ட ஆனால் இன்னும் தேறாத காசோலைகள்.
(4) கொடுப்பனவு செய்தற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள்

27. காசு ஏட்டிலே பதிவு செய்யப்படாத உருப்படி.
(1) வியாபாரக் கொடுக்கல் வாங்கலுக்காகத் தரகர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் பணிசை.
(2) திருப்பியனுப்பப்பட்ட கௌரவிக்கப்படாத காசோலை
(3) வியாபாரக் கழிவீடு
(4) நிலையான கட்டளைக்கேற்ப வங்கி செலுத்தும் கொடுப்னவுகள்.

28. அனேக வியாபார நிறுவனங்கள், ஒன்றிற்கு மேற்பட்ட பேரேடுகளை வைத்திருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?
(1) வியாபாரம் விரிவடைவதனால் வியாபார நிறுவனத்தின் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பது.
(2) கூடுதலான பேரேடுகளை வைத்திருப்பது சுலபமாகும் என்பது.
(3) ஒன்றிற்கு மேற்பட்ட பேரேடுகளை கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்பது.
(4) கணக்குப் பதிவாளரின் எண்ணிக்கைக்கு ஏற்ப பேரேடுகளைக் கூடுதலாக வைத்திருத்தல் வேண்டும் என்பது.

29. கணக்குகளைப் பதிவு செய்வதில் வழுக்கல் இடம்பெற்றால், பின்வருவனவற்றுள் ஒன்றினைப் பிழையின்றித் தயாரிக்க முடியாது. அது எது?
(1) பரீட்சை நிலுவை (2) கொள்வனவு நாட்குறிப்பேடு
(3) ஐந்தொகை (4) நாட்குறிப்பேடு

30. வியாபாரக் கடன்கொடுனர் ஒருவர் வியாபாரத் தாபனத்துடனான அவருடைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றி தகவல்கள் கேட்கிறார். தேவையான தகவல்களை எங்கிருந்து நீங்கள் பெறலாம்?
(1) பரீட்சை நிலுவை (2) கொள்வனவு நாட்குறிப்பேடு
(3) ஐந்தொகை (4) நாட்குறிப்பேடு

31. வியாபாரத் தாபனமொன்று தனது உத்தியோகத்துக்காக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களைக் கடனுக்கு கொள்வனவு செய்தது. இந்தக் கொடுக்கல் வாங்கலை நீர் எங்கே பதிவு செய்வீர்?
(1) பரீட்சை நிலுவை (2) கொள்வனவு நாட்குறிப்பேடு
(3) ஐந்தொகை (4) நாட்குறிப்பேடு

32. காசு ஏட்டிலுள்ள அனுமதிக்கப்பட்ட கழிவீட்டு நிரலின் மொத்தத் தொகையானது பிழையேதுமின்றி, அனுமதிக்கப்பட்ட கழிவீட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. எனினும் இரட்டைப் பதிவினைப் பூர்த்தி யாக்கும்போது 400 ரூபா பெறுமதியான உருப்படி ஒன்று விடுபட்டுவிட்டது. இந்த வழுவினைத் திருத்து வதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவினைத் தெரிவு செய்க:

(1)	கடன்படுனர் கணக்கு	வரவு ரூபா 400	
	அனுமதிக்கப்பட்ட கழிவீடு		ரூபா 400
(2)	தொங்குக் கணக்கு	வரவு ரூபா 400	
	கடன்படுனர்		ரூபா 400
(3)	அனுமதிக்கப்பட்ட கழிவீட்டுக் கணக்கு	வரவு ரூபா 400	
		வரவு ரூபா 400	
	கடன்படுனர் கணக்கு		ரூபா 400

தொங்கல் கணக்கு	வரவு	ரூபா 400
காசேடு		ரூபா 400

33. வருமானத்தை ஈட்டித்தரும் செலவினமாகக் கருதக்கூடிய கொடுக்கல்வாங்கலை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:
(1) பொறிகளை இறக்குமதி செய்வதில் போக்குவரத்துச் செலவாகக் கொடுக்கப்பட்ட 1,500 ரூபாய்
(2) பொறிகளின் வினைத்திறனை மேம்படுத்தற்குப் பொருத்தப்பட்ட துணைக் கருவிகளுக்குச் செலவான 25,000 ரூபாய்
(3) மோட்டார் வான்வண்டியிலிருந்து பதிவழிக்கப்பட்ட தேய்மானமான 2,800 ரூபாய்
(4) மின் வழங்கல் தடைப்படும் சந்தர்ப்பத்தில் உபயோகித்தற்காக 35,000 ரூபாய் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி.

34. பின்வருவனவற்றிலிருந்து பிழையான கூற்றினைத் தெரிவுசெய்க:
(1) ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.
(2) செம்மையாக்கங்கள் கருத்திற் கொள்ளப்படாவிட்டால் பரீட்சை நிலுவையின் மொத்தத் தொகைகள் இணங்க மாட்டா.
(3) ஒரு வியாபாரி ஓர் ஐந்தொகையை எந்த நேரத்திலும் தயாரிக்கலாம்.
(4) இலாப, நட்டக் கணக்கில் வரவு நிலுவையோ செலவு நிலுவையோ இருக்கலாம்.

35. "பொறியொன்றின் கிரயம்" என்பதிலிருந்து நீர் என்ன அறிந்து கொள்கிறீர்?
(1) பொறியினது வியாபார நிலையத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பட்ட போக்குவரத்துச் செலவு யாவும்
(2) பொறியை வாங்குவதற்குச் செலுத்திய விலை
(3) பொறியின் கொள்விலை உட்பட அதனைப் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு தாபிப்பதற்கு ஏற்பட்ட செலவுகள் யாவும்
(4) பொறியின் கொள்விலையிலிருந்து எஞ்சிய பெறுமதியைக் கழித்த பின்னர் உள்ள நிலுவை.

36. பொறியின் பெறுமானம் (கொள்விலையில்) 50,000/= ரூபாயாகும்.
89.03.31 இல் உள்ளவாறு தேய்மானத்துக்கான மொத்த ஏற்பாடு 25000 ரூபாயாகும். 90.04.01 இல் இது தொடர்பாக நாட்குறிப்பேட்டிலே காட்டப்பட்டுள்ள தொடக்கப் பதிவு என்ன?

(1)	பொறி வரவு நிலுவை	ரூபா 50 000		
	தேய்மானத்துக்கான ஏற்பாடு-செலவு நிலுவை		ரூபா	30,000
(2)	பொறி-வரவு நிலுவை	ரூபா 50 000		
	தேய்மானத்துக்கான ஏற்பாடு-செலவு நிலுவை		ரூபா	25,000
(3)	பொறி-வரவு நிலுவை	ரூபா 20 000		
	தேய்மானத்துக்கான ஏற்பாடு-செலவு நிலுவை		ரூபா	5,000
(4)	பொறி-வரவு நிலுவை	ரூபா 20 000		
	தேய்மானத்துக்கான ஏற்பாடு செலவு நிலுவை		ரூபா	30,000

37. 1988.12.31 இல் அட்டுறு இறைகள் 2100 ரூபாயாகும். 1989.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு இறைகளாகச் செலுத்தப்பட்ட தொகை 6300 ரூபாயாகும். (இதில் முந்தின ஆண்டில் அட்டுறு இறைகளாகச் செலுத்தப்பட்ட தொகையும் அடங்கியிருந்தது) 89.12.31 இல் உள்ளவாறு பரீட்சை நிலுவையில் இறைகளாகக் காட்டப்பட்ட தொகை என்ன?
(1) ரூபா 8 400 (2) ரூபா 6 300
(3) ரூபா 2 100 (4) ரூபா 4 200

38ம், 39ம், 40ம் வினாக்களுக்கு விடையளித்தற்கு ஓர் உற்பத்தியாளரின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்.

A	-	மூலப்பொருள்கள் (தொடக்கத் தொக்கு)	10 000
B	-	புத்துருவாலும் வேலை (தொடக்கத் தொக்கு)	12 000
C	-	கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள்	38 000
D	-	தொழிற்சாலைக் கட்டணங்களும் காப்புறுதியும்	1 200
E	-	தொழிற்சாலைச் சம்பளங்கள்	1 000
F	-	நேர்க் கூலிகள்	20 000
G	-	பொறி விருட்சமும் பொறித்தொகுதியும்-தேய்மானம் (ஆண்டிக்குரியது)	3 100
H	-	தொழிற்சாலை மின் கட்டணங்கள்	1 800
I	-	உட்சுமைக் கூலி (மூல பொருள்கள்)	800
J	-	மூலப் பொருள்கள் (முடிவுத் தொக்கு)	9 000
K	-	புத்துருவாகும் வேலை (முடிவுத் தொக்கு)	10 000

38. "நுகரப்பட்ட மூலப் பொருள்களின் கிரயத்தைத்" தரும் சரியான தொகுதியைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
(1) **A + C + I + K** (2) **A + C + I + J**
(3) **A + C + F + I** (4) **A + B + C - K**

39. மேலே தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து தொழிற்சாலை மேந்தலைகளின் தொகையைக் கணிக்க.

(1) ரூபா 9 100 (2) ரூபா 5 000

(3) ரூபா 6 100 (4) ரூபா 7 100

40. மூலக் கிரயத்தைத் (செலவைத்) தரும் தொகுதி எது?

(1) **A + C + F - J** (2) **A + C + I - J + F**

(3) **A + B + C - J - K** (4) **A + B + C + I - K**

01. 
02. 
03. 
04. 

05. 
06. 
07. 
08. 

09. 
10. 
11. 
12. 

13. 
14. 
15. 
16. 

17. 
18. 
19. 
20. 

21. 
22. 
23. 
24. 

25. 
26. 
27. 
28. 

29. 
30. 
31. 
32. 

33. 
34. 
35. 
36. 

37. 
38. 
39. 
40. 

(91) வர்த்தகமும் கணக்கியலும் 11 மூன்று மணி

(91) **COMMERCE AND ACCOUNTS II** **THREE HOUSRS**

பகுதி 1 இலிருந்துமுதலாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
பகுதி 11 இலிருந்து ஐந்தாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
(முதலாம், ஐந்தாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்)

பகுதி 1

1. 1989 ஆம ஆணடு டிசெமபா 31 ஆந தகதியனறு "மாதத வறபனை நலையததன" ஏடுகளலிருந்து பினவரும பாடசை நிலுவை பிரித்தெடுக்கப்பட்டன.

	வரவு ரூபா	செலவு ரூபா
மூலதனம்		150 640
எடுப்பனவுகள்	9 800	
வங்கியிலுள்ள காசு	43 000	
கைவசமுள்ள காசு	3 100	
பெறப்பட்ட வாடகை		13 200
காப்புறுதி	6 200	
மின் கட்டணங்கள்	5 100	
விட்ட (அனுமதிக்கப்பட்ட கழிவீடுகள்)	1 300	
விற்பனைச் செலவுகள்	4 510	
அறவிடமுடியாக் கடன்கள்	800	
சம்பளங்கள்	24 000	
வங்கிக் கட்டணங்கள்	340	
கட்டடங்கள் மீது தேய்மானத்துக்கான ஏற்பாடு		34 400
தளபாடங்கள் பொருத்திகள் மீது தேய்மானத்துக்கான ஏற்பாடு		6 000
தொக்கு (01-01-1989)	32 200	
கொள்வனவுகள்	174 000	
வீற்பனைகள்		256 800
உட்சுமைக்கூலிகள்	10 600	
உட்டிரும்பல்கள்	700	
வியாபாரக் கடன்படுனர்	30 290	
வியாபாரக் கடன்கொடுனர்		24 900
காணிகள்	30 000	
கட்டடங்கள் (கிரயத்தில்)	96 000	
தளபாடங்களும் பொருத்திகளும்	14 000	
	485 940	485 940

1989 டிசெமபா 31 இல முடிவுறற ஆணடுககான வியாபார, இலாப நடடக கணகையும அதறேதியில இருநதவாறு ஐதொகையையும பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு தயாரிக்க.

(1) தொக்கு (31.12.1989) - ரூபா 33 900

(11) தேய்மானத்துக்கான ஏற்பாடு - கட்டடங்களுக்குக் கிரயத்தில் 10%

\- தளபாடங்கள் பொருத்திகள் ஆகியவற்றிற்குக் கிரயத்தில் 10%

(111) காலாவதியாகாத காப்புறுதி ரூபா 1 250

(11) கிடைக்கத்தக்க வாடகை ரூபா 1 200

(30 புள்ளிகள்)

2. (1) வியாபாரத் தாபனமொன்றின் கணக்குகளில் பல்வேறு தரப்பினர்கள் அக்கறை காட்டுகிறார்கள். அத்தகைய இரு தரப்பினர்களைக் குறிப்பிடுக.

(2) வியாபாரத் தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்களில், மூலதனத்தின் பெறுமதியைக் குறைக்கும் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளன. இத்தகைய வெவ்வேறு கொடுக்கல் வாங்கல்கள் இரண்டினைத் தருக.

(3) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றும் பதிவு செய்யப்படும் உப ஏட்டினைக் குறிப்பிடுக.

(அ) "மொறட்டுவ தளபாடக் கடை" யிலிருந்து அலுவலகத் தேவைக்காகத் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ----- ரூபா 12 000

(ஆ) சரத் பெரேரா என்ற கடன்படுனரிடமிருந்து கிடைத்த காசோலை ----- ரூபா 850

(இ) "புஷ்பா கடை" யிலிருந்து கடன் அடிப்படையில் பெற்ற பண்டங்கள் ----- ரூபா 9 400

(ஈ) விற்பனை செய்வதற்காக "ரங்கா கம்பனி" யிலிருந்து கடன் அடிப்படையிற் பெற்ற மின் சாதனங்களின் ஒரு பகுதி திருப்பி அனுப்பப்பட்டது. ----- ரூபா 2 100

(உ) இசடின் கம்பனியிலிருந்து கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் ----- ரூபா 16 000

3. வியாபார தாபனம ஒனறனால பரதான காசாளரின வேலையைச சுலபமாகுவதறகாக சிலலறைக காசு ஏடு ஒனறனை வைததருபபதறகு முடிவு செயயபபடடது. சிலலறைக காசு கடடுநது 1000 ரூபா யாகும். 1989 யன மாததறக செயயபபட கொடுப்பனவுகள் பின்வருமாறு:

யூன் 01 பிரதான காசாளரினால் 1000 ரூபா சில்லறைக் காசாளருக்கு அனுப்பப்பட்டது.

01 பணிப்பாளர் உபயோகத்திற்காக 50 ரூபாய்க்குச் சவர்க்காரம் வாங்கப்பட்டது.

05 அனுப்பப்பட்ட தந்திகளுக்கான செலவு 50 ரூபா

09 75 ரூபாய்க்கு அஞ்சல் முத்திரைகள் வாங்கப்பட்டன.

10 எழுதுவினைஞர் ஒருவருக்குக் கொடுத்த பிரயாணச் செலவு 30 ரூபா

17 வெசாக் பண்டிகைக்கென அலங்காரத்திற்காக 150 ரூபாய்க்குப் பொருள்கள் வாங்கப்பட்டன.

20 முத்திரையிட்ட கடிதவுறைகள், அஞ்சல் முத்திரைகள் ஆகியவற்றிற்காக 100 ரூபா கொடுக்கப்பட்டது.

22 வளவைத் துப்பரவு செய்வதற்காக, தொழிலாளி ஒருவருக்கு 75 ரூபா கொடுக்கப்பட்டது.

25 வியாபாரத் தாபனத்தின் ஊழியர் ஒருவரின் பிரயாணச் செலவாக 30 ரூபா கொடுக்கப்பட்டது.

26 பி.பெர்னாந்து என்ற வாடிக்கையாளருக்கு 110 ரூபா கொடுக்கப்பட்டது.

மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை அஞ்சற் செலவு, பிரயாணச் செலவு, பலவினச் செலவு பேரேட்டுக் கணக்குகள் என்பவற்றுக்கான பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட ஒரு சில்லறைக் காசேட்டிலே பதிவு செய்க.

செலவு செய்யப்பட்ட தொகை மாத இறுதித் தினத்தில் மீள நிரப்பப்படவுள்ளது. பகுப்பாய்வு நிரல்களைக் கூட்டுவதன் மூலம் சில்லறைக் காசேட்டைப் பூர்த்தி செய்க.

(சில்லறைக் காசேட்டின் நிரல்கள் சரியாக வரையப்படுவதற்கும் புள்ளிகள் வழங்கப்படும்)

(15 புள்ளிகள்)

4.

(1) குறிப்பிட்ட அமையங்களினால் கொள்ளல் கொடுத்தற் கணக்கும் வருமான செலவுக் கணக்கும் தயாரிக்கப்படுகின்றன. அத்தகைய அமையங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

(11) கொள்ளல் கொடுத்தற் கணக்கிற்கும் வருமான செலவுக் கணக்கிற்குமிடையிலான வேறுபாடுகள் என்ன?

(111) 1989 டிசெம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பாரதி விளையாட்டுக் கழகத்தினது வருமான செலவுக் கணக்கின் சுருக்கத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பதிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

	ரூபா	ரூபா
வருமானம்		
அங்கத்துவப்பணம் 1988	1 200	
1989	19 000	
பழைய பத்திரிகைகளின் விற்பனை		20 200
போட்டிகளுக்கான அனுமதிச்சீட்டு விற்பனை		720
செலவு		
பத்திரிகைகள்		28 400
எழுதுகருவிவகை		5 400
சம்பளங்கள்		950
விளையாட்டு உபகரணங்கள்		8 400
விளையாட்டரங்கின் பராமரிப்பு		4 000
இறைகள்		6 900
மின் கட்டணங்கள்		1 200
அஞ்சற் செலவு		3 200
பார்வையாளர் மண்டபத் திருத்த வேலைகள்		450
		4 800

பினவரும தகவலகளைப பயனபடுதத 1989 டிசெமபர 31 இல முடிவடைநத ஆணடிறகான வருமான செலவுக கணகக ஒனறனை நீங்கள் தயாரிக்க வேண்டும்.

(அ) ஓர் அங்கத்தவருக்கு ஓராண்டுக்கான அங்கத்துவப் பணம் 50 ரூபாயாகும். அத்தோடு நடப்பு ஆண்டுக்கான அங்கத்துவப் பணம் 20 அங்கத்தவர்களிடையிலிருந்து வருமதியாக உள்ளது.

(ஆ) இவ்வாண்டிற் கொள்வனவு செய்யப்பட்டவையோடு சேர்த்து 89-12-31 இல் மீதியாகவிருந்த விளையாட்டு உபகரணங்களின் பெறுமதி 16 000 ரூபாயாகும். இந்த நிலையிலிருந்து 20 சத வீதத்தைத் தேய்மானத்துக்கென கழிக்கவும்.

(இ) செலுத்தவேண்டிய சம்பளங்கள்: 900 ரூபா.

(ஈ) செலுத்தவேண்டிய இறைகள்: 400 ரூபா.

5.

(i) வாடிக்கையாளருக்குப் பண்டங்கள், சேவைகள் ஆகியவற்றை வழங்கும் நிறுவனங்கள், அவற்றின் உடமை அடிப்படையில் முக்கியமான மூன்று துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டினைத் தருக?

(ii) "அகழ்வுக் கைத்தொழில்" என்பதன் கருத்து என்ன? இலங்கையிலுள்ளவற்றிலிருந்து ஓர் உதாரணம் தருக?

(iii) பிரதேச சிறப்புத் தேர்ச்சிக்கான காரணங்கள் இரண்டினைத் தருக?

(iv) துணைச் சேவைகள் வழங்குவதில் ஈடுபட்டுள்ள இரண்டு அரச நிறுவனங்களின் பெயர்களைத் தருக?

(v) குறிப்பிட்டதொரு வகையான பேரளவுச் சில்லறைத் தாபனத்தின் அடிப்டைக் கோட்பாடு ஒருமுனைப்படுத்திய கொள்வனவும் பன்முனைப்படுத்திய விற்பனையுமாகும். இத்தகைய தாபனத்தின் பெயர் என்ன?

(vi) மொத்த வியாபாரி ஒருவரினால் சில்லறை வியாபாரி ஒருவருக்கு ஆற்றப்படும் சேவைகள் இரண்டினைத் தருக?

(vii) "நேர்ச் சேவைகள்" என்பதன் மூலம் நீர் கருதுவது யாது? ஓர் உதாரணம் தருக?

(viii) பணிசை (தரகு) முகவர் ஒருவரின் பிரதான பணிகள் யாவை?

(ix) நடைமுறைக் கணக்கு இல்லாத ஒருவர், கோடிட்ட காசோலை ஒன்றிற்காகக் காசு பெற விரும்புகிறார். காசு பெறுவதற்குச் சாத்தியமான இரு வழிகளைக் கூறுக?

(x) "பெறுமானக் களஞ்சியமாக" இருப்பது பணத்தின் முக்கிய தொழிற்பாடுகளுள் ஒன்று. இதனைச் சுருக்கமாக விளக்குக.

(xi) வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகளின் இரண்டினைக் குறிப்பிடுக.

(xii) மூலப்பொருள் தொக்குகள் போதிய அளவு இல்லாமை காரணமாக உற்பத்தியாளர் எதிர்நோக்கும் பாதகமான விளைவுகள் இரண்டினைத் தருக?

(xiii) விளம்பரப்படுத்தலில் ஆக்கத்திறமை ஊக்குவித்தற்காக, விளம்பரப்படுத்தும் முகவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட விருதின் பெயரைத்தருக?

(xiv) வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் பங்கு மூலதனத்துக்கு வழங்குமாறு பொதுமக்கள் எவ் வாறு அழைக்கப்படுகிறார்கள் என்று கூறுக.

(xv) கூட்டுச் சங்கமொன்றைப் பதிவு செய்தற்காக, கூட்டுறவு ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கவேண்டிய பதிவு செய்தற்காக, கூட்டுறவு ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்களுள் ஏதாவது இரண்டினைத் தருக.

6.

(i) உலகின் பல்வேறு நாடுகளின் பரவலாகப் பயன்படுத்தப்படும் போக்குவரத்து வழிகள் மூன்றினைத் தருக.

(ii) பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு உகந்த, மிகப்பொருத்தமான போக்குவரத்துச் சாதனம் என்ன?

(அ) காங்கேசன்துறையிலிருந்து மாத்தறைக்குப் பிரயாணஞ் செய்வதற்கு.
(ஆ) அவசரமாகத் தேவைப்படும் மருந்து தொக்குகளை யப்பானிலிருந்து கொண்டு வருவதற்கு
(இ) வெலிமடையிலிருந்து கொழும்புக்கு காய்கறிகளைக் கொண்டு வருவதற்கு
(ஈ) வெள்ளத்திற்குட்பட்ட பிரதேசத்தில் விரைவாகக் கணிப்பீடு ஒன்றை நடாத்துவதற்கு

(iii) வீதிப் போக்குவரத்துடன் ஒப்பிடுகையில் புகையிரதப் போக்குவரத்திற் குறிப்பிட்ட அனுகூலங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நான்கினைக் குறிப்பிடுக.

(iv) சில வகையான பண்டங்களைக் கொண்டு செல்வதிற்கு ஆகாயப் போக்குவரத்திலும் பார்க்க கடற் போக்குவரத்து பரவலாகப் பயன்படுத்தப்படுவதோடு பிரபலமானதாகவும் உள்ளது. இதற்கான காரணங்கள் நான்கினைத் தருக?

(15 புள்ளிகள்)

7.

(i) காப்புறுதி முகவர் ஒருவரின் பணிகள் யாவை?

(ii) பின்வரும் காப்புறுதி கோட்பாடுகளை விவரிக்கவும்?

(அ) மிக்குயர் நன்னம்பிக்கை
(ஆ) நட்டஈடு

(iii) விபத்துக் காப்புறுதியின் கீழ் பெறக்கூடிய இரண்டு வகையான காப்புறுதி ஒப்பந்தங்களைக் குறிப்பிடுக. அவற்றுள் ஒன்றினை விவரிக்க.

(vi) காப்புறுதித் தொடர்பாகப் பின்வருவனவற்றுள் இரண்டினைச் சுருக்கமாக விவரிக்கவும்.

(அ) ஆயுட் காப்புறுதிக் கட்டணம்
(ஆ) ஒப்படைப்புப் பெறுமானம்
(இ) செலுத்தி முடிந்த காப்புறுதி

(15 புள்ளிகள்)

8.

(i) உடைமை, மூலதனம், கணக்கீடு, கணக்காய்வு ஆகியன தொடர்பாக வரையறுத்த பொதுக் கம்பனி யொன்றை பங்குடைமை ஒன்றுடன் ஒப்பிடுக.

(ii) கம்பனியொன்றைப் பதிவு செய்தற்காகக் கம்பனிகள் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டிய நான்கு ஆவணங்களைக் குறிப்பிடுக.

(iii) உமது நண்பர் ஒருவர் குறித்த ஒரு தொகைப் பணத்தை, வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றின் பங்குகளில் முதலீடு செய்ய முடிவு செய்துள்ளார். இந்த முடிவினை ஆதரிப்பதற்கு நான்கு காரணங்கள் தருக.

1வது வினாவுக்குப் பதிலளித்தற்குப் பின்வரும் பந்தியை வாசிக்க:

"வரையறுத்த கம்பனியொன்றின் பதிந்த மூலதனமானது 500 000/- ரூபாயாகும். இது ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 50 000/- சாதாரணப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பங்கொன்று 10 ரூபா வீதப்படி பதிந்த மூலதனத்தில் அரைவாசி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. 30 000 விண்ணப்பங்களுடன் முழுத்தொகையும் பெறப்பட்டது.

(vi) (அ) பெயரளவு மூலதனம் எவ்வளவு?

(ஆ) வழங்கிய மூலதனம் எவ்வளவு?

(இ) விண்ணப்பங்களுடன் கிடைக்கப்பெற்ற பணத்தொகையைக் கண்டுபிடிக்க?

(15 புள்ளிகள்)

****

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண)ப் பரீட்சை டிசெம்பர் 1990

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, DECEMBER - 1990

(புதிய பாடத்திட்டம்)

(NEW SYLLABUS)

வர்த்தகமும் கணக்கியலும் - II

COMMERCE AND ACCOUNTS - II

31.12.89 ல் முடிவடைந்த ஆண்டுக்கான மாலதி விற்பனை நறுவனத்தின் வி/இ/ந/க/கு.

ஆரம்ப இருப்பு (1-1-89)		32200	விற்பனைகள்	256800	
+) கொள்வனவுகள்	174000		-) உட்திரும்பல்கள்	700	56100
உட்சுமைக்கூலி	10600	184600			
		216800			
-) இறுதி இருப்பு 31.12.89		33900			
விற்றசரக்கின் கொள்விலை		182900			
மொ.லா.மீ/கீ/கொ/செ		73200			
		256100			256100
நிலையநிர்வாகச் செலவு					
கட்டிடபெறு.தேய்வு	9600		மொ.லா.மீ.கீ.கொ.வ	73200	
தளபாடப்பொருத்தி பெ.தே	1400		கிடைத்தவாடகைவருமானம்	14400	87600
காப்புறுதி	4950				
மின்கட்டணங்கள்	5100				
சம்பளங்கள்	24000	45050			
வி.வி. செலவு					
அனுமதித்த கழிவு	1300				
விற்பனைச் செலவுகள்	4510				
அ.மு. கடன்	800	6610			
நிதிச்செலவு					
வங்கிக் கட்டணங்கள்	340	340			
தே.லாபம்		35600			
		87600			87600

31.12.89ல் உள்ளவாறான மாலதி விற்பனை நிலையத்தின் ஐந்தொகை.

			நிலையான சொத்துக்கள்	கொ.வி	தி.பெ.தே	மீதி
மூலதனம்	150640					
+) தே.இலாபம்	35600					
	186240		காணிகள்	30000	-	30000
			கட்டடங்கள்	96000	44000	52000
-) பற்று (எடுப்பனவுகள்)	9800	176440	தளவாடப்பொருத்தி	14000	7400	6600
நடைமுறைப் பொறுப்பு						
			நடைமுறைச் சொத்து			
வியாபாரக்கடன் கொ.நர்	24900	24900	இ.இருப்பு		33900	
			வியாபாரக் கடன்படுனர்		30290	
			காலாவரியாகாத			
			காப்புறுதி		1200	
			கிடைக்கத்தக்க வாடகை		1200	
			வங்கியிலுள்ள காசு		43000	
			கைவசமுள்ள காசு		3100	112740
		201340				201340

2.

1) உரிமைத்தாரர், ஊழியர்கள், கடன்கொடுத்தவர்கள், முதலீட்டாளர்கள், கடன் கொடுக்கும் நிலையங்கள் (வங்கிகள், சில அரச நிறுவனங்கள்)

2) எடுப்பனவுகள், (பற்று), விற்பனையிலும் பார்க்க கூடுதலான அளவுக்கு பொருள்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கை.

3) அ) பொதுத் தினசரி

ஆ) காசேடு

இ) கொள்வனவு நாளேடு (கொள்வனவுத் தினசரி)

ஈ) வெளித்திரும்பல் நாளேடு (கொள்வனவுத் திரும்பல் நாளேடு)

உ) கொள்வனவு நாளேடு

வரவு	திகதி	விபரம்	கூ. தொகை	அஞ்சல் செலவு	பிரயாணச் செலவு	நானாவித செலவு	பேரேட்டுக் கணக்கு
1000	யூன் 01	காசு	-	-	-	-	-
	02	சவர்க்காரம்	50	-	-	50	-
	05	தந்தி	50	50	-	-	-
	09	அஞ்சல் முத்திரை	75	75	-	-	-
	10	பிரயாணச் செலவு	30	-	30	-	-
	17	அலங்காரப் பொருள்	150	-	-	150	-
	20	அஞ்சல் முத்திரையுறை	100	100	-	-	-
	22	தொழிலாளர் கூலி	75	-	-	75	-
	25	பிரயாணச் செலவு	30	-	30	-	-
	28	பி. பொன்னாந்து	110	-	-	-	110
		மீ.கீ.கொ.செ	670	225	60	275	110
		மீ.கீ.கொ.வ	330				
1000		01. நிலுவை. முன்	1000				
330		கொ.வ.காசு					
670							

4.

1) தருமவைத்தியசாலைகள், விளையாட்டுக்கழகங்கள், சங்கங்கள்.

2)

கொள்ளல் கொடுத்தல் கணக்கு	**வருமானச் செலவுக் கணக்கு**
♦ கொடுப்பனவுகளையும், பெறுவனவுகளையும் வெளிப்படுத்தும்.	வருமானத்திலும் கூடுதலான செலவை அல்லது செலவிலும் கூடுதலான வருமானத்தைப் புலப்படுத்தும்.
♦ ஒரு ஆண்டில் செய்யப்படும் எல்லாக் கொடுப்பனவுகளையும், பெறுவனவுகளையும் கொண்டிருக்கும்.	வருட இறுதியில் செய்யப்படும்.
♦ ஆரம்ப மீதி ஒன்றை உடையதாக இருக்கும்	வருட இறுதியில் தயாரிக்கப்படும்.
♦ காசுக் கணக்கு போன்றது	இலாப நட்டக் கணக்கு போன்றது.
♦ எதிர்வரும் ஆண்டுக்குரிய முற்பணம், கடந்த வருடத்துக்குரிய பணம் என்பன இடம் பெறலாம்.	நடைமுறை ஆண்டுக்குரிய தொகை மட்டும் செலுத்தப்படும்.

31.12.89 ல் முடிவடைந்த வருடத்துக்கான பாரதி விளையாட்டுக் கழகத்தின் வருமானம் செலவுக் கணக்கு.

விளை.உப.பெ.தேய்வு	3200	அங்கத்துவ பணம்	19000	
சம்பளம்	9300	) வருமதி (அங்கத்து.ப)	1000	20000
இறைகள்	1600	அறுதிச்சீட்டு விற்பனை		28400
பத்திரிகைகள்	5400	பழைய பத்திரிகை விற்பனை		720
எழுதுகருவிவகை	950			
விளை. உபகரணம், பராமரிப்பு	6900			
மின்கட்டணம்	3200			
அஞ்சல் செலவு	450			
பார்வையாளர் மண்டபத்				
திருத்தவேலை	4800			
செலவிலும் கூடிய மிகை	13320			
	49120			49120

5.

1) தனியார் துறை, அரசதுறை, கூட்டுறவுத்துறை.

2) நிலத்தின் கீழ் உள்ள பொருட்களை அகழ்ந்தெடுக்கும் தொழிலே அகழ்வுத்தொழில் எனப்படும்.
உதாரணமாக:- முத்துக்குளித்தல்.

3) பிரதேச சிறப்புத்தேர்ச்சி என்பது. ஒரு குறிப்பிட்ட பொருளுற்பத்தியில் ஒருநாடு அல்லது ஒரு நாட்டினுடைய பிரதேசம், பிரபல்யம் பெற்று இருப்பது.
உதாரணமாக:- இலங்கையில் தளபாட உற்பத்திக்கு மொறட்டுவையும், இரத்தினபுரியில் இரத்தினக்கல் உற்பத்தியும்.

பிரதேச தேர்ச்சி ஏற்படுவதற்குரிய காரணங்கள்:

1. மூலவளக் கிடைப்பனவு.
2. காலநிலை, இயற்கைச்சூழ்நிலை, வானிலை.
3. தொழிலாளர் கிடைப்பனவு.
4) தொடர்பாளர்:- தொலைத் தொடர்புத் திணைக்களம்.
போக்குவரத்து:- போக்குவரத்து சபை, புகையிரதத் திணைக்களம்.
வங்கி:- இலங்கை வங்கி, மக்கள் வங்கி
காப்புறுதி- காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
5) கிளைக்கடை.
6) கடன் வசதி, பண்டகசாலை வசதி, வியாபாரக் கழிவு, காசுக்கழிவு, விளம்பரம், புதிய பொருளை அறிமுகஞ் செய்தல்.
7) நுகர்வோர் தேவைகள் பூர்த்தி செய்யும் பொருட்டு வழங்கப்படும் சேவையே இது.
உதாரணமாக:- கல்வி, சுகாதாரம் (வைத்திய சேவை)
8) பொருட்கள் கடைகட்கு விற்பனை செய்தல்.
9) 1. நடைமுறைக்கணக்கு ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம்.
2. காசோலையைப் பிறப்பித்தவரைக் கொண்டு குறுக்குகோட்டை இல்லாமல் செய்வதன் மூலம்.
3. நடைமுறைக்கணக்கு உள்ள ஒருவருக்கு சாட்டுதல் செய்வதன் மூலம்.

10) எதிர்காலத் தேவையினை பூர்த்தி செய்வதற்காக பணம் சேமிப்புக் கருவியாக தொழில்படுகிறது. இதனையே "பெறுமானக் களஞ்சியம்" புலப்படுத்தும்.

11) 1. வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதலும், அவற்றைப் பேணுதலும்.
2. கடன் வசதி அளித்தல்.
3. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்.
4. பிரதி நிதியாகப் பணியாற்றுதல்.
5. பொதுச் சேவைகளை அளித்தல்.

12) 1. உற்பத்தி தடைப்படும்.
2. நுகர்வோருக்கு தேவையான பொருள்களை வழங்கமுடியாமை.
3. கூடுதலான விலை கொடுக்க வேண்டி ஏற்படலாம்.
4. போட்டி நிறுவனங்களுடன் சந்தை வாய்ப்பை இழக்க நேரிடும்.

13) ஓலா (விருது)

14) முன்விபரணம் வெளியிடப்படுவதன் மூலம்.

15) 1. பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்.
2. கூட்டுறவு சங்கத்தின் சட்டதிட்டக் கோவையின் இரட்டைப் பிரதிகள்.
3. நடைபெற்ற கூட்டங்களின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை.
4. சங்கத்தின் கடந்த கால நிதியறிக்கைகள்.
5. சங்கத்தின் வதிவிடமும், அவ்விடத்துக்குச் செல்லும் வழியைக் காட்டும் வரைபடமும்.

6.

1) தரைப்போக்குவரத்து, கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து.

2) அ. புகையிரதப் போக்குவரத்து.
ஆ. ஆகாய விமானப் போக்குவரத்து.
இ. (தரைப்போக்குவரத்து மூலம் லொறிவண்டி மூலம்)
ஈ. விமானப் போக்குவரத்துச் சாதனம் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

3) 1. பெருமளவான, பண்டங்களையும், பயணிகளையும் கொண்டு செல்லக்கூடியமை.
2. கட்டணம் குறைவு.
3. நீண்ட தூரப்பயணத்துக்கு ஏற்புடையது.
4. பாரங்கூடிய பொருள்களையும் கொண்டு செல்லும் இயல்பு.
5. "சிற்றுண்டிச்சாலை வசதி, மலசலகூட வசதி, என்பன காணப்படுதல்.
6. விபத்துக் குறைவு.

4) அ. பெருமளவான பொருட்களையும், பாரமான பொருட்களையும் கொண்டு செல்லலாம்.
ஆ. சர்வதேச வர்த்தகத்திற்க கப்பல் போக்குவரத்து மிகவும் இன்றியமையாதது.
இ. கட்டணம் குறைவு.
ஈ. பாதுகாப்பு மிக்கது.

7.

1) காப்புறுதி செய்யப்படுபவருக்கும், காப்புறுதி அளிப்பவருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி விடுதல்.

2) அ. காப்புறுதி அளிப்பவரும், காப்புறுதி செய்பவரும் உண்மையான தகவல்களை கொடுக்க வேண்டும். (88ம் ஆண்டின், 5ம் வினாவின் 4ம் பகுதியின் விடையைக் காண்க)
ஆ. காப்புறுதி செய்யும் ஒருவருக்கு ஏற்பட்ட நட்டம் மட்டுமே ஈடு செய்யப்படும் என்பதே இத்தத்துவம். இத்தத்துவத்தின் பிரகாரம் காப்புறுதியின் மூலம் இலாபம் உழைக்க முடியாது.

3) ***வாகனக் காப்புறுதி.***

தொழிலாளர் நட்டஈடு.
கள்வர் பயக் காப்புறுதி.
நம்பிக்கைக் காப்புறுதி.

வாகனக் காப்புறுதி:–

மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாவதனால் அதில் பயணம் செய்பவர்கள், பாதிக்கப்படும் பிரயாணி. மோட்டார் வான்., அதில் கொண்டு செல்லப்படும் பண்டங்கள், ஆகியவற்றுக்கு நட்டம் ஏற்படலாம். இவை அனைத்துக்கும் நட்டஈடு செய்வதற்காக செய்யப்படும் ஓர் உடன்படிக்கையே இதுவாகும். (1951ம் ஆண்டு 14ம் இலக்க மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டம் ஆகக் குறைந்தது வாகன உரிமைக்காரர் இக் காப்புறுதியை செய்ய வேண்டுமெனக் காட்டாயப்படுத்துகிறது.)

தொழிலாளர் நட்டஈடு:–

தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு, வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் உடல் ஊறுகளோ, அல்லது மரணத்துக்கோ, வேலை கொள்வோரே பொறுப்பாக

இருத்தல் வேண்டும். வேலைகொள்வோர் காப்புறுதி செய்து நட்டஈட்டுப் பத்திரத்தைப் பெறுவதன் மூலம், இந்தப் பொறுப்பு காப்புறுதி நிறுவனத்தைச் சேரும்.

கள்வர் பயக் காப்புறுதி:-

வீடுடைப்பு, களவு காரணமாக சொத்துக்குகளுக்கு ஏற்படும் சேதங்களை ஈடு செய்வதற்காக இவ்வாறான காப்புறுதியைச் செய்து கொள்ள முடியும்.

நம்பிக்கைக் காப்புறுதி:-

களஞ்சியப் பொறுப்பாளர், காசாளர் என்போருக்காக வேலை கொள்வோர் இக் காப்புறுதியைச் செய்து கொள்வார். களஞ்சியப் பொறுப்பாளர், காசாளர் ஆகியோர் மோசடியில் ஈடுபடுவதனால் வேலை கொள்வோருக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்வதே இதுவாகும்.

4) அ. **ஆயுட் காப்புறுதிக் கட்டணம்.**

காப்புறுதி உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி தவணைக்கட்டணம், காப்புறுதியின் தன்மை, காலம், தொகை, என்பவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். இதுவே ஆயுட் காப்புறுதிக் கட்டணமாகும்.

ஆ. **ஒப்படைப்புப் பெறுமானம்**

தொடர்ந்தும், காப்புறுதி கட்டணம் செலுத்த முடியாத ஒருவர், அல்லது விருப்பம் இல்லாத ஒருவர், காப்புறுதி உடன் படிக்கையை நிறுவனத்திடம் கையளித்து பெற்றுக் கொள்ளும் தொகை.

இ. **செலுத்தி முடிந்த காப்புறுதி:-**

தொடர்ந்தும் காப்புறுதிக் கட்டணத்தை செலுத்த முடியாத ஒருவர் அதுவரைகாலமும் கட்டிய பணத்தின் அளவுக்கு குறைத்துக் கொள்ளுதலே இதுவாகும்.

8.

1) உடமை.

வரையறுத்த பொதுப்பணி,	பங்குடமை
உடமை பங்குதாரருக்கு சொந்தம்	பங்காளிகளுக்கு சொந்தம்
(7-எல்லையற்றது)	(2 முதல் 20 பேர் வரை)
மூலதனம் பொதுமக்கள் விரும்பியளவு பங்குகளை வாங்குவதன் மூலம் மூலதனப் பங்களிப்பு.	சமமாக அல்லது பங்குடமை உடன்படிக்கையின் கீழ்
கணக்கீடு கட்டாயமாக கணக்கீட்டுச் சட்டங் களுக்கமைய நடைபெறும்.	இங்கு அவ்வாறு இல்லை.
கணக்காய்வு சட்டப்படி அவசியம்	அவசியமில்லை.

2) 1. கூட்டுப்பத்திரம்.
2. கூட்டுச் சட்டக்கோவை (நிதியச் சட்ட அறிக்கை).
3. ஊறுதியுரைக் கூற்று.
4. இயக்குனர் சம்பந்தப் பத்திரம்.
5. இயக்குனர் பெயர்ப்பட்டியல்.
6. கூட்டாக வெளிப்படுத்தும் உறுதியுரை.

3) வரையறுத்த பொதுக் கம்பனியைப் பொறுத்தவரையில்.
1. பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.
2. நீண்டகால முதலீடு செய்ய முடிதல்.
3. பங்குக் கைமாற்றம் செய்ய முடிதல்.
4. இலாபம் உபகரணப் பங்கு என்பன கிடைத்தல். (பொதுக் கம்பனியொன்றிலுள்ள நன்மைகளை எடுத்துரைத்தல் போதுமானது)

4) அ. பெயரளவு மூலதனம். 500, 000/-
ஆ. வழங்கிய மூலதனம். 250,000/-
இ. விண்ணப்பத்துடன் கிடைத்த பணம். 300,000/-

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண)ப் பரீட்சை டிசெம்பர் 1989

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, DECEMBER - 1989

(புதிய பாடத்திட்டம், NEW SYLLABUS)

வர்த்தகமும் கணக்கியலும் - II

COMMERCE AND ACCOUNTS - II

ஒரு மணி / ONE HOUR

கவனிக்க:- (i) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

(ii) 1முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமானது என்று நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.

(iii) விடைத்தாளில்,உமது தெரிவுக்கு ஒத்த எண்ணின் மீது பென்சிலால் புள்ளடி(X) இடுக.

(iv) விடைத்தாளின் பின்பக்கத்தில் மேலதிகமான அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாகப் பின்பற்றுக.

1. விவசாய ஏற்றுமதிப் பொருள்களை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.
   (1) தேயிலை, இறப்பர், கறுவா, கனிப்பொருள், மணல்வகைகள்.
   (2) இரத்தினக்கற்கள், தேயிலை, கொப்பரா, கராம்பு
   (3) ஏலக்காய், இறப்பர், உலர்த்திய தேங்காய், தேயிலை
   (4) காவட்டம்புல், தேங்காயெண்ணெய், சோயா, இரத்தினக்கற்கள்

2. "நுகர்வோர் பொருட்கள்" என்பதற்கு மிகப்பொருத்தமான வாக்கியம் எது?
   (1) அவை மனித தேவைகளைத் திருப்தி செய்வதற்கு நேரடியாக நுகரப்படும் பண்டங்கள் அல்லது சேவைகளாகும்.
   (2) அவை நாளாந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்படும் பண்டங்களாகும்.
   (3) அவை நுகர்வுக்கான பண்டங்களை உற்பத்தி செய்வதிற் பயன்படுத்தப்படும் பொருள்களின் ஏதேனும் ஒரு வகையாகும்.
   (4) அவை உணவுப் பொருள்கள் எனும் தனியொரு பகுதியைச் சேர்ந்த பண்டங்களாகும்.

3. பின்வருவனவற்றுள் உற்பத்தி (பரும்படியாக்க)க் கைத்தொழில் எனக் கருதப்படத்தக்கது எது?
   (1) கனிப்பொருள் மணற் கைத்தொழில் (2) கட்டடக்கைத்தொழில்
   (3) மரக் கைத்தொழில் (4) மின் கைத்தொழில்

4. பண்டங்களைப் பங்கீடு செய்வதற்குக் கையாளப்படும் முறைகளுள் ஒன்று "நேரடி விற்பனை" ஆகும். நேரடி விற்பனைக்குப் பொருத்தமான உற்பத்திப் பொருள் ஏது?
   (1) யாழ்ப்பாண விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சிவத்த வெங்காயம்.
   (2) சிறிய அளவில் உற்பத்தி செய்பவர் ஒருவரால் வழங்கப்படும் பால்.
   (3) மொரட்டுவையிலுள்ள வேலைக்களமொன்றில் உற்பத்தியான தளபாடம்.
   (4) மின் உபகரணங்கள்.

5. பின்வரும் கூற்றுக்கள் சிலவற்றை வியாபாரி ஒருவர் பற்றித் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஆகும். அவற்றுள் சரியானதும், மிகப் பொருத்தமானதுமான கூற்று எது?
   (1) அவர் பண்டங்களைக் காசு அடிப்படையில் மட்டும் விற்பார்.
   (2) தனி வியாபாரி மட்டும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுவார்.
   (3) அவர் உற்பத்தியாளரிடமிருந்து பண்டங்களை பெருமளவில் வாங்குவார்.
   (4) நுகர்வோர் தேவைகளுக்கமைய அவர் பண்டங்களை வாங்குவார்.

6. பின்வரும் அரச கூட்டுத்தாபனங்களுள் ஏது பல்பிரிவு விற்பனை நிலையங்களைத் தாபிப்பதன் மூலம் சில்லறை வியாபாரத்தை நடத்தி வருகிறது?
   (1) இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்.
   (2) இலங்கை அரச உலோகப் பொருட் கூட்டுத்தாபனம்.
   (3) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்.
   (4) இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்.

7. கொடுக்கல் வாங்கலொன்று மொத்த விற்பனைச் சார்ந்ததா அல்லது சில்லறை விற்பனைக்குரியதா எனத் தீர்மானிப்பதில் கருத்திற் கொள்ளப்படவேண்டிய மிக முக்கியமான காரணி எது?
   (1) விற்கப்படும் பண்டங்களின் விலை
   (2) வாங்குபவரின் குறிக்கோள்
   (3) விற்பனை செய்யப்படும் பண்டங்களின் அளவு
   (4) பண்டங்களை விற்கும் வியாபாரியின் இயல்பு

8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதில் பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்தவும்.

A - கிரயப்பட்டியல் **C** - தோற்றுவாய்ச் சான்றிதழ்

B - வார்நாமம் (சுமைச்சீட்டு) **D** - தரவானை (கட்டளையட்டவனை)

8. பின்வருவனவற்றுள் எவ்வாணம் கப்பலிலனுப்பும் பண்டங்களுக்காக அலுவலகப் பற்றுச்சீட்டாகவும், சேரிடத் துறைமுகத்திற்கு அவற்றைச் சுமந்து செல்வதற்கான ஒப்பந்தத்தின் ஒரு சான்றாகவும் கப்பற் கம்பனிகளால் வழங்கப்படுகிறது.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

9. சுங்கப் பகுதியிலிருந்து அனுகூலமான இறக்குமதித் தீர்வைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இறக்குமதியாளருக்கு உதவும் முகமாக இவற்றுள் எது ஏற்றுமதியாளரது நாட்டின் வணிகக் கழகத்தினால் வழங்கப்படுகிறது.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

10. வாங்குநரால் வெளிநாட்டிலுள்ள வழங்குநர் ஒருவருக்கு அனுப்பப்படும் இவ்வாணம், தேவைப்படும் பண்டங்கள் பற்றிய அறிவுறுத்தல்களைத் தருவதாக அமையும். இவ்வாணம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

11. ஏற்றுமதியாளரால் இறக்குமதியாளருக்கு அனுப்பப்படும் இவ்வாணம் அவரால் விற்கப்பட்ட பண்டங்கள் பற்றிய விவரங்கள் அனைத்தையும் கொண்டிருக்கும். அவ்வாணம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

12. பிற்போட்ட கொடுப்பனவு முறை தொடர்பில் தரப்பட்டுள்ள சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) வாங்குநர் கொடுப்பனவு செய்யத் தவறுமிடத்து விற்பனையாளர் அவர் மீது வழக்குத் தொடர முடியாது.
(2) வாங்குநர் கொடுப்பனவு செய்யத் தவறுமிடத்து விற்பனையாளர் வாங்குநரிடமிருந்து பண்டங்களை மீளக் கோரமுடியும்.
(3) வாங்குநர் முதலாவது தவணைக்கட்டணத்தைச் செலுத்தியதும் பண்டங்களின் உரிமையாளராவார்.
(4) இலங்கையில் பண்டங்களை விற்பனை செய்யும் மிகப் பிரபல்யம் வாய்ந்த முறை இதுவாகும்.

13. "மாதிரி கிரயப்பட்டியல்" பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
(1) கடனுக்குப் பண்டங்களை விற்பனை செய்தல்.
(2) முகவரொருவரிடமிருந்து பண்டங்களை வாங்குதல்.
(3) பண்டங்கள் ஒப்படைக்கப்படுமுன் கொடுப்பனவுச் செய்யும்படி வாங்குனருக்கு அறிவித்தல்.
(4) வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களில் மட்டும் இது பயன்படுத்தப்படும்.

14. பின்வருவனவற்றுள் எதனை ஒரு சிறப்புக் கோடிடுகையாக நீர் கருதுவீர்?
(1) இரு சமாந்தரக் கோடுகளுக்கிடையில் "அன்ட் கம்பனி" என எழுதுதல்.
(2) இரு சமாந்தரக் கோடுகளுக்கிடையில் "கை மாறத் தகாதது" எனும் சொற்களை எழுதுதல்.
(3) ஒரு சமாந்தரக் கோடுகளுக்கிடையில் "பெறுவோன் கணக்கிற்கு" எனும் சொற்களை எழுதுதல்.
(4) இரு சமாந்தரக் கோடுகளுக்கிடையில் வங்கியொன்றின் பெயரை எழுதுதல்.

15. பண்டங்களைக் களஞ்சியப்படுத்துவதிலான அனுகூலங்கள் பலவாகும். உற்பத்தி செய் தாபனம் ஒன்றினால் இதன்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனுகூலம் யாது?
(1) தடையின்றி உற்பத்தியை தொடர்வதற்கு இத உதவுகின்றது.
(2) உற்பத்தி செய்யும் பிற முயற்சியாளர்களுக்கு இவ்வியாபாரத்தாபனம் மிகையான மூலப்பொருட்களை வழங்க முடிகிறது.
(3) மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் எப்பொழுதும் இலாபகரமானது.
(4) விலை அதிகரிக்கும் எனும் எதிர்பார்ப்பில் பூர்த்தியெய்திய பண்டங்களைக் களங்சியப்படுத்தி வைத்திருக்க முடியும்.

16. வணிகத்திலீடு படும் சமுதாயத்துக்கு மட்டும் மதியுரைச் சேவைகளை வழங்கி வரும் வங்கி வகை எது?
(1) அரச ஈட்டு முதலீட்டு வங்கி (2) வணிகர் வங்கிகள்
(3) கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (4) வர்த்தக வங்கிகள்

17. இலங்கை மோட்டார் சங்கத்தின் பிரதான தொழிற்பாடு யாது?
(1) உறுப்பினருக்குச் சொந்தமான பாரமேற்றும் வாகனங்களைப் பேணுதல்.
(2) உறுப்பினர்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குவதும் ஏற்றியிறக்க (போக்குவரத்துத்) தொடர்பான பிற தொழிற்பாடுகளை நிறைவேற்றுதலும்.
(3) பிரயாணிகளுக்கு அவர்களது போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுதல்.
(4) வினைத்திறமைவாய்ந்த சேவையை வழங்குவதற்கு ஏற்றியிறக்கற் (போக்குவரத்துச்) சேவைகளை ஒழுங்கமைப்பு செய்தல்.

18. வினைத்திறமை வாய்ந்த கையிருப்புக் கட்டுப்பாடு முறைமையைப் பேணுவதற்கு பல காரணிகள் தேவைப்படுகின்றன. அவற்றுள் மிக இன்றியமையாத காரணி எது?
(1) பாரிய களஞ்சியங்கள் இருத்தல்.
(2) களஞ்சியக் காப்பாளர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
(3) பெறுவனவுகள், வழங்கல்கள் தொடர்பில் நன்கு பேணப்பட்ட பதிவேடுகள் இருத்தல்.
(4) தொழிற் சேவையொன்றைப் பெறக்கூடியதாக இருத்தல்.

19. வரையறுத்த பங்குடமைகள் தொடர்பான பின்வரும் வாக்கியங்களிலிருந்து சரியான வாக்கியத்தை தெரிவு செய்க.
(1) உறுப்புரிமை குடும்ப உறுப்பினருக்கென வரையறுக்கப்பட்டது.
(2) பங்காளர்கள் தமது பங்களிப்பாக அமைந்த மூலதனத்தின் அளவிற்குப் பொறுப்புடையவர்களாவார்.
(3) இலங்கையிற் காணப்படும் பொதுவாக பங்குடமை வகை இதுவாகும்.
(4) குறைந்த பட்சம், வரையறுக்கப்படாத ஒரு பங்காளரேனும் இருத்தல் வேண்டும்..

20. பின்வருவனவற்றுள் அத்தியாவசிய பண்டங்களை வழங்குவதும் மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்றதுமான நிலையம் எது?
(1) மார்க்.ட்.பெட்
(2) சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் விற்பனைச்சாலைகள்.
(3) இலங்கை அரச வியாபார (பொது) க் கூட்டுத்தாபனம்.
(4) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

21. பின்வருவனவற்றுள் வணிகர்கள் பேணும் கணக்கீட்டுப் பதிவுகளில் மிகுந்த அக்கறை செலுத்தும் நிலையம் எது?
(1) கணக்காய்வாளர் நாயகம் அவர்களது திணைக்களம்.
(2) உண்ணாட்டு இறைவரித் திணைக்களம்.
(3) வர்த்தகத் திணைக்களம்.
(4) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை.

22. ஐந்தொகையின் சொத்துக்கள் பக்கத்தை மட்டும் பாதிக்கும் கொடுக்கல்
(1) தமது சொந்த உபயோகத்துக்கு உரிமையாளர் பணத்தை மீள எடுத்துக் கொள்ளுதல்.
(2) கடன் கொடுத்தோர் ஒருவருக்குக் சென்மதியான கடன் ஒன்றைத் தீர்த்தல்.
(3) கடனென்று கடன்பட்டவரொருவரால் தீர்க்கப்படுதல்.
(4) நிலையான சொத்துக்களைக் கடனுக்கு கொள்வனவு செய்தல்.

23. ஐந்தொகை தொடர்பில் தரப்பட்டுள்ள சரியான கூற்றைத் தெரிவு செய்க:
(1) இது குறித்த ஒரு தேதியில் வியாபாரத் தாபனமொன்றின் எல்லாச் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் காட்டும் ஒரு கூற்றாகும்.
(2) ஐந்தொகை, வியாபாரத் தாபனமொன்றின் பேரேட்டுக் கணக்குகள் அனைத்தினதும் மீதியைக் காட்டும்.
(3) இது குறித்த ஒரு காலத்திற்குரிய இலாபத்தை அல்லது நட்டத்தைக் காட்டும் ஒரு கணக்காகும்.
(4) இது ஓராண்டின் இறுதியில் மட்டும் தயாரிக்கப்படலாம்.

24. பின்வருவனவற்றிலிருந்து மூலதனத்தைப் பாதிக்கும் கொடுக்கல் வாங்கலைத் தெரிவு செய்க.
(1) ரூபா 1200/- பெறுமானமுடைய பண்டங்களை விற்பனையாளருக்குத் திருப்பிக் கொடுத்தமை.
(2) ரூபா 3000/- ஆன தொகைக்குச் சாதனங்களை வாங்கியமை.
(3) வங்கியிலிருந்து ரூபா 10 000/- கடனொன்று கிடைக்கப் பெற்றமை.
(4) ரூபா 5 00/- விளம்பரச் செய்கைகளைச் செலுத்தியமை.

25. பின்வருவனவற்றுள் நடப்புச் சொத்துக்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?
(1) கையிருப்பு, முன்னதாகப் பணம் செலுத்தப்பட்ட காப்புறுதி, கடன்பட்டோர்.
(2) பொறித்தொகுதி, எழுதுகருவி வகை, கடன்பட்டோர்.
(3) நின்ற செலவுகள், கையிருப்பு, தளபாடம்.
(4) வங்கிக்கடன், கையிருப்பு, காசு.

26. பின்வருவனவற்றுள் வருமானக் கணக்குகள் எனும் பகுதியைச் சேர்ந்த தொகுதியைத் தெரிவு செய்க.
(1) செலுத்தப்பட்ட வட்டி, கூலிகள், காப்புறுதி.
(2) எழுதுகருவி வகை, கடன்பட்டோர், கையிருப்பு
(3) கிடைத்த கழிவீடு, வைப்பின் மீதான வட்டி, கிடைக்கப்பெற்ற தரகுக்கூலி
(4) கடன்பட்டோர், எடுப்பனவுகள், கடன்

வினாக்கள் 27, 28, 29, 30 ஆகியவற்றுக்கு விடையளிப்பதில் பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்துக.

A - கொள்வனவுக் குறிப்பேடு **B** - விற்பனைகள் குறிப்பேடு
C - உண்முகத் திரும்பல்கள் குறிப்பேடு **D** - குறிப்பேடு / தினசரி

27. உற்பத்தியாளரொருவர் தனது பழைய பொறித் தொகுதியொன்றை திரு. ஜெயதேவவிற்கு ரூபா. 25 000/- இற்கு விற்றார். இக்கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்கு உபயோகிக்கப்பட்ட துணையேடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

28. இக் குறிப்பேட்டைத் தயாரிப்பதில் "செலவுத்தாள்" ஒன்று ஒரு மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த உப ஏடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

29. சில்லறை விற்பனையாளரொருவர் முகமது அன்ட் கம்பனியிடமிருந்து ரூபா. 15000/- இற்குப் பண்டங்களை வாங்கினார். இக் கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்குச் சில்லறை விற்பனையாளரால் பயன்படுத்தப்பட்ட உப ஏடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

30. மொத்த விற்பனையாளரொருவர் பிள்ளை அன்ட் கம்பனிக்கு ரூபா. 5 000/- இற்குப் பண்டங்களை விற்றார். இக்கொடுக்கல் வாங்கலைப் பதிவதற்கு மொத்த விற்பனையாளர் பயன்படுத்திய உப ஏடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

31. காசேட்டுக்குப் பொருத்தமான சரியான கூற்றைத் தெரிவு செய்க:
(1) காசு விற்பனைகளும், காசுக் கொள்வனவுகளும் தொடர்பான பெறுவனவுகளையும், கொடுப்பனவு களையும் பதிவதற்குப் காசேடு பயன்படுத்தப்படுகிறது.
(2) காசுக்கழிவீடுகள், வியாபாரக்கழிவீடுகள் அனைத்தும் கழிவீட்டு நிரல்களில் பதியப்படும்.
(3) காசோலையொன்று மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் எதிர்ப்பதிவொன்று காசேட்டிற் செய்யப்படும்.
(4) காசேடு இரு நோக்கங்களைப் பூர்த்தி செய்கிறது. அது ஓர் உப ஏடாகத் தொழிற்படுவதுடன் ஒரு கணக்காகவும் அமைகிறது.

32. பின்வருவன "சில்லறைக் காசேடு" தொடர்பாகத் தரப்பட்டுள்ள வாக்கியங்களாகும். சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க?
(1) சில்லறைக் காசாளர் தமது கட்டுநிதியை மீளநிரப்புவதற்காகக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அளைத்தையும் பிரதம காசாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
(2) பகுப்பாய்வு நிரல்களின் மொத்தத் தொகைகள் காசேட்டிற்கு வரவு வைக்கப்படும்.
(3) பேரேட்டு நிரலின் மொத்தத் தொகை கடன்பட்டோர் கணக்கிற்குச் செலவு வைக்கப்படும்.
(4) கொடுப்பனவுகளைச் செய்தலில் சில்லறைக் காசாளர் தனது தற்றுணிபைப் பிரயோகிக்கலாம்.

33. பின்வருவனவற்றுள் பரிட்சை மீதி தொடர்பில் தரப்பட்டுள்ள பிழையான கூற்று எது?
(1) இது பேரேட்டிலான வரவு மீதிகள் செலவு மீதிகள் அனைத்தினதும் ஒரு நிரலாகும்.
(2) இரு நிரல்களினதும் மொத்தத் தொகைகள் இணங்குதல் அதன் எண் கணிதச் செம்மையை நிரூபிக்கிறது.
(3) இது ஒரு ஆண்டின் இறுதியில் மாத்திரம் தயாரிக்கப்படலாம்.
(4) பரீட்சை மீதி, பேரேட்டுக் கணக்குகளில் விடப்படும் வழுக்களை எப்பொழுதும் வெளிப்படுத்து வதில்லை.

34. "காலாவதியாகாத காப்புறுதிக்" கான சரியான இரட்டைப் பதிவைத் தெரிவு செய்க:
(1) வரவு - காலாவதியாகாத காப்புறுதிக் கணக்கு
செலவு - காப்புறுதிக் கணக்கு
(2) வரவு - முற்பணக் கணக்கிற் செலுத்தப்பட்ட செலவுகள்
செலவு - இலாப நட்டக் கணக்கு
(3) வரவு - இலாப நட்டக் கணக்கு
செலவு - காலாவதியாகாத காப்புறுதிக் கணக்கு
(4) வரவு - முற்பணக் கணக்கிற் செலுத்தப்பட்ட காப்புறுதி
செலவு - காசு

35. சொத்து ஒன்றின் "எஞ்சிய பெறுமானம்" என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(1) குறித்த ஒரு காலப்பகுதியின் முடிவில் சொத்தொன்றின் பெறுமானம்
(2) ஆண்டொன்றின் இறுதியில் சொத்தொன்றின் மதிப்பிட்ட கிரயம்
(3) சொத்தொன்றின் ஆயுட்கால முடிவில் அதன் மதிப்பிட்ட பெறுமானம்
(4) பூர்த்தியான பண்டங்களை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள்களின் கிரயம்.

36. பின்வருவன வியாபாரி ஒருவர் செய்த கொடுப்பனவுகள் சிலவாகும். மூலதனச்செலவு எனும் பகுதியினுள் அடங்கும் இனத்தைத் தெரிவு செய்க:
(1) பொறித்தொகுதியைத் நிறுவுவதற்குச் செலுத்தப்பட்ட, கட்டணங்கள் ரூபா. 3 000/-
(2) செலுத்தப்பட்ட இறைகள் ரூபா. 1 150/-
(3) எழுதுகருவி வகையைக் கொள்வனவு செய்தற்குச் செலுத்திய தொகை ரூபா. 500/-
(4) வளவின் பழுதுபார்த்தல் வேலைகளுக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 6 000/-

37. வியாபார, இலாப, நட்டக் கணக்கொன்றைத் தயாரிப்பதன் பிரதான குறிக்கோள் யாது?
(1) வருமான, செலவுத் தொகைகளை உறுதிப்படுத்துதல்.
(2) வியாபாரத்தின் இலாபகரத் தன்மையை மதிப்பிடுதல்.
(3) செலவின் வேறுபட்ட வகைகள் பற்றிய தகவல்களைப் பெறுதல்.
(4) விற்பனைகளின் கிரயத்தை அறியதல்.

38. வியாபாரக் கணக்கைத் தயாரிப்பதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயம் எது?
(1) வியாபாரச் செலவுகள் (2) வியாபாரக் கழிவீடுகள்
(3) கிடைக்கப்பெற்ற கழிவீடுகள் (4) உண்முகக் காவுகை

	ரூபா
கட்டடங்கள்	100 000
பொறித்தொகுதி	8 000
கையிருப்பு	5 000
காசு மீதி	8 000
கடன் கொடுத்தோர்	6 000
வங்கி மேலதிகப்பற்று	3 000
செலுத்த வேண்டிய வாடகை	2 000
காலாவதியாகாத காப்புறுதி	1 000

39. நடப்புச் சொத்துக்களின் பெறுமானம் யாது?
(1) ரூபா 14 000/- (2) ரூபா 9 000/- (3) ரூபா 16 000/- (4) ரூபா 17 000/-

40. நடப்புப் பொறுப்புக்களின் பெறுமானம் யாது?
(1) ரூபா 7 000/- (2) ரூபா 9 000/- (3) ரூபா 11 000/- (4) ரூபா 6 000/-

01. 3	02. 1	03. 2	04. 2
05. 4	06. 1	07. 2	08. 3
09. 2	10. 4	11. 1	12. 3
13. 2	14. 4	15. 1	16. 2
17. 2	18. 3	19. 4	20. 4
21. 2	22. 4	23. 2	24. 4
25. 1	26. 3	27. 2	28. 1
29. 2	30 4	31. 1	32. 2
33. 3	34. 4	35. 2	36. 3
37. 1	38. 2	39. 4	40. 3

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண)ப் பரீட்சை டிசெம்பர் 1989

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, DECEMBER - 1989

(புதிய பாடத்திட்டம், NEW SYLLABUS)

வர்த்தகமும் கணக்கியலும் - 11

COMMERCE AND ACCOUNTS - II

மூன்று மணி / THREE HOUR

பகுதி 1 இலிருந்து முதலாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
பகுதி 11 இலிருந்து ஐந்தாம் வினாவுக்கும் வேறு இரண்டு வினாக்களுக்கும் விடை தருக.
(முதலாம், ஐந்தாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடையளிக்கப்படுதல் வேண்டும்)

பகுதி I

1. பிரபா விற்பனை நிலையத்தின் ஏடுகளிலிருந்து 1988 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று பின்வரும் பரீட்சை மீதி பெயர்ந்தெடுக்கப்பட்டது.

	ரூபா	ரூபா
விற்பனைகள்		246 200
கொள்வனவுகள்	150 800	
உண்முகக் காவுகை	14 600	
வெளிமுகக் காவுகை	3 200	
உண்முகத் திருப்பல்கள்	1 000	
வெளித் திரும்பல்கள்		800
வியாபாரக் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும்	30 400	23 500
தளபாடமும் சாதனங்களும் (கொள்விலையில்)	16 000	
வாடகை	11 000	
காப்புறுதி	4 400	
மின் கட்டணங்கள்	4 200	
அனுமதிக்கப்பட்ட கழிவீடுகள்	2 300	
பொதிசெய் செலவுகள்	1 700	
அறவிடமுடியாக் கடன்கள்	600	
தளபாடங்கள், சாதனங்கள் மீது தேய்மானத்திற்கான ஏற்பாடு		8 000
வங்கிக் கட்டணங்கள்	200	
சம்பளங்கள்	24 000	
சில்லறை வருமானம்		2 600
கையிருப்பு (01.01.1989)	28 100	
மூலதனம்		67 400
எடுப்பனவுகள்	10 200	
வங்கி மீதி	40 300	
கைவசமுள்ள காசு	5 500	
	348,500	348,500

1988 டிசெமபர் 31 இல முடிவுறற ஆணடுககான வியாபார, இலாப நடடக கணகக்கையும, அததேதியில இருநதவாறான ஐந்தொகையையும் பின்வருவனவற்றைக் கருத்திற் கொண்டு தயாரிக்க:

(1) கையிருப்பு 31.12.1988 இல் 25 300/- ரூபா

(2) தளபாடங்கள், சாதனங்கள் என்பவை மீதான தேய்மானத்திற்கு கொள்விலையின் மீது 10 சதவீதப்படி ஏற்பாடு செய்க.

	ரூபா
(3) அட்டுற்று - வாடகை	1 000
பொதிசெய் செலவுகள்	400
(4) காலாவதியாகாத காப்புறுதி	900

2. புடைவை மொத்த வியாபாரி ஒருவரின் ஏடுகளிற் பதியப்பட்ட பின்வரும் இனங்கள் ஒவ்வொன்றும் நிலையான சொத்து நடப்புச் சொத்து, நடப்புப்பொறுப்பு ஆகியவற்றுள் ஏதுவாக அமையுமெனக் காட்டுக.

(1) வழங்குநர் ஒருவருக்குச் சென்மதியான தொகை
(2) வங்கி மேலதிகப்பற்று
(3) புடைவை வகைகளின் கையிருப்பு
(4) புடைவை வகைகளை ஒப்படைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம்
(5) வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வருமதியான தொகை.

ஆ. பினவரும கொடுக்கல வாங்கலைத் தனித்தனியாகக் கருதி வரவு வைக்கபபடவேணடிய அலலது செலவு வைக்கபபட வேணடிய தொகைகளைக் குறிப்பிடுக.

(1) உரிமையாளர் தனது சொந்த உபயோகத்திற்காக ரூபா 500/- ஆகிய தொகையை மீள எடுத்துக் கொள்கிறார்.

(2) கொள்வனவுகள் தொடர்பில் ஏற்றியிறக்கற் கட்டணங்களாகக் காசோலை மூலம் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 1000/- ஆகும்.

(3) பர்னாந்து அன்ட் கம்பனி எனும் வியாபாரத் தாபனத்திடமிருந்து ரூபா .5 600/- ஆகிய தொகைக்கு அலுவலகத் தளபாடங்கள் வாங்கப்பட்டன.

(4) ரூபா 600/- எனும் தொகைக்கான சேதமடைந்த பண்டங்கள் வரையறுத்த சித்ரா கம்பனிக்குத் திருப்பியனுப்பப்பட்டன.

(5) அலுவலக உபயோகத்திற்கான எழுதுகருவி வகை, வாங்கப்பட்டது.
அதற்காக ரூபா. 1200/- காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

3.

(1) காசேடு தொடர்பில் "எதிர்ப் பதிவுகள்" எனும் பதத்தை விளக்குக.

(2) காசேட்டின் வரவுப் பக்கத்திற் காணப்படும் மூன்று வகையான விடயங்களை குறிப்பிடுக.

(3) வியாபாரி ஒருவரின் காசேடு 1989 ஜூலை 31 இல் ரூபா 28 400/- ஆன மீதியொன்றைக் காட்டியது. இது வங்கிக் கூற்றில் காட்டப்பட்ட மீதியிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. வங்கிக் கூற்றுடன் ஒப்பிட்டு நோக்கிய போது பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(அ) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட, ரூபா 3 200/- பெருமானத்துக்கான காசோலைகள் நடைமுறைக் கணக்கிற்குச் செலவு செய்யப்படவில்லை.

(ஆ) காசோலை புத்தகமொன்றிற்காக வங்கி 150/- ரூபாக் கட்டணத்தை அறவிட்டிருந்தது. ஆனால் காசேட்டில் பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

(இ) கடன்கொடுத்தோருக்குச் சேருமுகமாக ரூபா 2100/-ஆகிய பெறுமானத்திற்கு வரையப்பட்ட காசோலைகள் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) வங்கியானது வணிகக்கழகத்திற்கு உறுப்புரிமைக் கட்டணமாக நிலையான கட்டளையொன்றின் மீது ரூபா 1000/- ஐச் செலுத்தியிருந்தது. ஆனால் காசேட்டில் பதிவு எதுவும் செய்யப்படவில்லை.

1989 ஜூலை 31 இல் இருந்தபடி வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஒன்றைத் தயாரிக்க.

4.

(1) பரீட்சை மீதி எண்கணித அடிப்டையில் இணங்கினாலும் கணக்குப் பதிவியல் முறைமையில் வழுக்கள் இன்னும் இருக்கக்கூடும். அத்தகைய வழுக்களின் வேறுபட்ட வகைகளைத் தெளிவுபடுத்துவதற்கு மூன்று உதாரணங்கள் தருக.

(2) வியாபாரத் தாபனமொன்றின் ஏடுகளில் பின்வரும் வழுக்கள் காணப்பட்டது. வழுக்களைத் திருத்துவதற்கு அவசியமான குறிப்பேட்டுப் பதிவுகளைக் காட்டித் தொங்கற் கணக்கைத் தயாரிக்க.

(அ) இலங்கை வியாபாரக் கம்பனியிடமிருந்து ரூபா 8 500/- ஆகிய பெறுமானத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் ஏடுகளிலிருந்து முற்றாக விடுபட்டிருந்தது.

(ஆ) மோட்டார் வாகனப் பழுதுபார்த்தலுக்குப் செலவிடப்பட்ட ரூபா 1200/- மோட்டார் வாகனக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது.

(இ) விற்பனைகள் குறிப்பேடு ரூபா 1000/- ஆன தொகையால் மிகையாகப் பதியப்பட்டிருந்தது.

(ஈ) பெரேரா அன்ட கம்பனிக்குக் கழிவீடாக அனுமதிக்கப்பட்ட ரூபா. 180/- பெரேரா அன்ட கம்பனிக்கு வரவு வைக்கப்பட்டது

பகுதி 11

5.

(1) இலங்கையிலுள்ள கைத்தொழில்கள் சில, பிரதானமாக உள்நாட்டு மூலப்பொருள்களையே அடிப்படையாகக் கொண்டவை, அத்தகைய இரு கைத்தொழில்களைப் பெயரிடுக.

(2) "உற்பத்தி" எனும் பதத்தைத் சுருக்கமாக விளக்குக.

(3) தொழிற் பிரிப்பின் இரு அனுகூலங்களைக் கூறுக.

(4) வியாபாரத்திற்குரிய துணைச் சேவைகளின் பிரதான பிரிவுகளுள் இரண்டை மாத்திரம் குறிப்பிடுக.

(5) சில்லறை விற்பனையாளர் ஒருவரால் ஆற்றப்படும் எவையேனும் இரு சேவைகளை எழுதுக.

(6) இலங்கை மத்திய வங்கி இறக்குமதிகளை மூன்று பிரதான தொகுதிகளாக வகுதிப்படுத்துகிறது. அவற்றுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிட்டு ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(7) சுதந்திர (கட்டில்லா) வர்த்தக வலயத்தில் முயற்சிகளின் விரிவாக்கம் கைத்தொழில்களில் புதிய ஏற்றுமதியைப் பொருள்களின் உற்பத்தியைக் கண்டது. இவ்வுற்பத்திப் பொருள்களுள் எது பெருமளவு வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்கிறது.

(8) "இறக்கியேற்றுமிட வியாபாரம்" என்பதாற் கருதப்படுவது யாது?

(9) தரப்படுத்துதல் மூலம் அல்லது விவரண அடிப்படையில் விற்பனை செய்வதற்குப் பொருத்தமற்ற பண்டங்களை விற்பதற்கான அதிசிறந்த முறை யாது?

(10) அஞ்சல் அலுவலகத்தினூடாக நிறைவேற்றப்படக்கூடிய எவையேனும் இரு கொடுப்பனவு முறைகளைக் குறிப்பிடுக.

(11) வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் உதவும் பல்வேறு வகையான முகவர்கள் உளர், முகவர்களுள் எவரேனும் இரு வகையினரைக் குறிப்பிடுக.

(12) கடனடிப்படையில் விலையுயர்ந்த பொருள்களை வாங்குவதில் இலங்கையில் தற்பொழுது கையாளப் பட்டுவரும் மிகப் பிரசித்தமான முறை யாது?

(13) இலங்கை மத்திய வங்கியின் எவையேனும் இரு தொழிற்பாடுகளைக் கூறுக.

(14) ஏற்றியிறக்கல் (போக்குவரத்து) முறையொன்றைத் தெரிவு செய்வதில் கருதப்படவேண்டிய இரு காரணங்களை எழுதுக.

(15) இலங்கையில் உருவாக்கப்படத்தக்க எவையேனும் இரு வகையான கம்பனிகளைப் பெயரிடுக.

6.

(1) "பணம் வேறுபட்ட பல தொழிற்பாடுகளை நிறைவேற்றுகிறது" அதன் பிரதான தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஏதேனும் ஒன்றை விவரிக்க.

(2) பணத்தின் மிக இன்றியமையாத சிறப்பியல்பையும் வேறு இரு சிறப்பியல்புகளையும் கூறுக.

(3) வர்த்தக வங்கிகள் நிறைவேற்றுகின்ற, வைப்புக்களை ஏற்றுக்கொள்தலும் அவற்றை பேணுதலும் தவிர்ந்த எவையேனும் வேறு இரு தொழிற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

(4) இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான எவையேனும் மூன்று வகையான வங்கிகளைப் பெயரிடுக.

7.

(1) வேறுபட்ட காரணங்களுக்காக வணிகர்களுக்குத் தொடர்பாடல் மிக முக்கியமானது. அவற்றுள் மூன்று காரணங்களைத் தருக.

(2) பாரிய முயற்சியொன்று பயன்படுத்தக்கூடிய இரு உள்ளகத் தொடர்பாடல் முறைகளைப் பெயரிட்டு முறை ஒவ்வொன்றினதும் பயன்களை விவரிக்க.

(3) விளம்பரப்படுத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்தலில் கருத்திற் கொள்ளப்படவேண்டிய இரு காரணிகளைக் குறிப்பிடுக.

(4) சில வணிகர்கள் தமது விளம்பரங்களில் பிழையான தகவல்களைக் கொடுப்பதன் மூலம் நுகர்வோரை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். அத்தகைய விளம்பரங்களினால் இழப்புக்களை எய்துவதிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் நிறைவேற்றியுள்ள அதிகாரச் சட்டம் எதுவெனக் கூறுக.

5) சிறந்த விளம்பரம் நுகர்வோர், வணிகர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் பயனளிப்பதாக அமையும். இத்தரப்பினர் ஒவ்வொருவராலும் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய இரு நன்மைகளை எழுதுக.

8.

(1) தனி வியாபாரி வணிகத்தில் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் ஆகிய இரண்டும் உள்ளன. அத்தகைய அனுகூலங்களுள் இரண்டைக் குறிப்பிடுக.

(2) தனது வணிக முயற்சிகளை மேற்கொண்டு நடத்துவதில் தனிவியாபாரி ஒருவர் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(3) எழுத்துருவில் அமைந்த பங்குடைமை ஒப்பந்தங்களைப் பெற்றிராத பங்குடைமைகளும் உள்ளன.

பின்வருவன தொடர்பில் அத்தகைய பங்குடைமைகள் பின்பற்றும் நடைமுறையை விளக்குக:

(அ) மூலதனப் பங்களிப்பு வழங்கள்.

(ஆ) முகாமை.

(இ) இலாபங்களையும் நட்டங்களையும் பகிர்தல்.

(ஈ) புதிய பங்காளரைச் சேர்த்தல்.

(4) பங்காளர்களுள் எவரேனும் மூன்று வகையான பங்காளர்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு வகையான பங்காளர்கள் பற்றியும் சுருக்கமாக விவரிக்க.

****

வர்த்தகமும் கணக்கியலும்

COMMERCE AND ACCOUNTS - II

31.12.88ல் முடிவடைந்த ஆண்டுக்கான பிரபா விற்பனை நிலையத்தின் இலாப நட்டக் கணக்கு:

ஆரம்ப இருப்பு (1-1-88)		28100	விற்பனைகள்	246200	
+) கொள்வனவுகள்	150800		-) உண் முகத்திரும்பல்	1000	245200
+) உட்காவுகை	14600				
	165400				
-) வெளித்திரும்பல்	800	164600			
		192700			
-) இ.இருப்பு		25300			
விற்ற சரக்கின் கொள்விலை		167400			
மொ.லா.கீ.கொ.செ		77800			
		245200			24520
நிலையச் செலவு					
தளபாடப் பெறுமானத் தேய்வு	1600		மொ.லா.மீ.கீ.கொ.வ	77800	
வாடகை	12000		+) சில்லறை வருமானம்	2600	80400
காப்புறுதி (4400-900)	3500				
மின் கட்டணம்	4200	21300			
நிர்வாகச் செலவு					
சம்பளம்		24000			
வி.வி.செலவு					
பொதி செய்த செலவுகள்(1700-400)	2100				
அனுமதித்த கழிவுகள்	2300				
வெளிமுகக் காவுகை	3200				
அ.மு .கடன்	600	8200			
நிதிச்செலவுகள்					
வங்கிக் கட்டணம்		200			
தே. இலாபம்		26700			
		80400			80400

31.12.88 ல் உள்ளவாறான பிரபா விற்பனை நிறுவனத்தின் ஐந்தொகை.:

			நிலையான சொத்து	கொ.வி	தி.பெ.தே	மீதி
மூலதனம்	67400		தளபாடம்	16000	9600	6400
+) தே.இலாபம்	26700			16000	9600	6400
	94100					
-) பற்று (எடுப்பனவுகள்)	10200	83900	**நடைமுறைச் சொத்து**			
			இ.இருப்பு (31.12.88)		25300	
நடைமுறைப் பொறுப்பு			கடன்பட்டோர்		30400	
			காலாவதியாகாத காப்புறுதி		900	
கடன் கொடுத்தோர்	23500					
அட்டுறு வாடகை	1000		வங்கி மீதி		40300	
அறுட்டுப் பொதிசெய்			கைவசமுள்ள காசு		5500	
செலவுகள்	400	24900				
		108800				108800

2.

அ. 1) நடைமுறைப் பொறுப்பு (நடப்புப் பொறுப்பு).

2) நடைமுறைப் பொறுப்பு.

3) நடைமுறைச் சொத்து.

4) நிலையான சொத்து.

5) நடைமுறைச் சொத்து.

ஆ. 1) பற்றுக் கணக்கு வரவு 500 ரூபா
காசுக் கணக்கு செலவு 500 ரூபா

2) ஏற்றியிறக்கல் செலவுகள் கணக்கு வரவு 1000 ரூபா
வங்கிக் கணக்கு செலவு 1000 ரூபா

3) அலுவலக தளபாட கணக்கு வரவு 5600 ரூபா
பர்ணாந்து கணக்கு செலவு 5600 ரூபா

4) சித்ரா கம்பனிக்கு கணக்கு வரவு 600 ரூபா
வெளித்திரும்பல் கணக்கு செலவு 600 ரூபா

5) அலுவலக எழுதுகருவி வகைக்க/கு வரவு 1200 ரூபா
வங்கிக்கணக்கு செலவு 1200 ரூபா

3.

1) காசேடு தொடர்பில் "எதிர்ப்பதிவு" என்பதன் கருத்து ஒரு வியாபார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைக்கு இரண்டு பதிவுகளுமே காசேட்டின் வரவுப் பக்கத்தில் ஒரு பதிவும், காசேட்டின் மற்றைய பக்கத்தில் பதிவும் இடம் பெறுவதையே இது கருதும்.

உதாரணமாக: எக்ஸ் (X) என்ற வியாபார நிறுவனம் 5000/- வினை வங்கியில் வைப்புச் செய்தது. இதற்கான எதிர்ப் பதிவுகள் இரண்டுமே காசேட்டில் இடம் பெறுவதனை அவதானிக்கலாம்.

காசேடு

விபரம்	வங்கி	காசு	விபரம்	வங்கி	காசு
மீதி.வரவு	-	10,000	மீதிவரவு	10,000	-
காசு (எ/ப)	5000	-	வங்கி (எ/ப)	-	5000
மீதி செலவு	5000	-	மீதிசெலவு	-	5000
	10000	10,000		10,000	10000
மீதி வரவு		5,000	மீதிவரவு	5,000	

2) மூலதனம், கொத்துக்களின் விற்பனையால் பெறப்படும் பணம், சில்லறை, வருமானம், முதலீட்டு வருமானம் போன்றன.

3) 31. ஜூலை. 89ல் வங்கிக்கணக்கு இணக்கக் கூற்று.

காசேட்டின் படியான மீதி.		28,400
கூட்டுக: சமர்ப்பிக்கப்படாத காசோலை.	2100	
கடன்பட்டோர் நேரடியாகக் கட்டியகாசோலை	2000	4,100
		32,500
கழிக்குக: செலவு வைக்கப்படாத (வசூலிக்கப்படாத) காசோலை	3200	
காசோலைப்புத்தகக் கட்டணம்	150	
உறுப்புரிமைக் கட்டணம் (நிலையான கட்டளையின் பேரில்)	1000	(4,350)
வங்கிக் கூற்றுமீதி (31 ஜூலை, 89ல்)		28,150

4.

1) 1. கைவிடப்படும் வழுக்கள் 2. ஈடுசெய்வழுக்கள் 3. கணக்கு மாறிப்பதிதல்
4. மூலஏட்டுப் பிழைகள் 5. கோட்பாட்டு வழுக்கள்

உதாரணமாக:

1. 500/- கொள்வனவு ஒன்று ஏடுகளில் இடம் பெறாமல் இருப்பது.
2. வாடகைக்கென, கொடுத்த 300/- வாடகைக்கணக்கில் 250/- எனவும், விற்பனையால் பெறப்பட்ட பணம் 600/- விற்பனைக்கணக்கில் 550/- எனவும் செலவு வைக்கப்பட்டது.
3. வெளித்திரும்பல் 500/- பொதுக்கணக்கில் செலவு வைக்கப்படுதல்.
4. நாளேடுகளில் பதியப்படும்போது தவறான தொகையைப் பதிந்து வைத்தல். (இத்தொகையே மூலஏட்டுக்குப் பதியப்படுவதால்)
5. 1000/- அலுவலக உபகரண பெறுமதி அலுவலக செலவுக்கணக்கில் பதியப்படுதல்.

மேற்கூறிய தவறுகளினால் பரீட்சை மீதி எண்கணித அடிப்படையில் சமனாகும். ஆனால் கணக்கியல் துறையில் தவறுகள் ஆகும்.

2) **நாட்குறிப்பேட்டுப் பதிவுகள்**

அ)	கொள்வனவுக் கணக்கு வரவு	8,500	
	இலங்கை வியாபாரக் கம்பனி கணக்கு செலவு		8,500
	(ஏடுகளில் இருந்து தவறவிடப்பட்ட கொள்வனவுத்தொகை பதியப்பட்டுள்ளது)		
ஆ)	மோட்டார் வான் பழுதுபார்த்தல் செலவுக்கணக்கு வரவு	2,500	
	மோட்டார் வான் கணக்கு செலவு		2,500
	(கணக்கு மாறிப்பதிந்ததை உரிய கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது)		
இ)	விற்பனைக் கணக்கு வரவு	1,000	
	தொங்கல் கணக்கு செலவு		1,000
	(விற்பனைக் கணக்கில் மிகையாக கூட்டிய 1000/-த்தொகை குறைத்துப் பதியப்பட்டுள்ளது)		
ஈ)	தொங்கல் கணக்கு வரவு	360	
	பெரேரா அன்ட் கம்பனிக் கணக்கு		360
	(பக்கம் மாறிப் பதிந்த தவறு திருத்தப்பட்டுள்ளது)		

தொங்கல் கணக்கு

மீதி வரவு	640	விற்பனை	1000
பெரேரா	360		
	1000		1000

பகுதி II

5.

1) பெருந்தோட்டக் கைத்தொழில்.

2) "உற்பத்தி" என்பதன் கருத்து மனிதனின் நாளாந்த தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக மூலப்பொருட்களை முடிவுப்பொருள்களாக மாற்றும் தொழிற்பாட்டையே இது குறிக்கும்.
உதாரணம்:- மரத்தை தளபாடங்களாக மாற்றுதல்.

3) சிறப்புத் தேர்ச்சி ஏற்படுதல், மூலப்பொருட் சிக்கனம், குறைந்த நேரத்தில் கூடியளவு உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் திறன், உற்பத்தியின் தரம் அதிகரித்தல், உற்பத்திச் செலவு குறைவடைதல்.

4) போக்குவரத்து, தொடர்பூட்டல், காப்புறுதி, களஞ்சியப்படுத்தல், வங்கிச் சேவை.

5) சில்லறை விற்பனையாளரால் ஆற்றப்படும் சேவைகள்:-
   1. நுகர்வோர் இருக்கும் இடத்தில் கொண்டு சென்று பொருட்களை விநியோகம் செய்தல்.
   2. கடனுக்குப் பொருட்களை கொடுத்து உதவுகிறார்.

3. பல உற்பத்தியாளர்களதும் உற்பத்திப் பொருட்களையும் கொள்வனவு செய்வதன் மூலம் நுகர்வோர் மிகத் தரமானதைத் தெரிவு செய்து கொள்ள வாய்ப்பு கிடைக்க ஏதுவாகிறது.
4. நுகர்வோருக்கு பொருட்களின் தரம், தன்மை, பாவிக்கும் முறை என்பனவற்றை வழங்குதல்.
5. நுகர்வோரது தேவைக்கு ஏற்ற விதத்தில் பொருட்களை விற்பனை செய்தல்.
6. வருமானம், குறைந்த, கூடிய பிரிவினர் வாங்கக்கூடிய விதத்தில் இனம், இனமாக பொருட்களை வழங்குதல்.

   நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள்.

   நுகர்வுப் பொருட்கள் - உணவுப் பொருட்கள், பானங்கள், துணிகள்.

   இடைநிலைப்பொருட்கள் - பெற்றோலியம், கோதுமை, பசளை.

   முதலீட்டுப் பொருட்கள் - பொறிகள், கட்டிடம், இயந்திரம், போக்குவரத்து உபகரணம்.
7. தைக்கப்பட்ட ஆடைகள்.
8. மீள ஏற்றுமதி செய்யும் நோக்குடன் பொருட்களை இறக்குமதி செய்து அதில் மாற்றம் செய்து திரும்பவும் ஏற்றுமதி செய்வதனையே இறக்கியேற்றுமிட வியாபாரம் எனப்படும்.
9. ஏலவிற்பனை முறை.
10. காசுக்கட்டளை, தந்திக் காசுக்கட்டளை, அஞ்சல் முத்திரைகள்.
11. பொறுப்புத் தரகர், தரகர், ஏலத்தரகர்.
12. வாடகைக் கொள்வனவு முறை.
13. 1. அரசுக்காக நாணயங்களையும், நாணயத்தாள்களையும் வெளியிடுதல்.
    2. அரசாங்கத்தின் வங்கியாக செயல்படுதல்.
    3. நாட்டின் கடன்களைக் கட்டுப்படுத்தல்.
    4. பொருளாதார கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
    5. நாட்டின் விலை மட்டத்தை பேணி, பணவீக்கத்தினை கட்டுப்படுத்தல்.
14. ஏற்படும் செலவு, பொருட்களின் பழுதடையும் தன்மை, பொருட்கள் சென்று அடைவதற்கு ஏற்படும் காலம், பொருட்களின் பருமன், பாதுகாப்பு.

    (பொருட்கள் அனுப்பும் போது போக்குவரத்துச் சாதனம் ஒன்றைத் தெரிவு செய்வதற்கு மேற்கூறிய வற்றைத் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.)

    பிரயாணிகளைப் பொறுத்தவரையில், (மலிவு, சொகுசு, வேகம், பாதுகாப்புகள்) என்பன கவனிக்கப்பட வேண்டும்.
15. தனியார் கம்பனி, பொதுக்கம்பனி, மக்கள் கம்பனி.

6.

1) மாற்றூடகமாகச் செயற்படுதல்.

பெறுமானத் திட்டமாக (சேமிப்புகருவி) தொழிற்படுதல்.

பெறுமான அளவுகோலாக.

பிற்போட்ட கொடுப்பனவுக் கருவியாக.

மாற்றூடகமாகச் செயற்படுதல்:-

பண்டமாற்று முறையை நீக்கி, பொருட்களின் பெறுமதிக்கு பணத்தை வழங்கும் முறையே இது. இம் முறையினால் பண்டமாற்று முறையிலுள்ள சிலசிக்கல்கள் நீக்கப்பட்டன. பொருட்கள், சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது பணம் ஊடகமாகப் பயன்படுத்தப்படும்.

பெறுமானத் திரட்டாக தொழிற்படுதல்:-

மனிதன் தனது வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத்தில் பயன்படுத்தும் நோக்குடன் பணத்தைத் திரட்டி வைக்கிறான். இதனையே பணம் "பெறுமானத் திரட்டாக" தொழிற்படுதல் எனும் பதம் விளக்குகிறது. (பணத்தைத் திரட்டி வைப்பதற்கு இடம், தேவைப்படுவதில்லை, பழுதடைவதுமில்லை, ஆதிகாலத்தில் பண்டங்களே மாற்றப்படுவதால் பல சிக்கல்கள் காணப்பட்டன. சேமித்து வைக்க இடவசதி தேவைப்பட்டமை, பழுதடையும் தன்மை கொண்டிருந்தன.)

பிற்போட்ட கொடுப்பனவு முறையாக அமைதல்

கடன் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் போது அதற்குரிய கொடுப்பனவை எதிர்காலத்தில் கொடுத்துத் தீர்ப்பதற்காக பணம் பயன்படுத்தப்படுகின்றது. இதனையே பணம் "பிற்போட்ட கொடுப்பனவு கருவி" என அழைக்கப்படுகிறது.

பெறுமான அளவு கோலாக பயன்படுதல்

பண்டங்களினதும், சேவைகளினதும் விலையை அறவிடும் போது அளவு கோலாக பணம் திகழ்கின்றது. பெறுமதியைப் பணத்தால் வெளியிடும் போது அது "விலை" என விஷேடமாக அழைக்கப்படுகிறது. இலங்கையில் பண்டத்தின் விலை 100/- என்னும், கனடாவில் டொலர் வடிவிலும் இடம் பெறும்.

2. 1. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை.
2. நீடித்த வாழ்வுடையது.
3. பணமாகப் பயன்படுத்தப்படும் உலோகம் அருமைத் தன்மையுடையது.
4. இலகுவில் இனங் காணப்படக்கூடியது.

3. கடன்வசதி அளித்தல்.
வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்.
பிரதிநிதியாகப் பணியாற்றுதல்
பொதுச் சேவை அளித்தல்

கடன் வசதி அளித்தல்

வியாபாரம். நிதி, கைத்தொழில், விவசாயம், வீடமைப்பு நுகர்வு போன்றவற்றுக்கான வணிக வங்கிகள், கடன் வசதிகளை வழங்குகின்றன. வங்கி மேலதிகப்பற்றாகவும், பிணையாள் மூலம் கடன் என்ற இருவகைக் கடன்களை வழங்குகின்றது. (நடைமுறைக் கணக்கு இருப்பவர்களுக்கு மட்டுமே வங்கி மேலதிகப்பற்று கடன் வழங்கப்படுகின்றது)

வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்

வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலும், வேறு கொடுக்கல் வாங்கல்களிலும் வங்கி வரைபுகள், கடன் பத்திரங்கள், அஞ்சல் சாட்டுதல்கள், தந்திச் சாட்டுதல்கள், பயணிகள் காசோலை, வழங்குதல், மாற்றுண்டியல்களை கழிவுடன் மாற்றுதல் போன்ற பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவி செய்கின்றன.

பிரதிநிதியாகப் பணியாற்றுதல்

வாடிக்கையாளரின் பிரதிநிதியாகப் பணிபுரியும் வணிக வங்கிகள் அவர்களுக்காக, பிறரிடமிருந்து தமது வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய வட்டி, பங்குலாபம் என்பவற்றைத் திரட்டிக் கொடுப்பதும், அவர்களின் சார்பில் செலுத்த வேண்டிய காப்புறுதிக் கட்டணம் , வாடகை, மின்சாரக் கட்டணம் அங்கத்துவப் பணம் போன்றவற்றை நிலையான கட்டளையின் கீழ் உரியவர்களுக்கு செலுத்தி வாடிக்கையாளரின் பிரதிநிதியாகத் தொழிற்படுகின்றது.

பொதுச் சேவைகளை வழங்குதல்

வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளரின் நன்மை கருதி பெறுமதியான ஆவணங்கள் பத்திரங்கள், தங்கம், இரத்தினம் போன்ற பெறுமதியான சொத்துக்களையும், பாதுகாத்துக் கொடுக்கின்றது. இதற்காக குறிப்பிட்ட கட்டணத்தையும் அறவிட்டுக் கொள்ளும். இதனையே பொதுச் சேவைகள் வழங்குதல் எனும் தொழிற்பாடு புலப்படுத்தும்.

4) வணிக வங்கி, மக்கள் வங்கி, சேமிப்பு வங்கி

7.

1. தலைமைக் காரியங்களுடன் தொடர்பு கொள்வதற்கு.
ஊழியர்களை நிர்வகிப்பதற்கு.
வங்கிகளது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு.
கட்டளைகள், தகவல்கள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை வழங்குவதற்கு.

2. இன்டர்கொம், சுற்றரிக்கை, அழைப்புமணிகள், விளம்பரப்பலகைகள், கட்டங்கள், நிறஒளி சமிஞ்சைகள்.

இன்டர்கொம்:- இதன் மூலம் உரியவர்களுடன் நேரடியாகவே (இரு முனைகளில்) கதைப்பதன் மூலம் விளக்கமாக தகவல் பறிமாறப்படும்.

சுற்றரிக்கை:- இது ஊழியர்கள் அனைவரும் பார்க்கப்பட்டு, கையொப்பமிடப்பட்டு வழங்கப்படுவதால் தகவல் அளிக்கப்பட்டமை உறுதியானதாக இருக்கும்.

அழைப்பு மணிகள்:- ஒரே நேரத்தில் எல்லா ஊழியர்களுக்கும் தகவல்களை கொடுத்து விட முடியும்.

கட்டங்கள்:- இதன் மூலம், ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள், தலைமை அதிகாரிகள் உரையாடுவதன் மூலம், நல்ல முடிவுகளைப் பெறுதல் சாத்தியமாகும்.

3. * விளம்பரத்துக்கு ஏற்படும் செலவு.
* விளம்பரமடாகப் பயன்படுத்தும் சாதனம் மக்களிடையே பெற்றிருக்கும் செல்வாக்கு.
* போட்டியாளர் பயன்படுத்தும் விளம்பர சாதனம்.

4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
(1979ம் ஆண்டு 1ம் இறக்கச் சட்டம்)

8.

1. **அனுகூலங்கள்:-**
   1. தளியொருவரினால் தீர்மானங்கள் விரைவில் எடுக்கப்பட முடியும்.
   2. இலாபம் தனிஒருவருக்குச் சேர்வதால், அவர் அக்கறையுடன் செயல்படுவார்.
   3. வேண்டிய நேரத்தில் கலைத்து விடலாம்.
   4. வியாபார இரகசியம் பாதுகாக்கப்படும்.
   5. சட்டக்கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

2. மூலதன வசதிகள் இன்மை, திறமையற்ற நிர்வாகம்.
   தனித்து எல்லா அலுவல்களையும் கவனிக்க முடியாது.

3. ஒப்பந்தம் எழுத்து மூலம் இல்லாதவிடத்து:-
   அ. மூலதனப் பங்களிப்பு: சமமாக இடுதல்
   ஆ. முகாமை: அனைவரும் ஈடுபடுதல்
   இ. இலாப நட்டம்: சமம்.
   ஈ. புதியபங்காளர் சேர்தல்: எல்லாப்பங்காளரதும் சம்மதத்துடன் சேர்தல்.

4. 1. பொதுவான பங்காளர். (இயங்கும் பங்காளன்)
   2. செயல்படாப் பங்காளர்.
   3. உறங்கும் பங்காளர்.
   4. பெயராகவும் பங்காளர்.

பொதுவான பங்காளர்:

பங்குடமைக்கு மூலதனத்தையும், ஏனைய சொத்துக்களையும் இட்டு அதன் நடவடிக்கைகளிலும், பங்கெடுப்பவர்பொதுவான பங்காளர் எனப்படுவர்.
வியாபாரத்தின் பொறுப்புக்கள் முற்றாக இவரையே சாரும்.

செயல்படாப் பங்காளர்:

மூலதனத்தையும் வேறு சொத்துக்களையும் இட்டு இலாப நட்டத்தில் பங்கேற்கும் இவர் முகாமைக் கருமங்களில் ஈடுபடமாட்டார். இவரை மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள்.

உறங்கும் பங்காளர்:

வியாபாரத்திற்கு மூலதனமிட்டு இலாப நட்டத்தில் பங்கெடுத்து முகாமையில் ஈடுபடமாட்டார். ஆனாலும் மக்கள் இவரை அறிந்திருப்பர்.

பெயரளவுப் பங்காளர்:

வியாபாரத்தின் பங்காளரென தனது பெயரை மட்டும் பாவிக்கும் முகாமை நடவடிக்கையில் பங்கேற்காதவர்களே இவர்களாவார். சமூகத்தில் பிரபல்யம் பெற்று இருப்பவர்களையே இப் பங்காளராகச் சேர்ப்பது இயல்பு. பெரும்பாலும் நடைமுறையிற் காணலாம்.

****

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சா.த) விசேட பரீட்சை, ஜூலை 1988

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, JULY - 1988

வர்த்தகமும் கணக்கியலும் I

COMMERCE AND ACCOUNTS - II

கவனிக்க: (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
(2) 1 முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்டுள்ள விடைகளுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.
(3) விடைத்தாளில், நீர் தெரிவுசெய்த விடைக்கு ஒத்த எண்ணின்மீது பென்சிலால் புள்ளடி (X) இடுக.
(4) விடைத்தாளின் பிற்பக்கத்தில் மேலதிகமான அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றையும் கவனமாகப் பின்பற்றுக.

01. பின்வருவனவற்றிலிருந்து "உற்பத்தியாளர் பொருள்கள்" எனும் பதத்திற்குப் பொருந்தும் மிகப் பொருத்தமான விவரணத்தைத் தெரிவு செய்க.
(1) அவை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களாகும்.
(2) அவை நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பண்டங்கள் அல்லது சேவைகள் ஆகும்.
(3) அவை நுகர்வோரால் பயன்படுத்தப்படாத பொருள்களாகும்.
(4) அவை உற்பத்தியாளரால் விற்பனை செய்யப்படும் பொருள்களாகும்.

02. உற்பத்தியின் இறுதி நோக்கம் யாது?
(1) தொழிலற்றிருக்கும் மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.
(2) சமூகத்தில் நிலவும் வறுமையை ஒழித்தல்.
(3) மூலப்பொருள்களின் அதியுயர்ந்த பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல்.
(4) மனித தேவைகளை நிறைவு செய்தல்.

03. தரபட்டுள்ளவற்றிலிருந்து "தொழிற்பகுப்பு" சார்பில் மிகப்பொருத்தமான பிரதிகூலத்தைத் தெரிவு செய்க.
(1) ஒரே பணியைத் தொடர்ந்து ஆற்றுதல் வேலையில் சலிப்பை ஏற்படுத்தும்
(2) அது மூலப் பொருளில் தட்டுப்பாட்டை ஏற்படுதலும்.
(3) பொருள்களிலான உயர் பண்புத்தரம் காரணமாக அலகுச்செலவு (கிரயம்) அதிகரிக்கும்.
(4) வேலையாளருக்குக் குறைந்த கூலியே கொடுக்கப்படும்.

04. சில்லறை வியாபாரி ஒருவரினால் நிறைவேற்றப்படவேண்டிய மிகமுக்கியமான தொழிற்பாடு:
(1) மொத்த வியாபாரியிடமிருந்து பொருள்களைப் பெருந்தொகையாக வாங்குவதாகும்.
(2) உயர்ந்த விலைகளில் விற்பதன் மூலம் இலாபத்தைச் சம்பாதிப்பதமாகும்.
(3) எந்த முறையையேனும் கையாண்டு விற்பனைகளை அதிகரித்தலாகும்.
(4) நுகர்வோன் தேவைகளுக்கமையப் பொருள்களை வழங்குவதாகும்.

05. குறித்த ஒரு வகையான சில்லறைத் தாபனம் ஒருமுகப்பட்ட கொள்வனவும் பன்முகப்பட்ட விற்பனையும் எனும் தத்துவத்தைப் பின்பற்றுகிறது. பின்வருவனவற்றுள் அத் தாபனம் எது?
(1) பகுதிப் பண்டகம் (2) பல்பகுதிக் கடை (3) மீன்சந்தை (சுப்பர்சந்தை) (4) சில்லறைப்பண்டகம்

06. பின்வருவனவற்றுள் சேவைகளை வழங்கும் வியாபார நிலையத்தைத் தெரிவு செய்க:
(1) கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்
(2) பாதுகாப்பளித்தற் பணியை மேற்கொள்ளும் நிறுவனம்
(3) பெற்றோலியப் பொருள்கள் வியாபாரி
(4) மோட்டார் கார் உதிரிப்பாக வியாபாரி

07. பின்வரும் வாக்கியங்களுள் எது சரியான கூற்றாக அமைகிறது?
(1) மொத்த விற்பனையாளர் சில்லறை வியாபாரத்திலீடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.
(2) மொத்த வியாபாரத்தின் ஒரேயொரு சிறப்பியல்பு பொருள்கள் பெருந்தொகையாக விற்கப்படுதலாகும்.
(3) மொத்த வியாபாரத்தில் எப்பொழுதும் வியாபாரக் கழிவுகள் அனுமதிக்கப்படும்.
(4) உற்பத்தியாளருக்கு அவரது பொருள்களை விநியோகிப்பதற்கு இடைநிலை மொத்த விற்பனையாளரது சேவைகள் எப்பொழுதும் தேவைப்படும்.

08. மீள்விற்பனைக்குப் பொருள்களை வாங்கும்பொழுது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் பலவுள்ளன. பின்வருவனவற்றுள் மிக முக்கியமான காரணி எதுவெனத் தெரிவு செய்க.
(1) நுகர்வோர் தேவைகளும் நயப்பும் (2) பொருள்களின் விலை
(3) களஞ்சியப்படுத்தும் வசதிகள் இருத்தல் (4) பொருள்களின் நீடித்துழைக்கும் இயல்பு

9ஆம், 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்துக. **A** - தரகர் **B** - தரகுமுகவர் **C** - ஏலவர் **D** - அனுப்புமுகவர்

09. அனேகமாக ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் தொடர்பான விடயங்களில் ஈடுபடுகின்ற முகவரைப் பெயரிடுக?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

10. வாங்குவோனுக்கும், விற்போனுக்கும் இன்றியமையாத தகவல்களை வழங்கி அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்க உதவுகின்ற முகவர் யார்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

11. கூடிய அதிகாரத்தைப் பெற்றிப்பதுடன் தனது முதல்வருக்குச் சாதகமாகப் பண்டங்களை வாங்குதலையும், விற்றலையும் வழக்கமாகக் கொண்ட முகவர் யார்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

12. வாங்குவதிலும், விற்பதிலும் பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களுள் ஒன்று "மாதிரிக் கிரயப் பட்டியல்"ஆகும். தரப்பட்டுள்ள கூற்றுக்களிலிருந்து இவ் ஆவணத்துக்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க?
(1) இது கடனடிப்படையில் பண்டங்களை விற்பனை செய்வதில் பயன்படுத்தப்படுவதாகும்.
(2) இது உடன் காசுக்குப் பண்டங்களை விற்பனை செய்வதில் பயன்படுத்தப்படுவதாகும்.
(3) இது வெளிநாட்டு வியாபாரத்திற்கு மட்டும் பயன்படுத்தப்படுவதாகும்.
(4) இது விற்பனைக்காக முகவரொருவருக்குப் பண்டங்களை அனுப்புவதில் பயன்படுத்தப்படுவதாகும்.

13. இறக்குமதி செய்யப்பட்ட பின்வரும் பொருள்களுள் இடை பொருள்களின் பகுதியைச் சேர்ந்தவை எவை?
(1) இரசாயனப் பொருள்கள் (2) பொறித்தொகுதிகள்
(3) மோட்டார் வாகனங்கள் (4) கட்டடப் பொருள்கள்

14. இறக்குமதியாளர் சில சமயங்களில் பண்டங்களைப் பந்தித்த பண்டகசாலையில் (சங்கப் பண்டகசாலையில்) களஞ்சியப்படுத்துவர். கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து இதற்கான சரியான காரணத்தைத் தெரிவு செய்க.
(1) இறக்குமதியாளர் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் வரை பண்டங்கள் இத்தகையதொரு பண்டகசாலையில் களஞ்சியப்படுத்தப்படலாம்.
(2) குறித்ததொரு கப்பற் சுமைக்கான கொடுப்பனவு செய்யப்படும் வரை இறக்குமதியாளர் பந்தித்த பண்டசாலையில் பண்டங்களைக் களஞ்சியப்படுத்துவர்.
(3) சுங்கத் தீர்வைகளின் மதிப்பீடு பந்தித்த பண்டகசாலைகளிலேயே மேற் கொள்ளப்படும்.
(4) பந்தித்த பண்டகசாலையில் தமது பண்டங்களை வைத்திருப்பதன் மூலம் இறக்குமதியாளர் சுங்கத் தீர்வைகளைத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்ய முடியும்.

15. தனி வியாபாரிகளாக வியாபாரம் நடத்துதல் சுலபமானது ஏனெனில்,
(1) சட்டங்கள், பிரமாணங்கள் எவையும் அதைக் கட்டுப்படுத்துவதில்லை.
(2) வியாபார விடயங்கள் முழுதும் தொடர்பாக உரிமையாளர் தானே தீர்மானங்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள முடியும்.
(3) உரிமையாளர் வாடிக்கையாளருடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கமுடியும்.
(4) மூலதனத்தைப் பெற்றுக் கொள்தல் மிகச் சுலபமாகும்.

16. பின்வருவனவற்றிலிருந்து பங்குடமை பற்றித் தரப்பட்டுள்ள சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) இலங்கையில் மிக்க பிரசித்தி வாய்ந்த வியாபார அமைப்பு வகை பங்குடைமை வியாபாரமாகும்.
(2) வியாபாரத்தை தொடங்குமுன் பங்குடைமை உடன்படிக்கையொன்றைத் தயாரிக்க வேண்டியது சட்டமாகும்.
(3) பொதுவாகப் பங்காளரின் பொறுப்பு வரையறையற்றது.
(4) பங்காளர் ஒருவரின் இறப்பைத் தொடர்ந்து வியாபாரத்தைக் கலைத்தல் தவிர்க்க முடியாததாக அமையும்.

17. பின்வருவன புகையிரதப் போக்குவரத்தின் சில பிரதிகூலங்களாகும். இலங்கையில் புகையிரதப் பாதைகளின் விஸ்தரிப்பைப் பெரிதும் பாதிக்கும் பிரதிகூலமானத் தெரிவு செய்க.
(1) பேணுதற் செலவுகள் மிக உயர்ந்தவையாக உள்ளன.
(2) புகையிரதங்கள் படோலைப்படுத்திய நேர அட்டவணைப்படி ஓடுதல் வேண்டும்.
(3) பண்டங்களை நேரடியாகப் புகையிரதப் பெட்டிகளுள் ஏற்றமுடியாது.
(4) அடிக்கடி மன்சரிவுகள் நிகழ்தல் காரணமாக ஏற்படும் வேண்டாத் தாமதங்கள் பயணிகளின் உற்சாகத்தைக் குறைப்பனவாக உள்ளன.

18. நுகர்வோருக்கு விவசாய விளைபொருள்களின் தடையற்ற வளங்களை உறுதி செய்வதற்கு நீர் பின்பற்றக்கூடிய மிகப்பொருத்தமான முறை யாது?
(1) பருவகாலம் நீங்கிய வேளைகளில் விவசாய விளைப்பொருள்களை இறக்குமதி செய்தல்.
(2) விலைகளை உயர்த்துவதன் மூலம் அவற்றை நுகரும் ஊக்கத்தைக் கெடுத்தல்.
(3) ஏனைய விலைப்பொருள்களுக்கு மாறும்படி மக்களைத் தூண்டுதல்.
(4) அறுவடைகளின் போது மிகையான விளை பொருள்களை முறையாகக் களஞ்சியப்படுத்தல்.

19. "கொள்கல அட்டை" என்பது கிடைக்கப்பெற்ற அல்லது வழங்கிய பண்டங்கள் போன்ற பல தகவல்களைக் கொண்ட ஓர் ஆவணமாகும். பின்வருவனவற்றில்எது இதில் உள்ளடக்கப்படாத தகவலாகும்?
(1) பண்டங்கள் பற்றிய விவரணம் (2) பண்டங்களின் விலை
(3) மீதியைக் காட்டும் நிரல் (4) கிடைப்பனவுகள் வழங்களின் திகதிகள்

20. பின்வருவனவற்றுள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றித் தரப்பட்ட கூற்றாக அமைவது எது?
(1) இத்தகைய ஒரு நிறுவகத்தை அமைப்பதற்கு ஐம்பதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் இருத்தல் வேண்டும்.
(2) தனி உறுப்பினர் ஒருவருக்காக வாக்களிக்கும் வலு அவர் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையினடிப்படையில் அமையும்.
(3) இவ்வகை அமைப்பின் சிறப்பமிசங்களுள் ஒன்று "சமத்துவ" தத்துவமாகும்.
(4) நிலையத்தின் ஆண்டறிக்கை கம்பனிகளின் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

21. தொழில் நிலையங்கள் வைத்திருக்கும் கணக்கீட்டுப் பதிவுகளில் நாட்டம் காண்பிக்கும் தொகுதியினருள் வருங்கால முதலீட்டாளர்களும் அடங்குவர். இதற்கான பிரதான காரணங்கள்:
(1) முகாமைத்துவத் தீர்மானங்களை எடுத்தற்காகும்.
(2) அவர்கள் தமது பணத்தை முதலீடு செய்வதற்கேற்ற ஓர் இலாபகரமான தொழில் நிலையத்தைத் தெரிவு செய்வதற்காகும்.
(3) மூலதனத்தின் அளவைக் கண்டு கொள்வதற்காகும்.
(4) குறித்த தொழில் நிலையங்களில் நடைபெறும் வியாபாரத்தின் தன்மையை விளங்கிக் கொள்வதற்காகும்

22. "ஐந்தொகை" எனும் பதத்தைச் சரியாக விவரிக்கும் கூற்றைத் தெரிவு செய்க?
(1) அது இறுதிக் கணக்குகளின் மூலக்கூறுகளுள் ஒன்றாகும்.
(2) அது சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றின் ஒரு நிரலாகும்.
(3) அது ஒரு நிதிக் கூற்றாகும்.

(4) அது குறித்த கால எல்லையில் ஒரு தொழில் நிலையத்திக்கிருக்கும் சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் தொகைகளைக் காட்டும் ஒரு கூற்றாகும்

23. நபரொருவர் ரூபா 10000/- மூலதனத்தை இட்டுத் தனி வியாபாரி அடிப்படையில் வியாபாரமொன்றைத் தொடங்கினார். அவரது காசுக் கொள்வனவுகள் ரூபா 3000/- பெறுமதியான நிலையான சொத்துக்களும் ரூபா 4000/- பெறுமானங் கொண்ட பண்டங்களுமாகும். மேலும் கடனுக்கு ரூபா 3000/- பெறுமானத்துக்குப் பண்டங்களை வழங்கினார். பின்வருவனவற்றிலிருந்து இதற்கான சரியான சமன்பாட்டைத் தெரிவு செய்க.
(1) சொத்துக்கள் ரூபா 10000/- பொறுப்புக்கள் ரூபா 10000/-
(2) சொத்துக்கள் ரூபா 13000/- மூலதனம் ரூபா 10000/- பொறுப்புக்கள் ரூபா 3000/-
(3) சொத்துக்கள் ரூபா 10000/- மூலதனம் ரூபா 7000/- பொறுப்புக்கள் ரூபா 3000/-
(4) சொத்துக்கள் ரூபா 20000/- மூலதனம் ரூபா 17000/- பொறுப்புக்கள் ரூபா 3000/-

24. ஐந்தொகையின் பொறுப்புக்கள் பக்கத்தை மட்டும் பாதிக்கும் கொடுக்கல் வாங்கல் எது?
(1) உரிமையாளர் ரூபா 150/- பெறுமானங்கொண்ட பண்டங்களைச் சொந்த உபயோகத்திற்கு வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.
(2) அவர் ரூபா 250/- கடனுக்குப் பண்டங்களை வாங்கினார்.
(3) அறவிடமுடியாக் கடன்களென பதிவழிக்கப்பட்ட கடன்பட்டோர் தொகை ரூபா 340/-
(4) உரிமையாளர் தனது சொந்தச் சேமிப்புக் கணக்கிலிருந்து ரூபா 3000/- ஆகிய தொகையைக் கடன்கொடுத்தோரான ஒருவருக்குச் செலுத்துகிறார்.

25. பின்வருவனவற்றுள் நடைமுறைப் பொறுப்புக்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?
(1) வங்கி மேலதிகப் பற்று, கொடுபட வேண்டிய கூலிகள், கடன்கொடுத்தோர், கொடுபட வேண்டிய வாடகை.
(2) கடன் கொடுத்தோர், எடுப்பனவுகள், ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு, கொடுபடவேண்டிய வாடகை.
(3) முற்பணம் செலுத்திய செலவுகள், சில்லறைக் கடன் கொடுத்தோர், எடுப்பனவுகள், காலாவதியாகாத காப்புறுதி.
(4) சில்லறை கடன்கொடுத்தோர், ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு, வங்கி மேலதிகப் பற்று, காலாவ தியாகாத காப்புறுதி.

26. கணக்கீட்டில் "வருமானச் செலவினம்" எனும் பதம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
(1) ஓர் ஆண்டில் தொழில் நிலையம் ஒன்றினாற் செய்யப்பட்ட சகல கொடுப்பனவுகளும் வருமானச் செலவினமாகக் கருதப்படலாம்.
(2) நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தலில் ஏற்படும் கொடுப்பனவுகள் வருமானச் செலவினமாகக் கருதப்படும்.
(3) வருமானச் செலவினத்தை ஆக்குதலில் மூலதனத்தொகை குறைக்கப்படும்.
(4) சொத்துக்களின் அதிகரிப்பு இவ்வகைச் செலவினத்தின் விளைவாகும்.

27. மொத்த இலாபமென்பது எவற்றுக்கிடையிலான வித்தியாசமாகும்?
(1) விற்பனைகள் மொத்த செலவுகள் (2) விற்பனைகள், விற்பனைத் திரவியங்கள்
(3) விற்பனைகள், செலவுகள் (4) வருமானம், செலவுகள்

28. பின்வரும் நிகழ்ச்சிகளுள் எது வியாபார முயற்சியொன்றின் உடைமையைப் பாதிப்பதில்லை.
(1) கட்டடங்களுக்கு மேலதிகமான பகுதிகளைச் சேர்ப்பதினால் ஏற்படும் செலவுகள்.
(2) காசுக்குப் பண்டங்களை விற்பனை செய்தல்.
(3) நிலையான சொத்துக்களின் இழப்பு.
(4) பொறிகளுக்கான பழுதுபார்த்தல் லேலைகளுக்குச் செய்யும் கொடுப்பனவுகள்.

29. காசேட்டின் வங்கி நிரலில் காட்டப்பட்டுள்ள வரவு மீதி சில சமயங்களில் வங்கிக் கூற்றிற் காட்டப்படும் செலவு மீதியிலும் குறைவான ஒரு. தொகையைக் காட்டும், பின்வருவனவற்றுள் இம் முரண்பாட்டுக்கு ஏதுவான நிகழ்ச்சியைத் தெரிவு செய்க.
(1) கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த மதிப்பிழந்த காசோலைகளின் தொகை ரூபா 1000/- காசேட்டிற் பதியப்படவில்லை.
(2) மாதத்தின் போது வங்கியினால் நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பங்கிலாபம் ரூபா 2500/- ஆகும். ஆனால் இதுப்பற்றிக் காசேட்டிற் பதிவுகள் செய்யப்படவில்லை.
(3) 1200/- ரூபாத்தொகைக்கான காசோலைகள் வைப்புச்செய்யப்பட்டன. அவை இன்னும் காசாகத் தேறவில்லை.
(4) ஒப்பப்பணம் ஒன்றிற்கு நிலையான கட்டளையின் மீது ரூபா 240/- வங்கியினாற் செய்யப்பட்டது. அது காசேட்டிற் பதியப்படவில்லை.

30. சில்லறைக் காசேடு தொடர்பாகத் தரப்பட்டுள்ள உண்மையான கூற்று எது?
(1) கொடுப்பனவுகளைச் சான்றுதிப்படுத்துவதற்கு ஆவணங்களை வைத்திருக்க வேண்டியது அவசி யமன்று.
(2) பகுப்பாய்வு நிரல்களின் மொத்தத் தொகைகள் காசேட்டிற்குச் செலவு வைக்கப்படும்.
(3) பேரேட்டு நிரலிலுள்ள பதிவுகள் எந்தக் கணக்குகளுக்கும் வரவு வைக்கப்படமாட்டா.
(4) சில்லறைக் காசாளர் தனது கொடுப்பனவுகளுக்காகப் பிரதம காசாளரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்.

31. "அனுப்பு பொருட்பட்டியல்" எனும் மூல ஆவணம் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றது?
(1) கொள்வனவுக் குறிப்பேட்டைத் தயாரித்தலில்.
(2) வெளித்திரும்பற் குறிப்பேட்டைத் தயாரித்தலில்.
(3) உட்திரும்பற் குறிப்பேட்டைத் தயாரித்தலில்.
(4) காசேட்டைத் தயாரித்தலில்.

32. பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் மொத்தத் தொகைகள் இணங்கினால் கருதப்படுவது யாது?
(1) கொடுக்கல் வாங்கல்கள் யாவும் தக்க கணக்குகளில் இடப்பட்டுள்ளன.
(2) பேரேட்டின் வரவுப் பக்கத்திற் பதியப்பட்ட சகல விடயங்களும் செலவுப் பக்கத்திலும் பதியப்பட்டுள்ளது.
(3) பேரேட்டில் தவறுகள் எவையும் இல்லை.
(4) கொடுக்கல் வாங்கல்கள் யாவும் பேரேட்டிற் பதியப்படவில்லை.

33. பின்வருவனவற்றுள் பிரதம குறிப்பேட்டிற்கூடாக பேரேட்டிற் பதியப்பட வேண்டிய விடயம் யாது?
(1) அடுத்த நிதியாண்டிற்கென ரூபா 580/- காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டது.
(2) ரூபா 2100/- தொகைக்கான மதிப்பிழந்த காசோலை கடன்பட்டோருக்குத் திருப்பியனுப்பப்பட்டது.
(3) ரூபா 3000/- ஏட்டு மீதியைக் காட்டிய பழைய பொறித்தொகுதியொன்று கடனுக்கு ரூபா 3400/- இற்கு விற்கப்பட்டது.
(4) ரூபா 10000/- பணத்திற்குத் தட்டச்சுப் பொறியொன்று வாங்கப்பட்டது.

34. நிலையான சொத்துக்களுக்குத் தேய்மானமிடலுக்குச் சிலசமயங்களில் குன்றும் மீதிமுறை பயன்படுத்தப்படுகிறது. இந்த முறைப்பற்றித் தரப்படும் உண்மையான கூற்று எது?
(1) ஒவ்வொராண்டின் இறுதியிலும் தேய்மான ஏற்பாட்டுக் கணக்கிற்குச் சமமான தேய்மானத்தொகை செலவு வைக்கப்படும்.
(2) குறித்த எக்கால எல்லையிலும் விற்கத்தகு பெறுமானமாக அமையும் சொத்துக்களின் ஏட்டுமீதியை இந்த முறை தருவதாக அமையும்.
(3) தேய்மானமிடவேண்டிய தொகை மூலக் கிரயத்தின் மீது கவனிக்கப்படும்.
(4) ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் தேய்மானமிடப்படவேண்டிய தொகை அடுத்துவரும் ஒவ்வோர் ஆண்டுடனும் குறைந்துவரும்.

35ஆம், 36ஆம், 37ஆம், 38ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும்பொழுது 'ஐந்தொகையொன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

(அ)	கட்டடங்கள்	ரூபா 5000
(ஆ)	பொறித்தொகுதி	ரூபா 12000
(இ)	வங்கி மேலதிகப்பற்று	ரூபா 2000
(ஈ)	சில்லறைக் கடன்பட்டோர்	ரூபா 10000
(உ)	சில்லறைக் கடன்கொடுத்தோர்	ரூபா 8000
(ஊ)	எடுப்பனவுகள்	ரூபா 3000
(எ)	தேறிய இலாபம்	ரூபா 11000
(ஏ)	கட்டடங்கள்	ரூபா 25000

35. உடைமையில் தேறிய அதிகரிப்பின் தொகை எவ்வளவு?
(1) ரூபா 11000 (2) ரூபா 8000 (3) ரூபா 9000 (4) ரூபா 10000

36. நடைமுறைப் பொறுப்புக்களின் தொகை யாது?
(1) ரூபா 8000 (2) ரூபா 15000 (3) ரூபா 10000 (4) ரூபா 11000

37. நடைமுறைச் சொத்துக்களின் தொகை யாது?
(1) ரூபா 15000 (2) ரூபா 17000 (3) ரூபா 11000 (4) ரூபா 13000

38. நிலையான சொத்துக்களின் தொகை யாது?
(1) ரூபா 17000 (2) ரூபா 37000 (3) ரூபா 47000 (4) ரூபா 35000

39. உற்பத்திக் கணக்கொன்றைத் தயாரிப்பதன் நோக்கம் யாது?
(1) தொழில் உரிமையாளரைத் திருப்திப் படுத்துதல்.
(2) தொழிற்சாலையினகத்தே ஏற்பட்ட செலவுக்கான பதிவுகளை வைத்திருத்தல்.
(3) தொழிற்சாலைக் கணக்குகளை வேறாகப் பேணுதல்.
(4) உற்பத்திச் செலவை (கிரயத்தை) அறிந்து கொள்ளுதல்.

40. "தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள்" எனும் பதத்தைச் சரியாக விபரிக்கும் வாக்கியத்தை தெரிவு செய்க?
(1) ஒரு தொழிற்சாலையினகத்தே ஏற்படும் செலவுகளே தொழிற்சாலை மேந்தலைச் செலவுகளாகும்.
(2) உற்பத்தியில் நேரடியாகக் செலவிடப்படும் செலவுகள் அனைத்தும் தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள் எனப்படும்.
(3) தொழிற்சாலை மேந்தலைச் செலவுகளாவன உற்பத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சாலையில் ஏற்படும் நேரில் கிரயங்கள் அனைத்துமாகும்.
(4) தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள் உற்பத்திச் செலவாகவும் அனங் காணப்படலாம்.

****

01.		X		
02.				X
03.	X			
04.				X
05.		X		
06.		X		
07.			X	
08.	X			
09.				X
10.	X			
11.		X		
12.				X
13.	X			
14.				X
15.		X		
16.			X	
17.	X			
18.				X
19.		X		
20.			X	
21.		X		
22.				X
23.		X		
24.				X
25.	X			
26.			X	
27.		X		
28.	X			
29.		X		
30				X
31.	X			
32.		X		
33.			X	
34.				X
35.		X		
36.			X	
37.	X			
38.		X		
39.				X
40.			X	

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான கல்விப் பொதுத் தராதரப்பத்திர
(சாதாரண தர) விசேட பரீட்சை, ஜூலை - 1988
GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION - 1988 JULY
வர்த்தகமும் கணக்கியலும் II மூன்று மணி
COMMERCE AND ACCOUNTS - II
எல்லா வினாக்களுக்கும் விடை தருக

பகுதி I

1. "சம்பத் பலசரக்குக் கடை"யின், 1988 மார்ச் 31 ஆந் தேதியன்று இருந்தபடியான பரீட்சை மீதி பின்வருமாறு:
பரீட்சை மீதி

	வரவு	செலவு
	ரூபா	ரூபா
கொள்வனவுகள்	57200	
விற்பனைகள்		98600
உட்திரும்பல்கள்	100	
வெளித்திரும்பல்கள்		300
கையிருப்பு (01-04-87)	12300	
வியாபாரக் கடன்பட்டோர்	10600	
வியாபாரக் கடன்கொடுத்தோர்		8300
உட்சுமைக்கூலி	3750	
காணியும் கட்டடங்களும்	58000	
தளபாடமும் பொருத்திகளும் (கொள்விலையில்)	4000	
தளபாடம் பொருத்திகள் மீது தேய்மானத்திற்கான ஏற்பாடு		1200
அறவிடமுடியாக் கடன்கள்	500	

விளம்பரப்படுத்துதல்	1800	
வியாபாரச் செலவுகள்	2550	
மின்கட்டணம்	2900	
அஞ்சற் செலவும் தொலைபேசி கட்டணமும்	1400	
சம்பளங்கள்	10200	
ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு		450
காப்புறுதி	1200	
இறைகள்	600	
கிடைக்கப்பெற்ற கழிவுகள்		2100
கைவசமுள்ள காசு	20300	
வங்கி மேலதிகப்பற்று		900
எடுப்பனவுகள்	3500	
மூலதனம்		79050
	190900	190000

பினவரும செமமையாகஙகளையும கருததிற கொணடு 1988 மாச 31ஆந திகதியனறு முடிவுறற ஆணடுகான வியாபார இலாப நட்டக்கணக்கையும் அத்தேதியில் இருந்தவாறான ஐந்தொகையும் தயாரிக்கும்படி நீர் கேட்கப்படுகின்றீர்.

(1) கையிருப்பு (31.03.88) ரூபா 13800/-

(2) தளபாடம் பொருத்திகள் மீதான தேய்மானத்திற்கு ஏற்பாடு ரூபா 400/-

(3) சேர்ந்த இறைகள் ரூபா 200/-

(4) முற்பணமாகச் செலுத்திய காப்புறுதி ரூபா 200/-

(30 புள்ளிகள்)

2.

அ) (1) வியாபாரமொன்றின் காசுப் பெறுவனவுகளின் பிரதான மூலங்கள் யாவை?

(2) காசு ஏடொன்றில் மூன்று நிரல்களைப் பேணுவதன் அவசியத்தை விளக்குக.

(3) காசேட்டிலும் ஏனைய பொருத்தமான கணக்குகளிலும் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை எங்ஙனம் பதிவீர்?

(1) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ஒரு காசோலை மதிப்பிழந்ததாக தொழில் நிலையத்துக்குத் திருப்பியனுப்பப்பட்டது - ரூபா 680/-

(2) 5 சதவீதக் கழிவீட்டைக் கழித்ததன் பின்னர் எல். பெரேராவின் (கடன் கொடுத்தோரொருவர்) கணக்கு ரூபா 1000/- தீர்க்கப்பட்டது.

(3) உரிமையாளர் தனது சொந்த உபயோகத்திற்கு ரூபா 500/- ஆகிய தொகையை மீள எடுத்தார்.

(4) காசு விற்பனைகள் ரூபா 1500/-

(12 புள்ளிகள்)

ஆ) 1988.01.31ஆந் தேதியன்று வியாபாரத் தாபனமொன்றின் காசேடு, 12400/- ரூபாத் தொகையான ஒரு வங்கி மீதியைக் காட்டியது.

வங்கிக் கூற்றுடன் காசேட்டை, ஒப்பிட்டுப் பார்த்தபொழுது பின்வரும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

(1) ரூபா 2500/- எனும் தொகைக்கு வரையப்பட்ட காசோலைகள் கொடுப்பனவுக்காக வங்கிக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) 3200/- ரூபாத் தொகைக்கு ஜனவரி 28ஆந் தேதியன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் வங்கியினால் இன்னும் செலவு வைக்கப்படவில்லை.

(3) வங்கிக் கட்டணங்களான ரூபா 45/- காசேட்டிற் காணப்படவில்லை. 31.01.88 இல் இருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை வங்கியிலுள்ள மீதியைக் காட்டித் தயாரிக்க.

(6 புள்ளிகள்)
(மொத்தம் 18 புள்ளிகள்)

3.

(1) ஒரு தொங்கற் கணக்கினூடாகத் திருத்தப்படவேண்டிய இரு வகையான வழுக்களை எழுதுக.

(2) ஈடுசெய்யும் வழு ஒன்றிற்கு ஓர் உதாரணம் தருக.

(3) வியாபாரி ஒருவரின் கணக்கேடுகளிற் பின்வரும் வழுக்கல் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைத் திருத்துவதற்கு அவசியமான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைக் காட்டுக.

(அ) பொறித்தொகுதியின் பழுது பார்த்தலுக்கான ரூபா 800 பொறித்தொகுதிக் கணக்கிற்கு இடப்பட்டது.

(ஆ) சரத் சில்வாவுக்கு விற்கப்பட்ட பண்டங்களுக்கான ரூபா 300/- ஏடுகளிலிருந்து முற்று முழுதாக விடுபடப்பட்டிருந்தது.

(இ) என். பர்னாந்துவிடமிருந்து கொள்வனவு செய்த தொகையாகிய ரூபா 275/- கொள்வனவு நாட்குறிப்பேட்டில் ரூபா 257/- ஆகப் பதியப்பட்டிருந்தது.

(ஈ) கொடுப்பனவு செய்த சம்பளங்கள், ரூபா 500/- காசேட்டிற் சரியாகப் பதியப்பட்டிருந்தது. ஆனால் சம்பளக் கணக்கிற்கு இடப்படவில்லை.

பகுதி II

4.

(1) தொழிற் பகுப்பின் இரு அனுகூலமான அமிசங்களை எழுதுக.

(2) வியாபாரத்திற்கான துணைநிலைச் சேவைகளின் பிரதான பகுப்புகளை நிரற்படுத்துக.

(3) மொத்த வியபாரி ஒருவரினால் சில்லறை வியாபாரி ஒருவருக்கு ஆற்றப்படுகின்ற இரு சேவைகளைக் குறிப்பிடுக.

(4) பலபகுதிக் கடைகள் என வகுத்துரைக்கப்படக்கூடிய தமது சொந்தச் சில்லறை கடைகளினூடாகத் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களை விநியோகிக்கும் இரு அரச கூட்டுத்தாபனங்களைப் பெயரிடுக.

(5) சில சமயங்களில் உற்பத்தியாளர் ஒருவர் உற்பத்திப் பொருளை நேரடியாக நுகர்வோருக்குத் தானே விற்பனை செய்வார். அத்தகைய சந்தர்ப்பங்கள் இரண்டைத் தருக.

(6) சிறு ஏற்றுமதிப் பயிர் விளை பொருள்களை விற்பனை செய்வதில், இலங்கையில் மிகப்பரந்த அளவில் கையாளப்படும் விற்பனை முறை யாது?

(7) "கட்புலனாகாத ஏற்றுமதிகள்" எனும் பதத்தினால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(8) பங்குடைமையொன்றுக்கும் வரையறுத்த பங்குடைமையொன்றுக்குமிடையிலான பிரதான வித்தியாசம் யாது?

(9) ஒரு வரையறுத்த பொதுக் கம்பனிக்கு அவசியமான நிதிகளைப் பெற்றுக் கொள்ளும் இரு வழிகளைக் குறிப்பிடுக.

(10) களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவரின் கடமைகள் இரண்டைக் கூறுக.

(11) வேறுபட்ட சந்தர்ப்பங்களில், விலைகளைக் கூறுவதற்கு "மதிப்பீடு" ஒன்று பயன்படுத்தப்படும். அத்தகைய இரு சந்தர்ப்பங்களைத் தருக.

(12) ஏற்றுமதி வியாபாரத்தில், "வார்நாமம்" (சுமைச்சீட்டு) எனும் ஆவணத்தை வழங்குபவர் யார்?

(13) ஏற்றுமதியாளர் ஒருவருக்குக் கொடுப்பனவை உறுதிசெய்து, இறக்குமதியாளரின் வங்கியினால் அனுப்பி வைக்கப்படும் முக்கியமான ஆவணம் எது?

(14) கணணிமுறைப்படுத்தி வங்கிக் கணக்குத் தீர்வு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வழங்கப்பட்ட புதிய காசோலை வகைக்கு நீர் தரும் பொய் யாது?

(15) ஒரு தொழில் நிலையத்தினுள் மட்டும் பிரயோகிக்கப்படக் கூடிய தொடர்பாடல் முறைகள் உள்ளன. இரண்டு உதாரணங்கள் தருக.

(30 புள்ளிகள்)

5.

(1) ஆயுளுறுதிப் பூட்கையொன்றினைப் பெற்றுக் கொள்வதில் பின்பற்றப்பட்ட வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்க.

(2) இலங்கையில் ஆயுட்காப்புறுதித் தொழிலில் ஈடுபட்டுள்ள மூன்று நிலையங்களைப் பெயரிடுக.

(3) தொடர்ந்து மேலும் ஆயுட்காப்புறுதித் கட்டணங்களைச் செலுத்தமுடியாதிருக்கும் ஒருவரால் எடுக்க ப்படக்கூடிய மாற்று நடவடிக்கைகளை விவரிக்க.

(4) "மிக்குயர் நன்னம்பிக்கை" எனும் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

(5) ஆயுள் உறுதிக் கட்டணத்தைத் துணியும் காரணிகளை எழுதுக?

(12 புள்ளிகள்)

6.

(1) பணத்தின் மூன்று தொழிற்பாடுகளைப் பெயரிடுக.

(2) வர்த்தக வங்கியொன்றினால் ஆற்றப்படும் மூன்று சேவைகளைக் குறிப்பிடுக.

(3) இலங்கை மத்திய வங்கியின் நான்கு தொழிற்பாடுகளை எழுதுக.

(4) இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கியின் இரண்டு தொழிற்பாடுகளை எழுதுக.

-(12 புள்ளிகள்)

****

1988 ஜூலை க.பொ.த (சாதாரணப் பரீட்சை) விசேட பரீட்சை

வர்த்தகமும் கணக்கியலும் II (3 மணி)

31.03.88ல் முடிவடைந்த ஆண்டுக்கான சம்பத் கம்பனியின் வியாபாரக்கணக்கு இ/ந/க/கு.

ஆரம்ப இருப்பு (1.4.87)		12300	விற்பனைகள்	98600	
+) கொள்வனவுகள்	57200		-) உட்டிரும்பல்கள்	100	98500
+) உட்சுமைக்கூலிகள்	3750				
	60950				
=) வெளித்திரும்பல்கள்	300	60650			
		72950			
-) இறுதி இருப்பு (31.3.88)		13800			
விற்றசரக்கின் கொள்விலை		59150			
மொ:லாபம் மீ.கி.கொ		39350			
		98500			98500
நிலைய நீர்வாகச் செலவுகள்			மொ.லா.மீ.கீ.கொ.வ வரவு	39350	
			கிடைத்த கழிவுகள்	2100	41450
தளபாடப்பொருத்தி தேய்மானம்	400				
இறைகள் (600 + 200)	800				
காப்புறுதி (1200 - 200)	1000				
மின்கட்டணம்	2900				
அஞ்சல்செலவும் தொலைபேசிக் கட்டணமும்	1400				
சம்பளம்	10200	16700			
வி.வி. செலவுகள்					
அ.மு. கடன்	500				
விளம்பரப்படுத்தல்	1800				
வியாபாரச் செலவுகள்	2250	4850			
தே.இலாபம்		19900			
		41450			41450

31-03-88ல் உள்ளவாறான சம்பத் கம்பனியின் ஐந்தொகை.

			நிலையான சொத்து	கொ.வி	தி.பெ.தே	கே.விலை
மூலதனம்	79050		தளபாடப் பொருத்தி	4000	1600	2400
+) தே.இலாபம்	19900		காணியும் கட்டியமும்	58000	--------	58000
	98950			62000	16000	60400
-) எடுப்பனவுகள் (பற்று)	3500	95450	**நடைமுறைச் சொத்துக்கள்**			
			இ.இருப்பு (31.03.1988)		13800	
நடைமுறைப் பொறுப்பு			கடன்பட்டோர்	10600		
			-) ஐக. ஏற்பாடு	450	10150	
கடன் கொடுத்தோர்	8300					
வ.மே பற்று	900		முற்பணக் காப்புறுதி		200	
சேர்ந்த இறைகள்	200	9400	கைவசமுள்ள காசு		20300	44450
		104850				104850

2.

அ) 1. மேலதிக மூலதனம் வங்கிகளிடம் கடன் பெறல், முதலீட்டு வருமானங்கள் காசுக்குப் பொருள்களை விற்பனை செய்வதன் மூலம், நிலையான சொத்துக்களின் விற்பனை மூலம்.

2. காசேட்டில் மூன்று நிரல்களாக, காசுநிரல், வங்கிநிரல், கொடுத்த கழிவு, பெற்றகழிவு என்ற வகைகள் இடம் பெறுகின்றன.
ஓர் வியாபார நிறுவனமானது நாளாந்த வியாபார கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளை காசுமூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ, மேற்கொள்ளும் இத்தகைய சந்தர்ப்பத்தில் தான் காசேட்டின் வங்கிநிரல், காசுநிரல் என்பவற்றில் பதிவுகள் பேணப்படும்.

மேலும் பொருட்கள் கொள்வனவு, விற்பனவு செய்யும் போது கழிவுகள் கொடுக்கப்படுவதும் வழக்கமாகும். இதனை பதிவு செய்வதற்கே, காசேட்டின் கழிவு நிரல்கள் பயன்படுத்தப்படும்.

3. 1. திருப்பியனுப்பப்பட்ட காசோலைகளிற்கு வரவு 680 ரூபா
வங்கிக் க/கு செலவு 680 ரூபா

2. பெரேரா க/கு (கடன்கொடுத்தோர்) வரவு 1000 ரூபா
காசுக் க/கு செலவு 950/-

3. எடுப்பனவுகள் (பற்று) க/கு வரவு 500 ரூபா
காசுக் க/கு செலவு 500/-

4. காசுக் க/கு வரவு 1500 ரூபா
விற்பனைகள் க/கு செலவு 15000/-

ஆ. **31.188ல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று:**

காசேட்டின் படியான வங்கி மீதி		12400
கூட்டுக:		
சமர்ப்பிக்கப்படாத காசோலை	2500	2500
		14900
கழிக்குக:		
செலவுவைக்கப்படாத (வசூலிக்கப்படாத காசோலை)	3200	
வங்கிக் கட்டணம்	45	3245
வங்கிக் கூற்று மீதி (31-01-88ல்)		11655

3.

1. * பேரேடுகளில் விடப்படும் பிழைகள், (இங்கு வரவுப் பக்கத்தில் பதியவேண்டியதை, செலவுப் பக்கத்தில் பதிவதாலோ அல்லது செலவுப்பக்கத்தில் பதிய வேண்டியதை வரவுப்பக்கத்தில் பதிவதாலோ, அல்லது ஒரு பக்கத்தில் மட்டும் பதிவதாலோ, அல்லது பிழையான பக்கத்தில் மாறிப் பதிவதாலோ, தவறுகள் இடம்பெறும். இத்தகைய வழுக்கள் தொங்கல் கணக்கில் ஊடாக திருத்தப்படும்.

* பேரேட்டுக் கணக்குகளை சுட்டிக் காட்டும் போது ஏற்படும் தவறுகள்.

* நாட்குறிப்பேட்டில் இருந்து பேரேட்டுக் கணக்குக்கு மாற்றும் போது ஏற்படும் பிழைகளையும் தொங்கல் கணக்கின் ஊடாகவே திருத்தப்படும்.

2.

ஈடு செய்யும் வழு என்பதன் கருத்து. ஒரு வழு மற்றொரு வழுவினாலோ, அன்றி மற்றும் பல வழுக்களினாலோ, ஈடு செய்யப்படுமாயின் அதனையே ஈடுசெய்யும் வழு என்ப்படும்.
உதாரணமாக: 600 ரூபாவான காசு விற்பனையொன்று விற்பனைக் கணக்கில் 400 ரூபா என செலவு வைக்கப்பட்டது. வாடகைக்கென செலுத்தப்பட்ட 700 ரூபா வாடகைக் கணக்கில் 500 ரூபா என பதியப்பட்டுள்ளது. என வைப்போம். இங்கு விற்பனைக் கணக்கில் 200 ரூபா (செலவுப்பக்கம்) குறைவாகவும், வாடகை கணக்கில் 200 ரூபா (வரவுப்பக்கம்) குறைவாகவும் காணப்படுகிறது. பரீட்சை மீதியொன்று தயாரிக்கப்படும் இடத்து வரவு, செலவு பக்கத்தில் தொகை சமமாகவே காணப்படும். இங்கு ஒன்றையொன்று ஈடு செய்யப்பட்டுள்ளது.

3.

அ.	பழுதுபார்த்தற் கணக்கு வரவு	800 ரூபா	
	பொறித்தொகுதிக் கணக்கு செலவு		800 ரூபா
	(கணக்கு பதியப்படாமை திருத்தப்பட்டது)		
ஆ.	சரத்சில்வா (கடன்பட்டோர்) கணக்கு வரவு	300 ரூபா	
	விற்பனைக் கணக்கு செலவு		300 ரூபா
	(தவறவிடப்பட்ட விற்பனை பதியப்பட்டுள்ளது)		
இ.	கொள்வனவுக் கணக்கு வரவு	18 ரூபா	
	என்.பெர்னாந்து கணக்கு (கடன் கொடுத்தோர்) செலவு	18 ரூபா	
	(குறைத்து எழுதப்பட்ட 18/- கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.)		
ஈ.	சம்பளக் கணக்கு வரவு	500 ரூபா	
	காசுக்கணக்கு செலவு		500 ரூபா
	(சம்பளக்கணக்கில் சேர்க்கப்படாத தொகை சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது)		

பகுதி II

4.

1. சிறப்புத்தேர்ச்சி மூலப்பொருட் சிக்கனம், குறைவான நேரத்தில் அதிகளவு பொருட்களை உற்பத்திசெய்தல், பொருட்களின் தரம் அதிகரித்தல், உற்பத்திச் செலவு குறைவடைதல்.

2. போக்குவரத்து தொடர்பூட்டல், வங்கி காப்புறுதி, களஞ்சியப்படுத்தல்.

3.
   * பொருட்களைக் கடனுக்கு கொடுத்து உதவுவார்.
   * மொத்த வியாபாரி செய்யும் விளம்பரம், சில்லறை வியாபாரிக்கும் விளம்பரமாக அமையும்.
   * வேண்டிய நேரத்தில் வேண்டிய பொருட்களை கொடுத்து உதவுகிறார்.
   * வியாபாரக்கழிவு, காசுக்கழிவு, என்பனவற்றை வழங்குவதன் மூலம் சில்லறை வியாபாரிக்கு இலாபம் கிடைப்பதற்கு வழிவகை செய்கிறார்.
   * புதுப்புது பொருட்களை அறிமுகம் செய்து சில்லறை வியாபாரி மூலமாக நுகர்வோருக்குப் பொருட்களை விற்பனை செய்ய வழி வகை செய்யப்படுகிறது.
   * தேவையான நேரத்தில் பொருட்களை கொடுத்துதவுவதனால் சில்லறை வியாபாரிக்க களஞ்சிய வசதி செய்ய வேண்டிய அவசியமில்லை.

4.
   * மட்பாண்டக் கூட்டுத்தாபனம்.
   * கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம்.
   * இலங்கை அரச வணிகப் (பொதுக்) கூட்டுத்தாபனம்.
   * தோற் பொருட் கூட்டுத்தாபனம்

5.
   * பொருட்கள் பழுதடையும் தன்மை உடையதாயின், உற்பத்தியாளர் தாமே நேரடியாக விற்பனை செய்வார்.

     உதாரணமாக: வெண்காயம் பழவகை மரக்கறிவகை.
   * உற்பத்தியாளர் சிலருக்கு விற்பனை செய்யம் திறமையும் இருப்பின் நேரடியாக விற்பனையில் தாமே ஈடுபடுவார்.
   * உற்பத்தியாளரே நேரடியாக விற்பனையில் ஈடுபடும்போது சில்லறை வியாபாரி போன்றோருக்கு வழங்கப்படும் கழிவு தவிர்க்கப்படுகிறது. இவற்றை தவிர்ப்பதற்காகவும் நேரடி விற்பனையில் ஈடுபடுவார்.

6. ஏலவிற்பனை முறை.

7. கட்புலனாகாத ஏற்றுமதி என்பதன் கருத்து. வெளிநாட்டு வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் சேவைகள் செய்யப்படுவதையே இது கருதும். கட்புலனாக ஏற்றுமதிக்கு உதாரணமாக:- துறைமுக சேவை, வங்கி வசதி அறித்தல், கப்பல் சேவை, காப்புறுதிச் சேவை, விமானசேவை, உல்லாசப்பிரயாண சேவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

8. பங்குடமையொன்றில் பங்காளர்கள் எல்லோரதும், பொறுப்பும் வரையறுக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் வரையறுக்கப்பட்ட பங்குடமையில் குறைந்தது ஒரு பங்காளரேனும் பொறுப்பு வரையறுக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

9.
   * பொருட்களின் தரம் கெடாமல் பாதுகாத்தல்.
   * தேவைக்கேற்ப பொருட்களை விலையிட்டு விநியோகம் செய்தல்.

* பொருட்கள் குறைந்து கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் கொள்வகைக் கட்டளையை அனுப்பி பொருட்களைப் பெறுதல்.
* ஆகக் குறைந்த இருப்பு மட்டத்தை பேணுதல்.
* களவாடல், பொருட்களின் தரம் என்பவற்றைப் பரிசோதித்தல்.
* கணக்கேடுகளை ஒழுங்காகப் பேணுதல்.
* பொருட்கள் பழுதடையாமற் ஒழுங்காகப் பேணிவைத்தல்.
* பங்கு வழங்குவதன் மூலம்.
* தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம்.
* வங்கிகள் நிதி நிறுவனங்கள், என்பவற்றிடம் இருந்து.

11. * புதிதாக கட்டடம் ஒன்று அமைக்கப்படும் போது திட்டவட்டமாக விலைகள் இடமுடியாது. இத்தகைய சந்தர்ப்பத்தில் மதிப்பீட்டு விலைகள் நிர்ணயிக்கப்படும்.
* திருத்த வேலைகள் செய்யப்படும் போது.
* புத்தக வெளியீடு செய்யப்படும் போது.
* பாலம் அமைத்தல்.

12. கப்பல் கம்பனி அல்லது கப்பல் முகவர்கள்.

13. நாணயக் கடிதம்.

14. காந்த மயப்படுத்தப்பட்ட காசோலை, அல்லது காந்த நுனிப்படுத்தப்பட்ட காசோலை.

15. இன்டர் கொம், உள்ளக தொலைபேசி, அழைப்புமணிகள், நிறஒளி சமிஞ்சைகள், கூட்டங்கள், சுற்றரிக்கைகள் அறிவித்தல் பலகைகள்.

5.

1. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்தனுப்புதல், மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல். முதலாவது கட்டுப்பணத்தை செலுத்துதலும் ஒப்பந்தந்தத்தை ஏற்படுத்துதலும்.

   காப்புறுதி உடன் படிக்கையைப் பெற்றுக் கொள்ளுதல்.

2. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.
   இலங்கை தேசியக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.
   யூனியன் அசூரன்ஸ் கம்பனி.

3. * அதுவரை காலமும் செலுத்தப்பட்ட கட்டணத்தின் அளவுக்கு காப்புறுதித் தொகையை மாற்றுதல். (அதாவது, இறுத்த பூட்கையாக மாற்றுதல்)
   * ஒப்படைப்புப் பெறுமானத்தை பெறுதல் (அதாவது கட்டிய தொகையில்ஒரு பகுதியை கழித்து மிகுதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

4. "மிக்குயர் நம்பிக்கை" என்பதன் கருத்து. காப்புறுதி அளிப்போரும் (காப்புறுதி நிறுவனம்) ஒருவருக்கொருவர் காப்புறுதி தொடர்பாக உண்மையானவற்றையே தெரியப்படுத்துதல் வேண்டும். காப்புறுதிக் கட்டணத்தை செலுத்தும் முறை, காப்புறுதியின் தன்மை, நட்டஈடுவழங்கல், காப்புறுதியை செல்லுபடியாக்கும் அம்சங்கள் ஆகியவற்றை காப்புறுதி அளிப்பவரும், வயது, உடல் சுகயீனம், குடும்ப விபரங்கள் (ஆயுட் காப்புறுதியைப் பொறுத்தவரை) போன்ற விபரங்களை காப்புறுதி செய்பவரும் மறைக்காமலும் தெரியப்படுத்துதல் வேண்டும்.

5. ஆயுளுறுதிக் கட்டணம் பின்வரும் காரணங்களால் துணியப்படுகின்றது.
   1. வயது:- (ஆயுளுறுதி செய்பவரின் வயது கூடினால் சேதமும்கூட, ஆகவே தவணைக் கட்டணமும் அதிகம்.)
   2. ஆயுளுறுதியின் பெறுமதி.
   3. உறுதியின் காலம்
   4. சேதத்தின் தன்மை:- (உரிய சேதங்கள் அதிகமாயின் தவணைக் கட்டணமும் கூடுதலாகும்.)

6.

1. மாற்றூடகமாகச் செயற்படுதல்.
   பெறுமானம் தொடர்பான அளவு கோலாக அமைதல்.
   பெறுமானத் திரட்டாக தொழிற்படுதல்.
   பிற்பட்ட கொடுப்பனவு முறையாக இருத்தல்.

2. * வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுதலும், அவற்றைப் பேணுதலும்.
   * கடன் வசதி அளித்தல்.

* வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு உதவுதல்.
* பிரதி நிதியாகப் பணியாற்றல்.
* பொதுச் சேவைகளை அளித்தல்.
* வர்த்தகர்களுக்கு முகாமை சம்பந்தமான ஆலோசனையை வழங்குதல்.

3. * அரசுக்காக தாள் நாணயங்களையும், உலோக நாணயங்களையும் வெளியிடுதல்.
* அரசாங்கத்தின் வங்கியாக செயற்படுதல்.
* நாட்டின் கடன்களை கட்டுப்படுத்தல்.
* பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
* விலை மட்டத்தைப் பேணிப் பாதுகாத்தல்.
(பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்)

4. 1. கைத்தொழில் விவசாயம் போன்ற அபிவிருத்தி முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு கடன் வசதி அளித்தல்.
நீண்ட காலக் கடன்களை வழங்குதல்.

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை பழைய பாடத்திட்டம்

டிசெம்பர் 1988

GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, DECEMBER - 1988

வர்த்தகமும் கணக்கியலும் - I

COMMERCE AND ACCOUNTS - I

ஒரு மணி / ONE HOUR

கவனிக்க:- (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
(2) 1முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமானது என்று நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.
(3) விடைத்தாளில்,உமது தெரிவுக்கு ஒத்த எண்ணின் மீது பென்சிலால் புள்ளடி(X) இடுக.
(4) விடைத்தாளின் பின்பக்கத்தில் மேலதிகமான அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாகப் பின்பற்றுக.

---

01. பின்வருவனவற்றுள் "பொருளாதாரப் பண்டங்கள்" பற்றிய மிகப் பொருத்தமான விவரணத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.
(1) பொருளாதாரப் பண்டங்கள் மூலப்பொருட்களை மட்டும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும்.
(2) அவற்றுக்கான கேள்வித் தொடர்பில் கிடைத்தற்கரிய பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்கள் எனப்படும்.
(3) பொருளாதாரப் பண்டங்கள் குறைந்த முயற்சியுடன் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவனவாகும்.
(4) உற்பத்தி செய்யப்படும் நுகர்வோர் பண்டங்கள் அனைத்தும் பொருளாதாரப் பண்டங்கள் எனப்படும்.

02. இலங்கையிற் காணப்படக்கூடிய கைத்தொழில்கள் சில பின்வருமாறு, அவற்றுள் உற்பத்திக் கைத்தொழில் எனும் பகுதியைச் சேர்ந்த ஒன்றைத்தெரிவு செய்க.
(1) மீன்பிடிக் கைத்தொழில் (2) பால் தயாரிப்பு
(3) உப்புக் கைத்தொழில் (4) உருக்குக் கதிரைகளை உருவாக்குதல்

03. வேறுபட்ட வணிக முயற்சிகளின் நிரல் பின்வருமாறு, அவற்றுள் எதனைத் துணைநிலைச் சேவையொன்றாக நீர் கருதுவீர்?
(1) போக்குவரத்துச் சேவை (2) மின்சாதனங்களை விற்றல்
(3) சட்டவறிஞர் தொழில் நிலையம் (4) மோட்டார் உதிரிப்பாக வணிகர்

04. சில்லறை வியாபாரத்தின் ஒரு பிரதான சிறப்பமிசம்.
(1) பண்டங்களைச் சிறிய அளவுகளில் விற்றல்.
(2) இறுதியில் நுகர்வோருக்குப் பண்டங்களை விற்றல்.
(3) பண்டங்களை வாங்கும்பொழுது காசுக்கழிவீடுகளைப் பெற்றுக்கொள்ளல்.
(4) நுகர்வோனுக்கு நாளாந்தம் தேவைப்படும் பொருள்களை விற்றல்.

05. பின்வருவனவற்றுள் மீச்சந்தைகள் தொடர்பில் முக்கியமான சிறப்பியல்பைத் தெரிவு செய்க.
(1) வேறெந்தச் சில்லறைக் கடையிலும் பார்க்க இங்கு எப்பொழுதும் விலைகள் குறைவாக இருக்கும்.
(2) மீச்சந்தைகள் பெறுமானமுடைய பண்டங்களின் மட்டும் வியாபாரம் செய்யும்.
(3) தற்சேவையே அங்கு பண்டங்களை விற்கும் முறையாகும்.
(4) வாடிக்கையாளர் மனத்தைக் கவரும் வகையில் பண்டங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

06. மொத்த விற்பனையாளர் சிலர் மீள் விற்பனைக்குப் பண்டங்களைத் தரப்படுத்திப் பொதி செய்வர். பின்வருவோருள் மேற்றுபோந்த தொழிற்பாடுகளை ஆற்றும் வர்த்தகரைத் தெரிவு செய்க.
(1) பலசரக்கு வியாபாரி (2) தேயிலை வியாபாரி
(3) மருந்தாக்கப்பொருள் வியாபாரி (4) பல்வகை விளைப்பொருள்களையும் விநியோகிப்பவர்.

07. பின்வரும் வாக்கியங்களுள் சரியான ஒரு கூற்றாக உள்ளது எது?
(1) பண்டங்களைப் பங்கிட்டளிப்பதற்கு மொத்த விற்பனையாளரின் சேவைகள் எப்பொழுதும் அவசியமானவை.
(2) மொத்த விற்பனையாளர் சில்லறை வியாபாரிக்கும் நுகர்வோனுக்கும் மட்டும் பண்டங்களை விற்பர்.
(3) மொத்த விற்பனையாளர் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை மட்டும் பங்கீடு செய்வார்.
(4) மொத்த விற்பனையாளர் நிலையான விலைகளைப் பேணும் ஆற்றல் கொண்டவர்.

08. வியாபார நிலையங்கள் வேறுபட்ட மூலங்களிலிருந்து பண்டங்களை வாங்குகின்றன. பண்டவகை ஒவ்வொன்றுக்குமெதிரே பண்டங்களின் மூலங்கள் சில பொருந்த வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள், காட்டப்பட்டுள்ள அதிசிறப்பான பொருத்தத்தைத் தெரிவு செய்க.
(1) கோழி மொத்த விற்பனையாளர் (2) அரிசி - கமக்காரன்
(3) சவர்க்காரம்- உற்பத்தியாளரின் முகவர் (4) புடைவை வகைகள் - உற்பத்தியாளர்

09. பிற்போட்ட கொடுப்பனவு முறையுடன் ஒப்பிடும்பொழுது வாடகைக் கொள்வனவு முறையில் அதை வேறுபடுத்திக் காட்டும் சிறப்பமிசம் யாது?
(1) கடைசித் தவணைக் கட்டணம் செலுத்தப்படும்வரை விற்பனையாளர் விளைபொருளின் சொந்தக்காரராக இருப்பார்.
(2) வாடகைக் கொள்வனவு முறை நுகர்வோரிடை கூடிய மதிப்புப்பெற்றது.
(3) பிற்போட்ட கொடுப்பனவு முறைக்கு அறவிடப்படும் வீதத்துடன் ஒப்பிடும் பொழுது இதன் வட்டி வீதம் உயர்வானது.
(4) குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இது அதிசிறந்த முறையாகும்.

10. முகவருடன் தொடர்பு கொள்கையில் வேறு எந்த முகவரிலும் பார்க்கப் பரந்த அதிகாரங்களைக் கொண்ட முயவர் யார்?
(1) தரகு முகவர் (2) அனுப்பும் முகவர் (3) காரணிகள் (4) தரகர்

11. ஒரு திணைக்களத்தலைவர் போட்டி அடிப்படையில் தமக்கு அவசியமான பொருள்களுக்கான விலைகளைக் கோர விரும்புகிறார். இதற்கு அவர் கையாளக்கூடிய மிகச் சிறந்த முறை யாது?
(1) மதிப்பீடு (2) கேள்வி (3) கூறுவிலைகள் (4) விலைநிரல்

12. காசோலையொன்றை இன்னுமொருவருக்கு அனுப்பும்பொழுது பின்வருவனவற்றுள் மிகப் பாதுகாப்பான முறையாக எதனைத் தெரிந்தெடுப்பீர்?
(1) "கைமாறத் தகாதது" எனும் சொற்களுடன் குறுக்குக் கோடிட்ட ஒரு காசோலையை அனுப்புதல்.
(2) காசோலையைப் பதிவுத் தபாலில் அனுப்புதல்.
(3) சிறப்புக் குறுக்குக் கோடிட்டுக் காசோலையை அனுப்புதல்.
(4) பின் தேதியிடப்பட்ட காசோலையை அனுப்புதல்.

13. மாற்றுண்டியல் ஒன்றை "ஒப்புக் கொள்தல்" என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(1) மாற்றுண்டியலை வரைவுனிக்கு (பெறுவோனுக்கு) அனுப்பிவைத்தல்.
(2) மாற்றுண்டியலின் முன்பக்கத்திற் குறுக்காகக் கையொப்பமிடுவதன் மூலம் அது முதிர்ச்சியெய்தியதும் அதை ஏற்றுக்கொள்வதாக வரைவுனியால் அளிக்கப்படும் வாக்குறுதி.
(3) சமர்ப்பிக்கப்படும் பொழுது மாற்றுண்டியலுக்குப் பணம் செலுத்துவதாக ஏற்றுக்கொள்ளுதல்.
(4) மாற்றுண்டியலுக்கு வங்கியொன்றிற் புணம் செலுத்துவதாக அளிக்கப்படும் வாக்குறுதி.

14.ஆம், 15ஆம், 16ஆம் வினாக்களுக்கு விடையளிக்கும்போது பின்வரும் தலைப்புகளைப் பயன்படுத்துக.
A - கட்டளை. **B** - மாதிரிக்கிரயப்பட்டியல் **C** - கூறுவிலைகள்
D - கட்டளையட்டவனை (தரவானை) **E** - கிரயப்பட்டியல்

14. மாதிரிக்கிரயப் பட்டியலுக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படத்தக்க ஆவணம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

15. பண்டங்களை அனுப்பி வைப்பதற்கு முன் தனக்குப் பணம் செலுத்தப்பட வேண்டுமென விற்போனால் வாங்குபவனுக்கு அறிவிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஆவணம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

16. பொதுவாகப் பண்டங்களுடன் கூடவே வாங்குவோனுக்கு அனுப்பிவைக்கப்படும் ஆவணம் எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

17. பின்வருவனவற்றிலிருந்து பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருள்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கறுவா, இறப்பர், ஏலக்காய், தேங்காயெண்ணெய்.
(2) ஆடைகள், கசுக்கொட்டை, தகரத்திலடைத்த பழச்சாறு, காய்கறிவகை.

(3) பற்றிக்கு, தேங்காய், கசுக்கொட்டை, காய்கறிவகை.
(4) மிளகு, பெற்றேலியப் பொருள்கள், பற்றிக்கு, தேயிலை

18. பின்வருவனவற்றிலிருந்து, பெரிய தொழிற்சாலையொன்றில் ஊழியர்களுடன் தொடர்பாடுவதற்கு மிகப் பொருத்தமான முறையைத் தெரிவு செய்க.
(1) அறிவிப்புப் பலகை (2) சுற்றறிக்கைக் கடிதங்கள்
(3) மாதாந்த வெளியீடுகள் (4) இன்டர்கொம் முறைமை

19. வரையறுத்த பங்குடமையொன்றின் உருவாக்கத்திற்கு இன்றியமையாத தேவையாக இருக்க வேண்டியது எது?
(1) பங்காளர்களின் எண்ணிக்கை
(2) பங்காளர்கள் அனைவரும் மூலதனத்திற்குச் சமமாகப் பங்களிப்புச் செய்யவேண்டும்.
(3) பங்காளர் ஒவ்வொருவராலும் பங்கு கொள்ளப்படும் இலாபத்திற்கு ஒரு வரையறையிருத்தல் வேண்டும்.
(4) குறைந்தபட்சம், வரையறுக்கப்படாத ஒரு பங்காளரேனும் இருத்தல் வேண்டும்.

20. நிதிக் கம்பனிகள் ஆற்றிவரும் தொழிற்பாடுகள் பலவாகும். பின்வருவனவற்றுள் அவற்றால் ஆற்றப்பட முடியாத ஒரு தொழிற்பாடு எது?
(1) சொத்தின் மீது பணத்தை முதலீடு செய்தல்.
(2) வங்கித் தொழில் நிலையங்களிலும் பார்க்க உயர்ந்த வட்டி வீதங்களைச் செலுத்துதல்.
(3) நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்.
(4) நுகர்வுப் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்குக் கடன்வசதிகளை அளித்தல்.

21. ஒரு வணிக நிலையத்தின் கணக்கீட்டுப் பதிவுகளில் அக்கறைக் காட்டும் ஒரு தரப்பினருள் அரசாங்கமும் ஒன்றாகும். இதற்குப் பொருத்தமான காரணத்தைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
(1) கடன்கொடுத்தோர் நலனைப் பேணவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.
(2) வியாபாரத் தாபனங்கள் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.
(3) கணக்கீட்டுப் பதிவுகளை வைத்திருக்கத் தவறுதல் ஒரு குற்றமாகும்.
(4) அரசாங்கம் வருவாயை (அரசிறையை)ச் சேகரித்தலில் அக்கறையுடையது.

22. ஒரு வணிக நிலையத்தில் பின்வரும் சம்பவங்கள் நிகழ்ந்தன. கணக்கீட்டுச் சமன்பாட்டின் சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகிய இரண்டையும் அதிகரிக்கச்செய்ய வல்ல சம்பவம் எது?
(1) உரிமையாளர் தனது சொந்த உபயோகத்திற்குப் பணத்தை மீள எடுத்துக் கொண்டார்.
(2) பண்டங்களை வாங்குவதில் மொத்த விற்பனையாளர் ஒருவரால் வியாபாரக் கழிவீடு அனுமதிக்கப்பட்டது.
(3) சொத்தொன்று கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
(4) கடன்பட்டோரின் தீர்க்கப்படாதிருந்த மீதிகள் அனைத்தும் கடந்த வாரத்திற்க தீர்க்கப்பட்டன.

23. பின்வரும் ஐந்தொகை தொடர்பாகத் தரப்பட்ட கூற்றுக்கள் சிலவாகும். இவற்றுள் உண்மையற்றதைத் தெரிவு செய்க.
(1) ஐந்தொகையென்பது ஆண்டின் இறுதியிற் தயாரிக்கப்படும் ஒரு பேரேட்டுக் கணக்காகும்.
(2) இது குறித்த ஒரு கால எல்லையில் வரைந்து கொள்ளப்படலாம்.
(3) ஐந்தொகை குறித்தவொரு திகதியில் ஒரு வியாபார நிலையத்துக்குள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் அனைத்தையும் காட்டும்.
(4) ஐந்தொகை இறுதிக் கணக்குகளில் ஒரு பகுதியாகும்.

24. பின்வருவனவற்றுள் மூலதனம் குறைந்து போவதற்கு ஏதுவாக அமையக்கூடிய கொடுக்கல் வாங்கல் எது?
(1) கடன்கொடுத்தோர் ஒருவரிடமிருந்து ரூபா 200/- காசுக் கழிவீடு பெற்றுக் கொள்ளப்பட்டது.
(2) சாதனங்களை வாங்குவதற்கு ரூபா 1000/- பணம் செலுத்தப்பட்டது.
(3) வங்கிக்கடன் ரூபா 5000/- செலுத்தப்பட்டது.
(4) உரிமையாளர் தனது சொந்தச் செலவுக்கென வங்கியிலிருந்து பணத்தை மீள எடுத்துக் கொண்டார்.

25. நிலையான சொத்துக்களை மட்டும் கொண்டிருக்கும் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கட்டடங்கள், கடன்பட்டோர், கையிருப்பு, காணிகள்
(2) கட்டடங்கள், சாதனங்கள், மோட்டார் வாகனங்கள், காணி
(3) கடன்பட்டோர், சாதனங்கள், கட்டடங்கள், முதலீடுகள்
(4) கடன்பட்டோர், பொறித்தொகுதி, கையிருப்பு, காணிகள்

26. சில்லறை விற்பனையாளர் ஒருவர் விற்பனை செய்வதற்கெனப் பண்டங்களை வாங்கினார். பண்டங்களின் குறிக்கப்பட்ட விலை ரூபா 15000/- ஆக இருந்தது. கிடைக்கப்பெற்ற வியாபாரக் கழிவீடு ரூபா 1500/- ஆகும். உடனடிக் காசுக் கொடுப்பனவுக்காக அவருக்கு மேலும் ரூபா 300/- கழிவீடு ஒன்று கிடைத்தது. இதைப் பேரேட்டில் எங்ஙனம் பதிவீர்?

(1)	வரவு-கொள்வனவுக் கணக்கு	ரூபா 13500
	செலவு- காசேடு	ரூபா 13200
	செலவு - கிடைக்கப்பெற்ற கழிவீடு	ரூபா 300
(2)	வரவு - கொள்வனவுக் கணக்கு	ரூபா 13200
	வரவு - கழிவீட்டுக் கணக்கு	ரூபா 300

	செலவு - காசேடு	ரூபா 13500
(3)	வரவு - கொள்வனவுக் கணக்கு	ரூபா 13200
	செலவு - காசேடு	ரூபா 13200
(4)	வரவு - கொள்வனவுக் கணக்கு	ரூபா 15000
	செலவு - காசேடு	ரூபா 13200
	செலவு - கிடைக்கப்பெற்ற கழிவீடு	ரூபா 1800

27. அனுபவமற்ற கணக்குப் பதிவாளர் ஒருவராற் பின்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான கூற்று எது?
(1) கடன்கொள்வனவுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் கொள்வனவுக் குறிப்பேட்டிற் பதியப்பட வேண்டும்.
(2) உட்டிரும்பல் குறிப்பேட்டின் மொத்தக் கொள்வனவுக் கணக்குச் செலவு வைக்கப்படுதல் வேண்டும்.
(3) சில்லறைக் காசேட்டிலிருந்து செலுத்தப்படும் அனைத்துச் செலவுகளினதும் மொத்தம் பலவினச் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.
(4) பொறித்தொகுதி ஒன்றை நிறுவுதல், ஏற்றியிறக்கல் என்பவற்றிற்குச் செய்யப்படும் செலவுகள் அனைத்தும் பொறித்தொகுதிக் கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

28. கொடுக்கல், வாங்கலைப் பதிதலில் காணப்பட்ட சில வழுக்கல் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றுள் பரீட்சை மீதி மூலம் வெளிப்படுத்தப்பட முடியாத வழுவை இனங்காண்க.
(1) கையிருப்பிற்கான தொடக்கப் பதிவு ரூபா 15980/- ஆகும். இது பேரேட்டில் ரூபா 15890/- ஆகப் பதியப்பட்டிருந்தது.
(2) ரூபா 940/- இற்கான கடன் விற்பனையொன்று விற்பனைக் குறிப்பேட்டிலும் சொந்தக் கணக்கிலும் ரூபா 490/- ஆகப் பதியப்பட்டிருந்தது.
(3) கடன்பட்டோர் கணக்கொன்றில் ரூபா 1000/- குறைத்தெழுதப்பட்டது.
(4) காசேட்டின் வரவுப் பக்கத்திலான ஒரு பதிவு ரூபா 65/- கவனக் குறைவாக ஒத்த கணக்கின் வரவுப் பக்கத்திற்கு இடப்பட்டிருந்தது.

29ஆம், 30ஆம், 31ஆம், 32ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதில் பின்வரும் தலைப்புக்களைப் பயன்படுத்துக.

A	-	விற்பனைக் குறிப்பேடு	B	-	கொள்வனவுக் குறிப்பேடு
C	-	குறிப்பேடு	D	-	காசேடு
E	-	உட்திரும்பற் குறிப்பேடு			

29. எவ்வேட்டைத் தயாரிப்பதில் கொள்வனவாளரால் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் "விற்பனைக் கிரயப் பட்டியல்" ஆகும்.
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

30. எந்த ஏட்டைத் தயாரிப்பதில் மூல ஆவணம் "செலவுத்தாள்" ஆகும்?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

31. முன்னைய ஆண்டின் ஏடுகளிலிருந்தவாறான மீதிகளை மாற்றுவதற்கு உபயோகிக்கப்படும் துணைக் குறிப்பேடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

32. கழிவீடுகளைப் பதிவதற்கான துணைக்குறிப்பேடு எது?
(1) **A** (2) **B** (3) **C** (4) **D**

33. "வருமானச் செலவினம்" எனும் பதத்துடன் பொருந்த வைக்கப்படக்கூடிய வாக்கியம் எது?
(1) வர்த்தகர் ஒருவர் தனது ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு உருக்கு அலுமாரிகளை வாங்க வேண்டியதாயிற்று.
(2) ஒப்படைக்கும் வான்வண்டியின் பழுதுபார்த்தற் செலவு ரூபா 4000/- ஆகும்.
(3) பொறித்தொகுதிக்கு மேலதிக சாதனங்களைச் சேர்த்துக்கொண்டதன் பின் விளைவில் மாற்றமேற் பட்டுள்ளது.
(4) சில்லறை வியாபாரிக்கான ஒப்படைப்புக்களைச் செய்வதற்கு புதிய மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டது.

34. வியாபார நட்டக் கணக்கைத் தயாரிப்பதில் பின்வரும் விடயங்களுள் விலக்கப்படுவது எது?
(1) முற்பணமாகச் செலுத்தப்படும் காப்புறுதிக் கட்டணம்.
(2) எழுதுகருவிவகைச் செலவுகள்.
(3) கணக்காய்வுக் கட்டணங்கள்.
(4) கடன்மீதான வட்டி

35. வங்கி நடைமுறைக் கணக்கின் செலவு மிதி, காசேட்டிற் காட்டப்பட்ட மீதியிலும் குறைவான ஒரு தொகையைக் காட்டுகிறது. அதற்கான காரணம் யாது?
(1) வரையப்பட்ட காசோலைகள் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
(2) வங்கிக்கூற்றில் வங்கியினால் பதிவுகளைப் பதிவதற்குக் கணிசமான தாமதம் ஏற்படுகிறது.
(3) வங்கிக் கணக்குகளுக்குத் தொகைகள் நேரடியாக அனுப்பப்படுகின்றன.
(4) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகள் இன்னும் தேறாதிருந்தன.

36. "முதற் கிரயங்களின்" (மூலச் செலவுகளின்) ஆக்கக் கூறுகள் யாவை?
(1) நேர் மூலப்பொருள்கள், தொழிற்சாலை மேந்தலைகள்
(2) நேர் உழைப்பு, தொழிற்சாலைச் செலவுகள், நுகரப்பட்ட திரவியங்களின் கிரயங்கள்.
(3) நுகரப்பட்ட திரவியங்களின் கிரயங்கள், நேர் ஊழைப்பு ஏனைய நேர் செலவுகள்
(4) தொழிற்சாலை மேந்தலைகள், நுகரப்பட்ட திரவியங்களின் கிரயங்கள்.

37. சொத்துக்களுக்கு தேய்மானமிடுவதில் பயன்படுத்தப்படும் "நேர்கோட்டு முறையிற்" காணப்படத்தக்க சிறப்பான அமிசம் யாது?
(1) ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் தேய்மானமாகச் சமமான ஒரு தொகை இலாப நட்டக்கணக்கிற்குத் தாக்கல் செய்யப்படுகிறது.
(2) ஒவ்வோர் ஆண்டும் தேய்மானமாகக் குறித்த ஒரு சதவீதம் மீதியிலிருந்து கழிக்கப்படுகிறது.
(3) இந்தமுறை பொறித்தொகுதிக்குத் தேய்மானமிடுவதற்கு மட்டும் பயன் படுத்தப்படலாம்.
(4) ஒவ்வோர் ஆண்டும் தேய்மான வீதம் வேறுபடும்.

38. சேனா காசாக ரூபா 15000/- ஆகிய தொகையைப் புகுத்தி வணிகமொன்றைத் தொடங்கினார். அவர் ரூபா 4000/- இற்குச் சாதனங்களை வாங்கினார். அப்துல் காதரிடமிருந்து ரூபா 5000/-ஆன தொகைக்குப் பண்டங்களை வாங்கினார். பின்வருவனவற்றுள் எது சொத்துக்களினதும் நடைமுறைப் பொறுப்புக்களினதும் சரியான தொகையைத் தருகிறது?
(1) ரூபா 19000, ரூபா 5000 (2) ரூபா 20000, ரூபா 9000
(3) ரூபா 20000, ரூபா 5000 (4) ரூபா 9000, ரூபா 4000

39. காசேட்டில் எப்பொழுது "எதிர்ப்பதிவு" செய்திருக்கப்பட்டுக் காணப்படும்?
(1) காசோலை மறுக்கப்பட்டு இரண்டாவது தடவை வைப்புச் செய்யப்படும் பொழுது.
(2) கடன் கொடுத்தோர் ஒருவருக்குக் கொடுப்பனவொன்று செய்யப்படும் பொழுது.
(3) காசு, காசோலைகள் என்பவற்றின் வைப்புகள் தொடர்பில் பதிவொன்று செய்யப்படும்பொழுது.
(4) பெற்றுக் கொள்ளப்பட்ட கழிவீடு, அனுமதிக்கப்பட்ட கழிவீடு என்பவை தொடர்பில் பதிவுகள் செய்யப்படும்பொழுது.

40. ஐந்தொகை நடைமுறைச் சொத்தில் காட்டப்பட்டு, அத்துடன் இலாப நட்டக் கணக்கிற்குச் செலவு வைக்கப்படவேண்டிய விடயத்தைத் தெரிவு செய்க.
(1) முற்பணமாக செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம் ரூபா 12000/-
(2) குத்தகையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 650/-
(3) மறுக்கப்பட்ட காசோலையின் தொகை ரூபா 500/-
(4) ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 300 எனும் தொகையால் குறைக்கப்படுதல்.

****

01.		X			02.				X	03.	X				04.		X		
05.			X		06.		X			07.				X	08.			X	
09.	X				10.			X		11.		X			12.			X	
13.		X			14.		X			15.	X				16.				X
17.		X			18.	X				19.				X	20.			X	
21.				X	22.			X		23.	X				24.				X
25.		X			26.			X		27.				X	28.		X		
29.		X			30				X	31.			X		32.				X
33.		X			34.	X				35.				X	36.			X	
37.	X				38.			X		39.			X		40.		X		

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்)
டிசெம்பர் 1988
GENERAL CERTIFICATE OF EDUCATION (ORD-LEVEL) EXAMINATION, DECEMBER - 1988

வர்த்தகமும் கணக்கியலும் - II

COMMERCE AND ACCOUNTS - II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி I

1.

1987 டிசெமபா 31 ஆந தேதியனறு ரங்கா விறபனை நிலைய ஏடுகளிலிருந்து பாததெடுகக்பபட்ட பாடசை மதி கழே தரப்பட்டிருக்கிறது.

	வரவு ரூபா	செலவு ரூபா
விற்பனைகள்		188400
கொள்வனவுகள்	141500	
கையிருப்பு (01.01.87)	26250	
உட்டிரும்பல்கள்	1900	
வெளித்திரும்பல்கள்		1100
உட்சுமைக்கூலி	2350	
மின்கட்டணங்கள்	1800	
வாடகையும் இறைகளும்	4600	
சம்பளங்கள்	12400	
கணக்காய்வுக் கட்டணம்	2000	
எழுதுகருவி வகை	1400	
வங்கிக் கட்டணங்கள்	300	
காப்புறுதி	2100	
வெளிச்சுமைக்கூலி	1800	
பெற்றுக்கொண்ட கழிவீடு		2600
பொதிசெய் செலவுகள்	2000	
விளம்பரப்படுத்துதல்	2600	
அறவிடமுடியாக் கடன்கள்	300	
சில்லறைக் கடன்பட்டோர்	28100	
சில்லறைக் கடன்கொடுத்தோர்		21300
ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு		2400
தேய்மானத்துக்கான ஏற்பாடு		
தளபாடமும் பொருத்திகளும்		5640
தளபாடமும் பொருத்திகளும் (கொள்விலையில்)	28200	
காணியும், கட்டடங்களும்	50000	
எடுப்பனவுகள்	5700	
மூலதனம்		123460
வங்கியிலுள்ள காசு	24500	
கைவசமுள்ள காசு	5100	
	344900	344900

பனவரும செமமையாகங்களைக கருததறகொணடு 1987 டிசெமபா 31இல முடிவுறற ஆணடுகான வியாபார இலாப நடடக கணக்கையும் அத்தேதியில் இருந்தவாறான ஐந்தொகையையும் தயாரிக்க.

(1) கைவசமுள்ள கையிருப்பு (31.12.87) ரூபா. 28340/-

(2) தளபாடங்கள், பொருத்திகள் என்பவற்றின் ..... தேய்மானத்துக்குக் கொள்விலையில் மீது 10 சதவீதப்படி ஏற்பாடு செய்க.

(3) சேர்ந்த இறைகள் ரூபா 200/-

(4) ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு ரூபா 2810/- ஆக அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

2.

அ) 1988 ஜூன் மாதத்தின் போது வியாபாரத் தாபனம் ஒன்றின் சில்லறைக் காசளரால் பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டன.

01-06-88 - ரூபா 500.00 காசு மிதப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

02-06-88 - வங்கிக்குப் போவதற்கு ஊழியரொருவருக்கு ரூபா 5.50 பஸ் கட்டணம் செலுத்தப்பட்டது.

05-06.88 - அஞ்சல் செலவுக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 65.00

08-06-88 - ஊழியர்களின் உபயோகத்துக்கு வாங்கப்பட்ட சவர்க்காரத்துக்கான செலவு ரூபா 26.50.

15-06-88 - வாடிக்கையாளர் ஒருவருக்கு அனுப்பப்பட்ட தந்திக்கான செலவு ரூபா 8.50.

17-06-88 - செலுத்திய பயணச் செலவுத் தொகை ரூபா. 38.00

20-06-88 - எழுதுகருவிவகை வாங்கிய செலவு ரூபா. 95.00

24-06-88 - சரத் பெரேராவுக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபா. 82.00

26-06-88 - தட்டச்சுப்பொறி நாடாக்கள் வாங்கிய செலவு ரூபா. 56.00

27-06-88 - தர்மக் கழகம் ஒன்றிற்கு செய்த பங்களிப்பு ரூபா 20.00

(1) மேற்போந்த கொடுக்கல் வாங்கல்களைப் பலவினச் செலவுகள், பிரயாணச் செலவுகள், எழுதுகருவி வகையும், அஞ்சற் செலவும் என்பவற்றுக்கான பகுப்பாய்வு நிரல்களையும் பேரேட்டு நிரல் ஒன்றையும் கொண்ட ஒரு சில்லறைக் காசேட்டிற் பதிக.
(ஏட்டின் கணக்கைச் சமம்படுத்த வேண்டியதில்லை)

(2) மாத இறுதியில் மீள நிரப்பப்பட வேண்டிய தொகை யாது?

ஆ) 1988 ஜூன் 30 ஆந் திகதியன்று வியாபாரத் தாபனம் ஒன்றின் காசேடு ரூபா. 16450 மீதியைக் காட்டியது. அத்தேதியன்று வங்கிக் கூற்றிற் காட்டப்பட்ட மீதி, காசேட்டு மீதியுடன் இணங்கவில்லை.விரிவான செலவைப் பார்த்தலின் பின், பின்வரும் வித்தியாசங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) கடன் கொடுத்தோருக்கு கொடுக்கப்பட்டு, கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 4250/-.

(2) ரூபா 1200 வியாபார ஒப்பப்பணம் ஒன்றிக்கான நிலையான கட்டளைப்படி வங்கியினால் பணம் செலுத்தப்பட்டது. ஆனால் காசேட்டில் பதிவுகள் எவையும் செய்யப்படவில்லை.

(3) வாடிக்கையாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற காசோலைகள் ரூபா. 6250/- வைப்புச் செய்யப்பட்டது. ஆனால் வங்கியினாற் செலவு வைக்கப்படவில்லை.

1988 ஜூன் 30ஆந் தேதியன்று இருந்தபடி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றொன்றைத் தயாரிக்க.

(6 புள்ளிகள்)

3.

அ) 1. "தொங்கற் கணக்கு" ஒன்றைப் பயன்படுத்துவதன் நோக்கம் யாது?

2. கொடுக்கல் வாங்கல்கள் பதிவதில் விடப்பட்ட குறித்த வகைகளைச் சேர்ந்த வழுக்கள் காரணமாக வியாபார தாபனம் ஒன்றின் பரீட்சை மீதி இணங்கவில்லை.
இவற்றுள் நான்கு வகையான வழுக்களை தெரிவு செய்து அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

(6 புள்ளிகள்)

வேண்டிய கணக்குகளையும் பெயரிடுக.

1. ஆண்டின் இறுதியில் ரூபா 38000/- ஆகப் பெறுமானமிடப்பட்ட கையிருப்பு, வியாபார இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

2. மின்சாரப் பட்டியலுக்கு செலுத்தப்பட்ட தொகையான ரூபா 320/- காசேட்டில் சரியாகப் பதியப்பட்டு ஒத்தகணக்கிற்கு ரூபா 230/- ஆக வரவு வைக்கப்பட்டிருந்தது. இவ்வழு திருத்திக் கொள்ளப்பட்டது.

3. கடன்பட்டோர் ஒருவரது கணக்கிலிருந்து அவரது திடீர் மரணம் காரணமாக ரூபா 250/- பதிவுமுக்கப்பட்டது.

பகுதி II

4.

(1) பண்டங்களின் நேரடியான பரிமாற்றம் இன்று முடியாத ஒரு காரியமாகும். இக்கூற்றுக்கு ஆதரவாக இரு காரணங்கள் தருக.

(2) சில்லறை வியாபாரி ஒருவரால் நுகர்வோருக்கு ஆற்றப்படும் இரு சேவைகளை எழுதுக.

(3) பல்பகுதிப் பண்டம் எனப்படுவது யாது? இலங்கையிலிருந்து ஓர் உதாரணம் தருக?

(4) அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் உருவாக்கப்படும் நுகர்வோர் சங்கங்களின் நோக்கங்கள் யாவை?

(5) மொத்த வியாபாரிகள் இயங்கி வருதல் பண்டங்கள் உற்பத்தி செய்வதில் உற்பத்தியாளருக்குப் பேருதவியாக அமையும், மொத்த வியாபாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படத்தக்க பயனுள்ள தகவல்கள் யாது?

(6) மாற்றுண்டியல் ஒன்றுக்கும் வாக்குறுதிச் சீட்டு ஒன்றுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக?

(7) உம்மால் வழங்கப்பட்ட காசோலையில் மாற்றமொன்றைச் செய்வதற்கு நீர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

(8) "தோற்றுவாய்க் கடிதம்" (மூலநாட்டுச் சான்றிதழ்) என்பது இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்திற்கு பயன் படுத்தப்படும் ஓர் ஆவணமாகும். இவ் ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதன் நோக்கம் யாது?

(9) தனி வியாபாரியின் வியாபாரம் ஒன்று விரிவெய்தி வருகையில் அது எதிர் நோக்கக்கூடிய இரண்டு பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

(10) கூட்டுறவு இயக்கம் அடிப்படைப் கொள்கைகளுடன் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டது. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

(11) பங்குடமை உடன்படிக்கையொன்றில் வழமையாகப் புகுத்தப்படும் இரண்டு வாசகங்களைப் பெயரிடுக.

(12) காப்புறுதியின் ஒரு தத்துவமாக "மிக்குயர் நன்னம்பிக்கை" என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(13) ஒரு வெளிநாட்டுச் செய்தியொன்றை அனுப்புவதற்கு இலங்கையில் கிடைக்கக் கூடிய மிக நம்பிக்கையான தொடர்பாடல் முறை எது?

(14) வினைத்திறமை வாய்ந்த போக்குவரத்து வேலை முறைமையொன்றிற் காணப்படத்தக்க இரு சிறப்பிய ல்புகளை எழுதுக.

(15) களஞ்சியக் காப்பாளர் ஒருவரால் வைத்திருக்கப்படும் இருவகையான பதிவுகளைப் பெயரிடுக.

(30 புள்ளிகள்)

5.

(1) கம்பனிகள் தொடர்பில் "வரையறுத்த பொறுப்பு" என்னும் பதத்தால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(2) பெருமளவிலான வியாபாரங்களுட் பெரும்பாலனவை வரையறுத்த பொதுக் கம்பனிகளால் நடத்தப்படுகின்றன. இதற்கான இரு காரணங்களைத் தருக?

(3) தனி வியாபாரி - வியாபாரத்திலும், பங்குடமைகளிலும் காணப்படாத வரையறுத்த பொதுக் கம்பனிகளின் இரண்டு விஷேட சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(4) வரையறுத்த பொதுக் கம்பனிகளால் வழங்கப்படும் இரண்டு பிரதானமான பங்கு வகைகளைப் பெயரிட்டு அந்த இரு வகைகளையும் ஒப்பிடுக.

(5) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றிச் சுருக்கமாக விவரணம் எழுதுக.

அ. கம்பனியமைப்பக விதிகள் ஆ. திபெஞ்சர்கள்

இ. வியாபாரப்பத்திரம் ஈ. உருவாக்கற் பத்திரம்

6.

(1) இன்று பயன்படுத்தப்பட்டு வரும் பணத்தின் இரண்டு வகைகளைப் பெயரிடுக.

(2) பணத்தின் ஒரு தொழிற்பாடாக "பெறுமானக் களஞ்சியம்" எனும் எண்ணக்கருவின் தனிச்சிறப்பினை விளக்குக.

(3) இன்றைய பணத்தின் இன்றியமையாத் சிறப்பியல்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

(4) தேசிய சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகளை விவரிக்க.

(12 புள்ளிகள்)

****

BRIGHT BOOK CENTRE

கல்வி பொதுத்தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை (பழைய பாடத்திட்டம்)
டிசெம்பர் 1988
வர்த்தகமும் கணக்கியலும் – II (மூன்று மணி)

ரங்கா விற்பனை நிலையம்

1987 டிசெம்பர் 31ல் முடிவடைந்த வியாபார இலாப நட்டக் கணக்கு:-

கையிருப்பு 01.01.87		26250	விற்பனை	188400	
கொள்வனவுகள்	141500		கழி உட்திரும்பல்கள்	1900	186500
கழி வெளித்திரும்பல்	1100	140400			
கூட்டு உள்வந்த வ.கூலி		2350			
		16900			
கழி கையிருப்பு 31.12.87		28340			
விற்ற சரக்கின் கொள்விலை		140660			
மொத்தலாபம் கீ/கொ.		45840			
		186500			186500
மின் கட்டணங்கள்		1800	மொத்தலாபம்		45840
வாடகையும், இறைகளும்		4800	பெற்ற கழிவு		2600
எழுதுகருவிகள்		1400			
காப்புறுதி		2100			
பெறுமானத்தேய்வு-தளபாடமும் பொருத்தும்		2820			
சம்பளங்கள்		12400			
கணக்காய்வுக் கூட்டம்		2000			
வெளிச்சுமை கூலி		1800			
விளம்பரப்படுத்தல்		2600			
பொதி செய் செலவுகள்		2000			
ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு		410			
அறவிடமுடியாக் கடன்		300			
வங்கிக் கட்டணம்		300			
தேறியலாபம்		13710			
		48440			48440

1987 டிசெம்பர் 31ல் முடிவடைந்த ஐந்தொகை.

			நிலையான சொத்து	கொ.வி	தி.பெ.தே	கே.விலை
மூலதனம்	123460		**நிலையான சொத்து**		50000	
கூட்டுத் தேறியலாபம்	13710		காணியும் கட்டடங்களும்			
	137170		தளபாடம் பொருத்தும்	28200		
கழி கொடுப்பனவுகள்	5700	131470	கழி.பெறு.தேய்	8460	19740	69740
நடைமுறைப்பொறுப்புக்கள			**நடைமுறைச் சொத்துக்கள்**			
வியாபாரக் கடன்			கையிருப்பு 87.12.31		28340	
கொடுனர்	21300		கடன்படுனர்	28100		
சேர்ந்த இறைகள்	200	21500	கழி ஐயக்கடன்	2810	25290	
			வங்கிநிலுவை		24500	
			கையிலுள்ள காசு		5100	83230
		152970				152970

முற்பண சில்லறைக் காசேடு

வரவு பெறு வனவு	காசேட்டுப் பக்கம்	திகதி ஜூன்	விளக்கம்	கைச் சாத்து இல	கூட்டு தொகை	பிரயாணச் செலவு	எழுது கருவி அஞ்சல்	பல்லினச் செலவுகள	பேரேட்டு பக்கம்
50000		01	காசு						
		02	பிரயாணச் செலவு		5.59	550			
		05	அஞ்சற் செலவு		65.00		6500		
		08	பலவினச் செலவு		26.50			26.50	
		15	தந்திச் செலவு		8.50		850		
		17	பிரயாணச் செலவு		38.50	38.50			
		20	எழுதுகருவிகள்		95.00		9500		
		24	ஸரத் பெரேரா		82.00				82.00
		26	தட்டச்சு நாடா		56.00		5600		
		27	தர்மக்கழகப் பங்களிப்பு		20.00			20.00	
					396.50	43.50	2245	46.50	82.00

2.

அ. 11. மாதக் கடைசியில் மீள நிரப்பப்படவேண்டிய தொகை ரூ. 396.50

ஆ. வங்கி இணக்கக்கூற்று

30.06.88 ல் காசேட்டு மீதி ரூபா	16450	
கூட்டு:- கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலை	4250	20700
கழி:- நிலையானகட்டளையின்படி வங்கி செலுத்திய தொகை	1200	
வைப்புச்செய்த னோல் வங்கி செலவு வைக்காத காசோலை	6250	7450
30.06.88ல் வங்கிக் கூற்றின்படி மீதி		13250

3.

அ) 1. பரீட்சை நிலுவை சம்பந்தப்படாதவிடத்து அந்த வேறுபாட்டினை தற்காலிகமாக சமப்படுத்துவதற்காக தொங்கல் கணக்கு தயாரிக்கப்படுகின்றது. இத்தொங்கல் கணக்கின் மூலம் மூலப்பதிவேடுகளிலும் கணக்கேடுகளிலும் ஏற்பட்ட வழுக்கள் திருத்தப்படுகின்றன.

2. அ. ஒரு பதிவை மாத்திரம் பதிதல்.

ஆ. பிழையான தொகையினைப்பதிதல், வரவுப்பதிவுத் தொகையைக் செலவில் பதியும் போது கூட்டியோ குறைத்தோ பதிதல்.

இ. பிழையான பக்கத்தில் பதிதல், அதாவது வரவுப்பக்கத்திலேயே இரு பதிவுகளையும் பதிதல் அல்லது செலவுப் பக்கத்திலேயே இரு பதிவுகளையும்.

ஈ. கணக்குகளைக் கூட்டும்போது ஏற்படும் வழுக்கள்.

உ. பரீட்சை மீதிக்குமீதிகளை மாற்றும் போது ஏற்படும் வழுக்கள்.

ஆ. 1. சரக்கிருப்பு கணக்கு - வரவு
வியாபாரக் கணக்கு - செலவு

2. மின்சாரக் கணக்கு - வரவு
தொங்கல் கணக்கு - செலவு

3. அறவிடமுடியாக் கடன் கணக்கு - வரவு
கடன்படுனர் கணக்கு - செலவு

பகுதி II

4.

1) * இரட்டைப் பொருந்தொகை இன்மை. தன்னிடம் உள்ள பொருளைப் பெற்றுக்கொண்டு தனக்கு வேண்டிய பொருளைக் கொடுக்கக் கூடியவர்களை தேடுவதில் உள்ள பிரச்சினை.
* பெருந்தொகையான பொருள்களை உற்பத்தி செய்வதால் நேரடியான பரிமாற்றம் கடினமானதாகும்.
* பண்டங்கள் பரிமாற்றம் செய்யப்படும்போது பெறுமானத்தைத் தீர்மானிக்க முடியாது இருத்தல்.
* பண்டங்கள் பரிமாற்றம் செய்யப்படும் பணத்தைப்போன்று நீண்ட காலம் சேமித்து வைக்க முடியாது.

2) * தேவையான பொருட்களை தேவையான நேரத்தில் தேவையான அளவில் நுகர்வோரும் கொடுத்தல்.
* பொருள்களை சேமித்து வைத்து வழங்குதல்.
* பொருட்கள் பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு வழங்குதல்.
* கடனுக்கு பொருட்களை வழங்குதல்.

3) ஒரு கூரையின் கீழ் பல்வேறுபட்ட பொருட்களையும் வெவ்வேறு பகுதிகளில் வைத்து விற்கும் நிறுவனம் பல்பகுதிப்பண்டம் எனப்படும். இது நகரப்புறங்களில் காணப்படும்.
உதாரணமாக:- கார்கில்ஜ், மில்லேர்ஸ்.

4) நுகர்வோரின் உரிமைகளை அறிந்து கொள்வதற்கும், நுகர்வோரது கட்டங்களை அறிந்து கொள்வதற்கும்.

5) * நுகர்வோரது விருப்பு வெறுப்புக்களை அறிந்து உற்பத்தியாளருக்கு அறிவித்தல்.
* நுகர்வோரது கேள்வியினை அறிந்து உற்பத்தியாளருக்கு தெரிவித்தல்.
* விளம்பரம் செய்தல்.
* களஞ்சியப்படுத்துதல்.

6) * மாற்றுண்டியல் ஒன்று கடன்கொடுனரால் தயாரிக்கப்பட்டு கடன்படுனரால் ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்குறுதிச் சீட்டானது, கடன்படுனரால் தயாரிக்கப்படுகிறது.
* மாற்றுண்டியல் கொடுப்பனவுக்கான ஒரு கட்டளை. ஆனால் வாக்குறுதிச் சீட்டு ஒரு கொடுப்பனவுக்கான எழுத்து மூலவாக்குறுதி.

7) மாற்றத்தினை எழுதி மாற்றத்திற்கெதிராக கையொப்பமிடல் வேண்டும்.

8) வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்காக இது குறிப்பிட்ட, பொருள் குறிப்பிட்ட நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்டது என்பதற்கான சான்றிதழாகும்.

9) * மேலதிக மூலதனம் பெறுவது கடினம்.
* முகாமைத்துவம் கடினம்.
* சிறப்புத் தேர்ச்சியாளரின் நன்மையைப் பெறுவது கடினம்.
* சமஉரிமை. பரஸ்பர ஒத்துழைப்பு, ஜனநாயகப் பண்பு, நீதி, நியாயம் ஆகியன.

10) மூலதனம் இலாப நட்டம் பகிரப்படும் விதம், கலைக்கும் முறை, பிரச்சினைகளைத் தீர்த்தல், மூலதனவட்டி, எடுப்பனவு வட்டி, புதிய பங்காளர் சேர்தல்.

11) காப்புறுதி கொள்வோனும், காப்புறுதி அளிப்போனும், பரஸ்பரம் கொடுக்கும் தகவல் யாவும் உண்மையானதாக இருத்தல் வேண்டும்.

12) தொலையச்சு

13) * வேகம்
* பாதுகாப்பு
* சொகுசு
* குறைந்த செலவு

14) * கையிருப்புப் பதிவேடு
* பத்தாய அட்டை
* பெற்ற பொருட்பதிவு
* வெளியனுப்பிய பொருட்பதிவு

5.

1) நட்டப்பொறுப்பு அவன் வாங்கிய பங்குகளின் முகப் பெறுமதியளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

2) * பேரளவு மூலதனம் பெற்றுக்கொள்வதற்காக.
* வரையறுக்கப்பட்ட பொறுப்புக் காரணமாக பெருந்தொகையானோர் மூலதனமிட முன்வருவர்.
* விசேட திறமை பெற்றவர்களை வேலைக்கு அமர்த்தி சம்பளம் கொடுக்க முடியும்.
* நீடித்த ஆயுள் பேரளவு உற்பத்திக்கு வழி வகுக்கின்றது.

3) * சட்ட ஆளுமை: சட்டத்தின் முன் தனிமனிதனாக கருதப்படுதல்.
* வரையறுத்த பொறுப்பு: நட்டப்பொறுப்பு பங்கு மூலதனம் அளவுக்கு வரையறுக்கப்பட்டிருத்தல்.
* நீடித்த ஆயுள்
* பொதுமக்களிடம் இருந்து மூலதனம் பெறும் தன்மை.

4) * சாதாரண பங்கு
* முன்னிரிமைப் பங்கு
* முன்னுரிமைப்பங்குகளுக்கு பங்கு லாபம் வழங்கும் முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டும். சாதாரண பங்குகளுக்கு லாபம் கம்பனி பெற்ற லாபத்திற்கேற்ப வேறுபடும்.
* முன்னுரிமைப் பங்குகளை மீட்கலாம். சாதாரண பங்குகளை மீட்க முடியாது.

5) அ. **கம்பனி அமைப்பு அகவிதிகள்:-**

கம்பனியின் உள்நிருவாகம் பற்றிய விதிகள் இதில் இடம் பெறும். பங்காளரது கடமைகள் உரிமைகள் என்பன இதில் அடங்கும்.

ஆ. **திபெஞ்சர்கள்:-**

கம்பனிகள் வெளியில் இருந்து கடன் மூலதனத்தைப் பெறுகின்ற ஒரு வழியாகும்.இதனை வெளியிடும் உரிமை வரையறுத்த பொதுக் கம்பனிக்கு மாத்திரம் உண்டு. கடனைப் பெறும் போது கடன் தொகையும் வட்டியும் குறிப்பிடப்பட்டு கம்பனி முத்திரை இடப்பட்ட சான்றிதழாகும்.

இ. **வியாபாரப் பத்திரம்:-**

கம்பனியினை ஆரம்பிப்பதற்கு வேண்டிய பத்திரங்கள் யாவும் பெறப்பட்ட பின்னர் கம்பனிப் பதிவாளரால் கம்பனியைப் பதிவு செய்து வாங்கப்படும் பத்திரமாகும். இதனைப் பெற்ற பின்னரே பொதுக் கம்பனிகள் தொழிலை ஆரம்பிக்கலாம்.

ஈ. **உருவாக்கற் பத்திரம்:-**

கம்பனி பதிவு செய்யப்படுவதற்கு வேண்டிய ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதும், கம்பனிப்பதிவாளர் கம்பனியைப் பதிவு செய்து இப்பத்திரம் வழங்குவார். இதனைப் பெற்றதும் தனிக்கம்பனி தொழிலை ஆரம்பிக்கலாம். ஆனால் பொதுக்கம்பனி இத்துடன் வியாபாரப்பத்திரமும் பெற்ற பின்னரே தொழிலை ஆரம்பிக்கலாம்.

6.

1) * சட்ட இறுதிப்பணம் (தாள்நாணயம், உலோக நாணயம்)
* வங்கிப்பணம் (காசோலை)

2) பணத்தினைப் எதிர்காலத் தேவைக்காகக் சேமித்து வைப்பதனையே பெறுமானக் களஞ்சியம் எனப்படு கின்றது. பண்டங்களை இவ்வாறு சேமித்து வைக்க முடியாது.

3) * எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மை.
* இலகுவாக இனம் காணக்கூடிய தன்மை.
* சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடிய தன்மை.
* இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய தன்மை.

4) * சேமிப்புக் கணக்குகளைப் பேணுதல்.
* நிலையான வைப்புக்களைப் பேணுதல்.
* பொதுமக்களைச் சேமிக்கத் தூண்டுதல்.
* நீண்டகாலக் கடன்களை வழங்குதல்.

****